
**2006 அவ்யக்த முரளி**



<u>பொருளடக்கம் - 10</u>

**18.01.2006** சங்கல்பம், சமயம் மற்றும் சொல் ஆகியவற்றின் சேமிப்புத்திட்டம் மூலமாக வெற்றி விழா கொண்டாடுங்கள். நம்பிக்கையிழந்து விட்ட ஆத்மாக்களில் நம்பிக்கை தீபம் ஏற்றுங்கள்!

**03.02.2006** வீணானவற்றின் பெயர் அடையாளமே தெரியாத அளவு பரமாத்மாவின் அன்பில் முழு தூய்மையின் நிலையை ஏற்படுத்துக!

**25.02.2006** பண்டிகை நாளான இன்று, மனதின் ஆர்வம், உற்சாகம் மூலமாக மாயையிலிருந்து விடுதலையடைந்த நிலையில் இருப்பதற்காக, விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இரக்கம் உள்ளவராகி, மாஸ்டர் முக்தி வள்ளல் ஆகுங்கள், கூடவே செல்ல வேண்டுமானால் சமானமாக ஆகுங்கள்! (பாபாவுடன் செல்வதற்கு பாப்சமான் ஆக வேண்டும்). (சிவ ஜெயந்தி)

**14.03.2006** பரமாத்ம சந்திப்பை அனுபவம் செய்வதற்காக நேர் விரோதமான (உல்டா) நான் என்பதை எரிப்பதற்கான ஹோலி கொண்டாடுங்கள். திருஷ்டியின் பீச்சாங்குழல் மூலமாக எல்லா ஆத்மாக்களுக்கும் சுகம், சாந்தி, அன்பு ஆனந்தம் என்ற வர்ணம் பூசுங்கள்!

**28.03.2006** உலக ஆத்மாக்களை துக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக மனசா சேவையை அதிகப்படுத்துங்கள், சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆகுங்கள்!

**31.10.2006** சதா அன்போடு இருப்பதன் கூடவே நிரந்தரமான மகாதானி ஆகுங்கள், அப்போது தடைகளை அழிக்கும், சமாதான சொரூபமாக ஆகி விடுவீர்கள்!

**16.11.2006** தன்னுடைய தன்மான கௌரவ நிலையில் (ஸ்வமான்) இருங்கள் மேலும் காலத்தின் (சமயம்) மகத்துவத்தைப் புரிந்து எப்போதும் தயார் நிலையில் இருங்கள்!

**30.11.2006** ஜுவாலாமுகி தபஸ்யா மூலமாக "நான்", "எனது" எனும் வாலை பஸ்மம் செய்து பாப்தாதாவுக்கு சமமாக ஆகுங்கள், அப்போது தான் முடிவு சமீபமாக வரும்!

**15.12.2006** நினைவு சொரூபம், அனுபவ மூர்த்தியாகி ஒரு வினாடியில், தீவிர கதி மூலம் பரிவர்த்தனை செய்து பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி) ஆகுக!

**31.12.2006** புத்தாண்டின் புதுமை -உறுதி மற்றும் பரிவர்த்தனை சக்தி மூலம் காரணம் மற்றும் பிரச்சனை என்ற வார்த்தைக்கு விடை கொடுத்து விட்டு, நிவாரணம் மற்றும் தீர்வு சொரூபமாகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 18.01.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கல்பம், சமயம் மற்றும் சொல் ஆகியவற்றின் சேமிப்புத்திட்டம் மூலமாக வெற்றி விழா கொண்டாடுங்கள். நம்பிக்கையிழந்து விட்ட ஆத்மாக்களில் நம்பிக்கை தீபம் ஏற்றுங்கள்!

இன்று சிநேகத்தின் நாள். நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா குழந்தைகளும் சிநேக சாகரத்தில் மூழ்கியிருக்கின்றனர். இந்த சிநேகம் சகஜயோகி ஆக்கக்கூடியதாகும். சிநேகம், மற்ற எல்லா ஆகர்ஷணங்களிலிருந்தும் விலக்கக்கூடியதாகும். சிநேகம் என்னும் வரதானம் உங்கள் எல்லா குழந்தைகளுக்கும் ஜென்மத்தின் வரதானமாகும். சிநேகத்தில், பரிவர்த்தனை செய்யக்கூடிய சக்தி இருக்கிறது. இன்றைய தினம் நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகள் இரண்டு விதமானவர்களாக இருந்ததைப் பார்த்தேன். எல்லா குழந்தைகளுமே அன்பு நிறைந்தவர்களாகவே இருந்தார்கள்; ஆனால் ஒரு சில குழந்தைகள் அன்பானவர்களாகவும் (லவ்லி) வேறு சில குழந்தைகள் ஆழ்ந்த அன்பில் மூழ்கியிருப்பவர்களாகவும் (லவ்லீன்) இருந்தார்கள். அன்பில் மூழ்கியிருக்கும் குழந்தைகள், ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு சுவாசம், ஒவ்வொரு சொல் மற்றும் ஒவ்வொரு கர்மத்திலும் இயல்பாகவே பாபா சமானமாக எளிதாகவே இருக்கிறார்கள். ஏன்? குழந்தைகளுக்கு தந்தை சமர்த் பவ (சக்திசாலி ஆகுக) என்னும் வரதானம் கொடுத்திருக்கின்றார். இன்றைய தினத்தை ஸ்மிருதி ஸோ சமர்த் (நினைவு மூலம் சக்திசாலி) என்று சொல்வது, ஏன்? தந்தை இன்றைய தினம் தன்னை முதுகெலும்பாக ஆக்கினார் மேலும் அன்பில் மூழ்கியிருக்கும் குழந்தைகளை உலக அரங்கில் பிரத்யக்ஷம் செய்தார். ஸ்தூலத்தில் குழந்தைகளை பிரத்யக்ஷம்

செய்தார். மேலும் சுயம், அவ்யக்த ரூபத்தில் துணைவன் (தோழன்) ஆனார்.

இன்றைய இந்த ஸ்மிருதி ஸோ சமர்த் தினம், குழந்தைகளை, பாலக் ஸோ மாலிக் ஆக்கி சர்வசக்திவான் தந்தை மாஸ்டர் சர்வசக்திவான் ஆக்கி பிரத்யக்ஷம் செய்யக்கூடிய காரியத்தைக் கொடுத்தார். மேலும் (யதா-யோக்-ததா-சக்தி) எவ்வளவு யோகமோ, அவ்வளவு சக்தி நிறைந்த எல்லா குழந்தைகளும் தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். அதாவது விஷ்வ கல்யாணம் செய்து, விஷ்வ பரிவர்த்தனை செய்யும் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, தந்தை குஷி அடைகின்றார். தந்தையிடமிருந்து, சர்வ சக்திகள் என்னும் ஆஸ்தி எவ்வளவு கிடைத்ததோ, அதனை தனக்காகவும், உலக ஆத்மாக்களுக்காகவும் காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் கூட, அப்படிப்பட்ட மாஸ்டர் சர்வ சக்திவான், பாப்சமான் ஆர்வம், ஊக்கம், உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஆல்ரவுண்டு சேவாதாரி, நிஷ்வார்த் சேவாதாரி (தன்னலமற்ற), பேகத் சேவாதாரி குழந்தைகளுக்கு ஆயிரமாயிரம் மடங்கு உள்ளன்புடன் கூடிய நல்வாழ்த்துக்களை அளிக்கின்றார். முபாரக் ஹோ! முபாரக் ஹோ! உள்நாடு-வெளிநாடு. உள்நாட்டுக் குழந்தைகளும் கூட குறைந்தவர்கள் அல்ல மேலும் வெளி நாட்டுக் குழந்தைகளும் கூட ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. பாப்தாதா இப்படிப்பட்ட குழந்தைகளை உள்மனதிலிருந்து மகிமை செய்கின்றார். மேலும் வாஹ் குழந்தைகளே! வாஹ் என்று புகழ் பாடுகின்றார். நீங்கள் எல்லோரும் வாஹ்! வாஹ்! (ஆகா! ஆகா!) குழந்தைகள் தானே! கையசைத்துக் காட்டுகிறார்கள். மிகவும் நன்று. பாப்தாதாவுக்குப் பெருமிதமாக இருக்கிறது. குழந்தைகளைப் பற்றிப் பெருமிதமாக இருக்கிறது. முழு கல்பத்திலும், அப்படிப்பட்ட எந்த ஒரு தந்தையும் இல்லை, யாருக்கு தனது ஒவ்வொரு குழந்தையும் சுய ராஜ்ய அதிகாரி ராஜா. நீங்கள் எல்லோருமே சுய ராஜ்ய அதிகாரி ராஜா தானே? பிரஜா இல்லை தானே! அநேக குழந்தைகள் ஆன்மீக உரையாடல் செய்யும் போது, (ரூஹ் ரிஹான்) நாங்கள் எதிர்காலத்தில் என்னவாக இருப்போம், அந்த சித்திரத்தை எங்களுக்குக் காட்டுங்கள் என்று கூறுகிறார்கள். பாப்தாதா என்ன கூறுகின்றார்? பழைய குழந்தைகள், ஜகதம்பா, மம்மா எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சித்திரம் கொடுப்பது வழக்கம் என்று

கூறுகின்றார்கள். அதுபோல, எங்களுக்கும் கூட சித்திரம் கொடுங்கள் என்று கேட்கின்றனர். பாப்தாதா கூறுகின்றார்: ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை ஒரு விசித்திரமான கண்ணாடி கொடுத்திருக்கின்றார். அந்தக் கண்ணாடியில் உங்களுடைய வருங்கால சித்திரத்தைப் பார்க்க முடியும். நான் யார்? அறிவீர்களா? அந்தக் கண்ணாடி உங்களிடம் இருக்கின்றதா? எப்படிப்பட்ட கண்ணாடி என்று தெரியுமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்களுக்குத் தெரியுமல்லவா? தெரியுமா? அந்தக் கண்ணாடி, தற்சமயத்தில் சுய ராஜ்ய ஸ்திதி ஆகிய கண்ணாடி. இப்போது எவ்வளவு சுய ராஜ்ய அதிகாரி இருக்கிறீர்களோ, அதன்படி விஷ்வத்திற்கு ராஜ்ய அதிகாரி ஆவீர்கள். இப்போது தங்களுக்குத் தாங்களே சதா சுய ராஜ்ய அதிகாரியாக இருக்கிறீர்களா என்று கண்ணாடியில் பாருங்கள்? அல்லது சில சமயம் அடிமை, சில சமயம் அதிகாரி, அப்படியா? சில சமயம் அடிமையாகவும், சில சமயம் அதிகாரியாகவும் ஆகின்றீர்கள். அதாவது சில சமயம் கண்கள் ஏமாற்றுகிறது. சில சமயம் மனம் ஏமாற்றுகிறது. சில சமயம் வாய் ஏமாற்றுகிறது. சில சமயம் காதும் கூட ஏமாற்றிவிடுகிறது. வீணான விஷயங்களைக் கேட்பதில் ஆர்வமுள்ளதாகி விடுகிறது. ஒருவேளை ஏதாவதொரு கர்மேந்திரியம் ஏமாற்றிவிடுகிறது, அடிமையாக்கி விடுகிறது என்றால், இதன் மூலமாக பாபாவிடமிருந்து எந்த சர்வ சக்திகள் வரதானமாகக் கிடைத்திருக்கிறதோ, அல்லது ஆஸ்தியாகக் கிடைத்திருக்கிறதோ, அந்த கன்ட்ரோலிங்பவர், ரூலிங்பவர் இல்லை என்பது உறுதியாகிறது. ஆகவே சிந்தித்துப் பாருங்கள். யார் தன் மீது ஆட்சி செய்ய முடியவில்லையோ, அவர் உலகை எப்படி ஆள முடியும்? உங்களுடைய இப்போதையை ஸ்திதியின் சுய ராஜ்ய அதிகாரத்தை கண்ணாடியில் சோதித்துப் பாருங்கள். கண்ணாடி எல்லோருக்கும் கிடைத்திருக்கிறதல்லவா? கண்ணாடி கிடைத்திருக்கிறது என்றால் கை உயர்த்துங்கள். கண்ணாடியில் ஏதாவது கீறல் விழவில்லை தானே? தெளிவாக இருக்கிறதா கண்ணாடி?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் சுய ராஜ்ய அதிகாரத்திற்கான ஸ்வமான் கொடுத்திருக்கின்றார். மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற டைட்டில் எல்லா குழந்தைகளுக்கும் பாபாவிடமிருந்து கிடைத்திருக்கிறது. மாஸ்டர் சக்திவான் அல்ல, சர்வ சக்திவான். அநேக

குழந்தைகள் ஆன்மீக உரையாடலின் போது இதுவும் கூறுகிறார்கள். பாபா, நீங்கள் சர்வ சக்திகள் கொடுத்தீர்கள் ஆனால் இந்த சக்திகள் அவ்வப்போது அவசியமான நேரத்தில் வேலை செய்வதில்லை. ரிப்போர்ட் செய்கிறார்கள். வேண்டிய சமயத்தில் எமர்ஜ் (எழுச்சி யடைதல்) ஆவதில்லை. காலம் கடந்து விட்ட பிறகு எமர்ஜ் ஆகிறது என்று. காரணம் என்ன? எந்த சமயத்தில், எந்த சக்திக்கு ஆர்டர் கொடுக்கிறீர்களோ, அந்த சமயத்தில் சோதித்துப் பாருங்கள். நான் மாலிக் ஆகி (அதிகாரி) ஆசனத்தில் அமர்ந்திருக்கிறேனா? ஒருவேளை, யாராவது ஆசனத்தில் அமர்ந்திருக்கவில்லை எனில், ஆசனத்தில் அமர்ந்திருக்காதவர்கள் இடும் கட்டளைக்கு யாரும் கீழ்ப்படியமாட்டார்கள். நான் சுய ராஜ்ய அதிகாரி. மாஸ்டர் சர்வசக்திவான், பாபாவிடமிருந்து பெற்ற ஆஸ்தி மற்றும் வரதானத்திற்கு அதிகாரியாக இருக்கிறேன் என்ற இந்த சீட்டில் (ஆசனம்) சரியாக அமர்ந்து கொண்டு, பிறகு ஆர்டர் கொடுங்கள். என்ன செய்வது? எப்படி செய்வது? நடப்பதில்லை என்றும் ஆசனத்தை விட்டு கீழே அமர்ந்து கொண்டு அல்லது ஆசனத்தை விட்டு கீழிறங்கி ஆர்டர் கொடுத்தீர்களானால் எட்டடி கீழ்ப்படிவார்கள்? இந்தக் கால சம்பிரதாயப்படியும் கூட யாராவது பிரைம் மினிஸ்டர் சீட்டில் அமர்ந்திருக்கிறார், அவர் சீட்டிலிருந்து கீழிறங்கி விட்டால் யாராவது அவர் சொல்லைக் கேட்பார்களா? ஆதலால், நான் ஆசனத்தில் சரியாக அமர்ந்திருக்கிறேனா? என்று சோதியுங்கள். அதிகாரி நிலையிலிருந்து ஆர்டர் கொடுக்கிறேனா? தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் அத்தாரிட்டி (உரிமை) கொடுத்திருக்கின்றார். அது பரமாத்ம அதாரிட்டி, ஏதோ ஒரு ஆத்மாவிடமிருந்து கிடைத்த அத்தாரிட்டி அல்ல, மகாத்மாவிடமிருந்து கிடைத்த அதாரிட்டியும் அல்ல. பரமாத்ம அதாரிட்டி. ஆதலால் அதாரிட்டி மற்றும் அதிகாரம் என்ற இந்த ஸ்திதியில் நிலைத்திருந்து, எந்த ஒரு சக்திக்கும் ஆர்டர் செய்யுங்கள். அது ஜிஹஜூர், ஜிஹஜூர் என்று தயாராக இருக்கும். (இதோ வந்துவிட்டேன்) சர்வ சக்திகளின் முன்னே, இந்த மாயை, தத்துவம், சம்ஸ்காரம், சுபாவம் எல்லாம் தாஸியாகிவாடும். (அடிமையாகி விடும்) எஜமானர்களாகிய (மாலிக்) உங்களை எதிர்பார்த்து காத்திருக்கும். எஜமானரே, ஏதாவது கட்டளை இடுங்கள். தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கிறேன் என்று சொல்லும்.

சக்திசாலி நாள் அல்லவா! ஆதலால் குழந்தைகளிடம் என்னென்ன சக்திகள் உள்ளன என்பதை தந்தை நினைவூட்டுகின்றார். கோடிட்டுக் காட்டுகின்றார். வேண்டிய சமயத்தில் ஏன் பலவீனமாகி விடுகிறார்கள்? பாப்தாதா பார்த்தார், மெஜாரிட்டி குழந்தைகளிடம் லீக்கேஜ் இருக்கிறது. சக்திகள் லீக்கேஜ் ஆகி விடுவதன் காரணமாக சக்திகள் குறைந்து விடுகின்றன. லீக்கேஜ் இரண்டு விஷயங்களில் ஆகின்றது. அந்த இரண்டு விஷயங்கள் -சங்கல்பமும், சமயமும் வீணாகிக் கொண்டிருக்கிறது. கெடுவதில்லை ஆனால் வீணாகிறது. வேண்டும்போது கெட்ட காரியம் செய்யவில்லையானாலும், சேமிப்பும் செய்வதில்லை. இன்று கெடுதி செய்யவில்லை என்பதை மட்டுமே பார்க்கின்றார்களே தவிர, நல்லது எதாவது சேமித்தோமா? என்று பார்ப்பதில்லை, இழக்கவில்லை, ஆனால் சம்பாதித்தோமா? துக்கம் கொடுக்கவில்லை ஆனால் சுகம் எத்தனை பேருக்கு கொடுத்தோம்? யாருக்கும் அசாந்தி உண்டாக்கவில்லைதான் ஆனால் சாந்தியின் வைப்ரேஷனை எவ்வளவு பரப்பினோம்? சாந்தி தூதனாகி எத்தனை பேருக்கு சாந்தி கொடுத்தோம்? வாயுமண்டலம் மூலமாக அல்லது வாய்மொழி மூலமாக, வைப்ரேஷன் மூலமாக சாந்தி கொடுத்தோமா? ஏனெனில் நேரம் குறைவாக இருக்கிறது என்பதை அறிவீர்கள். புருஷோத்தம கல்யாணகாரி ஆவதற்கான நேரமாகும். இப்போதில்லையேல், எப்போதுமில்லை. இது ஒவ்வொரு கணமும் நினைவில் இருக்க வேண்டும். ஆகி விடும்... செய்துவிடுவோம்.... இப்போது இல்லையேல், எப்போதுமில்லை. பிரம்மாபாபாவிற்கு இது தான் தீவிர கதி புருஷார்த்தமாக இருந்தது. ஆதலாலேயே நம்பர் ஒன் இலக்கை சென்றடைந்தார். ஆகவே, தந்தை எந்த ஒரு திறமைகளைக் கொடுத்திருக்கின்றாரோ அது இன்றைய சக்திசாலி நாளில் நினைவுக்கு வந்ததல்லவா? சேமிப்பதற்கான திட்டம் தயாரியுங்கள். சங்கல்பத்தை சேமிப்பது. சமயத்தை சேமிப்பது, பேச்சை சேமிப்பது, அதாவது எது யதார்த்தமான பேச்சு இல்லையோ, அந்த யதார்த்தமில்லாத வீணான பேச்சு பேசாமலிருப்பதன் மூலமான சேமிப்பு.

பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் சதா அதாரிட்டியின் சீட்டில், செட்டாகி சுய ராஜ்ய அதிகாரி ராஜா ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். பிடித்தமானதாக இருக்கிறதா? இந்த ரூபம் விருப்பமுள்ளதாக இருக்கிறதல்லவா? எப்போது வேண்டுமானாலும் பாப்தாதா எந்த ஒரு

குழந்தையையும் டி.வி.யில் பார்க்கும்போது, இந்த ரூபத்தையே பார்க்க வேண்டும். பாப்தாதாவிடம் இயற்கையான டி.வி. இருக்கிறது, ஸ்விட்ச் போட வேண்டிய அவசியமில்லை. ஒரே சமயத்தில் நாலா பக்கமும் பார்க்க முடியும். ஒவ்வொரு குழந்தையையும், மூலை முடுக்கில் இருப்பவர்களையும் பார்க்க முடியும். தயாராக இருக்க முடியுமா? நாளை முதல் டி.வி.யைத் திறந்தால், என்ன தெரியும்? ஃபரிஷ்தா உடை. ஃபரிஷ்தா டிரஸ் என்பது பிரகாசமான டிரஸ். ஒளிமயமான டிரஸ், இந்த சரீர பந்தமுள்ள, மண்ணாலான டிரஸ் அணிந்திருக்கக்கூடாது. பிரகாசமாக ஒளி வீசக்கூடிய டிரஸ் ஆக இருக்க வேண்டும். வெற்றி நட்சத்திரமாக ஒளி வீச வேண்டும். இப்படிப்பட்ட மூர்த்தியாக, ஒவ்வொருவரையும் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். சரிதானா? மண்ணாலான உடையை அணிந்தீர்களானால், மண்ணுக்குரியவராகி விடுவீர்கள். (மண்ணாகி விடுவீர்கள்). எப்படி தந்தை அசரீரியாக இருக்கின்றார். பிரம்மா தந்தை பிரகாச ஒளி பொருந்திய டிரஸ் அணிந்திருக்கின்றார், ஃபரிஷ்தாவாக இருக்கின்றார். ஃபாலோ ஃபாதர். ஸ்தூலமாக பார்த்தீர்களானால் உடையை மண்ணாக்கி விட்டால், கறைப்படுத்திவிட்டால் என்ன செய்கிறீர்கள்? உடையை மாற்றி விடுகிறீர்கள் அல்லவா? இதே போல சோதியுங்கள். சதா ஒளி மயமான ஃபரிஷ்தா டிரஸ் அணிந்திருக்கிறேனா? தந்தைக்கு தனது ஒவ்வொரு குழந்தையும், ராஜா குழந்தையாக இருக்க வேண்டும் என்ற பெருமிதம் இருக்கிறது. ஆதலால் அதே சொரூபத்தில் இருங்கள். ராஜாவாக இருங்கள். இந்த மாயை இருக்கிறதல்லவா, அது உங்களுக்கு அடிமையாகி விடும் மேலும் விடைபெற்றுக் கொள்ள வரும். அரை கல்பத்திற்கு விடை பெறுவதற்காக வரும். போராடாது. பாப்தாதா சதா கூறுகின்றார், பாபாவிடம் தன்னை அர்ப்பணித்து விட்டவர்கள் ஒருபோதும் தோல்வி அடைய முடியாது. ஒருவேளை தோல்வியடைந்தால், அர்ப்பணிக்கவில்லை என்பதாகும்.

இப்போது உங்கள் எல்லோருக்கும் மீட்டிங் நடக்க இருக்கிறதல்லவா? மீட்டிங் தேதி குறித்திருக்கிறீர்கள் அல்லவா? இந்த முறை மீட்டிங்கில் சேவைக்கான திட்டம் போடுவதை பாப்தாதா பார்க்க விரும்பவில்லை. சேவைத் திட்டம் போடுங்கள் ஆனால் மீட்டிங்கில் வெற்றி விழா கொண்டாடுவதற்கான திட்டம் போடுங்கள். நிறைய விழாக்கள் கொண்டாடி விட்டீர்கள். இனி வெற்றி விழாவுக்கான தேதி நிர்ணயம்

செய்யுங்கள். எல்லோரும் எப்படியிருப்பார்கள் என்று பாருங்கள். பாப்தாதா கூறுகின்றார், குறைந்தபட்சம் 108-ரத்தினங்களாவது வெற்றி மூர்த்திகள் ஆகும் விழா கொண்டாட வேண்டும். உதாரணமாக இது நடக்க முடியுமல்லவா? சொல்லுங்கள். முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். ஆக முடியுமா? பதில் சொல்வதற்கான தைரியம் இல்லை. செய்ய முடியுமா? செய்ய முடியாதா? என்று யோசிக்கிறார்கள். தைரியம் இருந்தால், எல்லாமே செய்ய முடியும். தாதி கூறட்டும், 108-வெற்றி மூர்த்திகள் ஆக முடியுமா? (ஆம் நிச்சயமாக ஆக முடியும், வெற்றி விழா கொண்டாட முடியும்) பாருங்கள். தாதியிடம் தைரியம் இருக்கிறது. உங்கள் எல்லோருடைய சார்பிலும், தாதி தைரியம் வைத்திருக்கின்றார் ஆகவே ஒத்துழைக்க வேண்டும். இனி மீட்டிங் செய்ய இருக்கிறீர்கள் அல்லவா? அப்போது பாப்தாதா ரிப்போர்ட் வாங்குவார். பாண்டவர்கள் கூறுங்களேன். ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? ஏன் தைரியம் வைக்காமல் இருக்கிறீர்கள்? செய்து காண்பிப்பீர்களா? இப்படி? நல்லது. தைரியம் வைக்க முடியுமல்லவா? தைரியம் வைத்து, செய்து காண்பிப்போம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்வீர்களா? எந்த ஒரு சம்ஸ்காரமும் இருக்காதா? எந்த ஒரு பலவீனமும் இருக்காதா? நல்லது. மதுபன்காரர்களும் கை உயர்த்துகிறார்கள். ஆஹா! வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது. பிறகென்ன, 108 எளிதாகவே ஆகி விடும். இவ்வளவு பேர் கை உயர்த்தியிருக்கிறார்கள் என்றால் 108, என்ன பெரிய விஷயம்? டபுள் ஃபாரினர்ஸ் என்ன செய்வீர்கள்? ஆம், தாதி ஜானகி கேட்டுக் கொண்டிருக்கின்றார். நான் சொல்லலாமா என்று அவருக்கு ஆர்வமாக இருக்கிறது. ஃபாரின் மாலையையும் பார்க்கலாம். சரிதானா? கை உயர்த்துங்கள். சரிதானா? நல்லது. இன்றைக்கு எவ்வளவு பேர் அமர்ந்திருக்கிறீர்கள்? (200 பேர்) இதிலிருந்து 108-பேர் தயாராகி விடுவார்கள். சரிதானா? இதில் முதலில் நான் என்பது இருக்க வேண்டும். இதில் அடுத்தவரைப் பார்க்கக் கூடாது. முதலில் நான். வேறு விதமான நான்... நான்... என்பது இருக்கக்கூடாது. 108-ஆவதில், நான் என்று அவசியம் சொல்லுங்கள். இன்னொரு வேலையும் பாப்தாதா கொடுக்கின்றார்.

இன்று சக்திசாலி நாள் (சமர்த் திவஸ்) ஆதலால் சக்திசாலிகளாக இருக்கிறார்கள் (சமர்த்தி) பாப்தாதா ஒரு விசித்திரமான தீபாவளி

கொண்டாட விரும்புகின்றார். நீங்களோ, தீபாவளி அநேக முறை கொண்டாடியிருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா விசித்திர தீபாவளி கொண்டாட விரும்புகின்றார். சொல்லட்டுமா? சொல்லட்டுமா? சொல்லட்டுமா? நல்லது. இப்போதையை நிலைமையைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள். நாளுக்கு நாள் நம் நாலா பக்கமும் மனித ஆத்மாக்களிடம் அவநம்பிக்கை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆதலால் மனசா சேவை செய்யுங்கள். வாய் மொழியாக சேவை செய்யுங்கள். சம்மந்தம், தொடர்பில் உள்ளவர்களுக்கு செய்யுங்கள் ஆனால் பாப்தாதா நம்பிக்கை இழந்துவிட்ட மனிதர்களுக்குள்ளே நம்பிக்கை தீபம் ஏற்றப்படுவதைப் பார்க்க விரும்புகின்றார். நாலா பக்கமுமுள்ள மனிதர்களுடைய மனதில் நம்பிக்கை தீபம் பிரகாசிக்கட்டும். இந்த தீபாவளியை, நம்பிக்கை ஒளி வீசும் தீபங்களாக பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். ஆக முடியுமா? வாயுமண்டலத்தில் குறைந்தபட்சம் இந்த நம்பிக்கை தீபம் ஒளி வீசினால் விஷ்வ பரிவர்த்தனை என்பது ஆகி விட்டது போலத்தான். பொற்காலம் உதயமாகி விட்டது போலத்தான் (கோல்டன் சவேரா). இந்த அவநம்பிக்கை முடிந்து போகட்டும். எதுவும் நடக்க வேண்டாம். எதுவும் நடக்க வேண்டியதில்லை. நம்பிக்கை தீபம் ஒளி வீசட்டும். செய்ய முடியுமல்லவா? இது மிகவும் சுலபம் தானே? கஷ்டமா? சகஜமா? யார் செய்வார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். செய்வீர்களா? இவ்வளவு பேர் தீபம் ஒளி வீசும்படி செய்வார்கள் என்றால் தீபமாலை ஆகி விடுமல்லவா? வைப்ரேஷன் சக்திசாலியாக (பவர்ஃபுல்) செய்யுங்கள். எதிரில் வந்து சேர மாட்டார்கள் ஆனால் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி வெகு தூரம் வரை வைப்ரேஷன் பரப்புங்கள். எப்படி சயின்ஸ் லைட் ஹவுஸ் மூலமாக, வெகு தூரம் வரை ஒளி கொடுக்க முடிகிறதல்லவா, அப்படியிருக்கும் போது, நீங்கள் வைப்ரேஷன் பரப்ப முடியாதா? திட சங்கல்பம் மட்டும் செய்யுங்கள். செய்யத்தான் வேண்டும். இதில் சுறுசுறுப்பாகி விடுங்கள். மனதை சுறுசுறுப்பாக வைத்துக் கொண்டால், தனக்கும் லாபம், மற்ற ஆத்மாக்களுக்கும் கூட லாபம். இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும், விஷ்வ கல்யாணம் செய்தேயாக வேண்டும் என்ற இதே உள்ளுணர்வு (விருத்தி) வைத்திருங்கள். இந்த விருத்தி வாயுமண்டலத்தில் பரவும். ஏனென்றால், நேரம் திடீரென நடக்கக் கூடியதாக இருக்கிறது. இப்படியாகக் கூடாது. அதாவது உங்களுடைய சகோதர, சகோதரிகள்,

எங்களுக்குச் சொல்லவே இல்லையே என்று குற்றம் சுமத்தும் படியாக இருந்துவிடக் கூடாது மேலும் எங்களுக்குக் கொஞ்சம் முன்னதாகவே சொல்லியிருந்தால். நாங்களும் கூட கொஞ்சமாவது செய்திருப்போமே என்று குற்றம் சொல்லக் கூடாது. ஆதலால் ஒவ்வொரு சங்கல்பத்திலும், பாப்தாதாவின் நினைவில் லைட் (ஒளி) பெற்றுக் கொண்டே இருங்கள். லைட் ஹவுஸ் ஆகி லைட் கொடுத்துக் கொண்டேயிருங்கள். நேரத்தை வீணாக்காதீர்கள். பாப்தாதா பார்க்கும் போதெல்லாம் மிகவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இல்லை. மாஸ்டர் சர்வ சக்திவான் என்று சொல்லிக் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள்: ஆகவே ராஜா ஆகுங்கள். வெற்றி மூர்த்தி ஆகுங்கள். அவநம்பிக்கையை சமாப்தி செய்துவிட்டு. நம்பிக்கை தீபம் ஏற்றுங்கள். நல்லது.

எல்லா பக்கங்களிலுமிருக்கும் குழந்தைகளிடமிருந்து, சிநேகம் நிறைந்த நினைவு மாலைகள் வந்து சேர்ந்து விட்டன. பாப்தாதா, நினைவுகளை அனுப்பியவர்களுக்கு நேரில் பார்த்தபடியே நினைவிற்கு நினைவை, உள்ளத்தின் ஆசிகளை உள்ளன்பை அளிக்கின்றார். நல்லது.

**இனி என்ன செய்ய வேண்டும்? சேவை வாய்ப்பு கர்நாடகா:** கர்நாடகக்காரர்கள் 5-மெகாபுரோகிராம் செய்திருக்கிறார்கள். நல்லது. நிறைய பேர் வந்திருக்கிறார்கள். சரி. மெகா புரோகிராம் செய்திருக்கிறார்கள். வாழ்த்துக்கள் ஆனால் ஒவ்வொரு மெகாபுரோகிராம் மூலமாக மாணவராக எத்தனை பேர் ஆகியிருக்கிறார்கள்? இந்த கணக்கு எடுத்திருக்கிறீர்களா? ஏனென்றால், மெகாபுரோகிராம் செய்தி கொடுப்பதற்கு நன்றாக இருக்கிறது. குற்றம் சுமத்தமாட்டார்கள். ஒரு வேலை நன்றாகவே முடிந்துவிட்டது ஆனால் மெகா புரோகிராமுக்குப் பிறகு, முகவரி கிடைத்திருக்குமல்லவா? எந்த ஆத்மாக்களுடைய முகவரி இருக்கிறதோ, அவர்களை அடிக்கடி அழைத்துக் கொண்டேயிருங்கள். சேவை செய்து கொண்டே இருங்கள். அவரவருடைய சென்டரில் ஏனெனில் ஜோன் அளவில் செய்ய முடியாது. அங்கங்கே இருப்பவர்கள், அந்தந்த சென்டருக்கு வர முடியும். அவர்களிலிருந்து சிலர் வருவார்கள். கர்நாடகத்தில் எண்ணிக்கை அதிகம். நன்றாக இருக்கிறது. சேவை செய்திருக்கிறார்கள். இதன் காரணமாகவே எண்ணிக்கை

அதிகமாகியிருக்கிறது; ஆனால் இப்போது மைக் மற்றும் மைட் ஆகி செய்தி கொடுப்பதில் உங்களுக்கு துணையாகி விடும்படியாக பூச்செண்டு தயார் செய்யுங்கள். மெஜாரிட்டி, எல்லா பெரிய, பெரிய சென்டர்கள் மொகாபுரோகிராம் செய்திருக்கிறார்கள் ஆனால் செய்தி கொடுப்பதில் மைக் ஆக இத்தனை பேர் தயாராகியிருக்கிறார்கள் என்ற சமாச்சாரம் இது வரையிலும் வரவில்லை. ஏனென்றால் உலகில் செய்தி கிடைக்காமல் இருப்பவர்கள் இன்னும் அதிகமாக மீதம் இருக்கிறார்கள். ஆகவே கர்நாடகத்தில் எண்ணிக்கை எத்தனை இருக்கிறதோ அந்த ஒவ்வொரு இடத்திலும் கொஞ்சம் இந்த விஷயம் இருக்க வேண்டுமல்லவா? இந்தப் பெயர், பாப்தாதாவிடம் வரவேண்டும். ரிசல்ட் வரவேண்டும். மதுபன் அழைத்து வர வேண்டாம். முதலில் ரிப்போர்ட் எழுதிக் கொடுங்கள். எத்தனை பேர் தயாராகியிருக்கிறார்கள் என்று. இவர்கள் எந்த வகையினர்? வெளிநாட்டில் இருப்பவர்கள் ஆனாலும் சரி, உள்நாட்டில் இருந்தாலும் சரி, நல்லது தான். புரோகிராம் செய்திருக்கிறீர்கள். அதற்கு வாழ்த்துக்கள். இனி இந்த ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு சென்டரும் இந்த ரிப்போர்ட் அனுப்பட்டும். சரிதானா? நன்றாக இருக்கிறது. இனி கர்நாடகாவில் அற்புதம் செய்து காட்ட வேண்டும். ஒவ்வொரு சென்டரும், நிர்விக்ன, சுய ராஜ்ய அதிகாரி ஆக முடியுமா? ஆக முடியுமா? மூன்று மாதங்களுக்கு மட்டுமல்ல, சதா காலத்திற்கும் விக்னம் சமாப்தி. ஒருவேளை சம்ஸ்காரம், சங்கல்பத்திலும் வந்தாலும், எப்போது வந்தாலும், அப்போதே சமாப்தி செய்து விடுங்கள். பேச்சில், கர்மத்தில் வரக்கூடாது. ஆதலால் இப்படிப்பட்ட ரிசல்ட் காண்பிப்பீர்கள். கர்நாடகம், நம்பர் ஒன் நிர்விக்னம் செய்வீர்களா? செய்யத்தான் வேண்டும். ஒருவருக்கொருவர் சகயோகியாகி, உதவி செய்தும், ஆக்கத்தான் வேண்டும். ஏனென்றால் இரண்டோ, நான்கோ ஒருவேளை நிர்விக்னம் ஆகாவிட்டால், சர்டிபிகேட் எப்படி கிடைக்கும்? கர்நாடகத்திற்கு நிர்விக்ன சர்டிபிகேட் கிடைக்காதல்லவா? ஆதலால் சகயோகி ஆகி, ஒருவர் மற்றவருக்கு தைரியம் கொடுத்து, செய்யத்தான் வேண்டும். தயாரா? டீச்சர்ஸ் தயாரா? செய்யத்தான் வேண்டும். பாருங்கள். டி.வி.யில் வருகிறது. எல்லா கர்நாடக டீச்சர்கள் கை உயர்த்திருக்கிறார்கள். நல்லது, பார்க்கலாம். முதலில் வாழ்த்துக்கள் அளிக்கிறேன் பிறகு பார்க்கலாம், சரிதானா? பின்னால் இருப்பவர்கள், முன்னால் இருப்பவர்கள் எல்லோரும் செய்யத்தான் வேண்டும்.

தங்களுடைய சம்ஸ்காரத்தை எமர்ஜ் ஆகவிடாதீர்கள். சங்கல்பத்தில் வரும்போதே பரிவர்த்தனை செய்து விடவேண்டும். நல்லது. எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு நிறையவே செய்ய முடியும். நல்லது. கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சேவைக்காக, ஆதலால் கொஞ்ச நாட்களில் அதிகமாக உங்களுடைய புண்ணியத்தை சேமித்திருக்கிறீர்கள். யக்ஞ சேவை என்றால், புண்ணியக்கணக்கை சேமிப்பது. ஆகவே, நல்ல தைரியம் வைத்து வந்திருக்கிறீர்கள். இனிமேலும் கூட, தைரியத்துடன் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள்.

மெடிக்கல் விங் (மருத்துவ பிரிவு): ஏதாவது புது திட்டம் தயாரித்திருக்கிறீர்களா? புது பிளான் தயாரித்திருக்கிர்களா? (ஆரோக்கியத்தில் சிறப்பை எப்படி அதிகரிக்கலாம் என்பதைப் பற்றி ஆண்டு முழுவதும் புரோகிராம் செய்வது) இப்போது பிளான் தயாரித்திருக்கிறீர்கள். இனி நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலமாகவும் செய்தி சென்றடையும் அல்லவா? நல்ல திறமைசாலிகள் தானே! யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, இவர்கள் மீட்டிங் மட்டும் செய்யவில்லை. பிராக்டிக்கலாகவும் செய்ய வேண்டும் என்பதாக இருந்தது. இதில் உங்களுக்கு இரண்டு விதமான லாபம் உண்டு. மருந்துகள் கிடைக்கின்றன, உடலும் நலமாகி விடும், இதற்கான ஆசிகள். பிறகு மனம் குஷியாகி விடும், இதற்கும் ஆசிகள். எல்லோரிடமும் ஆர்வம் உள்ளது. மிகவும் நல்லது. நல்லது. மெடிக்கலில், இருதயத்திற்கும் நன்றாக நடக்கிறது. இப்போது பாம்பே ஹாஸ்பிடல் ரிப்போர்ட்டும் கூட நன்றாக இருக்கிறது. தானாகவே வி.ஐ.பி.க்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், பிரம்மா குமாரிகள் சமுதாய சேவை செய்வதில்லை என்று முதலில் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பிரம்மா குமாரிகள் எந்த வேலை ஆரம்பித்தாலும், அதனுடைய ரிசல்ட் நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். எப்போது அபுவில் குளோபல் ஹாஸ்பிடல் திறக்கப்பட்டதோ, அப்போது முதல், வாயுமண்டலத்தில் மாற்றம் வந்திருக்கிறது. அபுவில் இருப்பவர்களும், மாறிக் கொண்டிருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. உங்களுடைய டிபார்ட்மென்ட், ஏதாவது ஸ்தூலமான காரியமும் செய்கிறீர்கள். மருந்து கொடுப்பது, எனினும் இதன் மூலமாக பிரம்மா குமாரிகள் டபுள் காரியம்

செய்ய முடியும் என்பது பரவலாகிக் கொண்டிருக்கிறது. மிக நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்து கொண்டேயிருக்க வேண்டும். மூலை முடுக்குகளில் உங்களுடைய மெடிக்கல் மூலமாகவும் எல்லோருடைய மனதிலும் குஷி உண்டாக்க வேண்டும். நம்பிக்கை தீபம் ஏற்றிக் கொண்டேயிருங்கள். நல்லது. வாழ்த்துக்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.02.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணானவற்றின் பெயர் அடையாளமே தெரியாத அளவு பரமாத்மாவின் அன்பில் முழு தூய்மையின் நிலையை ஏற்படுத்துக!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள தன்னுடைய பிரபுவுக்குப் பிரியமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முழு உலகில் தேடி எடுத்துள்ள, கோடியிலும் அதிலும் ஒரு சிலரே பரமாத்மா அன்பிற்கு அதிகாரி ஆகின்றனர். பரமாத்மா அன்பு தான் குழந்தைகளான உங்களை இங்கே அழைத்து வந்தது. இந்த பரமாத்மா அன்பு முழு கல்பத்தில், இச்சமயத்தில் தான் அனுபவம் செய்கிறீர்கள். மற்ற சமயங்களில் ஆத்மாக்களின் அன்பு, மகான் ஆத்மாக்களுடைய அன்பு மற்றும் தர்ம ஆத்மாக்களுடைய அன்பை அனுபவம் செய்தீர்கள் ஆனால் இப்போது பரமாத்மா அன்புக்கு உரியவராகி விட்டீர்கள். யாராவது உங்களிடம் பரமாத்மா எங்கே என்று கேட்டால் என்ன கூறுவீர்கள்? பரமாத்மா எங்களுடன் இருக்கிறார், நாங்கள் அவருடன் இருக்கிறோம். பரமாத்மா கூட நாங்கள் இல்லாமல் இருக்க முடியாது, நாங்களும் பரமாத்மா இல்லாமல் இருக்க முடியாது. இத்தனை அன்பை அனுபவம் செய்கிறீர்களா? உரிமையுடன் கூறுவீர்கள் அவர் எங்களுடைய மனதில் இருக்கிறார், நாங்கள் அவரின் மனதில் இருக்கிறோம். அப்படிப்பட்ட அனுபவி தானே! இருக்கிறதா அனுபவம்! என்ன மனதில் வருகிறதா? நாங்கள் அனுபவி இல்லையென்றால் யார் அனுபவி ஆக முடியும்? பாபா கூட அப்படிப்பட்ட அன்பின் அதிகாரி குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் செய்கிறார்.

பரமாத்மா அன்பின் அடையாளம் -யாரிடம் அன்பு இருக்கிறதோ அவருக்குப் பின்னால் அனைத்தையும் பலி ஆக்குவதற்கு சகஜமாக தயாராகி விடுகின்றனர். இதனால் நீங்கள் அனைவரும் கூட பாபா எதை விரும்புகிறாரோ அது ஒவ்வொரு குழந்தையும் பாப்சமான் ஆகி விட

வேண்டும், ஒவ்வொருவருடைய முகத்தினால் பாபா பிரத்யட்சமாகத் தென்படட்டும், அப்படி ஆகி விட்டீர்கள் தானே? பாப்தாதாவுடைய மன விருப்பத்தின் நிலை (ஸ்திதி) அறிந்துள்ளீர்கள் தானே! பாபாவுடைய மன விருப்பத்தினுடைய நிலையாக உள்ளது சம்பூரண பவித்ரத்தா (முழு தூய்மை). இந்த பிராமணப் பிறவியினுடைய அஸ்திவாரம் கூட முழு தூய்மையாக உள்ளது. பாப்தாதா இன்றைய நிலையில் சமயத்தின் அருகாமையினுடைய காரணத்தால் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார். சம்பூரண பவித்திரத்தாவினுடைய கணக்கின்படி வீணான சங்கல்பம் இது கூட சம்பூரண பவித்திரத்தா கிடையாது. அதனால் சோதனை செய்து வீணான சங்கல்பம் வருகிறதா? ஏதாவது ஒருவிதத்தில் வீணான சங்கல்பம் சம்பூரணத்திலிருந்து விலக்கி வைத்து விடவில்லை தானே! எவ்வளவுக்கு எவ்வளவு முயற்சியில் முன்னேறிச் செல்கிறீர்களோ அந்தளவு ராயல் ரூபத்தினுடைய வீணான சங்கல்பம், வீணான சமயம் சமாப்தி ஆவதில்லை தானே? ராயல் ரூபத்தில், அபிமானம் மேலும் அவமானம் வீணான சங்கல்பத்தினுடைய ரூபத்தில் சண்டை செய்வதில்லையா? அப்படி அபிமானத்தால் யாராவது பரமாத்மா கொடுத்ததை தன்னுடைய விசேஷமாக புரிந்தார்கள் எனில் அந்த விசேஷதாவைக் கூட அபிமானம் கீழே கொண்டு வந்து விடுகிறது. தடை ரூபமாக மாறிவிடுகிறது மேலும் அபிமானம் கூட சூட்சும ரூபத்தில் எப்படி வருகிறது என்பதை அறிந்தும் உள்ளீர்கள். என்னுடையது வந்து விட்டது எனில், என்னுடைய பெயர், புகழ், மரியாதை வேண்டும். இது என்னுடையது என்பது அபிமான ரூபத்தில் கொண்டு வருகிறது. இந்த வீணான சங்கல்பம் கூட சம்பூர்ண நிலையிலிருந்து விலக்கி வைத்து விடுகிறது. ஏனென்றால் பாப்தாதா இதை விரும்புகிறார். சுயமரியாதை -வேண்டாம் அபிமான், மற்றும் அவமான். வீணான சங்கல்பம் வருவதற்கு இவைகள் தான் காரணமாக மாறுகிறது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் இரட்டை அதிகாரத்தினுடைய நிச்சயம் மற்றும் போதையில் பார்க்க விரும்புகிறார். இரட்டை அதிகாரத்தன்மை என்றால் என்ன? ஒன்று பாபாவுடைய கஜானாவிற்கு அதிகாரி மற்றும் இரண்டாவது சுயராஜ்யத்தின் அதிகாரி. இரண்டிலும் அதிகாரத்தன்மை அனைவரும் குழந்தைகளாகவும் உள்ளீர்கள் மற்றும்

அதிகாரிகளாகவும் உள்ளீர்கள். ஆனாலும் பாப்தாதா பார்த்தார், குழந்தைகளாக அனைவரும் உள்ளனர். ஏனெனில், அனைவரும் கூறுகின்றனர் “என்னுடைய பாபா”! “என்னுடைய பாபா" என்றால் குழந்தை ஆகி விட்டீர்கள் ஆனால் குழந்தைத் தன்மையுடன் இரண்டு விதமான அதிகாரி குழந்தையிலிருந்து அதிகாரியாகவும் உள்ளேன். எப்படியோ கஜானா பிராப்தியாக உள்ளது இதனால் குழந்தைத்தன்மையுடைய நிச்சயம் மற்றும் போதை இருக்கிறது ஆனால் அதிகாரித்தன்மையில் நடைமுறையில் நிச்சயத்தின் போதை அதில் வரிசைக்கிரமமாக மாறி விடுகிறது. சுயராஜ்ய அதிகாரி தான் எஜமானர், இதில் விசேஷமாகத் தடையை ஏற்படுத்துகிறது மனது. மனதினுடைய எஜமானன் ஆகி எப்போதாவது ஆவது மனதின் வசமாகி விடவில்லை தானே! கூறுகின்றனர், சுயராஜ்ய அதிகாரி. சுயராஜ்ய அதிகாரி என்றாலே ராஜா. எப்படி பிரம்மாபாபா ஒவ்வொரு நாளும் சோதனை செய்து மனதினுடைய அதிகாரி ஆகி உலக அதிகாரித் தன்மையின் அதிகாரத்தை பிராப்தியாக அடைந்தார். அப்படி இந்த புத்தி ராஜாவின் கணக்குப்படிப் பார்த்தால் மனம் மந்திரி ஆகும். வீணான சங்கல்பம் கூட மனதில் உற்பத்தி ஆகிறது. அதனால் மனம் வீணான சங்கல்பத்திற்கு வசமாகி விடுகிறது. அப்படி கட்டளைப்படி மனதை நடத்தவில்லையெனில் அது சஞ்சலம் ஆகக்கூடிய காரணத்தால் மனம் பிறர் வசம் ஆகி விடுகிறது. அதனால் சோதனை செய்யவும். அப்படி இருப்பதால் தான் மனதை குதிரை என கூறுகின்றனர். ஏனெனில் சஞ்சலம் ஆகிறதில்லையா! மேலும் உங்களிடம் ஸ்ரீமத்தினுடைய கடிவாளம் இருக்கிறது. ஸ்ரீமத்தினுடைய கடிவாளம் கொஞ்சம் தொய்வானால் மனம் சஞ்சலமாகிறது. ஏன் கடிவாளம் தொய்கிறது? ஏனென்றால் எங்கேயாவது சைடு சீன் (சாலை ஓரக் காட்சி) பார்ப்பதில் ஈடுபட ஆரம்பித்து விடுகிறது. கடிவாளம் தொய்வதால் மனதில் சஞ்சலம் ஏற்பட வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் நான் குழந்தையிலிருந்து அதிகாரியாக உள்ளேனா என இந்த நினைவில் சதா இருங்கள். கஜானாவிற்கு அதிகாரி எனில் சுயராஜ்யத்திற்கும் அதிகாரி, டபுள் அதிகாரியாக உள்ளேனா என்பதை சோதனை செய்க. அப்படி அதிகாரித்தன்மை குறைவாக உள்ளது எனில் பலவீனமான சம்ஸ்காரம் வெளிவருகிறது. மேலும் சம்ஸ்காரத்தை என்ன கூறுகிறீர்கள்? என்னுடைய சம்ஸ்காரம் அப்படி இருக்கிறது, என்னுடைய சுபாவம் அப்படி இருக்கிறது, ஆனால் என்ன இது என்னுடையதா? கூறும் போது

அப்படித்தானே கூறுகிறீர்கள் என்னுடைய சம்ஸ்காரம். இது என்னுடையதா? இப்படிச் சொல்வது சரியா? என்று கூறுங்கள். என்னுடைய சம்ஸ்காராமா? சரியா? என்னுடையதா? அல்லது இராவணனுடைய சொத்தா? பலஹீன சம்ஸ்காரம் இராவணனுடைய சொத்து. அவனுடையதை என்னுடையது என்று எப்படி கூறமுடியும்? என்னுடைய சம்ஸ்காரம் எது? எது பாபாவுடைய சம்ஸ்காரமோ அது என்னுடைய சம்ஸ்காரம். அப்படியானால் பாபாவின் சம்ஸ்காரம் என்ன? (விஷ்வ கல்யாண்) உலகிற்கு நன்மை செய்வது. சுபபாவனை, சுப ஆசை. ஏதாவது பலவீனமான சம்ஸ்காரத்தை என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறுவதுகூட தவறு. மேலும் என்னுடைய சம்ஸ்காரம் அதாவது மனதில் பதிந்து விட்டது எனில், அசுத்தமா பொருளையா மனதில் அமர வைத்துள்ளீர்கள்? என்னுடைய பொருள் என்றால் அன்பு ஏற்படுகிறது தானே? என்னுடையது என்ற புரிந்து கொள்வதால், மனதில் இடம் கொடுத்து விட்டீர்கள். இதன பலமுறை குழந்தைகளுக்கு யுத்தம் அதிகமாக செய்ய வேண்டியதாகிறது. ஏனெனில், சுபமற்றது மற்றும் சுபமானதை மனதில் அமர வைத்துவிட்டால் இரண்டும் என்ன செய்யும்? சண்டைதானே நடந்து கொண்டிருக்கும். எப்போது இது சங்கல்பத்தில் வருகிறதோ பின்பு சொல்லில் என்னுடைய சம்ஸ்காரம் என்பது வந்து விடுகிறது. அதனால் சோதனை செய்க. இந்த அசுத்த சம்ஸ்காரம் என்னுடைய சம்ஸ்காரம் இல்லை. இதனால் சம்ஸ்காரத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும், ஆயிரமாயிரம் மடங்கு பாக்கியவானாக, நடத்தை மற்றும் முகத்தில் பார்க்க விரும்புகிறார். சில குழந்தைகள் கூறுகிறார்கள் பாக்கியவானாக மாறிவிட்டோம் ஆனால் நடக்கும் போதும், அங்கு இங்கு போகும்போதும் பாக்கியம் வெளிப்பட வேண்டும் ஆனால் அது மறைந்து விடுகிறது. பாப்தாதா ஒவ்வொரு சமயம், ஒவ்வொரு குழந்தையினுடைய நெற்றியில் பாக்கியத்தினுடைய நட்சத்திரம் ஜொலிப்பதைப் பார்க்க விரும்புகிறார். யாரவாது தங்களைப் பார்த்தால், முகத்தினால், செயலினால் பாக்கியவானாகக் காட்சி அளிக்க வேண்டும். அப்போது குழந்தைகளான உங்கள் மூலமாக பாபாவுடைய பிரத்யட்சம் ஏற்படும். ஏனெனில் நடக்கும் சமயத்தில் அதிகப்படியாக அனுபவம் செய்ய விரும்புகிறார்கள். எப்படி இன்றைய காலத்தில், அறிவியல் பிரத்யட்ச

ரூபத்தில் தென்படுகிறது இல்லையா? அனுபவம் செய்விக்கிறது இல்லையா? வெப்பத்தைக் அனுபவம் செய்ய வைக்கிறது, குளிரைக் கூட அனுபவம் செய்ய வைக்கிறது எனில், அமைதியின் சக்தியினால் கூட அனுபவம் செய்ய விரும்கின்றனர். எவ்வளவுக்கு எவ்வளவு சுயத்தில் அனுபவத்தில் இருக்கிறீர்களோ அப்போது மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்க முடியும். பாப்தாதா சமிஞ்கை கொடுத்துவிட்டார், இப்போது இணைந்து சேவை செய்க. வார்த்தையால் மட்டும் அல்ல வார்த்தையுடன் அனுபவி மூர்த்தி ஆகி அனுபவம் செய்யக்கூடிய சேவை செய் வேண்டும். யாருக்காவது சாந்தியின் அனுபவம், குஷியினுடைய அனுபவம், ஆன்மீக அன்பினுடைய அனுபவம் இப்படிப்பட்ட அனுபவம் என்ற பொருள் ஒரு முறை அனுபவத்தில் வந்துவிட்டால் விட்டுவிட முடியாது. கேட்கக்கூடிய பொருட்கள் மறந்து போய்விடும், அனுபவம் செய்யும் பொருளை மறக்க முடியாது. அது அனுபவம் செய்விப்பவரின் அருகில் கொண்டு வருகிறது.

அனைவரும் கேட்கின்றனர் இனி எதிர்காலத்திற்காக என்ன புதுமை (நவீனம்) செய்வது? பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார், சேவையில் அனைவரும் ஆர்வம், உற்சாகமாக செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு பிரிவினரும் (Wing) செய்து கொண்டிருக்கின்றனர். இன்று கூட அனைத்து பிரிவினரும் ஒன்றாக உள்ளீர்கள் தானே! மெகா புரோகிராம் கூட செய்து விட்டீர்கள். செய்திகள் கொடுத்து விட்டீர்கள். உங்கள் மேலுள்ள புகாரையும் நீக்கி விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள் ஆனால் இது வரைக்கும் பரமாத்மாவின் ஞானம் இந்த செய்தி பரவவில்லை. பிரம்மா குமாரிகள் செயலை நன்றாக செய்து கொண்டிருக்கிறார்கள், பிரம்மா குமாரிகள் ஞானம் மிகவும் நன்றாக இருக்கிறது ஆனால் பரமாத்மா ஞானம், பரமாத்மா காரியம் நடந்து கொண்டிருக்கிறது இந்த செய்தி பரவ வேண்டும். தியானம் செய்யும் பாடம் நடத்துகிறீர்கள். ஆத்மாவை பரமாத்மாவுடன் இணைத்து தியானம் செய்விக்கிறீர்கள் ஆனால் இப்போது பரமாத்மாவின் காரியத்தை சுயம் பரமாத்மா செய்து கொண்டிருக்கிறார் என்பதை மிகவும் குறைவாக அனுபவம் செய்கின்றனர். ஆத்மா மற்றும் தாரணைகள் இங்கு பிரத்யட்சம் ஆகிக் கொண்டிருக்கிறது. நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள் நன்றாகப் பேசுகிறீர்கள், நன்றாக கற்றுக் கொடுக்கிறீர்கள், இதுவரைக்கும் சரியாக உள்ளது. ஞானம்

நன்றாக உள்ளது என்று மட்டும் கூறுகிறார்கள், ஆனால் பரமாத்மா ஞானம் இது. இந்த வார்த்தை பாபாவிடம் அருகில் கொண்டு வரும். மேலும் எவ்வளவு பாபாவிடம் அருகில் வருகிறார்களோ அவ்வளவு அனுபவம் தன்னைத்தானே செய்து கொண்டே இருப்பர். அதனால், அப்படித் திட்டம் மற்றும் சொற்பொழிவுகளில் கொஞ்சம் கூர்மைப் படுத்துங்கள். இதனால் பரமாத்மாவிற்கு அருகில் வரட்டும். தெய்வீக குணங்களின் தாரணை இதில் கவனம் உள்ளது, ஆத்மாவின் ஞானம் கொடுக்கிறீர்கள், பரமாத்மா வந்து விட்டார், பரமாத்மாவினுடைய காரியத்தை சுயம் பரமாத்மா நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த வெளிப்பாடு காந்தத்தைப்போல் அருகில் கொண்டு வரும். நீங்கள் அனைவரும் கூட அருகில் எப்போது வந்தீர்களோ அப்போது புரிந்தது பாபா கிடைத்து விட்டார், பாபாவைச் சந்திக்க வேண்டும். சிநேகியாக அதிகமாக மாறுகின்றனர். அவர்களுக்கு என்ன புரிந்தது? காரியம் நன்றாகச் செய்கின்றனர். எந்தச் செயலை பிரம்மா குமாரிகள் செய்து கொண்டிருக்கின்றனரோ, அந்த செயலை வேறு யாரும் செய்ய முடியாது, பரிவர்த்தனை செய்கிறார்கள் ஆனால் இதையே அவர்கள் பரமாத்மா கொண்டிருக்கிறார், பரமாத்மாவிடமிருந்து ஆஸ்தி எடுக்க வேண்டும் என்று இவ்வளவு அருகில் வருவதில்லை. ஏனென்றால், இப்போது முதலில் யாரும் புரிவதில்லை, பிரம்மா குமாரிகள் என்ன செய்கிறார்கள்? என்ன இவர்களுடைய ஞானம் என்பதை அவர்கள் இப்போது புரிய ஆரம்பித்து இருக்கிறார்கள் ஆனால் பரமாத்மா பிரத்யக்ஷதா மற்றும் பரமாத்மாவுடைய ஞானம் என புரிந்தால் தடுக்க முடியுமா என்ன? எப்படி நீங்கள் ஓடி வருகிறீர்கள் இல்லையா அப்படி சொற்பொழிவு தயார் செய்யுங்கள், அப்படி பரமாத்மாவின் அனுபவத்தினுடைய நடைமுறை சாட்சி ஆகுக. அப்போது பாபாவுடைய பிரத்யக்ஷதா நடைமுறையில் தென்படும். இப்போது நன்றாக உள்ளது, இதுவரைக்கும் வந்துள்ளார்கள். நாமும் நன்றாக ஆக வேண்டும். அந்த அலை பரமாத்மா அன்பின் அனுபவத்தினால் மட்டுமே ஏற்படும். அனுபவ மூர்த்தி ஆகி அனுபவம் செய்வியுங்கள்! நல்லது. இப்போது இரட்டை அதிகாரி தன்மையின் நினைவினால் சக்திசாலி ஆகி சக்திசாலி ஆக்குங்கள்! நல்லது.

இப்போது என்ன செய்வது? சேவைக்கான வாய்ப்பு பஞ்சாப் மண்டலம்: கையை அசையுங்கள் நல்லது எந்த ஒரு மண்டலமும் சேவையின்

வாய்ப்பு (பார்ட்) கிடைத்தால் திறந்த மனதுடன் வருகின்றனர். நல்லவிதமாக வாய்ப்பை எடுக்கின்றனர். பாப்தாதாவிற்குக் கூட குஷி ஏற்படுகிறது. ஒவ்வொரு மண்டலமும் சேவையினுடைய பாக்கியத்தை நன்றாக எடுக்கின்றனர். பஞ்சாபை அனைவரும் பொதுவாகவே சிங்கம் என்கின்றனர். பஞ்சாப் சிங்கம். பாப்தாதா கூறுகிறார் சிங்கம் என்றால் வெற்றி. சதா பஞ்சாபை சேர்ந்தவர்களுக்கு, தன்னுடைய நெற்றியின் மத்தியில் வெற்றியின் திலகத்தை அனுபவம் செய்ய வேண்டும். வெற்றியினுடைய திலகம் கிடைத்துள்ளது. இந்த நினைவு சதா இருக்க வேண்டும். நாம் தான் கல்ப கல்பமாக வெற்றியடைகிறோம். வெற்றி அடைந்தோம், அடைகிறோம். மற்றும் கல்பம் கல்பமாக அடைவோம். நன்றாக இருக்கிறது. பஞ்சாப் கூட வாரிசு தரத்தை பாபாவிற்கு முன் கொண்டு வரும் புரோகிராம் செய்து கொண்டிருக்கிறீர்கள் தானே! இப்போது பாப்தாதாவிற்கு முன்னால் வாரிசு தரமானவர்களை அழைத்து வரவில்லை. சிநேகத்தினுடைய தரமானவர்களை அழைத்து வந்துள்ளீர்கள். அனைத்து மண்டலங்களும், சிநேகி, சகயோகி தரமானவர்களை கொண்டு வந்தீர்கள் ஆனால் வாரிசு தரத்தைக் கொண்டு வரவில்லை. தயார் செய்து கொண்டு இருக்கிறீர்கள் தானே? அனைத்து விதமானதும் வேண்டுமில்லையா? நன்றாக உள்ளது! சென்டர்களிலும் விருத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் ஊக்கம், உற்சாகத்துடன் சேவையில் விருத்தி செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது பார்ப்போம் எந்த மண்டலத்தில் “பரமாத்மா வந்து விட்டார்” இது பிரத்யக்ஷம் ஆகும். பாபாவை பிரத்யட்சம் எந்த மண்டலம் செய்யும்? அதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். வெளி நாட்டினர் செய்வீர்களா? வெளி நாட்டினரும் செய்ய முடியும். பஞ்சாப் நம்பர் எடுங்களேன். எடுத்தால் நல்லது. ரொம்ப காலத்திலிருந்து முயற்சி செய்கிறீர்கள். இது தான், இது தான், இது தான் என்ற செய்தி பரப்புவதற்காக அனைவரும் சகயோகம் கொடுப்பார்கள் உங்களுக்கு. இப்போது இதுவும் இருக்கிறது. இதுவே தான் என்பது இல்லை. பஞ்சாப் என்ன செய்கிறது? இந்த செய்தி வரட்டும் இது தான், இது தான்... டீச்சர்கள் சரி தானே? எது வரைக்கும் செய்வீர்கள்? இந்த வருடத்தில் செய்வீர்களா? புதிய வருடம் ஆரம்பமாகி விட்டதில்லையா? புதிய வருடத்தில் ஏதாவது புதுமை செய்ய வேண்டுமில்லையா? இதுவும் இருக்கிறது. இதை அதிகம் கேட்டு விட்டோம். எப்படி உங்களுடைய மனதில் பாபா மட்டும், பாபா,

பாபா என தானாகவே நினைவு இருக்கிறது, அப்படி அவர்களின் வாயிலிருந்து வரவேண்டும் எங்களுடைய பாபா வந்து விட்டார். அவர்கள் உடன் அனைவரும், என்னுடைய பாபா, என்னுடைய பாபா, என்ற செய்தி நாலாபுறமும் உள்ள திசைகளிலிருந்து வரவேண்டும். ஆனாலும் ஆரம்பம் என்பது ஒரு திசையிலிருந்து ஆரம்பமாகுமில்லையா? பஞ்சாப் அதிசயம் செய்யுமா? ஏன் செய்யாது? செய்யத்தான் வேண்டும். ரெம்ப நல்லது. (அட்வான்ஸ் வாழ்த்துக்கள்)

(**Wings) குரூப்புடன் சந்திப்பு:** அனைவரும் எழுந்திருங்கள், நல்லது. அனைவரும் பிஸியாக உள்ளீர்கள் தானே, சேவையில் பிஸியாக இருப்பதற்கான வாழ்த்துக்கள் ஒவ்வொருவரும் அவரவருடைய விதியை தன்னுடையதாக்கிச் செல்கின்றனர். பாருங்கள். அறிவியல் மற்றும் பொறியாளர்களின் பேனரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன், ஆனால் அதிசயமாக உள்ளது, எப்படி அறிவியல் பிரத்யக்ஷ பிரமாணமாகத் தெரிகிறது அப்படி அமைதி சக்தியை நடைமுறையில் அனுபவத்தை பரப்புங்கள், அதனால் ஒவ்வொருவருடைய வாயிலிருந்து வரவேண்டும் அறிவியல் அறிவியலாக உள்ளது ஆனால் அமைதி சக்தி அபாரம்! ஏனெனில் மதங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அறிவியலறிஞர்கள் இருவரும் சேர்ந்து நடைமுறையில் அறிவியலின் அற்புதங்களுக்குப் பதிலாக அமைதியினுடைய செயலை (அற்புதத்தை) நிரூபித்துக் காட்ட வேண்டும். மதங்களைச் சேர்ந்தவர்கள் நடைமுறையில் ஒரு பரமாத்மா உள்ளார். மேலும் பரமாத்மாவுடைய செயல் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் அநேக விதங்களிலிருந்து புத்தியை விடுவித்து ஒரு திசையில் ஈடுப வேண்டும். ஒரு நிலைப்பாட்டினுடைய புத்தியாக வேண்டும். எந்த பிரிவாக இருந்தாலும் பாப்தாதா கூறிவிட்டார், வேலை அனைவரும் செய்து கொண்டிருக்கிறார்கள், திட்டம் கூட நல்ல நல்லதாக செய்கின்றனர், ஆனால் இப்போது சமயத்தினுடைய வேகம். வேகமாக சென்று கொண்டிருக்கிறது. அதனால் சமயப்பிரகாரம் இப்போது அந்த அளவு திட்டம் தீட்டுங்கள். அனைவருடைய புத்தியில் பரமாத்மாவைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லை. அதிகமானோர் வாயிலிருந்து பாபா, பாபா என்பது வரவேண்டும். பிளான் கூட நன்றாக செய்துள்ளீர்கள். பாப்தாதா கேட்டார், ஆனால் அதை இப்போது வேகமாக ஆக்க வேண்டும். அறிவியலைக் கூட பாருங்கள் சமயத்தை,

பொருட்களை மிகவும் சூட்சுமமாக உருவாக்கிக் கொண்டு செல்கிறது இல்லையா? அமைதியின் சக்தி எவ்வளவு சக்திசாலியாக மாறி உள்ளது என்பதை அனுபவம் செய்விக்கவும். எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

மீடியா மற்றும் மெடிக்கல் பிரிவு கூட முன்னால் செல்கிறது. பாப்தாதா கேட்டார், மீடியா கூட மிகவும் விஸ்தாரமாக பிராப்தி செய்கிறது ஆனால், மீடியாவிற்காகவும் கூறப்பட்டுள்ளது யாருடைய கையில், செய்தித்தாள் வந்தாலும், யாருடைய வானொலியின் சுவிட்சைப் போட்டாலும் டி.வி. உடைய சுவிட்ச் ஆன் செய்தாலும் சப்தம் வரவேண்டும், எங்களுடைய பாபா வந்து விட்டார். மற்ற பிரிவுகள் செய்வதில்லை என்பது கிடையாது. அனைவரும் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார், எந்தப் பிரிவு நம்பர் ஒன் நிமித்தமாகிறது என்று, எந்த மண்டலம் நம்பர் ஒன் நிமித்தம் ஆகிறது. சரி மற்றதை எல்லாம் விடுங்கள் ஆனால் எங்கேயாவது புரோகிராம் (நிகழ்ச்சி) செய்கிறீர்கள், அந்த புரோகிராமில் வருகிறவர்கள் அனைவரும் கூறவேண்டும் பாபா வந்து விட்டார், இது ஆரம்பமாகும் நீங்கள் கூறுவீர்கள் நாங்களும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். முழுமை நிலை அடைவோம் அதி விரைவில் இதனால் இந்த செயலும் நடந்து விடும். ஏனெனில் தொடர்பு இருக்கிறது. தாங்கள் முழுமை நிலை அடைய வேண்டும், பிரத்யக்ஷதாவினுடைய கொடி ஏற்ற வேண்டும். பாப்தாதா கேட்டார், வீணான எண்ணங்கள் இப்போது கூட இருக்கிறது, ராயல் ரூபத்தில் நடக்கிறது, சாதாரண ரூபத்தில் கூட நடக்கிறது அனைவரும் மனதின் அதிகாரி ஆகி விடுங்கள். பரமாத்மா குழந்தை மற்றும் அதிகாரி நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

வெளிநாட்டவர்களுக்கு: பாப்தாதா கூறுகிறார், இரட்டை வெளி நாட்டவர்கள் அனைவரையும் விட முதலில் மதுபனில் அலங்காரமாக உள்ளனர். எவ்வளவு நன்றாக உள்ளது. தேசம், வெளிநாட்டவர் இருவரும் ஒரு வழிப்படி ஒரு நிலைப்பாட்டினுடைய புத்தியினால் உலக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள், ஒரே மேடையில் அகில உலகமும் உள்ளது. கறுப்பர்களும் உள்ளனர், வெள்ளையர்களும்

உள்ளனர். அனைத்து விதமானவர்களும் ஒரே மேடையில் அமர்ந்துள்ளனர். மேலும் அனைவரும் ஒரு பாபா மற்றவர் யாருமில்லை தானே? இரண்டாவதாக யாராவது வீணான சங்கல்பம் இருக்கிறது எனில் அது இரண்டாவதாகி விடும். இன்று பாப்தாதா அனைத்து சங்கல்பத்தினுடைய விதியை ஒரு சுப சங்கல்பமாக மாற்ற விரும்புகிறார். ஏனெனில் மனதின் சங்கல்பத்தில் ரெம்ப காலமாகவே எந்த பலவீனம் செல்கிறதோ அது அதிகமான காரணத்தினால், மனம், புத்தியைக் கூட சகயோகியாக மாற்றி விடுகிறது. மற்றும் மனம் புத்தியில் எந்த பலவீனத்தின் சங்கல்பம் வருகிறதோ அது சம்ஸ்காரமாக மாறிவிடுகிறது. ஏனெனில் அதிக காலம் செல்கிறது இல்லையா? அதனால் சம்ஸ்கார் ரூபமாக மாறிவிடுகிறது ஆனால், என்னுடைய சம்ஸ்காரம் என ஒருபோதும் கூற வேண்டாம். அப்படி என்னுடைய சம்ஸ்காரம் எனக் கூறினீர்களேயானால் பாப்தாதா மற்றும் பிராமணர்கள் புரிந்து கொள்வார்கள், இவருக்கு இராவணனுடைய சொத்து மீது அன்பு உள்ளது. இரட்டை வெளிநாட்டவர்கள் விடை கொடுத்து விட்டீர்கள் தானே? கொடுத்தாயிற்றா? வீணானது நின்று விட்டதா? சக்திசாலி பாபா, சக்திசாலியான நாம் வீணானது முடிந்து விட்டது. சரி தானே! வெளி நாட்டவருடைய ஒரு விசேஷ குணம் பாபாவிற்கு ரெம்ப நன்றாகப் பிடிக்கிறது அது என்ன? உள்ளே ஒன்றும் வைப்பதில்லை. அனைத்தையும் கூறிவிடுகின்றனர். மறைப்பது இல்லை. அதிகமானோர், அதிகமானோர் அப்படித்தான் உள்ளனர். மேலும் எந்த சங்கல்பத்தை திடமாக செய்தார்களோ அதை நடைமுறையில் கொண்டு வருவதற்குப் பழக்கம் உள்ளது. இதனால் இரட்டை வெளி நாட்டவர் ஆரம்பியுங்கள், திட சங்கல்பம், வேஸ்ட் அழிவு பெஸ்ட் சரிதானே. செய்வீர்களா? இரட்டை அயல் நாட்டவர்கள் செய்வீர்களா? தங்களிடத்தில் சம்ஸ்கார் ரூபத்தில் கூட உள்ளது. எந்த சங்கல்பத்தை செய்தீர்களோ அதை செய்து காட்டுவீர்கள். அதனால் முழு வெளி நாட்டிலும் வீணானவற்றின் பெயர் அடையாளம் இல்லை. டைம் வேஸ்ட் இல்லை வீணான பேச்சு இல்லை, வீணான சங்கல்பம் இல்லை வீணான செயல் இல்லை, வீணான சம்பந்தம் தொடர்பு இல்லை. சரிதானே? விருப்பமா? நல்லது எப்போது ரிசல்ட் இங்கே? வரும்? முன்னுதாரனமாக ஆவீர்கள் தானே! எதுவரைக்கும் ரிசல்ட் வரும்? எவ்வளவு நாட்களுக்குள் இந்த ரிசல்ட் வரும்? மூன்று மாதத்தில் அல்லது ஒரு வருடத்திலா? என்ன யோசிக்கிறீர்கள்?

டீச்சர்கள் என்ன யோசிக்கிறீர்கள்? (தாதி ஜானகி கூறினார் என்றாலே செய்தாகி விட்டது) நல்லது பாருங்கள், திட சங்கல்பம் வைப்போம் செய்து தான் ஆக வேண்டும், என்ன ஆனாலும் சரி செய்து தான் ஆக வேண்டும். (அனைவரும் கூறினார்கள் சிவராத்திரிக்குள் செய்து விடுவோம்) வாழ்த்துக்கள். லட்சக்கணக்கில், லட்சக்கணக்கில் வாழ்த்துக்கள். மிக நல்லது. உங்களுடைய அனைவரின் வாயிலும் குலோப் ஜாமுன். நல்லது.

யார் ஊக்கம், உற்சாகத்தினால் முன்னால் செல்ல விருப்பமோ அவர்கள் முன் செல்லமுடியும். இரட்டை வெளிநாட்டவர் கையை உயர்த்தி விட்டனர். அப்படி மட்டும் இல்லை நீங்கள் அனைவரும் என்ன செய்வீர்கள்? இந்தியர்கள் என்ன செய்வீர்கள்? நம்பர் ஒன் எடுக்க விருப்பமிருக்கிறதில்லையா? அனைவருடைய மனதில் இந்த ஊக்கம் வரவேண்டும். நாங்கள் கூறவில்லை ஆனாலும் செய்தே காட்டுவோம். அதனால் இந்தியர் அப்படி செய்வீர்கள் தானே? தைரியத்தைக் காட்டுவீர்கள் தானே? முதலில் வரிசையில் உள்ளவர்கள் கையை உயர்த்தாமல் உள்ளனர்.

ஆமாம் மதுபன் நிவாசிகளும் செய்வார்கள், மதுபன் நிவாசிகள் கையை உயர்த்துங்கள். மதுபன் நிவாசிகளுக்காக பாப்தாதா கூறுகிறார்: மதுபன் நிவாசிகளுக்கு மிக பெரிய லிப்ட் கிடைத்துள்ளது. லிப்டினால் மேலே ஏற விரும்பினால் மிகவும் வேகமாக முழுமையானவராக மாறி விட முடியும். மக்கள் மதுபனிற்கு வருகிறார்கள். நீங்கள் மதுபனில் இருக்கிறீர்கள். அலட்சியமாக மட்டும் மாறி விடவேண்டாம். லிப்டை விட்டு படியில் ஏறாதீர்கள், லிப்டில் ஏறுங்கள். பாப்தாதா மதுபன் நிவாசிகளுக்கு ஒவ்வொரு சீசனிலும் வாழ்த்துக்கள் கொடுக்கிறார். சேவை நன்றாகச் செய்கிறீர்கள், ஆனாலும் இந்த ஆனாலும் பற்றி கூறவா? அல்லது தனியாக கூறட்டுமா? மதுபன் நிவாசிகள் புத்திசாலிகள் அதிகம் பேர் உள்ளனர். புரிந்து விட்டனர், மனதினுள். இதனால் பாபா கூறவில்லை. பாருங்கள், மதுபன் நிவாசிகளுக்கு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சீசனிலும் முன்னால் அமர்ந்து முரளி கேட்பதற்கான சான்ஸ் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு கிடைப்பதில்லை. மதுபன் நிவாசிகள் அனைவரையும் புன்முறுவலுடன் சந்திக்கின்றனர். தங்களுடைய முகத்தினால் பாபாவை பிரத்யட்சம்

செய்ய முடியும். என்னுடைய பாபா என்று கூறுகிறீர்கள் தானே! அந்த என்னுடைய பாபாவை முகத்தினால், நடத்தையினால் தென்பட வையுங்கள். செய்து கொண்டிருக்கிறீர்கள், இப்போது அதைக் கொஞ்சம் வேகமாக்க வேண்டும். மற்றபடி செய்து கொண்டிருக்கிறீர்கள் தானே? அங்கு மதுபன்காரர்கள், மதுபன்காரர்கள் என்கின்றனர். பாருங்கள் எவ்வளவு மரியாதை கொடுக்கிறார்கள். மதுபன் மீதும் அன்பு, மதுபன் நிவாசிகள் மீதும் அன்பு இருக்கிறது. நல்லது. சந்தித்தாயிற்று மதுபன் நிவாசிகளை. இன்று யாரோ கூறினார்கள், மதுபன் நிவாசிகளை சந்திக்க வேண்டுமென்று. பாப்தாதா சந்தித்தார் இல்லையா? நல்லது.

அனைத்து தரப்பினுடைய அனைத்து ஆன்மீக ரோஜா குழந்தைகளுக்கு, சதா பாபாவுடைய ஆழமான அன்பு மற்றும் தேக அபிமானத்திலிருந்து விடுபட்ட பாப்தாதாவுடைய மனதின் செல்லக் குழந்தைகளுக்கு, சதா ஒரு பாபா, ஒரு நிலைப்பாட்டுடைய மனம் மற்றும் ஒரே ரசனை நிலையில் நிலைத்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு நாலாபுறமும் உள்ள விதவிதமான சமயப்படி விதவிதமான இடத்தில் இருந்தும் கூட அறிவியலின் சாதனத்தினால் மதுபனிற்கு வந்தடைந்தவர்களுக்கு முன்னால் அமர்ந்து பார்ப்பவர்களுக்கு அனைத்து செல்லமான, கல்ப கல்பமாக பரமாத்மா அன்பிற்கு அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் மற்றும் மனதினுடைய ஆசீர்வாதங்கள், ஆயிரமாயிரம் மடங்கு ஏற்றுக் கொள்ளவும், மேலும் கூடவே இரட்டை அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவினுடைய வணக்கம்.

தாதிஜியிடம்: மதுபன்னில் ஹீரோ நடிகர் சதா ஜீரோவின் நினைவு உள்ளது. சரீரம் சரியாக இயங்காவிட்டாலும் கொஞ்சம் மெது மெதுவாக நடக்கிறது ஆனாலும் அனைவருடைய அன்பு மேலும் ஆசீர்வாதம் நடத்திக் கொண்டிருக்கிறது. பாபாவுடையது. இருக்கவே இருக்கிறது ஆனாலும் மற்றவர்களுடையதும் உள்ளது (ஆசிர்வாதம்) அனைவரும் தாதிக்கு மிக அன்பு செலுத்துகின்றனர். பாருங்கள் அனைவரும் இதையே கூறுகிறார்கள், தாதிகள் வேண்டும். தாதிகள் வேண்டும், தாதிகள் வேண்டும்... தாதிகளுடைய விசேஷதா என்னவாக இருக்கிறது? தாதிகளுடைய விசேஷதா பாபாவுடையதாக ஸ்ரீமத்படி ஒவ்வொரு அடியையும் வைப்பது. மனதைக் கூட பாபாவின் நினைவு

மற்றும் சேவையில் சமர்ப்பணம் செய்வது. நீங்கள் அனைவரும் அப்படியே தான் செய்கிறீர்கள் தானே? மனதை சமர்ப்பணம் செய்யுங்கள். பாப்தாதா பார்த்தார், மனம் பெரிய அதிசயம் செய்து காண்பிக்கிறது. என்ன செய்கிறது? சஞ்சலம் செய்கிறது. மனம் ஒரு நிலைப்பாடு அடையட்டும். எப்படி கொடி ஏற்றுகிறீர்களோ அப்படி மனதின் கொடி சிவபாபா. சிவபாபா மீது ஒரு நிலைப்பாடு ஏற்படட்டும். வந்து கொண்டிருக்கிறது சமயம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. அவ்வப்போது பாப்தாதா குழந்தைகளுடைய அதிகமான நல்ல நல்ல சங்கல்பங்களைக் கேட்கிறார். அனைவருடைய லட்சியம் மிக நன்றாக உள்ளது. நல்லது. தாதிக்கு மிகவும் குறைவான பேர் தான் உள்ளனர். குறிப்பிட்ட சிலரே உள்ளனர். தாதிகளிடம் அன்பு உள்ளது தானே அனைவருக்கும் நல்லது. (அனைத்து தாதிகளும் அப்படி சென்று கொண்டிருக்கவும்) இப்போது இருக்கிறீர்கள் இல்லையா? இப்போது கேள்வியே இல்லை நல்லது. பாருங்கள் ஹாலின் அழகு எவ்வளவு நன்றாக உள்ளது. மாலை போல் உள்ளது. மாலையின் இடையில் மணி அமர்ந்துள்ளது. நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

.

## 25.02.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பண்டிகை நாளான இன்று, மனதின் ஆர்வம், உற்சாகம் மூலமாக மாயையிலிருந்து விடுதலையடைந்த நிலையில் இருப்பதற்காக, விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இரக்கம் உள்ளவராகி, மாஸ்டர் முக்தி வள்ளல் ஆகுங்கள், கூடவே செல்ல வேண்டுமானால் சமானமாக ஆகுங்கள்! (பாபாவுடன் செல்வதற்கு பாப்சமான் ஆக வேண்டும்). (சிவ ஜெயந்தி)

இன்று நாலாபக்கங்களிலிருந்தும், அதிகப்பிரியமுள்ள குழந்தைகளிடமிருந்து ஆர்வம், உற்சாகம் நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய மனதிலும், பாப்தாதாவின் ஜன்ம தினத்தின் ஆர்வம் நிறைந்த வாழ்த்துக்கள் அடங்கியிருக்கின்றன. நீங்கள் எல்லோரும் கூட, விசேஷமாக இன்றைக்கு வாழ்த்துக்களை அளிப்பதற்காக வந்திருக்கின்றீர்களா? அல்லது பெறுவதற்காக வந்திருக்கின்றீர்களா? பாப்தாதாவும் கூட காணாமல் போய், கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு செல்லக் குழந்தைக்கும்,

குழந்தைகளின் பிறந்த நாளுக்கு ஆயிரமாயிரம் மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். இன்றைய தினத்தின் விசேஷம் முழு கல்பத்திலும் இல்லை. அதாவது தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் ஒன்றாகவே இருக்கும் விசேஷம் முன் எப்போதாவது இருந்ததா? இதற்குத்தான் விசித்திர ஜெயந்தி என்பது. (விசித்திரமான பிறந்த நாள்) இப்படிப்பட்ட பிறந்த நாள் இதற்கு முன் கொண்டாடியிருக்கிறீர்களா? என்று முழுக் கல்பத்தையும் சுற்றி வந்து பாருங்கள் ஆனால் இன்றைக்கு பாப்தாதா குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். குழந்தைகள் பாப்தாதாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். பெயர், சிவஜெயந்தி என்று கூறுகிறீர்கள் ஆனால் இது எப்படிப்பட்ட ஜெயந்தி என்றால், இந்த ஒரு ஜெயந்தியில், பல ஜெயந்திகள் அடங்கியிருக்கின்றன. நீங்கள் தந்தைக்கு வாழ்த்துக்களைக் கூற வந்திருக்கிறீர்கள். தந்தை உங்களுக்கு வாழ்த்துக்களைக் கூற வந்திருக்கின்றார் என்பதைப் பார்க்கும்போது, உங்கள் எல்லோருக்கும் கூட மிகுந்த மகிழ்ச்சியாயிருக்கிறதல்லவா? ஏனென்றால், தந்தை மற்றும் குழந்தைகளுக்கு பிறந்த நாள் ஒன்றாக வந்திருப்பது, அளவற்ற அன்பின் அடையாளமாகும். தந்தை குழந்தைகளில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது, குழந்தைகளும் தந்தையில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது, ஜன்மமும் ஒன்றாக இருக்கிறது. சங்கமயுகத்தில் இருப்பதும் ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் தந்தை மற்றும் குழந்தைகள் கம்பைண்டாக (இணைந்து) இருக்கிறார்கள். விஷ்வ கல்யாணகாரியம் கூட ஒன்றாக இருக்கிறது. தனியாக தந்தையும் கூட ஒன்றும் செய்ய முடியாது. குழந்தைகளும் கூட ஒன்றும் செய்ய முடியாது. இணைந்து இருக்கின்றனர். பாபாவுக்குக் கொடுத்த உறுதிமொழியும் இருக்கிறது (வாய்தா). கூடவே இருப்போம் (சாத் ரஹேங்கே) கூடவே செல்வோம் (சாத் சுஷலேங்கே). கூடவே. வருவீர்கள் அல்லவா? வாய்தா இருக்கிறதல்லவா? (உறுதிமொழி). தந்தைக்கும் குழந்தைக்குமிடையேயான இவ்வளவு அன்பை பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்கிறீர்களா? அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? ஆகவே தான் சங்கமயுகத்திற்கு இவ்வளவு மகத்துவம் உள்ளது. மேலும் இதே சந்திப்பின் ஞாபகார்த்தத்தை விதவிதமான திருவிழாக்களாக உருவாக்கியிருக்கிறார்கள். இந்த சிவஜெயந்தி தினத்தன்று பக்தர்கள் வாருங்கள் என்ற அழைக்கிறார்கள். எப்போது வருவார்? எப்படி வருவார்? என்பதைப் பற்றி யோசித்துக்

கொண்டிருக்கிறார்கள் ஆனால் நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்.

பாப்தாதாவுக்கு பக்தர்கள் மீது அன்பும் இருக்கிறது. இரக்கமும் வருகிறது. இவர்கள் எத்தனையோ விதமான முயற்சிகள் செய்கின்றார்கள். தேடிக் கொண்டேயிருக்கிறார்கள். நீங்கள் தேடினீர்களா? அல்லது தந்தை உங்களைத் தேடினாரா? தேடியது யார்? நீங்கள் தேடினீர்களா? நீங்களோ சுற்றிச் சுற்றியே திரிந்து கொண்டிருந்தீர்கள் ஆனால் தந்தையைப் பாருங்கள். குழந்தைகள் எங்கேயோ ஒரு மூலையில் காணாமல் போய்விட்டார்கள். இன்றைக்கும் கூட பாருங்கள். பாரதத்தின் அநேக இராஜ்யங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள் ஆனால் இதில் வெளிநாடும் குறைந்ததல்ல 100-தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள் ஆனால் கஷ்டப்பட்டார்களா? தந்தையின் உடமையாவதற்காக என்ன கஷ்டப்பட்டார்கள்? கஷ்டப்பட்டார்களா? என்ன கஷ்டப்பட்டீர்கள்? கஷ்டப்பட்டோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். தந்தையைத் தேடுவதை பக்தியில் செய்தீர்கள் ஆனால் எப்போது தந்தை கண்டுபிடித்து விட்டாரோ, பிறகு கஷ்டப்பட்டீர்களா? கஷ்டப்பட வேண்டியிருந்ததா? ஒரு வினாடியில் கொடுக்கல், வாங்கல் செய்து முடித்து முடிந்து விட்டது. ஒரு வார்த்தையில் வியாபாரம் முடிந்து விட்டது. அந்த ஒரு வார்த்தை எது? "என்னுடைய" (மேரா) குழந்தைகள் சொன்னார்கள் "மேரா பாபா" என்று. தந்தை கூறினார், "என்னுடைய" குழந்தைகள் என்று முடிந்து விட்டது. சுலபமான வியாபாரமா? கஷ்டமானதா? சுலபம் தானே! யாராவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். யார் கஷ்டம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சில சமயம் கஷ்டமாக இருக்கிறதல்லவா! அல்லது இல்லையா? இது சுலபமானது தான் ஆனால் தங்களுடைய பலவீனமானது, கஷ்டமாக அனுபவம் செய்விக்கிறது.

பாப்தாதா பார்க்கின்றார். பக்தர்களும் கூட யார், உண்மையான பக்தர்களாக இருக்கின்றார்களோ, உண்மையான பக்தர்கள், இன்றைய தினம் (சிவராத்திரி நாள்) மிக அன்புடன் விரதம் இருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் கூட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் கொஞ்ச நாட்களுக்காக விரதம் இருக்கிறார்கள் ஆனால் உங்களுடைய

விரதம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நீங்கள் இப்போது இருக்கும் விரதம் 21-ஜென்மங்களுக்கு நிரந்தரமாக இருக்கும். அவர்கள் ஆண்டுக்கு கொண்டாடுகிறார்கள். விரதம் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் கல்பத்தில் ஒரு முறை விரதம் எடுத்துக் கொள்கிறீர்கள். இதன் காரணமாக 21-பிறவிக்கு மனதாலும் விரதம் இருப்பதில்லை. உடலாலும் விரதம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. விரதம் நீங்களும் கூட இருக்கிறீர்கள். எப்படிப்பட்ட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? பவித்திர விருத்தி, திருஷ்டி, கிருத்தி, பவித்திர ஜீவன் என்ற விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். வாழ்க்கையே (ஜீவன்) பவித்திரமாகி விட்டது. பவித்திரத்தா என்பது பிரம்மச்சர்யம் மட்டுமல்ல, வாழ்க்கையில் உணவு, நடத்தை (ஆஹார், விஹகார்) உலகம், சம்ஸ்காரம் எல்லாவற்றிலும் பவித்திரம் (தூய்மை). இப்படிப்பட்ட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? எடுத்திருக்கிறீர்களா? கழுத்தை அசையுங்கள் எடுத்திருக்கிறீர்களா? பக்காவாக எடுத்திருக்கிறீர்களா? பக்காவா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் கச்சாவா? அச்சா. ஒரு மகாபூதம் காமம், இந்த விரதம் எடுத்திருக்கிறீர்கள். மேலும் இன்னும் நான்கு இருக்கிற தல்லவா! அதற்கும் கூட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? பிரம்மச்சாரி ஆகி விட்டீர்கள். இதன் பின்னால் இன்னும் நான்கு இருக்கிறதல்லவா? அதற்கும் கூட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கோபத்திற்கும் கூட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது அதற்கு அனுமதி அளித்திருக்கிறீர்களா? கோபப் படுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்களா? இரண்டாவது நம்பர் தானே! பரவாயில்லை என்ற நினைத்து விட்டீர்களா? இப்படி இல்லை தானே? எப்படி மகாபூதத்தை மகாபூதம் என்று புரிந்து மனம், சொல், செயலில் விரதம் பக்காவாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்களோ, இதேபோலவே, கோபத்திற்கும் கூட விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? யார் கோபத்திற்கும், இதன் குழந்தை குட்டிகளான மோகம், அகங்காரம் அனைத்திற்கும் விரதம் எடுத்திருக்கிறோம் என்று நினைக்கிறீர்களோ அதில் கோபம் என்பது பற்றி பாப்தாதா இன்றைக்கு கேட்கின்றார். யார், கோபம் எனும் விகாரத்திற்குப் பூரண விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ மனதிலும் கோபம் இருக்கக்கூடாது, உள்ளத்திலும் கோபத்தின் மனக்கிளர்ச்சி (உணர்ச்சி) வசப்படுதல்) இருக்கக்கூடாது, இப்படி இருக்கிறதா? இன்றைக்கு சிவஜெயந்தி

அல்லவா? பக்தர்கள் விரதம் இருக்கின்றார்கள் என்றால், பாப்தாதாவுடம் கூட விரதத்தைப் பற்றிக் கேட்பாரல்லவா? யார் சொப்பனத்திலும் கூட கோபத்தின் அம்சம் வருவதில்லை என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். வரமுடியாது. அப்படித்தானே? வருவதில்லை. வருவதில்லையா? வருவதில்லை, நல்லது இவர்களை போட்டோ எடுங்கள். யார், கை உயர்த்தியிருக்கிறார்களோ அவர்களை போட்டோ எடுங்கள். நல்லது. ஏன்? ஏனென்றால், உங்கள் கை உயர்ந்திருப்பதைப் பார்த்து பாப்தாதா ஏற்றுக் கொள்ள மாட்டார். உங்களுடன் இருப்பவர்களிடமிருந்து சர்டிபிகேட் பெறுவேன். பிறகு பரிசு கொடுப்பேன். நல்ல விஷயம். ஏனென்றால், பாப்தாதா பார்த்தார். கோபத்தின் அம்சமாகிய பொறாமை, வெறுப்பு, ஆகியன கோபத்தின் குழந்தை குட்டிகள் இருந்தாலும் நல்ல விஷயம் என்னவென்றால், யாரெல்லாம் தைரியம் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு பாப்தாதா இப்போது வாழ்த்துக்களை அளிக்கின்றார ஆனால் பிறகு சர்டிபிகேட் கிடைத்ததும், பரிசு கொடுப்பேன். ஏனென்றால், பாப்தாதா என்ன ஹோம் ஒர்க் கொடுத்திருந்தாரோ, அதன் ரிசல்ட்டையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

இன்றைக்கு பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே பிறந்த நாளுக்காக, என்ன செய்வார்கள்? ஒன்று கேக் வெட்டுவார்கள், இன்று வரை இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. இன்னும் ஒரு மாதம் பாக்கி இருக்கிறது. கடந்து சென்ற இரண்டு மாதத்தில் நீங்கள் வீண் சங்கல்பத்திற்கான கேக் வெட்டினீர்களா? அந்த கேக்கை சர்வ சாதாரணமாக வெட்டி விடுகிறீர்கள். இன்றைக்கும் கூட வெட்டுவீர்கள் ஆனால் வீண் எண்ணங்கள் என்ற கேக் வெட்டி விட்டீர்களா? வெட்டத்தான் வேண்டுமல்லவா? ஏனென்றால், கூடவே (பாபா) செல்ல வேண்டும். இந்த உறுதிமொழி பக்காவாக இருக்கிறதல்லவா? இந்த உறுதிமொழி கூடவே இருக்கிறது. கூடவே செல்லவும் வேண்டும். அப்படியானால், சமான் (பாப்சமான்). ஆக வேண்டியதிருக்குமல்லவா? ஒருவேளை கொஞ்சநஞ்சம் மிச்சம் மீதமிருக்குமானால், இரண்டு மாதம் முடிந்து போய்விட்டது. இன்றைய தினம் பிறந்த நாள் கொண்டாடுவதற்காக எங்கெங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறீர்கள்? விமானம் மூலம் வந்திருக்கிறீர்கள். ரயில் பயணம் செய்து

வந்திருக்கிறீர்கள். கார் மூலமாக வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஏனென்றால் ஓடோடி வந்திருக்கிறீர்கள் ஆனால் பிறந்த நாள் தினத்தன்று முதலில் அன்பளிப்பும் கொடுக்கின்றார்கள். இன்னும் ஒரு மாதம் பாக்கி இருக்கிறது. ஹோலியும் கூட வரப்போகிறது. ஹோலியின் போது, கொஞ்சம் எரிக்கவும் செய்கிறார்கள். இன்னும் ஏதாவது கொஞ்ச நஞ்சம் வீணான எண்ணங்கள் விதை ரூபத்தில் இருந்தால் துளிர்விட்டு, முளைத்து தண்டாக வளரும். சில சமயம் தண்டிலிருந்து கிளைகளும் வளரக்கூடும். ஆகவே உற்சவ நாளான (சிவராத்திரி பண்டிகை நாள்) இன்று மனதின் ஆர்வம், உற்சாகத்துடன், வாய் மூலமாக அல்ல. மனதின் ஆர்வம், உற்சாகத்தோடு ஏதாவது மீதமிருந்தால், மனதிலோ, பேச்சிலோ, சம்மந்தம் அல்லது தொடர்பிலோ இருந்தால், தந்தையின் பிறந்த நாளாகிய இன்று, தந்தைக்கு அதை அன்பளிப்பாக கொடுக்க முடியுமா? கொடுக்க முடியுமா? மனப்பூர்வமான ஆர்வம், உற்சாகத்தோடு லாபம் உங்களுக்குத்தான். தந்தைக்கோ, பார்க்க வேண்டும். யார் ஆர்வம், உற்சாகத்தோடு தைரியம் உள்ளவர்களாக இருக்கின்றார்களோ, செயல் மூலமாக செய்து காட்டுவார்களோ, அதாவது நல்ல மாற்றம் கொண்டு வருவார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். விலக்கி விட வேண்டும். யோசித்து செய்யுங்கள். பேச்சிலும் கூடாது, சம்மந்தம், தொடர்பிலும் கூடாது. இருக்கிறதா, தைரியம்? தைரியம் உண்டா? மதுபன் வாசிகளும் இருக்கிறார்கள். வெளிநாட்டினரும் இருக்கிறார்கள். பாரதவாசிகளும் கூட இருக்கிறார்கள். ஏனென்றால் பாப்தாதாவிடம் அன்பு இருக்கிறதல்லவா? பாப்தாதா, எல்லோரும் கூடவே செல்ல வேண்டும், யாரும் விடுபட்டு போய் விடக்கூடாது என்று நினைக்கின்றார். எப்போது உறுதிமொழி (வாய்தா) கொடுத்திருக்கின்றீர்களோ சாத் சலேங்கே (கூடவே செல்வோம்) என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கின்றீர்களோ, அப்போது சமானமாக ஆகியேத் தீரவேண்டும் அல்லவா? அன்பிருக்கிறதல்லவா? கஷ்டப்பட்டுக் கொண்டு கை உயர்த்தவில்லை தானே?

பாப்தாதா இந்தக் குழுவை (சங்க்கட்டன்) பிராமண பரிவாரத்தை பாபா சமானமாக ஆகியிருக்கும் முகத்தைப் பார்க்க விரும்புகின்றார். திட சங்கல்பம் என்ற தைரியம் மட்டும் வைத்திருங்கள். ஒன்றும் பெரிய

விஷயமல்ல ஆனால் பொறுமை சக்தி வேண்டும். அடக்கும் சக்தி வேண்டும். இந்த இரண்டு சக்திகள் அதாவது (சகன் சக்தி, சமானே கி சக்தி இருந்தால் இவர்கள் குரோத் முக்த் (கோபத்திலிருந்து விடுதலையடைந்தவர்கள்) மிகவும் எளிதாக ஆகி விட முடியும். ஆதலால் பிராமண குழந்தைகளாகிய உங்களுக்கு பாப்தாதா சர்வ சக்திகளையும் வரதானமாகக் கொடுத்திருக்கின்றார். உங்கள் ஸ்வமான், மாஸ்டர் சர்வ சக்திவான் ஆதலால் ஒரே ஒரு சுலோகத்தை மட்டும் நினைவில் வைத்திருங்கள். ஒருவேளை ஒரு மாதத்தில் சமான் ஆகவேண்டும் என்றால் ஒரு சுலோகம் நினைவில் வைத்திருங்கள் -இது உறுதிமொழியாகும்! துக்கம் கொடுக்கக் கூடாது துக்கம் எடுக்கவும் கூடாது. பிறர் மூலமாக துக்கம் வந்தாலும் அனுபவம் செய்யாமல் இருப்பது. அநேகர் இன்றைக்கு யாருக்காவது துக்கம் கொடுத்தோமா என்று சோதிக்கவும் செய்கிறார்கள் ஆனால் நிறைய பேர் எளிதாக எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஏனெனில் பெறும்போது மற்றவர்கள் தானே கொடுக்கிறார்கள். ஆகவே தன்னை மறந்து விடுகிறார்கள். நான் ஒன்றும் செய்யவில்லை தானே! மற்றவர் தான் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனாலும் ஏன் பெற்றீர்கள்? பெற்றது நீங்களா? அல்லது கொடுத்தவரா? கொடுத்தவர். தவறு செய்து விட்டார், அதை தந்தை அறிவார் அல்லது டிராமாவாக இருக்கட்டும். அது அவருடைய கணக்கு வழக்கு ஆனால் நீங்கள் ஏன் பெற்றீர்கள். பாப்தாதா ரிசல்ட்டைப் பார்க்கும்போது, அதில் கொடுக்கும் போது (துக்கம்) யோசிக்கிறார்கள் ஆனால் பெறும்போது எளிதாக சீக்கிரமாகவே பெற்றுக் கொண்டு விடுகிறார்கள். இதன் காரணமாகவே சமான் ஆக முடிவதில்லை. எடுத்துக் கொள்ளக் கூடாது. (துக்கம்). யார் எவ்வளவு கொடுத்தாலும் சரி, இல்லை என்றாலும் மனக்கிளர்ச்சி (ஃபீலிங்) வசமாகி விடுகிறார்கள். ஆதலால் சிறுசிறு விஷயங்களில் கூட உணர்ச்சி வசப்படுவது அதிகமாகிறது. இதனால் வீணான எண்ணங்கள் முடிவுக்கு வருவதில்லை. அப்படியானால் தந்தையுடன் கூடவே எப்படிச் செல்ல முடியும்? தந்தைக்கு அன்பிருக்கிறது. தந்தைக்கு உங்களை விட்டுப்போக முடியவில்லை. கூடவே அழைத்துச் செல்லத்தான் வேண்டும். சரிதானா? விருப்பமுள்ளதாக இருக்கிறதா? விருப்பம் தான் என்றால் கை உயர்த்துங்கள். தந்தை சென்ற பின், பின்னால் வரவேண்டாமல்லவா? ஒருக்கால், கூடவே தான் செல்ல வேண்டும் என்றால், அன்பளிப்பு கொடுக்க

வேண்டியதாயிருக்கும். ஒரு மாதம் அப்பியாசம் செய்யுங்கள். துக்கம் எடுக்கக்கூடாது. துக்கம் கொடுக்கக்கூடாது. நான் கொடுக்கவில்லை என்று சொல்லக்கூடாது. அவர் தான் எடுத்துக் கொண்டார். இப்படி ஏதாவது நடக்கிறது. பரதர்ஷன் செய்யக்கூடாது. சுயதர்ஷன் (ஆத்ம தரிசனம்). ஹே! அர்ஜுன், நான் ஆக வேண்டும். பாபாவின் கட்டளையை முதன் முதலில் (நம்பர் ஒன்) கடைப்பிடிப்பவர் யாரோ, அவர் தான் அர்ஜுன்.

பாருங்கள். பாப்தாதா ரிப்போர்ட் பார்த்தார். ரிப்போர்ட்டில் திருப்தியாக இல்லை என்பதாகத்தான் இருந்தது. மெஜாரிட்டி திருப்தியாக இல்லை. ஆதலால் பாப்தாதா மீண்டும் ஒரு மாதத்திற்காக கோடிட்டுக் காட்டுகின்றார். (அன்டர்லைன்). ஒருவேளை ஒரு மாதம் அப்பியாசம் செய்து விட்டால் பிறகு பழக்கமாகி விடும். பழக்கப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். இப்படியெல்லாம் நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று சொல்லி, அலக்ஷியமாக இருக்கக்கூடாது. இவ்வளவாவது இருக்கத்தான் செய்யும், அல்ல. உண்மையிலேயே உங்களுக்குப் பாப்தாதாவிடம் அன்பிருக்குமானால், அந்த அன்பின் அடையாளமாக கோபம் எனும் விகாரத்தைக் கூட பலி கொடுக்க முடியாதா? பலியாவதன் அடையாளம், கட்டளையை ஏற்று நடப்பவர்கள். வீணான எண்ணம் கடைசி நேரத்தில் ஏமாற்றிவிடும். ஏனெனில்! நாலா பக்கமும் தன் பக்கம் துக்கத்தின் வாயுமண்டலம், இயற்கை வாயுமண்டலம் மற்றும் ஆத்மாக்களின் வாயுமண்டலம் ஆகர்ஷிக்கத் கூடியதாக இருக்கும். ஒருவேளை வீணான எண்ணங்களின் பழக்கமிருந்தால், வீணானவற்றிலேயே உழன்று கொண்டிருப்பீர்கள், ஆதலால் இன்று விசேஷமாக பாப்தாதாவுக்கு தைரியமாக இருக்க வேண்டும் என்ற சங்கல்பம் இருக்கிறது. விதேகி (ஃபாரினர்ஸ்) ஆத்மாக்களானாலும் சரி, பாரதவாசிகளானாலும் சரி எல்லோரும் ஒரு பாப்தாதாவின் குழந்தைகள் தான். ஆதலால் நாலாபக்கமுமுள்ள குழந்தைகள் தைரியம் மற்றும் திடத்தன்மையுடனிருந்து, வெற்றி மூர்த்தியாகி உலகில் இந்த வெளிப்படையான அறிவிப்பு செய்ய வேண்டும். காமம் இல்லை, கோபம் இல்லை, நாங்கள் பரமாத்மாவின் குழந்தைகள் என்று அறிவிப்பு செய்யவேண்டும். மற்றவர்களை மது அருந்துவதிலிருந்து, புகை பிடிப்பதிலிருந்து விடுவிக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா இன்று

ஒவ்வொரு குழந்தையும் கோப முக்த், காம விகார முக்த் என்ற இந்த இரண்டைப் பற்றியும் தைரியத்துடன் உலக மேடையில் காண்பிக்க விரும்புகின்றார். விருப்பம் தானே? தாதிகளுக்கு விருப்பமானதாக இருக்கிறதா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்களுக்கு விருப்பமா? மதுபன் வாசிகளுக்கு விருப்பமா? மதுபன் வாசிகளுக்கும் விருப்பமுள்ளதாக இருக்கிறது. வெளிநாட்டினருக்கும் கூட விருப்பமுள்ளதாக இருக்கிறதா? ஆகவே எந்த ஒரு பொருள் விருப்பமுள்ளதாக இருக்குமோ, அதைச் செய்வது என்ன பெரிய விஷயம்! பாப்தாதாவும் கூட எக்ஸ்ட்ரா (அதிகப்படியான) கிரணங்களைக் (சக்தி) கொடுப்பார். இப்படிப்பட்ட தோற்றம் தென்பட வேண்டும். அதாவது இவர்கள் ஆசிகள் வழங்குபவர்கள் மற்றும் ஆசிகளைப் பெறக்கூடிய பிராமண பரிவாரத்தினர். ஏனென்றால் நேரமும் அழைக்கிறது. பாப்தாதாவிடம் அட்வான்ஸ் பார்ட்டியினரின் மனப்பூர்வமான அழைப்பும் இருக்கிறது. மாயையும் இப்போது களைத்துப் போய்விட்டது. மாயையும், எங்களுக்கு முக்தி கொடுத்து விடுங்கள் என்று விரும்புகிறது. முக்தி கொடுக்கிறார்கள் என்றாலும் இடையிடையே, கொஞ்சம் மாயையிடம் நட்பு பாராட்டுகிறார்கள். ஏனென்றால், 63-பிறவிகள் நட்பாயிருந்தார்கள் அல்லவா? ஆகவே பாப்தாதா கூறுகின்றார், ஹே, மாஸ்டர் முக்தி வள்ளல்களே! இப்போது எல்லோருக்கும் முக்தி கொடுத்து விடுங்கள். ஏனெனில் முழு உலகிற்கும் கொஞ்சம் ஏதாவது பிராப்தி செய்விக்க வேண்டும். எவ்வளவு வேலை பாக்கி இருக்கிறது? ஏனென்றால், இந்த நேரத்தில் நேரம் உங்களுக்கு சாதகமாக இருக்கிறது. எல்லா ஆத்மாக்களும் முக்தி அடையத்தான் வேண்டும். நேரமிருக்கிறது. இன்னொன்று அந்த சமயத்தில் ஒருவேளை நீங்கள் புருஷார்த்தமும் செய்ய வேண்டியிருந்தால், நேரமிருக்காது. ஆதலால் நீங்கள் கொடுக்க முடியாது. இப்போது கொஞ்சம் நேரமிருக்கிறது. ஆதலால் பாப்தாதா கூறுகின்றார்: முதலில் தனக்கு முக்தி கொடுங்கள், பிறகு உலகத்திலுள்ள எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தியும் பிராப்தி கொடுக்கும் கைங்கர்யம் செய்யுங்கள். அவர்கள் கூக்குரலிடுகிறார்கள். உங்களுக்கு துக்கத்தில் கூக்குரலிடுபவர்களுடைய குரல் கேட்கவில்லையா? ஒருக்கால் உங்களுடைய காரியத்திலேயே மூழ்கியிருப்பீர்களானால் அவர்கள் குரல் கேட்காது, அடிக்கடி பாட்டு பாடுகிறார்கள். துக்கத்திலிருப்பவர்கள் மீது கருணை காட்டுங்கள்.

இப்போதிருந்தே, தயாளு, கிருபாலு, இரக்கமுள்ள சம்ஸ்காரம் வெகு காலம் நிரப்பவில்லையென்றால், உங்களுடைய (துவாபரயுகம்) ஜட சித்திரத்தில் கருணை, கிருபை, தயை ஆகிய வைப்ரேஷன் எப்படி நிரம்பியிருக்கும்!

டபுள் ஃபாரினர்ஸ் நினைக்கிறார்கள், நீங்களும் கூட துவாபர யுகத்தில் கருணையுள்ளவர்களாகி (மெர்ஸிபுல்) எல்லோரிடமும் கருணை காட்டுவீர்கள் அல்லவா? ஜடசித்திரம் மூலமாக. உங்களுடைய சித்திரமும் இருக்கிறதா? அல்லது இந்தியர்களுடையது மட்டும் தானா? ஃபாரினர்ஸ் தங்களுடைய சித்திரமும் இருக்குமா? என்று நினைக்கிறார்கள். சரி. சித்திரம் என்ன கொடுக்கிறது. சித்திரங்களின் பக்கம் என்று என்ன வேண்டுகிறார்கள்? மெர்ஸி, மெர்ஸி என்று உச்சரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஆதலால் இப்போது சங்கமத்தில் நீங்கள் உங்களுடைய துவாபர், கலியுக சமயத்திற்காக, ஜடசித்திரங்களில் வாயுமண்டலத்தை நிரப்புவீர்களேயானால், அப்போது தான், உங்களுடைய ஜட சித்திரங்கள் மூலமாக அனுபவம் செய்வார்கள். பக்தர்களுக்கு மங்களம் செய்வீர்கள் அல்லவா? பக்தர்கள் என்றாலும் கூட, அவர்களும் உங்களுடைய வம்சாவழியினர் தானே! நீங்கள் எல்லோரும் கிரேட், கிரேட் கிராண்ட் ஃபாதரின் குழந்தைகள் என்றால் பக்தர்கள், துக்கத்திலிருப்பவர்களானாலும் சரி, உங்களுடைய வம்சாவழியினர் தான். அப்படியிருக்கும்போது, உங்களுக்கு இரக்கம் வரவில்லையா? வருகிறது ஆனால் கொஞ்சம், கொஞ்சம் மற்றபடி உங்கள் காரியத்தில் மூழ்கி விடுகிறீர்கள். இப்போது உங்களை, உங்களுடைய புருஷார்த்தத்தில் நேரத்தை செலவழிக்காதீர்கள். கொடுப்பதில் செலவழியுங்கள். கொடுத்தீர்கள் என்றால் கொடுப்பது, பெறுவதாகி விடும். சிறுசிறு விஷயங்களிலிருந்து விடுபட்டவர்களாக, முக்தி நாளைக் கொண்டாடுங்கள். இன்றைய தினத்தை முக்தி நாளாகக் கொண்டாடுங்கள். சரிதானா? ஆம். முதலாவது வரிசையில் உள்ளவர்கள், சரிதானா? சரியா? மதுபன் வாசிகள்?

இன்று மதுபன் வாசிகள் மிகவும் அன்புள்ளவர்களாகத் தெரிகிறார்கள். ஏனென்றால், மதுபனை வெகு சீக்கிரமாக ஃபாலோ செய்கிறார்கள். (பின்பற்றுவது). ஒவ்வொரு விஷயத்திலும் மதுபனை சீக்கிரமாகவே பின்பற்றுகிறார்கள். ஆதலால் மதுபன் வாசிகள் முக்திநாள்

கொண்டாடுவீர்கள் என்றால், எல்லோருமே உங்களைப் பின்பற்றுவார்கள். மதுபன் வாசிகளாகிய நீங்கள் எல்லோரும் மாஸ்டர் முக்தி வள்ளல் ஆகி விடுங்கள். ஆகவேண்டுமா? நல்லது நிறைய பேர் இருக்கிறார்கள். நல்லது மிகவும் நல்லவர்கள் நிறையவே இருக்கிறார்கள். நம்பிக்கையுள்ளவர்கள். ஏனென்றால் மதுபன் வாசிகள் அருகாமையில் இருக்கிறார்கள். ஆதலால் அருகாமையிலிருப்பவர்கள். அன்பிற்குரியவர்களாகவும் இருப்பார்கள். (நியரெஸ்ட், டியரெஸ்ட் மதுபன் வாசிகள் அன்பிற்குரியவர்கள் தானே? அருகாமையிலும் இருக்கிறார்கள். பிரியமானவர்களாகவும் இருக்கிறார்கள். (மற்றவர்கள்) நீங்கள் இல்லை. அப்படியல்ல, நீங்களும் கூட அனபிற்குரியவர்கள் தான் ஆனால் அவர்கள் அருகாமையில் இருக்கிறார்கள். ஆதலால் அருகாமையில் இருப்பதில் லாபம் இருக்கிறது. ஆகவே செய்வதன் மூலமாகவும் லாபம் அடைவார்கள் அல்லவா!

நல்லது. டீச்சர்கள் கை உயர்த்துங்கள். நிறைய டீச்சர்கள் இருக்கிறார்கள். டீச்சர்களை பாப்தாதா குருபாயி என்று கூறுகின்றார். ஆகவே குருபாயி என்ன செய்வீர்கள்? ஃபாலோ. நல்லது.

இன்றைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக, நாலா பக்கங்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். (கிரீட்டிங்ஸ்) கார்டும் அனுப்பி யிருக்கிறார்கள். கம்ப்யூட்டர் மூலமாக, இமெயில் முலமாகவும் அனுப்பியிருக்கிறார்கள். யாரெல்லாம் பிறந்த நாள் வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்களோ, அந்த ஒவ்வொரு குழந்தைக்கும் பெயருடன், யாரும் தங்களுடைய பெயரை மறந்து விடக்கூடாது எல்லோருடைய பெயர்களும் பாப்தாதாவின் மனதில் இருக்கிறது. ஆகவே ஒவ்வொருவரும், உங்களுக்கான வாழ்த்துக்களை, மிக மிக் பெரிய மனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அன்பளிப்பும் சிறியதும் பெரியதுமாக அனுப்பியிருக்கிறார்கள். சிலர் 70, 70 பொருட்கள் அனுப்பியிருக்கிறார்கள். திறந்த மனதுடன் கொண்டாடினார்கள். அவர்கள் எல்லோருக்கும், 70 முறை 70 ஆயிரமாயிரம் மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!! பாப்தாதாவின் உளம் நிறைந்த ஆசிகள் அநேகமுறை, எண்ணற்ற முறைகள் ஏற்பீர்களாக! நல்லது. என்ன செய்ய வேண்டும்?

**சேவையின் வாய்ப்பு யு.பி. மண்டலம் உடன் வாரனாசி, மற்றும் நேபாளம் உள்ளது:** எல்லோரும் நல்ல லாபம் எடுத்துக் கொண்டார்கள். ஜோனுக்கு சேவை சான்ஸ் கிடைக்கும் போது, சேவைக்காக, திறந்த மனதுடன், செல்கிறார்கள். மேலும் பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. எல்லோருக்கும் நேரத்திற்கு நேரம் கோல்டன் சான்ஸ் கிடைக்கிறது. ஆகவே சேவையில் மிகுந்த மகிழ்ச்சி உண்டானது. வருமானம் சேமித்தார்கள். எத்தனை ஜன்மங்களுக்கு சேமித்தீர்கள்? 21-ஜென்மத்திற்கான வருமானத்தை சேமித்தார்கள். நல்ல சான்ஸ் எடுத்துக் கொள்கிறீர்கள். யு.பி. (உத்திர பிரதேசம்) ஆதி சென்டர்களில் இது ஒன்று. எப்போது சேவா கேந்திரம் திறக்கப்பட்டதோ, அப்போதிருந்து குறிப்பிடத்தக்க பிரசித்தமாயிருந்த சென்டர்களில் யு.பி. சென்டரும் இருந்தது. ஒரு ஜோன் ஆகி விட்டது. ஒரு சென்டர் மூலமாக, ஒரு ஜோன் ஆகி விட்டது. இனி யு.பி. என்ன கமால் செய்து காட்டப் போகிறீர்கள்? யு.பியில் சாது, சந்நியாசிகள், மகாத்மாக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஒரு பக்கம் யாத்ரீகர்கள், ஒரு பக்கம் மகாத்மாக்கள். ஒவ்வொரு மகாத்மாவுக்குப் பின்னால் ஒரு கூட்டம், ஒரு குழுவைப் போல, கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஹரித்துவாருக்கு ஒரு குரூப் வந்திருந்தது, கொஞ்சப்பேர் தான் ஆனால் மகாமண்டலேஷ்வர் இருந்தார். இப்படி முழு யு.பி.யிலிருந்தும், பனராஸ் ஆகிய யாத்திரை ஸ்தலங்களிலிருந்தும், அப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். அவர்கள் எல்லோரும் ஒரு குரூப்பாக மதுபன் வரை வந்து சேரட்டும். (எல்லாவற்றிற்கும் முதலாவதாக பனாரஸிலிருந்து ஒரு குரூப் வந்திருந்தது). கொஞ்சப்பேர் வந்திருந்தார்கள் அல்லவா! இப்போது குரூப் தயார் செய்து அழைத்து வாருங்கள். முழு யு.பி.யிலிருப்பவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, ஒரு நல்ல குரூப் தயார் செய்து அழைத்து வாருங்கள். அவர்களுக்கு சிநேக மிலன் நடக்கட்டும். இது நடக்க முடியுமல்லவா? அப்படியானால் எந்த தேதிக்குள் அழைத்து வருவீர்கள்? ஏனெனில் நேரத்தை நம்ப முடியாது. இப்போதோ, ஒரே நேரத்தில் மூன்று விதமான சேவை செய்ய வேண்டும். மனசா சேவை வாய் மூலமான சேவை, சம்மந்தம், தொடர்பில் இருக்கக்கூடியவர்கள் மூலமாக, அதாவது முகம் மூலமாகவும் செய்ய வேண்டும். இப்படி வேகமான சேவை செய்தீர்களானால், உலகம் உங்கள் புகழ்பாடும். யு.பி.காரர்கள்

கேட்டீர்களா? என்ன செய்ய வேண்டும்? பாண்டவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்களா? கை உயர்த்துங்கள்.

பாண்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆகவே செய்யுங்கள் ஏதாவது கமால். அற்புதம் நிகழ்த்திக் காட்ட வேண்டும். மற்றபடி நல்லது. விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. இன்னமும் கூட விருத்தியாகிக் கொண்டேயிருக்கும். நல்லது. எல்லோரையும் திருப்திப்படுத்துவதற்காக புண்ணியத்தை சேமித்து விட்டீர்கள். திருப்தி மூலமாக அதிக புண்ணியம் சேமிப்பாகும். ஆதலால் திருப்தியாயிருங்கள். திருப்திப்படுத்தினீர்கள். சேவை செய்தீர்கள். புண்ணியத்தை சேமித்தீர்கள். ஆகவே எல்லோரும் குஷியாக இருக்கிறீர்கள். வேகமான புருஷார்த்தம் அல்லவா! மெதுவாக அல்ல. வேகமாக நல்லது. பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருந்தது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் வந்தீர்கள். திருப்திப்படுத்தினீர்கள். இதற்காக வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

**டபுள் விதேஷி 1500-பேர் வந்திருக்கிறார்கள். 100-தேசங்களிலிருந்து**: அற்புதம் செய்து (கமால்) விட்டார்கள். டபுள் விதேஷிகள். பாருங்கள். எப்போது வெளிநாட்டில் சேவை ஆரம்பமாகியதோ, அப்போது சொன்னார்கள். மாணவர்கள் 5-பேர் தான் வருகிறார்கள். அதிகமாக வரமாட்டார்கள் என்று. இப்போது எவ்வளவு பரவி விட்டது! வெளி நாட்டில் மொத்தம் எத்தனை சேவா கேந்திரங்கள் உள்ளன (500) மாணவர்கள் எப்படி ஆவார்கள்? வி.ஐ.பி. எப்படி வருவார்கள்? என்று இப்போது நினைப்பதில்லையல்லவா? இப்போதோ கண்களைச் சுழற்றினாலே போதும், வி.ஐ.பி. வந்து விடுகிறார்கள். இப்போது வி.ஐ.பி என்ன? சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். இனியும் அதிக வி.ஐ.பி. வருவார்கள். ஏனென்றால், நீங்கள் இப்போது வி.வி.ஐ.பி. ஆகி விட்டீர்கள் அல்லவா? இதனால் அந்த விஜபிக்கள் ஒன்றுமே இல்லை. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. வெவ்வேறு தேசங்கள் என்ற ரூபத்திலுள்ள விருக்ஷத்தின் கிளைகள் ஒரு சந்தன விருக்ஷமாகி விட்டது. இப்போது 500-கலாச்சாரம் இருக்கிறதா? ஒன்று தானே! ஒரு பிராமண கலாச்சாரம் ஆகி விட்டது. பரிவாரத்தைப் பார்த்து குஷியடைகின்றார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! பாப்தாதா கேள்விப்பட்டார் மிகப்பெரிய புரோகிராம்

செய்யப்போகிறார்கள் என்று. டாபிக் (தலைப்பு) பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. தங்களுக்குள் என்ன மீட்டிங் செய்தார்களோ, அதை பாப்தாதா கேட்டார். நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். மேலும் எங்கே தைரியம் இருக்கிறதோ அங்கே வெற்றி நிச்சயம். பிளான் மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். மேலும் இதுவும் கூட நன்றாகச் செய்கிறார்கள். சபையின் நடுவே, அலங்காரமாகக் காட்சி தருகிறார்கள் அல்லவா. குமாரிகள் (குமாரிகள் கிரீடம் அணிந்திருக்கிறார்கள்). அப்படி ஆகி விடுங்கள், எல்லோரும் பார்க்கட்டும் ஆம். எல்லோரும் பாருங்கள். பாருங்கள், எவ்வளவு அழகான காட்சி இந்த குரூப்பினுடைய சேவையும் நன்றாக இருக்கிறது ஆனால் குமாரிகள் கிரீட அலங்காரத்தால் அழகாக இருக்கிறார்கள். இனி இந்த மாதிரி அற்புதம் செய்து காட்டுங்கள். இந்தியாவில் ஃபாரின் குமாரிகள் ஒரு குரூப்பாக, பிரத்யக்ஷம் செய்து காட்டட்டும். ஏனென்றால் ஃபாரினிலும் குமாரிகள், குமார் குரூப் தயாராகி விட்டதல்லவா? அதாவது ஃபாரினிலும், இத்தனை குமாரிகள், குமார்கள் பரிவர்த்தனை ஆகியிருக்கிறார்கள். இவர்களைப் பற்றியும் ஒரு ஃபைல் தயார் செய்யுங்கள். இங்கேயிருக்கும் வி.ஐ.பிகளுக்கு காட்டலாம். எப்படி இங்கே இளைஞர்களுக்கு தயார் செய்திருக்கிறீர்கள் அல்லவா? இங்கே நன்றாகச் செய்திருக்கிறார்கள். அதைப் பார்க்க வேண்டும். அதைவிட சிறப்பாகத் தயார் செய்ய வேண்டும் ஆனால் செய்ததை நன்றாகவே செய்திருக்கிறார்கள். தெளிவாகி விடும். பிராக்டிக்கலாக பரிவர்த்தனை ஆகியிருப்பவர்கள், மாறாமல் இருப்பவர்கள். இன்றைய பரிவர்த்தனைக்கான அனுபவ ஃபைல், விஜபிக்களுக்குக் காட்டுவீர்கள். நாளை அவர்கள் மாறிவிட்டால், அப்படிச் செய்யக்கூடாது. பக்கா. நிச்சய புத்தி விஜயந்தி அப்படிப்பட்ட குரூப் தயாரிக்க வேண்டும். இந்த ஃபைல் தயார் செய்ய வேண்டும். இது நிறைய சேவை செய்யும். ஏனென்றால், பாப்தாதாவுக்கு பிரம்மாபாபாவுக்கு ஆதியிலிருந்து இந்த சங்கல்பம் இருந்தது. வெளிநாட்டினர் உள் நாட்டினரை விழிப்படையச் செய்வார்கள் என்று, ஆகவே, அற்புதம் நிகழ்த்துவார்கள். மற்றபடி பாப்தாதா சேவையைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றார். இன்னும் விருத்தி செய்யுங்கள். எப்படி ஆப்பிரிக்காகாரர்கள் செய்கிறார்கள் அல்லவா? இதுபோல, தங்களுக்கு அக்கம் பக்க பகுதியில் உள்ளவர்களுக்கு சேவை செய்து மங்களம் உண்டாகும்படி செய்யுங்கள். பாப்தாதா நிமித்தமாக இருக்கும் ஆப்பிரிக்காகாரர்களுக்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார்.

நல்ல சேவைக்கான திட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் முன்னேறிச் சென்று கொண்டுமிருக்கிறார்கள். இதற்காக கரவொலி செய்யுங்கள். நல்லது. முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இனிமேலும் முன்னேறிக் கொண்டேயிருப்பார்கள். நல்லது.

யார், முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, பாரத தேசத்திலாகட்டும், வெளிநாட்டினர் ஆகட்டும், நீங்கள் உங்களுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். ஆர்வம், உற்சாகத்துடன், இன்றைய உற்சாகத்தை கொண்டாட வந்திருக்கிறீர்கள். ஆதலால் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒவ்வொருவருக்கும் நிறைய வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! எல்லோரும் இதே லக்ஷியம் வைத்திருங்கள். நீங்கள் கடைசியில் வந்திருக்கலாம் ஆனால் செல்ல வேண்டியது அதிவேகமாக மற்றும் முதலாவதாகவும். இப்படி கமால் செய்து காட்டுங்கள். நல்லது.

இந்த குரூப் நன்றாகவே வந்திருக்கிறது. (ஜப்பானிலிருந்து கொஞ்சம் வி.ஐ.பி. வந்திருக்கிறார்கள்) ஃபாரின் சேவை முதன் முதலில் இங்கு தான் ஆரம்பமாகியது. ஜப்பான்காரர்கள் அதிருஷ்டக்காரர்கள். முதன் முதலில் பிராமண பரிவாரத்தினர் ஜப்பானுக்குத்தான் வந்தார்கள். தாதியை ஞாபகமிருக்கிறதா? ஆதலால் ஜப்பான் ஆதி ஸ்தானமாகி விட்டது. எவ்வளவு அதிருஷ்டம்! உங்கள் எல்லோருக்கும் ஒட்டு மொத்தமாக வாழ்த்துக்களை அளிக்கிறேன். ரெம்பவும் நல்லது. அமருங்கள். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

இப்போது பாப்தாதா எல்லோருக்கும், இங்கே எதிரில் அமர்ந்திருப்பவர் ஆனாலும் சரி, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தூரமாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பவர்கள் ஆனாலும் சரி பார்த்துக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, எல்லோருக்கும் டிரில் செய்விக்கின்றார். எல்லோரும் ரெடியாகி விட்டீர்களா? எல்லா சங்கல்பத்தையும் மெர்ஜ் செய்து விடுங்கள். (சங்கல்பத்தை அமிழ்த்தி (விடுதல்) இப்போது ஒரு வினாடியில் மனம், புத்தி மூலமாக உங்களுடைய இனிமையான வீட்டிற்கு (ஸ்வீட் ஹோம்) சென்று விடுங்கள். அடுத்து பரந்தாமத்திலிருந்து சூட்சும வதனத்திற்குச் செல்லுங்கள். பிறகு சூட்சும வதனத்திலிருந்து ஸ்தூல சாகார

வதனமாகிய (உங்களுடைய இராஜ்யம்) சொர்க்கத்திற்குச் செல்லுங்கள். இப்போது உங்களுடைய புருஷோத்தம சங்கம யுகத்திற்கு வந்து விடுங்கள். அடுத்து மதுபன்னுக்கு வந்துவிடுங்கள். இதே மாதிரி அடிக்கடி, சுயதர்ஷன் சக்கரதாரியாகி, சுற்றிக் கொண்டேயிருங்கள். நல்லது.

நாலா பக்கமுமுள்ள லவ்லி மற்றும் லக்கி குழந்தைகளுக்கு த்தா சுய இராஜ்ய குழந்தைகளுக்கு சதா திட உறுதி மூலமாக, வெற்றி அடைந்து கொண்டிருக்கின்ற, வெற்றி நட்சத்திரங்களுக்கு சதா குஷியாக இருக்கின்ற, குஷ் நஸீப் (குஷியை அனுபவிப்பதற்கு அதிர்ஷ்டமுள்ள) குழந்தைகளுக்கு பாப்தாதாவின் இன்றைய ஜன்ம தினத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த தினத்திற்கு மிகவும் நிறைவான வாழ்த்துக்கள், ஆசிகள் மற்றும் அன்பு நினைவுகள். இப்படிப்பட்ட சிரேஷ்ட குழந்தைகளுக்கு நமஸ்தே

தாதிகளுடன்: ஜன்ம தினத்திற்கு வாழ்த்துக்கள்! (உங்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள்) தாதிகளைப் பார்த்து, எல்லோரும் மகிழ்ச்சியடைந்து விடுகிறார்கள். ஏன், தாதிகள் அன்பிற்குரியவர்களாக இருக்கின்றனர்? ஏனென்றால், நீங்கள் எல்லோருக்கும் அன்புடன் சகயோகம் செய்து முன்னேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். தாதிகளினுடைய உள்ளத்தில் இது தான் இருக்கிறது. பாபாவின் ஒவ்வொரு குழந்தையும், தந்தையின் முன், மிகவும் உயர்ந்ததிலும் உயர்வாக தோற்றமளிக்க வேண்டும் என்பது. குழுவில் இருக்கும் போது, ஒருவர்க்கொருவரிடையே சகயோகம் கிடைக்கிறது. சகயோகமும் இருக்கிறது, சகயோகம் கூட யோகம் தான். எப்போது உங்களுக்கு தாதிகள் ஆர்வம், உற்சாகத்தை அதிகப்படுத்துகிறார்களோ அப்போது உங்களுக்கு யாருடைய நினைவு வந்துவிடுகிறது? பாபா. ஆகவே யோகம் ஆகி விட்டதல்லவா? ஏனெனில், தந்தையின் நினைவு வந்துவிடுகிறது. ஆகவே எத்தனை ஆத்மாக்களின் ஆசிகள் உங்கள எல்லோருக்கும் கிடைக்கிறது. 21-ஜன்மத்திற்கு மொத்தமாக ஆசிகள் கிடைத்துவிடுகிறது அல்லவா? கிடைத்து விடுகிறதல்லவா? 63-ஜன்மங்கள் ஆசிகள் கொடுக்க வேண்டியதாயிருக்கும். யாரிடமிருந்தாவது ஆசிகள் கேட்பீர்களா? உங்களிடம் தான் கேட்பார்கள். அவ்வளவு தான். டிராமாவைப் பாருங்கள். தந்தையைப் பாருங்கள். மேலும் சதா வாஹ் பாபா! வாஹ் டிராமா! என்று சொல்லிக்

கொண்டேயிருங்கள். நன்றாக இருக்கிறீர்களல்லவா, எல்லோரும். பழைய சரீரத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். பழைய சரீரம் மிகவும் விலை மதிக்க முடியாதது. ஆகவே எல்லோரும் பாருங்கள். தாதிகள் பழைய சரீரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் எல்லோருக்கும் கூட, இவர்களைப் பார்த்து, நாமும் இப்படி நடத்தலாம் என்று தைரியம் வருகிறதல்லவா? நல்லது.

**பாப்தாதா தன்னுடைய கைகளால் கொடியைப் பறக்கவிட்டார். மேலும் எல்லாக் குழந்தைகளுக்கும் 70வது திரிமூர்த்தி சிவஜெயந்திக்கு வாழ்த்துக்களை அளித்தார்!** இந்தக் கொடியை பறக்கவிட்டது, மக்களுடைய சேவைக்காக பறக்க விடப்பட்டது ஆனால் உங்களுடைய உள்ளத்தில் தந்தையின் பிரத்யக்ஷத்தாவின் கொடி பறந்து கொண்டிருக்கிறது. இது சதா பறந்து கொண்டேயிருக்கும். உங்களுடைய உள்ளத்தில் எந்த பிரபுவின் அன்புக் கொடி பறந்து கொண்டிருக்கிறதோ, அது முழு உலகிலும், உங்களுடைய உள்ளத்தின் வாயுமண்டலம் பரவிக் கொண்டிருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட ஒரு நாள் வரத்தான் போகிறது. அதாவது உங்களுடைய உள்ளத்தின் அன்பானது வாயுமண்டலத்தில் பரவிக் கொண்டிருக்கிறதே, அது ஒரு காந்தம் போல வேலை செய்யும். மேலும் எல்லோரும் தங்கள் வாய் மூலமாக கூறுவார்கள். வந்து விட்டார், வந்து விட்டார். (ஆ கயா, ஆ கயா எங்களுடைய தந்தை வந்து விட்டார் என்று. இப்போதோ, இந்தக் கொடிதான் பறந்து கொண்டிருக்கிறது. இனி சீக்கிரமாகவே பிரத்யக்ஷத்தா கொடி பறக்க விடுவீர்கள். ஏனென்றால், குழந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் ஏதாவது பிராப்தி செய்விக்கும் காரியம் தந்தைக்கு இருக்கிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு ஜீவன் முக்தி, மற்றவர்களுக்கு முக்தி. அவர்கள் முக்தியில் குஷியடைந்து விடுகிறார்கள். நீங்கள் ஜீவன் முக்தியில் குஷியடைகிறீர்கள். உங்களுக்கு டபுள் வாழ்க்கையும் இருக்கிறது. முக்தியும் இருக்கிறது. அவர்களுக்கு முக்தி மட்டுமே தான். ஆகவே இப்படி உள்ளத்தில் தந்தையின் அன்புக் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருக்கின்ற நாலா பக்கமுமுள்ள குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 14.03.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பரமாத்ம சந்திப்பை அனுபவம் செய்வதற்காக நேர் விரோதமான (உல்டா) நான் என்பதை எரிப்பதற்கான ஹோலி கொண்டாடுங்கள். திருஷ்டியின் பீச்சாங்குழல் மூலமாக எல்லா ஆத்மாக்களுக்கும் சுகம், சாந்தி, அன்பு ஆனந்தம் என்ற வர்ணம் பூசுங்கள்!

இன்று ஹோலியெஸ்ட்(தூய்மையான) தந்தை, தன்னுடைய ஹோலி (தூய்மையான) குழந்தைகளை சந்தித்து மகிழ்ச்சியடைகின்றார். நாலா பங்கங்களிலுமுள்ள ஹோலி குழந்தைகள் தூரமாக அமர்ந்திருந்தாலும், அருகாமையில் இருக்கிறார்கள். பாப்தாதா, இப்படிப்பட்ட ஹோலி, அதாவது மகான் பவித்திர குழந்தைகளின் நெற்றியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் பாக்கிய நடச்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவ்வளவு மகான் தூய்மை (பவித்திர) முழுகல்பத்திலும் வேறு யாரும் அடைவதில்லை. இந்த சங்கமயுகத்தில் பவித்திரத்தா விரதம் எடுத்துக் கொள்ளும் பாக்கியவான் குழந்தைகள் வருங்காலத்தில் டபுள் பவித்திர அதாவது சரீரமும் பவித்திரம், ஆத்மாவும் பவித்திரம் ஆகின்றார்கள். முழு கல்பத்தைச்சுற்றிப் பார்த்தாலும், எவ்வளவோ மகான் ஆத்மாக்கள் வந்திருக்கிறார்கள், ஆனால் சரீரம் மற்றும் ஆத்மா இரண்டும் பவித்திரமாயிருக்கும்படியாக, தர்மாத்மாவும் ஆகவில்லை. மகாத்மாவும் ஆகவில்லை. பாப்தாதாவுக்கு குழந்தைகளாகிய உங்களைப் பற்றிப் பெருமையாக இருக்கிறது வாஹ்! எனது மகான் தூய்மையான குழந்தைகளே வாஹ்! டபுள் பவித்திர, டபுள்

கிரீடதாரியும் யாரும் ஆவதில்லை. இரட்டை கிரீடதாரியும் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள்தான் ஆகின்றீர்கள். உங்களுடைய அந்த இரட்டை பவித்திர, இரட்டை கிரீடதாரி சொரூபம், கண்முன்னே வருகிறதல்லவா? ஆகையால் குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த சங்கமயுகத்தில் எந்த ஒரு வாழ்க்கை பிராக்டிக்கலாக நடைமுறை) ஆகியிருக்கிறதோ, அந்த ஒவ்வொரு வாழ்க்கைச் சிறப்பினை ஞாபகார்த்தமாக, உலகினர் உற்சவமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கும் கூட நீங்கள் எல்லோரும், சிநேகம் (அன்பு) எனும் விமானத்தில் ஹோலி கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்கள். ஹோலி கொண்டாடுவதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் எல்லோரும் உங்கள் வாழ்க்கையில் பவித்திரத்தாவின் (தூய்மை) ஹோலி கொண்டாடியிருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆன்மீக இரகசியத் திற்கும் உலகினர் ஸ்தூல ரூபம் கொடுத்து விட்டார்கள். ஏனென்றால், தேக உணர்வு இருக்கிறதல்லவா? நீங்கள் ஆத்ம உணர்வு உள்ளவர்கள். ஆன்மீக வாழ்க்கை முறையில் உள்ளவர்கள். அவர்களோ, தேக உணர்வு உள்ளவர்கள். ஆகவே ஸ்தூலமானதாக எடுத்துக் கொண்டுவிட்டார்கள். நீங்கள் யோக அக்னி மூலமாக, உங்களுடைய பழைய சம்ஸ்காரம், சுபாவத்தை பஸ்மம் செய்துவிட்டீர்கள். எரித்து விட்டீர்கள் ஆனால் உலகினர் ஸ்தூல நெருப்பில் எரிக்கிறார்கள். ஏன்? பழைய சம்ஸ்காரத்தை எரிக்காமல், பரமாத்மாவுடன் தொடர்பு கொண்டிருந்தாலும், அவருடைய குணம் ஒட்டாது. மேலும் பரமாத்மாவுடனான சந்திப்பையும் அனுபவம் செய்ய முடியாது. ஆதலால் உங்கள் எல்லோருக்கும் உற்சாகம், ஆர்வம் உள்ள வாழ்க்கையாக ஆகியிருக்கிறதல்லவா? ஆகியிருக்கிறதா? அல்லது அவ்வப்போதுமட்டும் தானா? சதா உற்சாகமாக இருக்கிறதா அல்லது சில சமயங்களில் மட்டும்தானா? யார், சதா உற்சாகமாக இருக்கிறோம், குஷியாக இருக்கிறோம், குஷி எங்களுடைய வாழ்க்கையில் பரமாத்மாவின் கிப்ட் (அன்பளிப்பு) என்று நினைக்கிறார்களோ, அவர்களுக்கு அப்படி அனுபவம் ஆகிறதா? என்ன ஆனாலும் சரி, பிராமண வாழ்க்கையில் குஷி, உற்சாகம், ஆர்வம் இல்லாமல் போக முடியாது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் முகமும் குஷி நிரம்பியிருப்பதைப் பார்க்க விரும்புகின்றார். ஏனெனில் உங்களைப்

போல, குஷியில் இருக்கும் அதிருஷ்டசாலியாக யாரும் ஆகவில்லை. ஆகவும் முடியாது. அநேக துறையைச் சேர்ந்தவர்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஆதலால் இப்படி அனுபவி மூர்த்தியாவதற்காக, சுயத்திற்கு திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?

பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எந்தெந்த துறையைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறீர்களோ, உங்கள் எல்லோருக்கும் வெல்கம் (வரவேற்கிறேன்) வந்திருக்கிறீர்கள், வாழ்த்துக்கள். சேவைக்கான ஆர்வம், உற்சாகம் நன்றாக இருக்கிறது ஆனால் முதலாவது சுயத்திற்கான செயல்முறை திட்டம் (பிளான்). பாப்தாதா பார்த்தார். எல்லாத் துறையைச் சார்ந்தவர்களும், ஒருவர், மற்றவரை விட பிளான் மிக நன்றாகத்தான் செய்கிறார்கள். இத்தோடு சுய முன்னேற்றத் .திற்கான பிளான் (திட்டம்) போடுவதும் மிகவும் அவசியமானதாகும். பாப்தாதா விரும்புவது இதுதான். ஒவ்வொரு துறையினரும், சுய உன்னதிக்கான ((முன்னேற்றத்திற்கான) செயல்முறைத் திட்டம் தயாரிக்க வேண்டும். நம்பரும் எடுக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் கூட்டாக, ஒன்று சேர்ந்து, வெளிநாட்டினரானாலும், உள் நாட்டினரானாலும் ஒன்று கூடி திட்டம் தயாரிக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு இதில் திருப்தி தான் ஆனால் எப்படி உற்சாகம், ஆர்வத்துடன் கூட்டாக சேவை திட்டம் தயாரிக்கிறீர்களோ, இதே போலவே இவ்வளவு உற்சாகம், ஆர்வத்துடன் முன்னேற்றத்திற்கான நம்பர் மற்றும் கவனம் கொடுத்து தயார் செய்ய வேண்டும். பாப்தாதா இதை கேட்க விரும்புகின்றார். அதாவது இந்த மாதத்தில் இந்த துறையைச் சார்ந்தவர்கள், சுய முன்னேற்றத்திற்கான திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற செய்தியை பாப்தாதா கேட்க விரும்புகின்றார். எந்தெந்த துறையைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எல்லாத் துறையைச் சார்ந்தவர்களும், நல்லது. இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். அதிகமாக வந்திருக்கிறார்கள். கேள்விப்பட்டேன் 5-6 துறையைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். மிகவும் நல்லது. வரலாமே! இனி இன்னொரு முறை (டர்ன்) பாக்கி இருக்கிறது. பாப்தாதா ஹோம்ஒர்க் (வீட்டுபாடம்) ஏற்கனவே கொடுத்து விட்டார். பாப்தாதா தினமும் ரிசல்ட் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார். நீங்கள் நினைப்பீர்கள், பாப்தாதா கடைசி முறையில் ரிசல்ட் கேட்பார் என்று ஆனால் பாப்தாதா தினமும்

பார்க்கின்றார். இன்னும் 15-நாட்கள் உள்ளன. இந்த 15-நாட்களில் ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்கள் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ. வராமலிருப்பவர்களானாலும் சரி, அந்தந்த துறைக்குப் பொறுப்பாக (நிமித்தம்) இருக்கும் குழந்தைகளுக்கு ஜாடையாக சுட்டிக் காட்டுவது என்னவென்றால் ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும் தங்களுடைய சுய முன்னேற்றத்திற்காக ஏதாவதொரு திட்டம் தயார் செய்யுங்கள், சக்தி சொரூபமாக ஆவதற்கு குண மூர்த்தியாக ஆவதற்கு, விஷ்வகல்யாண சேவைக்கு, லைட்(ஒளி) -(சக்தி) மைட் கொடுப்பதற்கு, என்ன திட்டம் செய்யலாம் என்பதைப் பற்றி உங்களுக்குள் உறுதி செய்யுங்கள். சோதித்துப் பாருங்கள், யாரெல்லாம் வர்க்கத்தின் உறுப்பினராக இருக்கிறார்களோ, உறுப்பினர் ஆகியிருக்கிறார்கள் என்றால் நல்ல விஷயம் தான் ஆனால் ஒவ்வொருவரும் நம்பர் ஒன் ஆக வேண்டும். ஏதாவதொரு துறையில் உறுப்பினராகச் சேர்ந்து விட்டோம், பெயரும் பதிவாகி விட்டது, இது மட்டும் போதாது. இந்தத் துறையில் சுய முன்னேற்றத்திற்கான உறுப்பினர் என்று இருக்க வேண்டும். இப்படிச் செய்ய முடியுமா? யாரெல்லாம் ஏதாவது ஒரு துறைக்கு பொறுப்பாளராக இருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் எழுந்திருங்கள். வெளிநாட்டினரும் எழுந்திருங்கள். வெளிநாட்டினர் 4-5 பேர் நிமித்தமாக இருக்கிறார்கள், அவர்களும் எழுந்திருங்கள். பாப்தாதாவுக்கு எல்லோரும் சக்திசாலி மூர்த்திகளாகத் தெரிகிறார்கள். மிக நல்ல மூர்த்திகள். ஆதலால், மீதமுள்ள 15-நாட்களில் ஏதாவது செய்து காட்ட முடியும் என்று எல்லோரும் நினைக்கிறீர்களா? செய்ய முடியுமா? சொல்லுங்கள் செய்ய முடியுமா? (முழுமையாக புருஷார்த்தம் செய்வோம்) மற்றவர்களையும் விசாரிப்பீர்களா? சகோதரிகளாகிய நீங்கள் (டீச்சர்ஸ்) தைரியம் வைத்திருக்கிறீர்கள். 15-நாட்களில் விசாரித்து ரிசல்ட் சொல்ல முடியும். வெளிநாட்டினர் முடியும் என்று சொல்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? முடியுமா? பாரதவாசிகள் கூறுங்கள், முடியுமா? பாப்தாதாவுக்கு உங்கள் எல்லோருடைய முகத்தையும் பார்த்து, ரிசல்ட் நன்றாக இருக்கிறது என்பதாகத் தெரிகிறது ஆனால் ஒருக்கால் 15-நாட்கள் கவனம் வைத்து முயற்சி செய்தார்களானால், இந்த அப்பியாசம், இதன் பின்னரும் கூட காரியத்தில் உபயோகமாயிருக்கும். இப்போது இப்படிப்பட்ட மீட்டிங் செய்யுங்கள். யார் குணமூர்த்தியாக வேண்டும். சக்தி சொரூபமாக

வேண்டும் என்று லக்ஷியம் வைத்திருக்கிறார்களோ, அவர்கள் கவனத்துடன் புருஷார்த்தம் வெற்றிகரமாகச் செய்தால் பாப்தாதா நம்பர் கொடுப்பார். பாப்தாதா, சுய முன்னேற்றத்திற்கான சேவையில் முதல் எண்ணில் வரும் துறை யார், யார்? என்று பார்த்துக் கொண்டே இருக்கின்றார். ஏனென்றால், பாப்தாதா பார்த்தார், திட்டம் நன்றாகவே செய்கிறார்கள் ஆனால் சேவை மற்றும் சுய முன்னேற்றம் இரண்டிலும் ஒருக்கால் கூடவே இல்லாது போனால், சேவைக்கான திட்டத்தில் எவ்வளவு வெற்றியடைய வேண்டுமோ, அவ்வளவு அடைய முடிவதில்லை ஆதலால் சமயம் நெருங்கிக் கொண்டிருப்பதை நேரில் பார்த்து, சேவை மற்றும் சுய முன்னேற்றத்தை ஒன்றாக இணைத்து (கம்பைண்டாக) வைத்துக் கொள்ளுங்கள். வெறும் சுயமுன்னேற்றம் மட்டும் வேண்டாம். சேவையும் வேண்டும் ஆனால் சுய முன்னேற்றம் என்ற நிலையிலிருந்து சேவை செய்யும் போது வெற்றி அதிகமாக கிடைக்கும். சேவை மற்றும் சுய முன்னேற்றத்திற்கான வெற்றியின் அடையாளம் இரண்டிலும் சுயத்திற்கும் (தனக்கும்) திருப்தி இருக்க வேண்டும். மேலும் யாருக்கு சேவை செய்கிறோமோ, அவர்களுக்கும் கூட சேவை மூலமாக திருப்தி அனுபவம் ஆகவேண்டும் (ஒரு வேளை, சுயத்திற்கும் மற்றும் யாருடைய சேவைக்கு நிமித்தமாகியிருக்கிறோமோ, அவர்களுக்கும் திருப்தி அனுபவம் ஆகவில்லையெனில், வெற்றி குறைவாக இருக்கும்.) உழைப்பு அதிகமாகச் செய்ய வேண்டியதாயிருக்கும்.

உங்கள் எல்லோருக்கும் தெரியும். சேவையிலும், சுய உன்னதியிலும் வெற்றி சகஜமாக அடைவதற்கான கோல்டன் சாவி (தங்கச் சாவி) இது தான் (நடத்தை, முகம் சம்மந்தம் தொடர்பில் நிமித்த பாவனை, நிர்மான் பாவனை (பணிவு), நிர்மல் வாணி (புனிதமான பேச்சு) பிரம்மா பாபாவையும், ஜகதம்பாவையும் பார்த்திருப்பீர்கள். இப்போது இங்கும் அங்குமாக சேவைக்கான வெற்றியில் சதவிகிதம் தான் கிடைக்கிறது. இதற்கு என்ன காரணம்? என்ன விரும்புகின்றார்களோ, எவ்வளவு செய்கின்றார்களோ, எவ்வளவு திட்டம் செய்கின்றார்களோ, அதில் சதவிகிதம் ஏன் உண்டாகிறது? பாப்தாதா மெஜாரிட்டியில் காரணம் என்ன என்பதைப் பார்த்தார்? வெற்றியில் குறை ஏற்படுவதற்கான காரணம், ஒரு வார்த்தை, அது என்ன? "நான்", "நான்" என்ற வார்த்தை மூன்று விதமாக உபயோகிக்கப்படுகிறது ஆத்ம அபிமானியிலும் கூட

நான் ஆத்மா, "நான்" என்ற சொல் வருகிறது தேக அபிமானத்திலும் கூட நான்" கூறுகிறேன். செய்கிறேன் என்பதுசரி. நான் புத்திவான் என்பதில் "நான்" என்ற சொல் எல்லைக்குட்பட்டது. "நான்" தேக அபிமானத்திலும் கூட "நான்" வருகிறது. மேலும் மூன்றாவது "நான்" என்பது எப்போது மனமுடைந்து போகிறீர்களோ அப்போதும் கூட -"நான்" வருகிறது. "நான்" இதைச் செய்ய முடியாது. எனக்குத் தைரியமில்லை. "நான்" இதைக் கேட்க முடியாது. "நான்" இதை சகித்துக் கொள்ள முடியாது இவ்விதமாக, பாப்தாதா மூன்று விதமான "நான்" என்ற பாட்டை அதிகமாக கேட்டுக் கொண்டேயிருக்கின்றார். பிரம்மாபாபா மற்றும் ஜகதம்பா யார் நம்பர் எடுத்துக் கொண்டார்களோ, அவர்களிடமிருந்த விசேஷம் இதுதான். நேர்விரோதமான "நான்" என்பதைப்பற்றி அறியாதவர்களாக இருந்தார்கள், தெரியாதவர்களாக இருந்தார்கள். ஒரு போதும் பிரம்மாபாபா நான் ஆலோசனை சொல்கிறேன், "நான்" சொல்வது தான் சரி என்று சொன்னதே இல்லை. பாபா, பாபா, பாபா செய்விக்கிறார். "நான்" செய்யவில்லை, "நான்" திறமைசாலிஅல்ல. குழந்தைகள் திறமைசாலிகள். ஜகதம்பாவிடமும் சுலோகம் ஒன்று இருந்தது, நினைவிருக்கிறதா? பழையவர்களுக்கு ஞாபகமிருக்கும். ஜகதம்பா இப்படித்தான் சொன்னார் கட்டளையிடுபவர் நடத்திக் கொண்டேயிருக்கின்றார். (ஹூகுமி, ஹூகம் சலாயே ரஹா) நான் அல்ல. நடத்தக் கூடிய தந்தை நடத்திக் கொண்டிருக்கின்றார், செய்விப்பவராகிய தந்தை செய்விக்கின்றார். ஆதலால் முதன் முதலாக எல்லோரும், உள்ளேயிருந்து, அபிமானம் மற்றும் அவமானத்தின் நான் என்பதை விலக்கி விட்டு முன்னேறிச் செல்லுங்கள். இயற்கையாக ஒவ்வொரு விஷயத்திலும் பாபா, பாபா என்று வெளிவரட்டும். இயற்கையாக வரவேண்டும். ஏனென்றால், பாபா சமானமாக வேண்டும் என்று எல்லோரும் சங்கல்பம் செய்திருக்கின்றீர்கள். ஆதலால் சமான் ஆவதற்காக இந்த ஒரு ராயல் நான் (கௌரவ நான்) என்பதை எரித்து விடுங்கள். நல்லது கோபப்படவும் மாட்டீர்கள். கோபம் ஏன் வருகிறது? "நான்" என்பது வருகிறது.

நீங்கள் ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள் ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள் அல்லவா? ஆகவே முதலில் ஹோலி என்ன கொண்டாடுகிறார்கள்? எரிப்பதற்கு, பார்க்கும் போது மிகவும் நன்றாக இருக்கிறீர்கள். மிகவும் யோக்கியதையுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

தந்தையின் நம்பிக்கை தீபங்கள் இனி, இந்த "நான்" என்ற ஒன்றை மட்டும் வெட்டி விடுங்கள். "நான்" என்ற சொல் மூன்று விதமாக இருக்கிறதல்லவா? இதில் இரண்டை விலக்கி விடுங்கள். ஒன்றை மட்டும் வைத்துக் கொள்ளுங்கள் ஏன்? பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். உங்களுடைய அநேக சகோதர, சகோதரிகள் இருக்கின்றனர். பிராமணர் அல்ல. அஞ்ஞானி ஆத்மாக்கள். தங்களுடைய வாழ்க்கையில் தைரியத்தை இழந்து விட்டிருக்கிறார்கள். இனி அவர்களுக்கு தைரியம் என்ற சிறகுகளைக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். முற்றிலும் துணையற்றவர்களாகி விட்டார்கள். நம்பிக்கையற்றவர்களாகி விட்டார்கள். ஆதலால், இரக்க மனமுடையவர்களாகி, கிருபை, தயை காட்டக்கூடிய, இஷ்ட.தேவ ஆத்மாக்களாகிய நீங்கள் உங்களுடைய சுபபாவனை, கருணைபாவனை, ஆத்மபாவனை மூலமாக உலகில் உள்ள ஆத்மாக்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யுங்கள். அவர்கள் துக்கம், அசாந்தியிலிருக்கும் (வைப்ரேஷன்) அதிர்வலைகள் வரவில்லையா? நீங்கள் நிமித்த (பொறுப்பான) ஆத்மாக்கள், மூதாதையர்கள் (பூர்வஜ்), பூஜைச்குரியவர்கள், விருக்ஷத்தின் தண்டு, அஸ்திவாரம். எங்களை ரக்ஷிப்பவர்கள் (காப்பாற்றுபவர்கள்) எங்கே போய்விட்டார்கள் என்று எல்லோரும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் இஷ்ட தேவதைகள் எங்கே போய்விட்டார்கள்? இப்படி இவர்களுடைய கூக்குரல் பாபாவுக்கு கேட்கிறது. இப்போது சுய முன்னேற்றம் மூலமாக, வெவ்வேறு சக்திகளைக் கொடுத்து உதவுங்கள். தைரியம் என்ற சிறகுகளைக் கொடுங்கள். உங்களுடைய திருஷ்டி மூலமாக திருஷ்டி (பார்வை) தான் உங்களுடைய பீச்சாங்குழல், ஆகவே உங்கள் பார்வையின் பீச்சாங்குழல் மூலமாக சுகத்தின் வர்ணம் பூசுங்கள் சாந்தியின் வர்ணம் பூசுங்கள். அன்பின் வர்ணம் பூசுங்கள் ஆனந்தத்தின் வர்ணம் பூசுங்கள். நீங்களோ பரமாத்மாவின் தொடர்பு காரணமாக, அவருடைய குணம் (வர்ணம்) உங்களிடம் வந்துவிட்டது மேலும் எல்லா ஆத்மாக்களுக்கும் கொஞ்சம் ஆன்மீக குணத்தை அனுபவம் செய்வியுங்கள். பரமாத்மாவின் சந்திப்பான மங்கள விழாவின் அனுபவத்தை செய்வியுங்கள். தவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு, சென்று அடைய வேண்டிய இடத்திற்கு (பரந்தாமம் வழிகாட்டுங்கள்.

ஆதலால் சுயமுன்னேற்றத்திற்கான திட்டம் செய்வீர்கள். இதில் தானே தன்னை சோதிப்பவராகி, சோதிக்க வேண்டும். இந்த ராயல் "நான்" என்பது வரவில்லை. ஏனெனில் இன்றைக்கு ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள். ஆதலால் பாப்தாதா இதைத்தான் நினைவூட்டுகின்றார். அதாவது இன்று எந்த ஒரு தேக அபிமானம் மற்றும் அவமானத்தின் "நான்" என்பது வருகிறதோ, மனமுடைந்து போவதால் வருகின்ற "நான்", இதை எரித்து விட்டுத்தான் செல்ல வேண்டும். கூட கொண்டு செல்லக் கூடாது. ஏதாவது எரிப்பீர்கள் அல்லவா? நெருப்பு எரிப்பீர்களா என்ன? ஜுவாலாமுகி யோகி அக்னி மூட்டுங்கள். எரிக்கத் தெரியுமா? ஆம் ஜுவாலா முகி ஆகுங்கள் லைட் மைட் ஹவுஸ் அப்படியானால் இது விருப்பம் தானே? "அட்டென்ஷன் ப்ளீஸ் "நான்" என்பதை எரித்து விடுங்கள்.

பாப்தாதா எப்போது நான், "நான்" என்ற பாட்டைக் கேட்கின்றாரோ, அப்போது ஸ்விட்ச்சை ஆஃப் செய்து விடுவார். வாஹ்! வாஹ்! (ஆஹா, ஆஹா!) என்ற பாட்டு கேட்டால், சப்தத்தைக் கூட்டி விடுவார். ஏனென்றால், நான், நான், நான் என்பதில் இழுத்தடிப்பு அதிகம் உண்டாகிறது. ஒவ்வொரு விஷயத்திலும் இழுத்தடிப்பார்கள். இது அல்ல, இப்படி அல்ல, அப்படி அல்ல. இப்படிப்பட்ட இழுத்தடிப்பின் காரணமாக, மன இறுக்கம் (டென்ஷன்) உண்டாகி விடுகிறது. லகாவ் (ஈடுபாடு) தனாவ் (டென்ஷன்) மற்றும் சுபாவ் தவறான சுபாவம்) உண்மையில் சுபாவம் என்ற சொல் மிகவும் நல்லதுதான் (ஸ்வ பாவ் -ஆத்ம பாவனை) ஆனால் இதை நேர்விரோதமாக மாற்றிவிட்டார்கள். ஆதலால் எந்த விஷயத்தையும் இழுத்தடிக்காதீர்கள். யாரையும் உங்கள் பக்கமாக இழுக்காதீர்கள். அவர்களும் கூட பிரச்சினை உண்டாக்குவார்கள். யார் எவ்வளவு உங்களிடம் சொன்னாலும், அவர்களை உங்கள் பக்கமாக இழுக்காதீர்கள். விஷயத்தையும் இழுக்காதீர்கள், மற்றவரையும் உங்கள் பக்கம் இழுக்காதீர்கள். இதனால் இழுத்தடிப்பு முடிந்துவிடும். பாபா, பாபா, மற்றும் பாபா விருப்பமாக இருக்கிறதா? மூன்று விஷயங்கள். அல்லது ஒரு "நான்" என்பதை இங்கேயே விட்டு விட்டுச் செல்ல வேண்டும். உங்களோடு கொண்டு செல்லக் கூடாது. ரயிலில் சுமை அதிகமாகி விடும். உங்களுடைய பாட்டு இருக்கிறதல்லவா? மை பாபா கி, பாபா மேரா, இருக்கிறதல்லவா? (நான் பாபாவினுடையவன், பாபா என்னுடையவர்

என்ற பாட்டு) ஆகவே ஒரு நான் இருக்கட்டும். இரண்டு நான் சமாப்தி செய்து விடுங்கள். இப்படி ஹோலி கொண்டாடினீர்கள். சங்கல்பத்தில் எரித்துவிட்டீர்கள். இப்போது சங்கல்பம் செய்யுங்கள். சங்கல்பம் செய்யுங்கள். சங்கல்பம் செய்தீர்களா? கை உயர்த்துங்கள். செய்தீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் மீதமிருக்குமா? கொஞ்சம் இருக்கட்டும், அப்படியா? அப்படியா? கொஞ்சம் இருக்கட்டுமா? கொஞ்சம் இருக்கட்டும் என்று நினைப்பவர்கள். கை உயர்த்துங்கள். கொஞ்சமாவது இருக்குமல்லவா? இருக்காதா? அப்படியானால் நீங்கள் மாவீரர் தான் (பகாதூர்) வாழ்த்துக்கள். குஷியில் ஆடுங்கள், பாடுங்கள். டென்ஷனில் அல்ல. இழுத்தடிக்கும் நான் வேண்டாம். நல்லது. இன்று ஹோலி அல்லவா? ஆதலால் பாப்தாதாவும் கூட எரிப்பதற்கு கூறுகின்றார். இனி என்ன செய்ய வேண்டும்?

**சேவை முறை இராஜஸ்தான், உடன் போபால் சகயோகியாக இருக்கிறது:** பாப்தாதாவுக்கு ஒரு விஷயத்தில் குஷியாயிருக்கிறது. எந்த ஜோனுக்கு சேவை முறை வருகிறதோ, அவர்கள் மனப்பூர்வமாக வந்து விடுகிறார்கள். நன்றாக இருக்கிறது. வாய்ப்பு கிடைக்கிறது. மேலும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது இன்னும் நல்ல விஷயம். அதிக சேவை நினைவின் வாயுமண்டலம், உதவியும் கிடைக்கிறது தங்களுடைய வாழ்க்கை சரித்திரத்தில் இந்த நாள் விசேஷ பிராப்திக்கானது. இதை சதா நினைவில் வைக்க வேண்டும் மதுபனில் எத்தனை நாட்கள் இருக்கிறார்களோ, அதில் ஏதாவது விக்னம் வந்ததா? யாருக்காவது விக்னம் வந்திருந்தால், கை உயர்த்துங்கள். மாதாக்கள் கூட ஒருவேளை விக்னம் வரவில்லை என்றால், சேமிப்பு எவ்வளவு செய்தீர்கள்? விக்னம் வரவில்லை. இதற்கு வாழ்த்துக்கள் ஆனால் உங்களுக்கு சேமிப்பதற்கு சான்ஸ் கிடைத்தது. கோல்டன் சான்ஸ். அப்படியானால் எவ்வளவு சேமித்தீர்கள். இதை சோதித்தீர்களா? அதிகப்படியான வருமானம் சேமிப்பானதா? யாருக்கு சேமிப்பானதோ, சேமிப்புச் செய்த இந்த நாளை சதா வாழ்க்கையில் ஞாபகார்த்தமாக வைத்திருங்கள். எப்போதாவது ஏதாவது விக்னம் வந்தால், இந்த நாளை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். ரயில் டிக்கெட் எடுக்காமல் (புத்தி மூலமாக) மதுபன் வந்து விடுங்கள். ஏனென்றால், இங்கு பாப்தாதாவின் கர்மத்தின் வாயுமண்டலம் இருக்கிறது. அதைப் பிடித்துக் கொள்வது உங்கள் வேலை ஆனால் மதுபன் என்றால் பாப்தாதாவின் கர்மத்தின்

கிரணங்கள் பரவியிருக்கும் வாயு மண்டலம் உள்ள இடம். இத்தனை பெரிய, பெரிய மகாரதிகள் இருந்தார்கள். அட்வான்ஸ் பார்ட்டியிலும் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய கர்மத்தின் ரேகைகளும் மதுபனில் வாயுமண்டல ரூபத்தில் உள்ளது. ஆதலால்தான் கோல்டன் சான்ஸ்லர் ஆகியிருக்கிறீர்கள். சான்ஸ்லர் அல்ல. கோல்டன் சான்ஸ்லர் ஆகியிருக்கின்றீர்கள். இராஜஸ்தானும் கூட அற்புதம் செய்து காட்ட வேண்டுமல்லவா? இராஜஸ்தான் ஆத்மாக்கள் செய்து காட்டினார்கள் ஆனால் அபுவின் வாயுமண்டலம் அற்புதம் செய்தது. ஞான சரோவருக்கும் நிமித்தமாக இராஜஸ்தான் கவர்னர் இருந்தார். இருந்தது இராஜஸ்தான் ஆனால் வாயுமண்டலம் மதுபனுடையது. இருந்தாலும் பாதி லாபம் இராஜஸ்தானுக்கும் கூட கிடைக்கும். இனி இந்த மாதிரியான சகயோகியை தயார் செய்யுங்கள். இவர் சுயம் தானாகவே முன் வந்து சகயோகம் செய்பவராக இருக்க வேண்டும். ஏனென்றால், இராஜஸ்தானிலிருந்து இங்கு வருவதற்கு, ஒரு காரணமும் இல்லை. எவ்வளவு பெரிய வி.ஐ.பி ஆக இருந்தாலும் சரி ஒருவேளை பெரிய வி.ஐ.பி ஆகயிருந்தால், இராஜஸ்தானிலிருந்து விமானத்தில் வருவது கஷ்டம் ஒன்றுமில்லை. சிறப்பு விமானம். இப்போது செய்து காட்ட வேண்டும். டீச்சர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். மிகவும் நல்ல, நல்ல டீச்சர்கள் இருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொருவருடைய விசேஷத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இப்போது தங்களுடைய விசேஷம் மூலமாக, விசேஷமான சிநேகி, சகயோகி அல்லது வாரிசு குவாலிட்டி கொண்டு வாருங்கள். எப்படி டெல்லிகாரர்கள் பிரஸிடெண்டை சேவையில் சகயோகியாக செய்தார்கள் அல்லவா? நெருக்கமான சகயோகியாக அல்ல. சேவையில் சகயோகியாக ஆக்கினார்கள். அவருடைய மனதில், பிரம்மா குமாரிகள் மிக நல்ல காரியம் செய்கிறார்கள் என்பதாக உள்ளது இது நல்லது தான் ஆனால் மிகக் கொஞ்சமாகவே சகயோகி ஆக்கியிருக்கிறார்கள். ஆந்திரபிரதேசத்திலும் நிமித்தமாகியிருக்கிறார்கள். இப்படி யாரையாவது நிமித்தமாக்குங்கள். ஏதாவது ஒரு காரியத்தில் நிமித்தமாக்குங்கள். யாராவது நிமித்தமாகியிருக்கிறார்களா? நல்லது. கோல்டன் சான்ஸை மறந்து விடக்கூடாது. அடிக்கடி நினைவு செய்து கொண்டே இருக்க வேண்டும் போபால் ஆகட்டும் அல்லது இராஜஸ்தானாக இருந்தாலும் சரி, போபால்-காரர்கள் நிமித்தமாக்கியிருக்கிறார்களா? (இன்று மத்திய

பிரதேசத்தின் கவர்னர் வந்திருந்தார்) வந்தார் மிகவும் நல்லதுதான் ஆனால் ஏதாவது ஒரு காரியத்தில் சகயோகி ஆனாரா? சகயோகி ஆக்குங்கள் அல்லது சிநேகி ஆக்குங்கள் அல்லது வாரிசாக ஆக்குங்கள், மூன்றில் ஏதாவது செய்யுங்கள். எல்லோருக்கும் பாப்தாதா கூறுகின்றார். எல்லா மண்டலங்களுக்கும், யார் முன் வந்தாலும் சரி, இதுவரை வாரிஸ் பட்டியல் வரவில்லை. சிநேகியாக இருப்பவர்களுடைய பட்டியல் வருகிறது. வாரிஸ் பட்டியல் வரவில்லை. நல்லது.

**1000-இரட்டை வெளிநாட்டினர்கள் 60-நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள்:** இரட்டை அயல்நாட்டினர்கள் மதுபனின் அலங்காரம். பாப்தாதா பார்த்து குஷியடைகின்றார். அநேக தேசங்கள், அநேக மொழிகள், அநேக கலாச்சாரம், இப்போது என்னவாகி விட்டது? ஒரு பிராமண கலாச்சாரம். பிடித்தமானதாக இருக்கிறதா? பிராமண கலாச்சாரம் பிடிக்கிறதா? கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? கடினமாக இல்லையா? எப்போது ஸ்தாபனம் ஆகியதோ, ஹாஸ்டல் (போர்டிங்) இருந்தது. அப்போது பிரம்மாபாபா கூறினார். எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்த ஒரு சந்தனமரமாக ஆக்க வேண்டும் என்றார். ஆகவே எல்லா பக்கங்களிலிருந்தும் வந்துள்ள வெளிநாட்டினர்கள், இப்போது பிராமண விருக்ஷத்தின் ஒரு இலையாகி விட்டனர். சேவையின் நிமித்தம், வெவ்வேறு தேசங்களில் இருக்கிறீர்கள் ஆனால் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள்? உங்கள் நிரந்தரமான விலாசம் எது? மதுபன். பக்காவா? நன்றாக இருக்கிறது. பாப்தாதாவுக்கு செய்தி கிடைத்தது. எப்படி சுயத்திற்காகவும், சேவைக்காவும் வெவ்வேறு குரூப் தயார் செய்து, புருஷாரத்தமும் நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. இது குமார்களின் குரூப், மாதாக்களுக்கும் ரிட்ரிட் நடந்து கொண்டிருக் கிறதல்லவா? ஐ.டி, குரூப் காரர்கள் கை உயர்த்துங்கள். நல்ல தைரியசாலிகள் என்று சமாச்சாரம் பாப்தாதாவுக்குக் கிடைத்தது. எல்லோரும் தங்களைச் சார்ந்தவர்கள். நம்மவர்கள் என்று நினைக்கிறார்கள். இப்படி நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். இனி பாப்தாதா என்ன பார்க்க விரும்புகிறார் என்றால், இந்த ஐடி, குரூப் காரர்கள் தங்களுடைய சாதனங்கள் மூலமாக பிரத்யக்ஷத்தாவின் கொடியை எங்கெல்லாம். பறக்க விடுகிறார்கள் என்பதை பார்க்க விரும்புகின்றார். மேலும் சிவசக்திகளான மாதாக்கள் என்ன அற்புதம்

செய்து காட்டுகிறார்கள்? குமார் என்ன அற்புதம் செய்து காண்பிக்கிறார்கள்? நன்றாக இருக்கிறார்கள். எல்லோரும் தனித்தனி குரூப்பாக முயற்சி செய்தார்கள். நல்ல நல்ல விஷயங்களைக் கண்டுபிடிக்கிறீர்கள் பாப்தாதா ஒரே ஒரு வார்த்தையை மட்டும் கோடிட்டு (அண்டர்லைன்) காட்ட விரும்புகின்றார். அது திடமாக (உறுதியுடன்) இருக்க வேண்டும் என்பது. திடமான புருஷாரத்தியாக (முயற்சியாளராக) இருக்க வேண்டும். டீலாவாக (கவனக்குறைவாக) இருக்கக் கூடாது. யார் எவ்வளவு அசைத்தாலும் சரி, அசைந்து விடக்கூடாது. உறுதியாக நிற்க வேண்டும். நிலையாக இருக்க வேண்டும். திடத்தன்மை பிராமண வாழ்க்கையில் தைரியம் கொடுக்கும் கை. மேலும் எங்கே தைரியம் இருக்கிறதோ, அங்கே வெற்றி உறுதி மதுபனில் மிக அழகாக காட்சியளிக்கிறார்கள். இவர்கள் விஷ்வ கல்யாணகாரர்கள் என்று சொல்வதைக் கேட்கும் போது, மிகவும் நன்றாக இருக்கிறதல்லவா? பாரதம் மட்டும் கல்யாணகாரி அல்ல. ஆதலால் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

6-விங்ஸ் (வர்க்கம்) வந்திருக்கிறார்கள் (கிராம முன்னேற்றம், ஸ்போர்ட்ஸ், போக்குவரத்துத்துறை, மகளிர், சுற்றுச் சூழல் மற்றும் ஸ்பார்க் குரூப்): எல்லாத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் வேலை கொடுத்தாகி விட்டது. 15-நாட்களுக்குப் பிறகு பார்க்கலாம். நல்ல குழந்தைகளும் வந்திருக்கிறார்கள். (5-விகாரங்கள் மீது மல்யுத்தம் செய்து காட்டினார்கள்) நல்லது. விளையாட்டுத் துறை இருக்கிறது. மாயாவின் விளையாட்டைத்தான் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அதில் நீங்கள் மாமல்லர்கள்தானே (பகாதூர்) விளையாட்டு வீரர்கள் எப்போதும் பகதூராகவே, இருப்பார்கள். ஆதலால் மாயையை வெல்வதிலும் தூர்தானே? ஒரு போதும் தோல்வியடையக் கூடாது. பாப்தாதாவின் கழுத்து மாலையாக வேண்டும். தோற்றுப் போய் விடக்கூடாது. இப்படி பக்காவாக இருக்கிறீர்களா? பகதூரா? பகதூர் என்றால் வாஹ்! மிகவும் நல்லது. நன்று. மாயாஜீத். ஆவதற்கும் கூட நன்றாகக் கற்பிக்கிறீர்கள் அல்லவா? அமருங்கள். நல்லது. இப்போது என்ன செய்யலாம்?

இப்போது ஒரு வினாடியில், தங்கள் மனதிலுள்ள எல்லா சங்கல்பங்களையும் (முடக்கி) எமெர்ஜ் செய்துவிட்டு, ஒரு செகண்டில்

தந்தையுடன் பரந்தாமத்தில், உயர்ந்ததிலும் உயர்ந்த இடத்தில், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையுடன், அவரோடு உயர்ந்த ஸ்திதியில் அமருங்கள். மேலும் பாபா சமானமாக மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விஷ்வ ஆத்மாக்களுக்கு சக்திகளின் கிரணங்களைக் கொடுங்கள். நன்று.

நாலா பக்கங்களிலுமுள்ள ஹோலியஸ்ட் (மிகவும் தூய்மையான), ஹையஸ்ட்(மிகவும் உயர்ந்த) குழந்தைகளுக்கு, எல்லா விஷ்வ கல்யாணகாரி விசேஷ ஆத்மாக்களுக்கு எல்லா, பூர்வஜ் மற்றும் பூஜ்ய ஆத்மாக்களுக்கு, தந்தையின் மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கும் எல்லா குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் உள்ளப் பூர்வமான ஆசியுடன், மனப்பூர்வமான அன்பு மற்றும் நமஸ்தே.

வெகு, தூர, தூரத்திலிருந்து வந்திருக்கின்ற கடிதங்கள், ஈ.மெயில், கம்ப்யூட்டர் மூலமாக செய்தி அனைத்தும் பாப்தாதாவுக்குக் கிடைத்தது. பாப்தாதா அந்தக் குழந்தைகளை, நேர்முகமாகப் பார்த்து, ஆயிரம் மடங்கு அன்பு நினைவுகளை அளிக்கின்றார். ஹோலிக்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். நன்று

தாதிகளுடன்: மிகவும் நல்லது, பிறந்த நாளுக்கும் கூட, மிக, மிக வாழ்த்துக்கள். கூடவே ஹோலிக்கும் கூட வாழ்த்துக்கள். டபுள் ஹோலி ஆக்கியதற்கு வாழ்த்துக்கள். (தாதிஜியுடன்) நல்லது. பிரகிருதி ஜீத் (இயற்கையை வென்றவர்கள்) ஆகி விட்டீர்கள் அல்லவா? பிரகிருதியை நடத்துவதற்குத் தெரிந்து விட்டது. அதிகாரியாகி (மாலிக்) பிரகிருதியை (சரீரம்) நடத்துவதற்குத் தெரிந்து விட்டது. அதிகாரியாகி (மாலிக்) பிரகிருதியை (சரீரம்) நடத்துகிறீர்கள். மேலும் எல்லோருக்கும் குஷியையும் கொடுக்கின்றீர்கள். நீங்கள் குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா? ஆதலால் எல்லோரும் உங்களைப் பார்த்துக்க குஷியடைகிறார்கள். சபையைப் பார்த்து, எல்லோரும் குஷியடை கிறார்கள். நல்லது. கல்பத்தில் ஒரு முறைதான் அறிமுகத்தோடு சந்திக்கிறீர்கள். 5000-ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்குள் சந்திக்கிறீர்கள். மேலும் ஒவ்வொரு கல்பத்திலும் சந்தித்துக் கொண்டேயிருப்பீர்கள் ஆனந்தமே, ஆனந்தம் அல்லவா? எவ்வளவு

மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் போன்று, மகிழ்ச்சியுடன் வாழ்க்கையில் காலம் கழிப்பவர்கள் வேறு யாருமே இல்லை. ஆனந்தமான யுகம் ஆனந்தமயமான வாழ்க்கை இருக்கிறது மேலும் சதா எல்லோருக்கும் ஆனந்தத்தை அனுபவம் செய்விப்பவர்களாயிருக்கிறீர்கள். .

**மூன்று மூத்த சகோதரர்களுடன்:** நல்லது. நாலா பக்கமும் காரியத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள். தங்களை நிமித்தம் என்று அறிந்து, எல்லோருக்கும் திருப்தியின் அலைகளைப் பரப்பிக் கொண்டேயிருங்கள். திருப்தி, தந்தையின் அருகாமையை அனுபவம் செய்விக்கிறது. ஆதலால் நாலாபக்கமும் திருப்தியின் அலைகளை நன்றாகப் பரவச் செய்யுங்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺

# 28.03.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக ஆத்மாக்களை துக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக மனசா சேவையை அதிகப்படுத்துங்கள், சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆகுங்கள்!

இன்று எல்லா பொக்கிஷங்களுக்கும் எஜமானராக (மாலிக்) இருக்கின்ற பாப்தாதா, எல்லா பக்கங்களிலும் உள்ள, எல்லா பொக்கிஷங்களிலும் நிறைந்திருக்கின்ற (சம்பன்னம்) தன்னுடைய குழந்தைகளைப் பார்க்கின்றார். பாப்தாதா, தன்னுடைய ஒவ்வொரு குழந்தையையும் எல்லா பொக்கிஷங்களுக்கும் எஜமானராக ஆக்கியிருக்கின்றார். ஒருவர் தான் கொடுப்பவராக இருக்கின்றார். மேலும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கின்றார். சிலருக்குக் குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் கொடுக்கவில்லை. ஏன்? தந்தை அளவற்ற பொக்கிஷங்களுக்கு எஜமானராக இருக்கின்றார். அளவிட முடியாத எல்லையற்ற பொக்கிஷம். ஆதலால் ஒவ்வொரு குழந்தையும் அளவற்ற பொக்கிஷங்களுக்கு எஜமானராக இருக்கின்றார்கள். பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும், ஒரு அளவு ஒன்று போலவே கொடுத்திருக்கின்றார் ஆனால் தாரணை செய்வதில் சிலர் எல்லா பொக்கிஷங்களையும் தாரணை செய்பவர்களாகவும், வேறு சிலர் அவரவர் சக்திக்கேற்றவாறு தாரணை செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள். சிலர் நம்பர் ஒன் ஆகவும், மற்றவர்கள் நம்பர் வாராகவும் இருக்கின்றார்கள். யார், எவ்வளவு தாரணை செய்திருக்கிறார்களோ, அது அவர்களுடைய முகத்திலும், கண்களிலும் நிறைந்து காணப்படுகிறது. எப்படி ஸ்தூலமான செல்வத்திற்குச் சொந்தக்காரர்களாயிருக்கின்ற ஆத்மாக்களை, அவர்களுடைய நடத்தை மற்றும் தோரணை காட்டிவிடுதைப் போல, இந்த அழிவற்ற பொக்கிஷங்கள் உடையவர்களின் நஷா (போதை) மற்றும் குஷி

தெளிவாகவேத் தெரிந்து விடுகிறது. நிறைந்திருப்பதன் பெருமை, கவலையற்ற பாதுஷா ஆக்கி விடுகிறது. எங்கே ஈஸ்வரிய கௌரவம் இருக்கிறதோ, அங்கே கவலை இருக்க முடியாது. கவலையற்ற பாதுஷா, கவலையில்லாத ஊரின் (பேகம்பூர்) பாதுஷா ஆகி விடுகிறார்கள். ஆகவே, நீங்கள் எல்லோரும் கூட, ஈஸ்வரிய பொக்கிஷங்கள் அனைத்தும் நிறைந்திருக்கின்ற கவலையற்ற ராஜாக்கள் தானே! பேகம்பூர் பாதுஷாக்கள். ஏதாவது கவலை இருக்கிறதா என்ன? கவலை இருக்கிறதா? என்ன நடக்கும், எப்படி நடக்கும்? இப்படிப்பட்ட கவலையும் கூட இல்லை. திரிகால தரிசி ஸ்திதியில் நிலைத்திருக்க உங்களுக்குத் தெரியும். என்ன நடக்கிறதோ, அதெல்லாம் நன்மைக்குத்தான், எது இனிமேல் நடக்க போகிறதோ, அதுவும் கூட இதை விடவும் நன்மையாகவே நடக்கும். ஏன்? சர்வ சக்திவான் தந்தைக்குத் துணையாக இருப்பவர்கள். தந்தையோடு இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் நஷா இருக்கிறது. பாப்தாதா சதா தங்களுடைய இதயத்தில் இருக்கின்றார். மேலும் தாங்கள் சதா பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றோம் என்று பெருமையாகவும் இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட நஷா இருக்கிறதல்லவா? யார் மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கின்றாரோ, அவருடைய சங்கல்பத்தில் என்ன, சொப்பனத்திலும் கூட துக்கத்தின் அலை, அதில் கொஞ்சம் கூட படிய முடியாது. ஏன்? எல்லாப் பொக்கிஷங்களால் நிறைந்திருக்கின்றீர்கள். எதில் பொருள் நிறைந்திருக்கிறதோ, அதில் கொந்தளிப்பு இருக்காது. (நிறை குடம் தழும்பாது).

ஆதலால் நாலா பக்கமுமுள்ள குழந்தைகளின் சம்பன்னத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சேமிப்புக் கணக்கை பரிசோதித்தார். பொக்கிஷங்களோ, அளவில்லாமல் கிடைத்திருக்கின்றது ஆனால் என்ன கிடைத்ததோ, அந்தப் பொக்கிஷங்களைக் காரியத்தில் உபயோகித்ததோடு, மேலும் அதிகரித்திருக்கிறார்களா? ஒவ்வொருவருடைய கணக்கிலும் எத்தனை சதவிகிதம் சேமிப்பாகியிருக்கிறது? ஏனெனில் இந்த பொக்கிஷம் இப்போதைக்கு மட்டுமல்ல, எதிர் காலத்திற்கும் கூட அவசியமானதாகும். சேமிப்பாகியிருப்பது தான் கூடவரும். ஆதலால் சதவிகிதம் பார்த்தார். என்ன பார்த்தார்? எல்லா குழந்தைகளும் அவரவர்

யோகம் மற்றும் சக்திக்கேற்றார்ப்போல் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் சேவைக்கான பலன் சேமிப்பானதா? அல்லது இல்லையா? என்பதன் அடையாளம், அதாவது சேவை செய்யக்கூடிய ஆத்மா மனதின் மூலமாகவோ, வாய்மொழியாகவோ, செயல் மூலமாகவோ செய்கிறார்கள் என்றால், மூன்றும் சேர்த்து 100-சதவிகிதம். சேவை என்னமோ செய்தார்கள், ஆனால் சேவை செய்யும்போது, அல்லது சேவை செய்த பிறகு, தன்னுடைய மனதில் திருப்தியின் அனுபவம் இருக்கிறதா மேலும் யாருக்கு சேவை செய்தார்களோ, யார் சேவையில் துணையாக இருந்தார்களோ, அந்த சேவை செய்பவர்களைப் பார்க்கும்போது, கேட்கும்போது அவர்களும் கூட திருப்தியாயிருக்கிறார்கள் என்றால் சேமிப்பாகியிருக்கிறது என்று பொருள். தனக்கும் திருப்தி, மற்றெல்லோருக்கும் திருப்தி இல்லையென்றால் சேமிப்பு சதவிகிதம் குறைந்து போய்விடும்.

யதார்த்த சேவைக்கான விதி பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறேன். மூன்று விஷயங்கள் விதி பூர்வமாக இருந்தால் சேமிப்பாகும். ஏற்கனவே கூறியிருக்கிறேன். நிமித்தபாவ், இரண்டாவது நிர்மாண் பாவனை (பணிவான தன்மை) மூன்றாவது நிர்மலமான சுபாவம், நிர்மலமான பேச்சு (கள்ளங்கபடமற்ற சுபாவம்/ பேச்சு). பாவ், பாவனை மற்றும் சுபாவம், பேச்சு ஆகிய இந்த மூன்று விஷயங்களில் ஒன்றில் குறையிருந்தாலும், ஒன்றுமட்டுமிருக்கிறது, இரண்டு இல்லை, இரண்டு இருக்கிறது, ஒன்று மட்டுமில்லை என்றால் இந்த பலவீனம் சேமிப்புக் கணக்கில் சதவிகிதத்தை குறைத்துவிடுகிறது. ஆதலால் நான்கு விஷயங்களிலும் தங்களுக்குத் தாங்களே சோதனை செய்து பாருங்கள். அதாவது நான்கு விஷயங்களிலும் தங்களுடைய கணக்கில் சேமிப்பாகியிருக்கிறதா? ஏன்? பாப்தாதா பார்த்தார். அநேகருக்கு நான்கு விஷயங்களைப் பற்றிக் கூறினேன் அல்லவா? பாவ், பாவனை,... அதன் பிரகாரம் அநேக குழந்தைகள் அதிகமாக சேவை செய்கிறார்கள், ஆனால் சேமிப்புக் கணக்கு குறைவாக இருக்கிறது.

ஒவ்வொரு பொக்கிஷத்தையும் சோதியுங்கள். ஞான கஜானா, அதாவது எந்த ஒரு சங்கல்பம் அல்லது காரியம் செய்தோமோ அதை ஞானபூர்வமாகச் செய்தோமா? (நாலஜ்புல்). சாதாரணமாக இருக்கவில்லை தானே? யோகம் என்றால் சர்வ சக்தி கஜானா

நிறைந்திருக்க வேண்டும். ஆதலால் சோதித்துப் பாருங்கள். ஒவ்வொரு நாளும் நேர அட்டவணைப்படி, சமயத்திற்கு ஏற்றாற்போல், எந்த சக்தி தேவையாயிருக்கிறதோ, அந்த நேரத்தில் அந்த சக்தி ஆர்டர்படி இருந்ததா? மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதன் பொருள் மாலிக் (எஜமான்). நேரம் முடிந்துபோன பிறகு, அந்த சக்தியைப்பற்றி யோசனை செய்து கொண்டே இருந்து விடக்கூடாது, ஒருக்கால், தேவையான அந்த சமயத்தில் ஆர்டர்படி சக்தி எமர்ஜ் ஆகவில்லையென்றால், எது வரையிலும் ஒரு சக்தியை கட்டளைப்படி நடத்த முடியாமலிருக்கிறோமோ அதுவரை நிர்விக்ன இராஜ்யத்தின் அதிகாரியாக எப்படி ஆக முடியும்?

அப்படியானால், சக்திகளின் கஜானா (பொக்கிஷம்) எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது? எப்போது தேவையான நேரத்தில் காரியத்தில் பயன்படுத்துகிறோமோ, அப்போது சேமிப்பாகிறது. சோதித்தும் கொண்டேயிருக்கிறீர்களா? என்னுடைய கணக்கில் என்ன இருக்கிறது? ஏனென்றால், பாப்தாதாவுக்கு எல்லா குழந்தைகள் மீது நிறைய அன்பிருக்கிறது. பாப்தாதா எல்லா குழந்தைகளினுடைய சேமிப்புக் கணக்கும் நிறைந்து இருக்க வேண்டும் என்று விரும்பகின்றார். தாரணையிலும் கூட, தாரணையின் அடையாளம் ஒவ்வொரு கர்மத்திலும், குணம், நிறைந்து இருக்கும். எந்த சமயத்தில் எந்த குணம் அவசியமாயிருக்கிறதோ, அந்த குணம் முகத்தின் நடத்தையில், தெளிவாகத் தெரியவேண்டும். ஒருக்கால் ஏதாவதொரு குணம் குறைவாக இருக்கிறது என்றால், உதாரணமாக, கர்மத்தில் சரளமான குணம், மதுரமான குணம் அவசியமாக இருக்கிறது ஒருக்கால் கர்மத்தில், இந்த இரண்டு குணத்திற்குப்பதிலாக, கொஞ்சம் ஆவேசம் இருந்தாலும், களைப்பின் காரணமாக மதுரமான குணம் (இனிமை) இல்லையென்றால், பேச்சில் இனிமை இல்லையென்றால், முகம் இனிமையாக இல்லையென்றால், கடுப்பாக இருந்தால் (சீரியஸ்) குணம் சம்பன்னமாக இருக்கிறது என்று சொல்ல முடியாதல்லவா? சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, என்னுடைய குணம் எதுவோ, அந்த என்னுடைய குணம் எழுச்சியுடன் இருக்க வேண்டும் (எமர்ஜ்). இப்போது சுருக்கமாகக் கூறுகிறேன்.

இதேபோல சேவையிலும், சேவையில் எல்லாவற்றிலும் சேவாதாரியின் நல்ல அடையாளம் தானும் சதா இலகுவான தன்மையுடன் பாரமற்றவராக, மகிழ்ச்சியுடன் இருப்பவராக தோற்றம் இருக்க வேண்டும். சேவையின் பலன் குஷி. ஒருவேளை சேவை செய்து குஷி இல்லாமல் இருந்தால், சேவைக் கணக்கில் சேமிப்பாகாது சேவை செய்தோம், நேரமும் செலவு செய்தோம், உழைப்பைக் கொடுத்தோம் என்றால் கொஞ்சம் சேமிப்பில் சேரும், வீணாகி விடாது. எவ்வளவு சதவிகிதம் சேமிப்பாக வேண்டுமோ, அவ்வளவு ஆவதில்லை. இதே போலவே தான், சம்மந்தம், தொடர்பில் இதன் அடை ஆசீர்வாதம் பிராப்தி ஆகவேண்டும். யாருடைய சம்பந்தத்தில் அல்லது தொடர்பில் வந்தாலும் அவருடைய மனதில் உங்களுக்காக மிகவும் நல்லவர்கள் என்று ஆசிகள் கிடைக்க வேண்டும். வெறும் பேச்சில் அல்ல. உள்ளத்திலிருந்து வெளி வரவேண்டும். அதாவது உள்ளத்திலிருந்து ஆசிகள் வந்தால், மேலும் ஒருவேளை ஆசிகள் கிடைத்தால், இப்படி ஆசிகள் கிடைப்பதென்பது, மிகவும் எளிதாக புருஷார்த்தம் செய்வதற்கான சாதனம் ஆகும். சொற்பொழிவு செய்ய வேண்டாம். மனசா சேவையும் கூட இவ்வளவு சக்திசாலியானதல்ல. ஏதாவது புதுப்புதுத் திட்டம் போடத் தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை, எல்லாவற்றிலும் எளிதான புருஷாரத்தத்திற்கான சாதனம் ஆசிகள் கொடுக்க வேண்டும், ஆசிகள் பெற வேண்டும். இப்படி அநேக குழந்தைகளினுடை மனதின் சங்கல்பத்தை பாப்தாதா அறிந்து கொள்கின்றார். அநேக குழந்தைகள் நேரத்தின்படி, சூழ்நிலை பிரகாரம், ஒருக்கால் யாராவது தவறான காரியம் செய்கிறார்கள் என்றால், அவருக்கு ஆசிகள் எப்படிக் கொடுக்க முடியும் என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர் மது கோபம் வருமல்லவா? அவருக்கு ஆசிகள் எப்படிக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். சரி கோபம் என்ன, அதனுடைய வாரிசுகள் நிறைய இருக்கிறது ஆனால் அவர் தவறான காரியம் செய்தார், சரி. அது தவறானது என்பதை சரியாகப் புரிந்து கொண்டீர்கள் ஆனால் இதில் ஒன்று புரிவது, இன்னொன்று அந்த தவறான விஷயத்தை மனதில் அடக்கிக் கொள்வது. புரிவது மற்றும் அடக்கிக் கொள்வது, இந்த இரண்டில் வித்தியாசமுள்ளது. சரி. நீங்கள் கெட்டிக்காரர்தான். கெட்டிக்காரராக இருப்பவர்கள் தன்னிடம் கெட்ட விஷயத்தை வைத்துக் கொள்வார்களா? ஆனால் அது கெட்ட காரியம் தான். நீங்கள் அதை மனதில் வைத்துக் கொண்டீர்கள். அதாவது நீங்கள்

கெட்ட பொருளை உங்களிடம் வைத்தீர்கள், பாதுகாத்துக் கொண்டுமிருக்கிறீர்கள். புரிந்து கொள்வது வேறு விஷயம். அடக்கி வைப்பது வேறு விஷயம். கெட்டிக்காரராயிருப்பது நல்லது தான். அப்படி ஆகுங்கள் ஆனால் அடக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். இவர் இப்படித்தான் என்று அடக்கி வைத்துக் கொண்டீர்கள். இப்படிப் புரிந்து கொண்டு காரிய விவகாரத்தில் வருவது, கெட்டிக்காரத்தனம் அல்ல. ஆதலால் பாப்தாதா சோதித்துப் பார்த்தார்.

இப்போது சமயம் சமீபத்தில் வராது. நீங்கள் தான் கொண்டு வர வேண்டும். அநேகர் கேட்கிறார்கள் கொஞ்சம் சைகையாகச் சொல்லக்கூடாதா? 10-ஆண்டுகள் பிடிக்கும், 20-ஆண்டுகள் ஆகும். எவ்வளவு காலம் ஆகும்? ஆதலால் தந்தை குழந்தைகளிடம் கேள்வி கேட்கின்றார். தந்தையிடம் நிறைய கேள்விகள் கேட்கிறீர்கள் அல்லவா? சமயத்தை, சமீபமாகக் கொண்டு வருபவர்கள் யார்? டிராமா என்றாலும், நிமித்தம் யார்? உங்களுடைய பாட்டு ஒன்றும் இருக்கிறது. கிஸ்கே ரோக்கே, ரூக்கா ஹை சவேரா. (விடியல் யாருக்காவது காத்திருக்குமா?) இருக்கிறதல்லவா, பாட்டு. அப்படியானால் விடியலைக் கொண்டு வருவது யார்? விநாசம் செய்பவர்களோ, விநாகம் செய்யலாமா? விநாசம் செய்யலாமா? என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் நவநிர்மாணம் செய்பவர்கள் இவ்வளவு தயாராக இருக்கிறார்களா? சரி. பழையது விநாசமாகி விட்டது, புதியது நிர்மாணிக்கப்படவில்லை என்றால் என்ன ஆகும்? ஆதலால் பாப்தாதா இப்போது தந்தையின் ஸ்தானத்திற்குப் பதிலாக, டீச்சர் ரூபத்தை தாரணை செய்து கொண்டிருக்கின்றார். ஹோம் ஒர்க் கொடுத்தாரல்லவா? யார், ஹோம் ஓர்க் கொடுப்பார்கள்? டீச்சர். கடைசியில் இருப்பது சத்குருவினுடைய பார்ட். ஆகவே உங்களிடமே கேளுங்கள். சம்பன்னம் மற்றும் சம்பூரண நிலை (ஸ்டேஜ்) எதுவரை ஆகியிருக்கிறோம்? சப்தத்தைக் கடந்த நிலையில் இருப்பது, சப்தத்தில் வருவது என்ற இரண்டும் சமநிலையில் இருக்கிறதா? எப்படி சப்தத்தில் வருவது எப்போது வேண்டுமானாலும் எளிதாக இருக்கிறது இதேபோலவே, சப்தத்தைக் கடந்த நிலையில் செல்வதற்கு எப்போது வேண்டுமோ, அப்போது செல்ல முடிகிறதா? ஒரு செகண்டில் சப்தத்தில் வரமுடிகிறது, செகண்டில் சப்தத்தைக் கடந்த நிலையில் சென்று விடுவதற்கான இவ்வளவு அப்பியாசம் இருக்கிறதா? எப்படி சரீரத்தின்

மூலமாக எப்போது வேண்டுமோ, எங்கே வேண்டுமோ அங்கே போகவும், வரவும் முடிகிறதல்லவா? இப்படி, மனம், புத்தி மூலமாக எப்போது வேண்டுமோ, எங்கே செல்ல வேண்டுமோ, அங்கே போகவும், வரவும் முடிகிறதா? ஏனென்றால், கடைசியில், பாஸ்மார்க் யாருக்கு கிடைக்குமென்றால், யார், ஒரு செகண்டில் என்ன விரும்புகிறோமோ, எப்படி விரும்புகிறோமோ, என்ன கட்டளை இடுகிறோமோ, அதில் வெற்றி கிடைக்க வேண்டும். விஞ்ஞானிகளும் இதே முயற்சி தான் செய்து கொண்டிருக்கிறார்கள். எளிதாகவும் இருக்க வேண்டும். குறைந்த நேரத்திலும் நடக்க வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட ஸ்திதி இருக்கிறதா? எதுவரை வந்திருக்கிறீர்கள்? நிமிடங்கள் வரை வந்திருக்கிறீர்களா? செகண்டு வரை வந்திருக்கிறீர்களா? எதுவரை வந்திருக்கிறீர்கள்? எப்படி லைட் ஹவுஸ், மைட் ஹவுஸை ஒரு செகண்டில் ஆன் செய்தவுடன், தன்னுடைய ஒளியைப் பரப்புகிறது. இதே போல நீங்கள் ஒரு செகண்டில் லைட் ஹவுஸாகி நாலா பக்கமும் ஒளியைப் பரப்ப முடியுமா? இந்த ஸ்தூலமான கண்கள், ஒரு இடத்தில் இருந்தவாறே தூரம் வரையிலும் பார்க்க முடிகிறதல்லவா? தனது திருஷ்டியைப் பரப்ப முடிகிறதல்லவா? அதேபோல நீங்கள் உங்களது மூன்றாவது கண் மூலமாக ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு, நாலா பக்கமும், வரதாத்தா, விதாத்தாவாகி, மற்றவர் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முடியுமா? (நஜர்-ஸே-நிஹால்) இப்படி சோதித்துப் பார்க்கிறீர்களா, இந்த எல்லா விஷயங்களிலும்? மூன்றாவது கண் இவ்வளவு கிளீனாக, கிளியராக இருக்கிறதா? ஒருக்கால் கொஞ்சம் பலவீனமாக இருந்தாலும், எல்லா விஷயங்களிலும், இதற்கான காரணத்தை ஏற்கனவே கூறியிருக்கிறேன். இந்த எல்லைக்குட்பட்ட அபிமானம்/பற்று இருக்கிறதல்லவா? நான் மற்றும் எனது என்பது. எப்படி நான் (மை) என்பது பற்றி தெளிவு படுத்தினேன் அல்லவா? ஹோம் ஒர்க்கும் கொடுத்திருந்தேன். இரண்டு விதமான நான் என்பதை முடித்துவிட்டு, ஒரு நான் (ஒன்றை மட்டும்) வைத்துக் கொள்ள வேண்டும் என்று. எல்லோரும் இந்த ஹோம் ஒர்க் செய்தீர்களா? இதில் யார் வெற்றி அடைந்தார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். வெற்றியடைந்தீர்களா? பாப்தாதா எல்லோரையும் பார்த்தார். இப்படி தைரியமாக இருங்கள். பயப்படாதீர்கள். நல்லது. வாழ்த்துக்கள் கிடைக்கும். மிகவும் கொஞ்சப்பேர் தான் இருக்கிறார்கள். செய்திருந்தால் கை உயர்த்துங்கள். வெற்றியடைந்தீர்களா? பாப்தாதா

எல்லோரையும் பார்த்தார். இப்படி தைரியமாக இருங்கள். பயப்படாதீர்கள். நல்லது வாழ்த்துக்கள் கிடைக்கும் மிகவும் கொஞ்சப்பேர் தான் இருக்கிறார்கள். செய்திருந்தால் கை உயர்த்துங்கள். டி.வியில் இந்தக் கைகளைக் காண்பியுங்கள். பின்னால் கூட காண்பியுங்கள். மிகவும் கொஞ்சப்பேர் தான் கை உயர்த்தியிருக்கிறார்கள். இனி என்ன செய்யலாம்? எல்லோருக்கும் தங்கள் மீது சிரிப்பும் வருகிறது.

நன்று. இரண்டாவது ஹோம் ஓர்க். கோபத்தை விட வேண்டும். இது மிகவும் சுலபம் தானே! ஆகவே கோபத்தை விட்டு விட்டது யார்? இவ்வளவு நாட்கள் கோபப்படவே இல்லையா? (இதில் நிறைப்பேர் கை உயர்த்தினார்கள். யாரெல்லாம் கோபப்படவில்லையோ, அவர்களைப் பற்றி அக்கம் பக்கம் இருப்பவர்களிடம் விசாரிக்கலாம். நிறையப்பேர் இருக்கிறார்கள், கோபப்படவில்லையா? சங்கல்பத்தில், மனதில் கோபம் வந்ததா? சரி. எனினும் வாழ்த்துக்கள். ஒருவேளை மனதில் வந்தது, வாயால் சொல்லவில்லை என்றாலும் கூட வாழ்த்துக்கள். மிகவும் நல்லது.

ஆகவே நீங்களே பாருங்கள். ரிசல்ட் கணக்குப்படி ஸ்தாபனை காரியம் சுயத்தை (தன்னை) சம்பன்னம் ஆக்குவது. மேலும் மற்றெல்லா ஆத்மாக்களுக்கும் முக்தியின் ஆஸ்தி கொடுக்கச் செய்வது, இதெல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டதா? தன்னை நீ ஜீவன் முக்தி சொரூபம் ஆக்குவது, மேலும் எல்லா ஆத்மாக்களுக்கும் முக்திக்கான ஆஸ்தி கிடைக்கச் செய்வது, இது ஸ்தாபனை செய்யும் ஆத்மாக்களினுடைய சிரேஷ்ட கர்மம். ஆகவே, பாய்தாதா ஏன் கேட்கிறார் என்றால், எல்லா பந்தனங்களிலிருந்தும் விடுதலை, முக்தி ஸ்டேஜில் சங்மத்தில் தான் அடைய வேண்டுமா? அல்லது சத்யுகத்தில் அடைய வேண்டுமா? சங்கமயுகத்தில் சம்பன்னம் ஆக வேண்டுமா? சம்பன்னம் இங்கு தான் ஆக வேண்டுமல்லவா? சம்பூரணமும் கூட இங்கேயே தான் ஆக வேண்டும். சங்கமயுக சமயத்திற்கும் கூட எல்லாவற்றையும் விட மிகப் பெரிய கஜானா (பொக்கிஷம்) இருக்கிறது. அப்படியானால் கிஸ்கே ரோக்கே ரூக்கா ஹைஹ சவேரா? சொல்லுங்கள். (விடியல் யாருக்காவது காத்திருக்குமா பாட்டு)

ஆகவே பாப்தாதா என்ன விரும்புகின்றார்? ஏனென்றால் தந்தையின் நம்பிக்கை தீபம் குழந்தைகள் தான். ஆகவே உங்களுடைய கணக்கை சோதியுங்கள். நன்றாகச் சோதித்துப் பாருங்கள். அநேக குழந்தைகளைப் பார்க்கும்போது, அவர்கள் மனம்போன போக்கில் மகிழ்ச்சியாக நேரத்தை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் (மௌஜிராம்) ஆனந்தமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எது நடந்ததோ, நல்லது தான். இப்போதோ ஆனந்தமாகக் கொண்டாடுங்கள். சத்யுகத்தில் யார் பார்க்கப் போகிறார்கள்! யாருக்குத் தெரியும்? ஆகவே சேமிப்புக் கணக்கில் இப்படிப்பட்டவர்களை மௌஜிலால் (மனம் போனபடி நடப்பவர்கள்) என்று சொன்னாலும் சரி, மௌஜிராம் என்று சொன்னாலும் சரி இப்படிப்பட்ட குழந்தைகளையும் பார்த்தேன். மகிழ்ச்சியோடிருங்கள் என்கிறார்கள். மற்றவர்களுக்கும் கூட சொல்கிறார்கள். அட, என்ன செய்ய வேண்டும். ஆனந்தமாயிருங்கள் என்று கூறுகிறார்கள். சாப்பிடுங்கள், அருந்துங்கள். ஆனந்தப்படுங்கள். ஆனந்தமாக இருங்கள் என்று கூறுகிறார்கள். தந்தையும் கூட கூறுகின்றார். அப்படியே செய்யுங்கள். ஒருவேளை கொஞ்சம் கிடைத்தாலும் போதும் என்று நினைப்பவர்கள், கொஞ்சத்திலேயே திருப்தியடையுங் கள். அழியக்கூடிய சாதனங்களால் ஏற்படும் ஆனந்தம் அல்ப காலத்திற்குத்தான். சதா கால ஆனந்தத்தை விட்டுவிட்டு, அல்பகால சாதனங்களால் உண்டாகும் ஆனந்தத்தில் இருக்க விரும்புவீர்களானால், பாப்தாதா என்ன கூறுவார்? சைகையாகக் கூறுவார்? வேறென்ன செய்வார்? சிலர் வைரச் சுரங்கத்திற்குள் சென்று இரண்டே வைரக்கற்களை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியடைகிறார்கள் என்றால், அதை என்ன வென்று சொல்வது? ஆதலால் இப்படி ஆகக்கூடாது. அதீந்திரிய சுகமாகிய ஆனந்த ஊஞ்சலில் ஆடுங்கள். அழிவற்ற பிராப்திகள் எனும் ஊஞ்சலில் ஆடி மகிழுங்கள். டிராமாவில் பாருங்கள். மாயாவின் பார்ட்டும் கூட விசித்திரமாக இருக்கிறது. இந்த சமயத்தில் தான் இப்படிப்பட்ட சாதனங்களெல்லாம் வந்திருக்கின்றன. இது மாதிரி இதற்கு முன்பு இருக்கவில்லை ஆனால் யார், சாதனம் இல்லாமலேயே சாதனை செய்தார்களோ, சேவை செய்தார்களோ அவர்களைப் பற்றிய உதாரணமும் எதிரிலேயே இருக்கிறது. இது மாதிரி சாதனம் இருந்ததா? ஆனால் எவ்வளவு சேவை நடந்தது? குவாலிட்டி ஆத்மாக்கள் (தகுதியானவர்கள்) உருவானார்கள் அல்லவா? ஆதி ரத்தினங்கள்

தயாராகி விட்டார்கள் அல்லவா? இது சாதனங்களின் ஆகர்ஷணம். சாதனங்களை உபயோகிப்பது தவறு என்று சொல்லவில்லை ஆனால் சாதனை செய்வதை மறந்துவிட்டு, சாதனங்களிலேயே ஈடுபட்டிருப்பது தவறானது என்று பாப்தாதா கூறுகின்றார். சாதனம் வாழ்க்கையில் பறக்கும் கலைக்கான சாதனம் அல்ல, ஆதாரம் அல்ல. சாதனை செய்வது தான் ஆதாரம். ஒருவேளை அதனை செய்வதற்குப் (முயற்சி, புருஷார்த்தம்) பதிலாக, சாதனங்களை ஆதாரமாக எடுத்துக் கொண்டிருந்தால், ரிசல்ட் எப்படி இருக்கும்? சாதனம் அழியக்கூடியது என்றால் ரிசல்ட் எப்படி? சாதனை செய்வது அழிவற்றது, அப்படியானால் அதனுடைய ரிசல்ட் எப்படி இருக்கும்?

ஆதலால் பாப்தாதா குழந்தைகளிடம் கேள்வி கேட்கின்றார் எப்போது (எவ்வளவு நாட்களில்) ஒவ்வொருவரும் தன்னை சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆக்குவர்கள்? மற்றவர்களைப் பார்க்காதீர்கள். இதனால் அலக்ஷியம் வந்து விடும். மற்றவர்களும் இப்படித்தான் செய்கிறார்கள். நான் செய்தால் என்ன? இது அலக்ஷியம், நான் என்னை சம்பன்னமாக்க வேண்டும், இப்போது இதற்காக இன்னும் எவ்வளவு அவகாசம் வேண்டும்? இதற்கும் கூட கணக்கு வைக்க வேண்டுமா? வேண்டாமா? அநேகம் பேர் இருக்கிறார்கள் பாபாவுக்குத் தெரியும். பலருடன் சேர்ந்திருக்கும்போது ஏதாவது யாராவது சொன்னால் கேட்க வேண்டியதாகத் தான் இருக்கிறது. பார்க்க வேண்டியதாகவுமிருக்கிறது. நடந்து கொள்வதிலும் ஏறக்குறைய பல விஷயங்கள் எதிரில் வரத்தான் செய்யும் ஆனால் இது வரும், இப்படிப்பட்ட விஷயங்கள் இல்லாமல் முடிந்து போய் விட்டால் சம்பன்னம் ஆகி விடலாம் என்றால் இது நடக்கப்போவது இல்லை. எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ, ரூபம் அவசியம் மாறும் ஆனால் நடப்பது, நடக்கத்தான் செய்யும். கடைசிப் பேப்பரில் பாருங்கள். எத்தனை விஷயங்கள் இருக்கின்றன. நடப்பது கன்களுக்குத் தெரிய வேண்டாம், பாபா தெரியட்டும், பாபா என்ன சொன்னார் என்பது. நடக்கும் விஷயங்கள், கண்களில் படும் விஷயங்கள், எதுவுமே வேண்டாம். பாபா என்ன சொன்னார்? பாபாவைப் பின்பற்ற வேண்டும். மற்ற விஷயங்களைப் பார்த்து பின்பற்ற வேண்டுமா? அல்லது ஃபாலோ பாதர் செய்ய வேண்டுமா? மேலும் பாப்தாதா இப்போது என்ன பார்க்க விரும்புகிறார் என்றால், ஒருவேளை வதனத்தில் ஸ்விட்ச் ஆன் செய்தால் எல்லாக்

குழந்தைகளும் உள்நாட்டிலானாலும் சரி, வெளிநாட்டினாலாலும் சரி, கிராமங்களிலோ, நகரங்களிலோ எங்கிருந்தாலும் சரி குழந்தைகள் எல்லோரும். சம்பன்ன ரூபத்தில், இராஜா குழந்தைகளின் தோற்றம் காணப்பட வேண்டும். இப்போது ஒவ்வொரு குழந்தையின் மீதும் இதே சிரேஷ்டமான நம்பிக்கை தான் உள்ளது. ஆதலால் நீங்கள் எல்லோரும் தந்தையின் நம்பிக்கை தீபங்களாக ஆவீர்களா? ஆவீர்களா? கை உயர்த்துங்கள். யோசிக்காமலேயே கை உயர்த்த வேண்டாம். கோப்பில் ஃபைல் ஒரு சீட்டு எழுதி கோர்த்து விடுவதல்ல, ஃபைனல் (முடிவாகச் சொல்ல வேண்டும்). எல்லோரும் பூர்த்தி செய்வீர்கள். நல்லது வாழ்த்துக்கள். யார் கை உயர்த்தவில்லையோ அவர்கள் உயர்த்துங்கள். யாராவது இருக்கிறார்களா? நல்லது. இவர்களுக்கு அவகாசம் வேண்டும். ஒரு வருடம் வேண்டுமா? தீவிர புருஷாரத்தம் செய்யுங்கள். செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும். மெஜாரிட்டி கை உயர்த்தி விட்டார்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஆதலால் உள்ளத்திலிருந்து ஆசிகளை அளிக்கின்றார். இனி பிராக்டிக்கலாக செய்து காட்ட வேண்டும். பிறகு பாப்தாதா வருவார் இனி டீச்சர் ஆகி விடுவார். இப்படி வரமாட்டார். இப்போது இடையில் கொஞ்சம் அவகாசம் இருக்கிறது. எப்போது முதலாவது முறையில் (டர்ன்) பாப்தாதா வருவாரோ, முதலாவது வெளிநாட்டினருக்குக் கிடைக்கிறது. ஆகவே முதலில் வெளி நாட்டினர் தயாராகி விடுவார்களா? ஒருவேளை வெளிநாடு முறை தயாராகவில்லையென்றால் முதலாவது முறை இந்தியாவுக்குக் கொடுக்கலாம். முதலில் மதுபன் வாசிகள் தயாராக வேண்டியதாயிருக்கும். ஏனென்றால், பாப்தாதா மதுபனில் தான் வர வேண்டுமல்லவா? வேறெங்கும் செல்வதில்லை. பாப்தாதாவுக்கு வெளி நாட்டினர் மீது நம்பிக்கை இருக்கிறது. இதற்காக, இந்தியாவிலுள்ளவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதல்ல ஆனால் வெளிநாட்டினருக்கு முதலாவது முறை வருவதால் வெளிநாட்டினர் தயாராகிக் காண்பிப்பார்கள். சரிதானா? வெளிநாட்டினர் தரப்பில் நீங்கள் கூறுங்கள் (தாதி ஜனாகியுடன்) சாகாரத்தில் நிமித்தம் நீங்கள் தான் ஆக வேண்டியதாயிருக்கும். இன்னும் அவகாசம் இருக்கிறது. 5-6 மாதங்கள் இருக்கின்றன. இல்லாவிட்டால், இப்படிச் செய்யலாமா? ஆலோசனை சொல்லுங்கள். யார் உண்மையான உள்ளத்தோடு எழுதுகிறார்களோ, பாப்தாதா பார்க்கின்றார் அல்லவா? பாப்தாதா கூட இங்கிருந்தே பார்க்க முடிகிறது. கொஞ்சம் கலப்படம் உள்ளது. ஆகவே யார் எவர் ரெடி என்று

எழுதுகிறார்களோ, அவர்களோடு பாப்தாதா சந்திப்பார், மற்றவர்களோடு அல்ல. மதுபனில் இருப்பவர்களானாலும் சரி, வேறெங்கிருந்தாலும் சரி, சரிதானா? மதுபன் வாசிகள், சரிதானா? டபுள் ஃபாரினர்ஸ் எவர் ரெடியாக இருப்பார்கள் அல்லவா? பாப்தாதா எல்லோருடைய சம்பன்ன சொரூபத்தைப் பார்ப்பார். எவர்ரெடியாகி விடுவீர்களா? சரிதானா? மெஜாரிட்டி எல்லோருக்கும் வாழ்த்துக்களை முன்கூட்டியே அளிக்கின்றார். பிறகு எல்லோரும் ஒருவர்க்கொருவர் வாழ்த்துக்களை அளிப்பீர்கள். வாஹ் சம்பூரணம், ஆஹா! ஆஹா! சம்பன்னம் ஆஹா! ஏனென்றால் துக்கம் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. உங்களுக்கு சப்தம் கேட்கவில்லையல்லவா? பாப்தாதாவுக்கு கேட்கிறது முற்றிலும் தைரியத்தை இழந்து விட்டார்கள், மனமுடைந்து போய்விட்டார்கள். எப்படி விஞ்ஞானிகள் தங்கள் இடத்தில் இருந்தபடியே, எங்கே தங்களுடைய இயந்திரத்தை அனுப்ப விரும்புகிறார்களோ அங்கே அனுப்ப முடிகிறது. நீங்கள் மனசா சேவை மூலம் செய்ய வேண்டும். ஆதலால் நீங்கள் மனசா சேவையை அதிகப்படுத்துங்கள். பேச வேண்டியதிருக்கும் ஆனால் முழு உலகிலுள்ள ஆத்மாக்களுக்கும் ஆஸ்தி கிடைக்கச் செய்வது, துக்கத்திலிருந்து விடுவிப்பது, ஆகிய காரியங்களுக்காக, நீங்கள் சம்பன்னமாக வேண்டியதிருக்கும். மேலும் மனசா சேவையை நாலாபக்கமும் பரப்புங்கள். அப்போதுதான் உலக மங்களம் உண்டாகும். மனசா சேவை செய்ய முடியுமா? யாருக்கு மனசா சேவையில் அப்பியாசம் இருக்கிறதோ, கொஞ்சப் பேர் ஆனாலும் அப்பியாசம் இருக்கிறது செய்ய முடியும் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். இதில் எல்லோருமே பாஸ். இவ்வளவு ஆத்மாக்கள் மனசா சேவை மூலம் வாயுமண்டலத்தில் பரப்பு முடியுமென்றால் என்ன பெரிய விஷயம்! எவ்வளவு மனசா சேவையில் ஈடுபட்டிருப்பீர்களோ, அவ்வளவு பிரச்சினைகளிலிருந்து விடுதலையாகி விடுவீர்கள். ஏனென்றால் உங்களுடைய மனம், புத்தி சுறுசுறுப்பாக இருந்து கொண்டிருக்கும். ஃப்ரியாக இல்லையென்றால் மாயை எப்படி வரும்? வந்தாலும் திரும்பிச் சென்றுவிடும். பிரச்சினைக்குத் தைரியம் இருக்காது. ஆதலால் மனசா சேவையை அதிகப்படுத்துங்கள். புரிந்ததா?

நல்லது. இப்போது ஒரு நிமிட நேரம் எல்லோரும் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஸ்திதி மூலம் உலகில் தங்களுடைய லைட், மைட்

பரப்புங்கள். நல்லது. இப்படிப்பட்ட அப்பியாசம் அடிக்கடி காரியம் செய்து கொண்டிருந்தாலும், செய்து கொண்டே இருங்கள்.

பாப்தாதா கேள்விப்பட்டார். லண்டன் புரோகிராம் தலைப்பு மிக நன்றாக வைத்திருக்கிறார்கள். சொல்லுங்கள் எல்லோருக்கும். (Just a minute.... ஒரு நிமிடத்தில் சைலன்ஸ் அனுபவம், தன்னுடைய பரிவர்த்தனைக்கான அனுபவம் மற்றும் உலகத்திற்காக) நல்ல டாப்பிக் (தலைப்பு) வைக்கப்பட்டிருக்கிறது மேலும் இப்படிப்பட்ட அப்பியாசம் அந்த சமயத்தில் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பிராமணர்கள் கூட செய்வார்கள் அல்லவா? (இந்த சிந்தனை இருக்கிறது. எல்லா இடத்திலும் விஷ்வ வியாபி புரோகிராம் இருக்கட்டும்) நன்றாக இருக்கிறது. இந்த அப்பியாசம் அவசியமானது. ஒரு நிமிடமாக இருப்பினும் கூட, இது நாலா பக்கங்களிலும் வாயுமண்டலம் தயாராகுமானால், இதன் மூலமாகக் கூட எல்லோரும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதாவது பிரம்மா குமாரிகள் என்ன விரும்புகிறார்கள் என்பதும், என்ன செய்கிறார்கள் என்பதும். இதுவும் பரவும். நல்லது. ஒருவேளை நாலாபக்கமும் இது கூடவே நடக்குமானால், சேவைக்கான சாதனம் நன்றாக இருக்கிறது. நல்லது. இன்றைக்கு சேவைக்கான முறை யாருடையது?

சேவை -மகாராஷ்டிரா, மும்பை மற்றும் ஆந்திரபிரதேஷ்: யாருக்கு சேவை முறை வருகிறதோ பாதி வகுப்பில் இவர்கள்தான் இருக்கிறார்கள். நல்லது. மகாராஷ்டிரா சதா மகான் ஸ்திதியில் இருப்பவர்கள். மேலும் உலகில் வாழ்க்கையின் மகானதாவை பிரத்யக்ஷம் செய்பவர்கள். நல்லது எண்ணிக்கை அதிகமாக உள்ளது ஆனால் இன்று வரையிலும் 9-லக்ஷம் பூர்த்தியாகவில்லை. 9-லக்ஷம் பூர்த்தியாகி விட்டதா? ஆகவில்லை. மகாராஷ்டிராவில் இவ்வளவு எண்ணிக்கை இருக்கிறதென்றால், எப்போது அடுத்த சீசனில் பாப்தாதா வருகிறாரோ எவ்வளவு பேர் வந்திருக்கிறார்களோ, வந்திருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? (மகாராஷ்டிரா 5500-பேர் வந்திருக்கிறார்கள்) மகாராஷ்டிரா எதிரில் அமர்ந்திருக்கிறார்கள் என்றால், வேலையும் கூட செய்வார்கள் அல்லவா? ஆகவே எவ்வளவு வந்திருக்கிறீர்களோ, அடுத்த சீசனில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை தயார் செய்யுங்கள். ஒரு ஆண்டில் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு. ஏனென்றால் 6-மாதம்

இருக்கிறது. உங்களுடைய நியமம் ஒரு ஆண்டு. ஆகவே 6-மாதங்களில் இவ்வளவு பேர் என்றால், ஒரு ஆண்டில் எவ்வளவோ, அவ்வளவு. 9-லக்ஷம் எண்ணிக்கை பூர்த்தியாக வேண்டும். எவ்வளவு பேர்? மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (8- லக்ஷம் 12-ஆயிரம்) அப்படியானால் பாக்கி கொஞ்சப்பேர் தான் வேண்டும் அப்படியானால் இப்படி செய்யுங்கள். இப்போது மீட்டிங் இருக்கிறதல்லவா? ஒவ்வொரு ஜோனுக்கும், தங்கள் தங்கள் ஜோனுடைய கணக்குப்படி எண்ணிக்கையை பங்கிட்டுவிடுங்கள். பாப்ததா வரும்போது தயார் செய்து லிஸ்ட் கொண்டு வரட்டும். ஆகவே இந்த ஹோம் வொர்க் சரிதானா? ஜோன்காரர்கள். நல்லது. 9-லக்ஷம் பூர்த்தி செய்யுங்கள். என்ன பெரிய விஷயம்? டபுள் ஃபாரினர்ஸ் அல்லது இந்தியா 9-லக்ஷம் இந்த முறை பூர்த்தி செய்தேயாக வேண்டும். ஆகவேண்டுமல்லவா? அல்லது பிறகு ஆக வேண்டுமா? மதுபன் வாசிகளும் செய்வார்கள். அக்கம்பக்கம் சேவை செய்கிறீர்கள் அல்லவா? எல்லா ஜோன்களும் தயார் செய்து கொண்டு வர வேண்டும். இங்கே இல்லாவிட்டாலும் கூட கேட்டால் சரி தான். 9-லக்ஷம் பிராமணர்கள் இருப்பார்கள் அல்லவா? கோடிக்கணக்கானோர்க்கு செய்தி தர வேண்டுமல்லவா? இந்த புரோகிராம் செய்கிறீர்கள் அல்லவா? அது செய்யத்தான் வேண்டும் ஆனால் முதலில் சுயத்தை சம்பன்னம் ஆக்க வேண்டும். இத்தோடு இந்த சேவையும் செய்ய வேண்டும் இதில் கை உயர்த்தியிருக்கிறார்கள் அல்லவா? தயார் செய்வார்கள் தானே? இனி மெல்ல, மெல்ல நடப்பதற்கான நேரம் முடிந்து விட்டது. இப்போது பறக்க வேண்டும். எப்போது வேண்டுமோ, எங்கே வேண்டுமோ சேவையில் ஆஜராகி விடுங்கள். நல்லது.

நீங்கள் எல்லோரும் கூட தயார் செய்து கொண்டு வருவீர்கள் அல்லவா? மேலும் அதிகமாக அல்ல. ஒவ்வொருவர். ஒருவேளை அதிகமாகச் செய்தால் வாழ்த்துக்கள். நல்லது. மகாராஷ்டிரா கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டார்கள். தன்னை சம்பூரணம் செய்வதற்காக. ஏனெனில் இங்கேயிருக்கின்ற வாயுமண்டலம் சகஜமாகவே அசரீரி ஆவதில் உதவி செய்கிறது. ஆகவே எந்த ஜோன் சான்ஸ் எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு இந்த கோல்டன் பிராப்தி ஆகிறது. சேவை செய்ததற்கும் பலன், மேலும் வாயுமண்டலத்தில் ஸ்திதிக்கும் கூட பலன் கிடைக்கிறது. இரட்டிப்பு பலன் பிராப்தியாக கிடைக்கிறது.

நல்லது. பாப்தாதாவுக்கு ஒவ்வொரு குழந்தையும், ஒருவர் இன்னொருவரை விடவும் அன்பாகத் தெரிகிறார்கள். எப்படிப்பட்டக் குழந்தையாயிருப்பினும், பரமாத்ம அன்புக்குப் பாத்திரமாக ஆகியே விடுகிறார்கள் அல்லவா? மேலும் இந்த பரமாத்ம அன்பு இப்போது மட்டுமே கிடைக்கிறது அல்லது குறைவாக இருக்கிறதா? யார், அன்பு 100-சதவிகிதம் உள்ளது என்று நினைக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். 100-சதவிகித அன்பு என்று இருக்கிறதா? எனினும் அன்பில் கொஞ்சம் அதிகமாக இருப்பவர்களுக்கு பலியாவது எளிதாக இருக்கிறது. வாழ்த்துக்கள். அன்பின் அடையாளம், பலியாவது. ஆகவே நல்ல குழந்தைகள் தானே! யார் நல்ல குழந்தைகளாக இருக்கிறார்களோ அவர்கள்தான் செயலில் காட்டுபவர்களாக இருக்கிறார்கள். பாப்தாதாவிடம் குழந்தைகளின் அன்பு வந்து சேருகிறது. அன்பில் பாப்தாதாவும் கூட மிக நல்ல சதவிகிதம் பார்க்கின்றார் ஆனால் இப்போது சக்தி சொரூபம், சம்பன்ன சொரூபம் ஆகியவற்றில் மற்றெல்லாவற்றையும் விட அதிக மார்க்குகள் வாங்க வேண்டும். ஆகவே மகாராஷ்டிரா நம்பர் ஒன் ஆவார்கள ஆவார்களா? நல்லது. யார், முதலில் செய்பவர்களோ அவர்கள் அர்ஜுன். அர்ஜுன் நம்பர் ஒன். நல்லது.

நாலா பக்கமுமுள்ள குழந்தைகளின் புருஷாரத்தம், மற்றும் அன்பினுடைய சமாச்சாரக் கடிதம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தது. பாப்தாதா குழந்தைகளுடைய ஆர்வம், உற்சாகம் பார்த்து இது செய்வோம், இது செய்வோம் என்ற சமாச்சாரம் கேட்டு குஷியடைகின்றார். இப்போது இரண்டு தைரியம் மட்டும் வைத்திருக்கிறார்கள். ஆர்வம், உற்சாகம் வைத்திருக்கிறார்கள். இதில் அடிக்கடி அப்டென்ஷன் கொடுத்து, பிராக்டிக்கலில் கொண்டு வர வேண்டும். இதுதான் எல்லா குழந்தைகளுக்காகவும், பாப்தாதாவின் உள்ளத்தின் ஆசிகள் மேலும் எல்லோரும் நாலா பக்கமும் சங்கல்பம், பேச்சு, மற்றும் கர்மத்தில் சம்மந்தம் தொடர்பில் சம்பன்னம் ஆகக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா சுயதர்ஷன் செய்கின்ற சுயதர்ஷன் சக்கரதாரி குழந்தைகளுக்கு, சதா திட சங்கல்பம் மூலம் மாயாஜீத் ஆகி தந்தையின் முன்பாக தன்னை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, மேலும் உலகின் முன் தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, சர்வீஸபள், நாலஜ்புல், சக்ஸெஸ்யுல் (Serviceable, Knowledgeful, Successful) குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும்

உள்ளத்திலிருந்து பதம் பதம் மடங்கு (ஆயிரமாயிரம்) ஆசிகள். நமஸ்தே. நமஸ்தே.

தாதிகளுடன்: உங்களுடைய இலக்ஷியம் இது தான் அல்லவா? அதாவது சீக்கித்திலும் சீக்கிரமாக பிரத்யக்ஷத்தா ஆக வேண்டும். ஆகவே அதாவது தான் பாப்தாதா ஹோம் ஒர்க் கொடுக்கின்றார். சத்குரு பார்ட் ஆரம்பமாகி விட்டால், இது முடிந்து விடும். இதற்காகத்தான் எல்லோரையும் செய்கிறேன். (என் முன்னிலையில் மூன்றும் இருக்கிறது). பாப்தாதாவுக்கு சொரூபம் நிர்வாகியாகி தாரணை செய்ய வேண்டியதாயிருக்கிறது. ஆகவே சதா மூன்று ரூபம். இப்போது பாப்தாதா விரும்புகின்றார் விஜயி ஆகி விட்டோம் என்று எல்லோரும் சொல்லட்டும். ஆக வேண்டும். ஆகிக் கொண்டிக்கிறது அல்ல. ஆகி விட்டது. எல்லோருடைய நெற்றியிலும் ஜொலித்துக் கொண்டிருக்கின்ற நட்சத்திரம் தெளிவாக அனுபவம் ஆக வேண்டும். இந்த அனுபவத்தின் கண்கள், இப்போது மற்றவர்களுக்கு அனுபவம் செய்விக்கும். இப்போது அனுபவம் செய்ய விரும்புகிறார்கள். சுயமும் கூட ஒவ்வொரு சக்தியிலும் ஒவ்வொரு குணத்திலும் அனுபவசாலி ஆக வேண்டும். அப்போது தான் அனுபவம் செய்விக்க முடியும். ஆகவே தன்னுடைய அனுபவத்தை அதிகரித்தால் மற்றர்களுக்கு அனுபவம் ஆகியேத் தீரும். நன்றாயிருக்கிறது, உங்கள் எல்லோருடைய உள்ளத்தின் விருப்பங்கள் பூர்த்தியாகியேத் தீரும். சரிதானா? எவ்வளவு நன்றாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது. பிராமண குலத்தின் அழகு மிளிரட்டும். எல்லா தாதிகளையும் பார்த்து குஷியடைகிறார்கள் அல்லவா? பாருங்கள் இவர்களுடைய கமால் இது தான், அதாவது சாதனம் எதுவுமே இல்லாமல் வெற்றியடைந்தார்கள். எவ்வளவு நடந்து சென்றிருப்பீர்கள், மோட்டாரும் இல்லை, வண்டியும் இல்லை. இந்த மாதிரியான தபஸ்யா தான், இவ்வளவு விஸ்தாரமாக்கியது. இப்போது கொஞ்சம் சாதனம் கிடைத்திருக்கிறதல்லவா? ஆதலால் கொஞ்சம் ஆகர்ஷணம் உண்டாகிறது நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 31.10.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சதா அன்போடு இருப்பதன் கூடவே நிரந்தரமான மகாதானி ஆகுங்கள், அப்போது தடைகளை அழிக்கும், சமாதான சொரூபமாக ஆகி விடுவீர்கள்!

இன்று அன்புக்கடல் பரமாத்மா தன்னுடைய அன்பிற்குப் பாத்திரமான குழந்தைகளைச் சந்திக்க வந்துள்ளார். நீங்கள் அனை வரும் கூட அன்பு என்ற அலௌக்க விமானத்தின் மூலமாக இன்று வந்து சேர்ந்துள்ளீர்கள் அல்லவா! சாதாரண விமானத்தின் வந்துள் ளீர்களா? அல்லது அன்பு என்ற விமானத்தில் பறந்து வந்து சேர்ந்துள்ளீர்களா? அனைவருடைய உள்ளத்திலும் அன்பின் அலைகள் பாயந்து கொண்டிருக்கின்றன. மற்றும் அன்பு தான் இந்த பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரமாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் வந்த போது கூட அன்பு தான் உங்களை கவர்ந்து இழுத்தல்லவா! ஞானத்தைப் பின்னால் தான் கேட்டீர்கள், ஆனால் அந்த அன்பானது பரமாத்மாவுக்கு அன்பானவராக

ஆக்கி விட்டது. நாம் பரமாத்மாவின் அன்பிற்கு பாத்திரமானவராக ஆவோம் என்று கனவில் கூட நினைத்திருக்க மாட்டோம் ஆனால் இப்போது என்ன கூறுகிறீர்கள்? ஆகி விட்டீர்கள். அன்பு கூட சாதாரண அன்பு அல்ல? உள்ளத்தின் அன்பாகும். ஆன்மீக அன்பு, உண்மையான அன்பு, சுயநலமற்ற அன்பாகும். இந்த பரமாத்மாவின் அன்பு மிக சகஜமான நினைவின் அனுபவத்தைச் செய்ய வைக்கிறது. அன்பானவரை மறப்பது கடினமாக இருக்கும். அன்பு ஒரு அலௌகிக காந்தம் போன்றது. அன்பு சகஜயோகியாக ஆக்கி விடுகிறது. கடின உழைப்பிலிருந்து விடுவித்து விடுகிறது. அன்போடு நினைவு செய்வதில் கடின உழைப்பு ஏற்படுவதில்லை. அன்பின் பலனை அனுபவிப்பார்கள். நாலாபுறத்தில் உள்ள குழந்தைகளும் அன்பிற்கு அடையாளமாக இருக்கிறார்கள். ஆனாலும் கூட இரட்டை வெளி நாட்டவர்கள் அன்பினால் ஓடி ஓடி வந்து சேர்ந்து விட்டார்கள்? பாருங்கள். 90- நாடுகளிலிருந்து எப்படி ஓடி வந்து சேர்ந்து விட்டார்கள்! இந்த நாட்டில் உள்ள குழந்தைகள் பிரபுவின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் தான் ஆனால் இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டவருக்கு கோல்டன் சான்ஸ் (பொன்னான வாய்ப்பு) கிடைத்துள்ளது. உங்கள் அனைவருடைய விசேஷமான சினேகம் இருக்கிறதல்லவா! அன்பு இருக்கிறதல்லவா! எவ்வளவு சினேகம் இருக்கிறது? எவ்வளவு? எதோடு கூடாவாவது ஒப்பிட முடியுமா? எது கூடவும் ஒப்பிட முடியாது. உங்கள் அனைவருடைய பாட்டு ஒன்று இருக்கிறதல்லவா -ஆகாயத்திலும் இவ்வளவு நட்சத்திரங்கள் இல்லை, கடலிலும் இவ்வளவு தண்ணீர் இல்லை... அவ்வளவு எல்லைக்கப்பாற்பட்ட அன்பு, அத்தனை எல்லையற்ற சிநேகம்!.

பாப்தாதா கூட அன்பான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்து விட்டார். குழந்தைகள் நீங்கள் அனைவரும் அன்போடு நினைவு செய்தீர்கள், பாப்தாதாவும் உங்களுடைய அன்பில் வந்து சேர்ந்து விட்டார். இந்த நேரத்தில் ஒவ்வொருவரின் முகத்திலும் அன்பின் ரேகை பின்னிக் கொண்டிருக்கிறது. இதுபோலவே, இப்போது கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? அன்பு என்னவோ இருக்கிறது. இது உறுதி. பாப்தாதாவும் அன்பு இருக்கிறது என்று சான்றிதழ் தருகிறார். இப்போது என்ன செய்ய வேண்டும் புரிந்து கொண்டீர்கள் தானே! அன்டர்லைன் செய்ய வேண்டும். எப்பொழுதும் (சதா) அன்பானவராக இருக்க

வேண்டும். எப்பொழுதும், சில நேரத்தில் மட்டும் கிடையாது. துண்டிக்கப்படாத அன்பு இருக்கிறது ஆனால் சதவீதத்தில் வித்தியாசம் வந்து விடுகிறது. எனவே வித்தியாசத்தை நீக்குவதற்கு என்ன மந்திரம் உள்ளது? ஒவ்வொரு நேரத்திலும் மகா தானியாக, நிரந்தரமான வள்ளலாக ஆகுங்கள். சதா வள்ளலின் குழந்தைகள் உலக சேவாதாரிக்குச் சமமாக இருப்பவர்கள். எந்த ஒரு நேரமும் மாஸ்டர் வள்ளல் ஆகாமல் இருக்கக் கூடாது ஏனென்றால் உலக நன்மைக்கான காரியத்தில் தந்தையின் கூடவே தானும் உதவியாளர் ஆவேன் என்று நினைத்துள்ளீர்கள் ( மனதின் மூலமாசு சக்திகள் தானம் கொடுங்கள் அல்லது உதவி செய்யுங்கள். பேச்சின் மூலமாக ஞானத்தை தானமாகக் கொடுங்கள். உதவி செய்யுங்கள். செயல் மூலமாக குணங்களைத் தானம் செய்யுங்கள் மற்றும் அன்பான தொடர்புகள் மூலமாக சந்தோஷத்தை தானம் செய்யுங்கள். எவ்வளவு அகண்ட பொகிஷங்களுக்கு எஜமானனாக, உலகிலேயே முதலில் செல்வந்தராக (Richest in the world) இருக்கிறீர்கள். குறையாத மற்றும் நிரந்தரமான பொக்கிஷம் ஆகும். எவ்வளவு கொடுக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாகிக் கொண்டே போகும். குறையாது அதிகமாகும். ஏனென்றால் தற்சமயத்தில் அதிகப்படியான உங்களுடைய ஆன்மீக சகோதர, சகோதரிகள் இந்த பொக்கிஷங்களுக்காக தாகத்தில் இருக்கு கிறார்கள். உங்களுடைய சகோதர, சகோதரிகள் மீது இரக்கம் வா வில்லையா? தாகத்தில் இருக்கும் ஆத்மாக்களின் தாகத்தை தீர் மாட்டீர்களா? ஹே! எங்களுடைய தேவ, தேவிகளே! எங்களுக்கு சக்தி கொடுங்கள், உண்மையான அன்பு கொடுங்கள் என்ற சப்தம் காதில் கேட்கவில்லையா! தயை காட்டுங்கள், கருணை காட்டுங்கள். ஹே, இரக்கத்தின் தேவ, தேவிகளே! என்று உங்களுடைய பக்தர்கள் மற்றும் துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்கள் இருவருமே கூக்குரலிடுகிறார்கள் "காலத்தின் அழைப்பு" கேட்கிறதல்லவா! கொடுப்பதற்கான நேரமும் இது தான். பிறகு எப்போது கொடுப்பீர்கள்? உங்களிடம் இருக்கின்ற இவ்வளவு குறைவாக, நிரந்தரமான பொக்கிஷத்தை பிறகு எப்போது கொடுப்பீர்கள்? என்ன கடைசி நேரத்தில் கொடுப்பீர்களா? அந்த நேரத்தில் வெறும் அஞ்சலி தான் தர முடியும். எனவே தன்னிடம் சேமித்து வைத்துள்ள பொக்கிஷத்தை எப்போது காரியத்தில் ஈடுபடுத்துவீர்கள். சோதனை செய்யுங்கள் -ஒவ்வொரு நேரத்திலும் ஏதாவது ஒரு பொக்கிஷத்தை பயன்படுத்துகிறேனா? இதில் இரட்டை

லாபம் உள்ளது. பொக்கிஷங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஆத்மாக்களின் நன்மையும் ஏற்படும் கூடவே நீங்கள் அனைவரும் மகாதானியாக ஆகி இருப்பதன் காரணத்தினால் தடைகளை அழிக்கக் கூடியவர்களாகவும், பிரச்சனை சொரூபமானவர்களாக அல்ல கிடையாது, மாதான சொரூபமானவராக சகஜமாக ஆகி விடுவீர்கள். இரட்டை லாபம் இருக்கிறது. இன்று இது வந்தது, நேற்று இது வந்தது, இன்று இது ஆகி விட்டது, நேற்று அது ஆகி விட்டது -தடைகளிலிருந்து விடுபட்டவராக, பிரச்சனைகளிலிருந்து விடுபட்டவராக சதா ஆகி விடுவீர்கள். பிரச்சனைகளுக்கு பின்பு நேரமும் கொடுக்கிறீர்கள், கடின உழைப்பும் செய்கிறீர்கள், அவ்வப்போது மனச்சோர்வாகி விடுகிறீர்கள், சில சமயம் உல்லாசத்தில் வருகிறீர்கள், இவைகளிலிருந்து தப்பித்து விடுவீர்கள். ஏனென்றால் பாப்தாதாவுக்கும் குழந்தைகளின் உழைப்பு நன்றாகத் தோன்றுவதில்லை. குழந்தைகள் கடின உழைப்பில் இருப்பதை பாப்தாதா பார்க்கும்போது அவரால் குழந்தைகளின் கடின உழைப்பைக் காண பொறுப்பதில்லை. எனவே கடின உழைப்பிலிருந்து விடுபட்ட முயற்சி செய்ய வேண்டும் ஆனால் எப்படிப்பட்ட முயற்சி? இது வரையிலும் தன்னுடைய சிறிய சிறிய பிரச்சனைகளிலேயே முயற்சி செய்பவராக இருப்பீர்களா என்ன? இப்போது இந்த முயற்சி செய்யுங்கள் -நிரந்தரமான மகாதானி, நிரந்தரமான சகஜயோகி, பிராமணர்களின் உதவியாளர் ஆகுங்கள் மற்றும் துக்கம், தாகத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு மகாதானி ஆகுங்கள்.

இப்போது இந்த முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பிடித்திருக்கிறது அல்லவா! பிடித்திருக்கிறது தானே! பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்குப் பிடித்திருக்கிறதா? இப்போது சில மாற்றமும் செய்ய வேண்டும் தானே. சுயத்தின் பொருட்டு அதிகமான நேரம் முயற்சி செய்திருக்கிறீர்கள். பாண்டவர்கள் எப்படி இருக்கிறீர்கள்? பிடித்திருக்கிறதா? நாளையிலிருந்து என்ன செய்வீர்கள்? நாளையிலிருந்து தான் ஆரம்பிப்பீர்களா? அல்லது இப்போதிருந்தா? இப்போதிருந்தே சிந்தனை செய்யுங்கள் -என்னுடைய நேரம், எண்ணம் உலகிற்காக, உலக சேவைக்காகத் தான் என்று. இதில் சுயத்தினுடையதும் தானாகவே ஆகி விடும் அப்படியே இருக்காது, அதிகமாகும். ஏன்? யாராக இருந்தாலும் நீங்கள் அவர்களுடைய

ஆசைகளைப் பூர்த்தி செய்கிறீர்கள், துக்கத்திற்குப் பதிலாக சுகம் தருகிறீர்கள், பலவீனமான ஆத்மாக்ளுக்கு சக்தி தருகிறீர்கள், குணம் தருகிறீர்கள் என்றால் அவர்கள் எவ்வளவு ஆசீர்வாதம் தருவார்கள். மற்றும் அனைவரிடமிருந்தும் ஆசீர்வாதம் பெறுவது முன்னேற்றத்திற்கான சகஜமான வழியாகும். சொற்பொழிவு செய்யவில்லை, அதிகமான நிகழ்ச்சிகள் செய்ய முடியவில்லை என்றாலும், பரவாயில்லை. செய்ய முடியும் என்றால் இன்னும் செய்யுங்கள் ஆனால் செய்ய முடியாது என்றாலும் பரவாயில்லை. பொக்கிஷங்களை வெற்றிகரமாக பயன்படுத்துங்கள். கூறினோம் அல்லவா? மனதின் மூலமாக ஞானத்தின் பொக்கிஷம், செயல் மூலமாக குணத்தின் பொக்கிஷம் மற்றும் புத்தியின் மூலமாக நேரத்தின் பொக்கிஷம், சம்மந்தம் தொடர்பின் மூலம் சந்தோஷத்தின் பொக்கிஷத்தைப் பயன்படுத்துங்கள். எனவே, பொக்கிஷங்களை வெற்றிகரமாக பயன்படுத்துவதினால் சகஜமாகவே வெற்றியின் மூர்த்தி ஆகி விடுவீர்கள். பறந்து கொண்டே இருப்பீர்கள். ஏனென்றால் ஆசீர்வாதம் ஒரு லிப்ட் போல வேலை செய்கிறது, ஏணிப்படி போல அல்ல. பிரச்சனை வந்தது, அதை நீக்கினீர்கள், சில சமயம் இரண்டு நாட்கள் ஆனது, சில சமயம் இரண்டு மணி நேரம் ஆனது -இது ஏணிப்படியில் ஏறுவதாகும். ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துங்கள், வெற்றியின் மூர்த்தி ஆகுங்கள். அப்போது எங்கு வேண்டுமோ, லிப்ட்'ல் நொடியில் சென்று சேர்ந்திடுவீர்கள். சூட்சும உலகிற்குச் செல்ல விரும்பினாலும், பரந்தாமதிற்குச் செல்ல விரும்பினாலும், தன்னுடைய இராஜ்யத்திற்குச் செல்ல விரும்பினாலும் நொடியில் சென்று விட முடியும் லண்டனில் "ஒரு நிமிட நிகழ்ச்சி" (Just a Minute) செய்தீர்கள் அல்லவா! ஆனால் பாப்தாதா “ஒரு நொடி" என்று கூறுகிறார் ஒரு நொடியில் ஆசீர்வாதம் என்ற லிப்டில் ஏறி விடுங்கள். வெறும் நினைவு என்ற சுவிட்சை அழுத்துங்கள் போதும் உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் . எனவே இரட்டை வெளிநாட்டவர்களின் நாளான இன்று பாப்தாதா அவர்களை முதலில் எந்த சொரூபத்தில் பார்க்க விரும்புகிறார்? உழைப்பிலிருந்து விடுபட்டவர். வெற்றியின் மூர்த்தி, ஆசீர்வாதங்களின் பாத்திரமானவராக பார்க்க விரும்புகிறார். இவ்வாறு ஆகி விடுவீர்கள்தானே? ஏனென்றால் இரட்டை வெளிநாட்டவருக்கு தந்தையின் மீது அன்பு அதிகமாக இருக்கிறது. சக்தி வேண்டும் ஆனால் அன்பு நன்றாக இருக்கிறது அதிசயம் செய்துள்ளீர்கள் தானே! பாருங்கள்.

90-நாடுகளிலிருந்து தனித்தனியான நாடு, தனித்தனியான பழக்க வழக்கம் ஆனால் 5-கண்டமும் சேர்ந்து ஒரு சந்தன மரமாக ஆகி விட்டீர்கள். ஒரு மரத்தில் வந்து விட்டீர்கள். ஒரே பிராமண கலாச்சாரம் ஆகி விட்டது, நாங்கள் ஆங்கிலேயர்கள், எங்களுடையது ஆங்கிலேய கலாச்சாரம் என்று இப்போது இருக்கிறதா? இல்லை தானே? பிராமணர் தானே? இப்போது நம்முடையது பிராமணக் கலாச்சாரம் என்று புரிந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். பிராமண கலாச்சாரம், வேறு எதுவும் கூடுதலாகக் கிடையாது. ஒருவராக ஆகி விட்டீர்கள் இல்லையா? இதற்காக பாப்தாதா வாழ்த்துக்களைத் தருகின்றார். அனைவரும் ஒரு மரத்தினுடையவராக ஆகி விட்டீர்கள். எவ்வளவு நன்றாகத் தோன்றுகிறது. நீங்கள் யார்? என்று யாரிடம் வேண்டுமானாலும் கேளுங்கள் -அப்போது என்ன கூறுவீர்கள்? பிராமணர்கள் என்று தானே! அல்லது யுகே.வைச் சேர்ந்தவர்கள், ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவீர்களா? இல்லை தானே? அனைவரும் ஒரு பிராமணராக ஆகி விட்டீர்கள். ஒரு வழிப்படி நடப்பவர் ஆகி விட்டீர்கள், ஒரே பிராமண சொரூபமுடையவராக ஆகி விட்டீர்கள். இதில் மகிழ்ச்சி வருகிறதல்லவா? மகிழ்ச்சியாக இருக்கிறதா? அல்லது கடினமாக இருக்கிறதா? கடினமாக இல்லை தானே! தோள் அசைக்கிறார்கள், நன்றாக இருக்கிறது.

பாப்தாதா சேவையில் என்ன புதுமையை விரும்புகிறார்? எந்த சேவை செய்து கொண்டிருக்கிறீர்களோ, அதை மிக மிக மிக நன்றாகவே செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக வாழ்த்துக்கள் இருக்கவே இருக்கிறது ஆனால் இனிமேல் கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? ஏதாவது புதுமை வேண்டும் என்று உங்களின் மனதில் இருக்கிறது தானே! அப்போது பாப்தாதா பார்த்தார் -எந்த நிகழ்ச்சி செய்தீர்களோ, உழைப்பும் அன்போடும் செய்தீர்கள் மற்றும் ஒருவேளை ஸ்தூலமான செல்வமும் ஈடுபடுத்தியிருந்தாலும் கூட அது பலமடங்காகி உங்களுடைய வங்கியில் சேமிப்பு ஆகி விட்டது. செல்வத்தை என்ன ஈடுபடுத்தினீர்கள், சேமிப்பு செய்துள்ளீர்கள். அனைவருக்கும் செய்தியைச் சென்றடைய வைக்கக்கூடிய காரியத்தை அறிமுகத்தைத் தரக்கூடிய காரியத்தை மிக நன்றாக செய்துள்ளார்கள் என்று ரிசல்டில் தெரிந்தது. எங்கு செய்திருந்தாலும் சரி, இப்போது டில்லியில் நடந்து கொண்டிருக்கிறது.

லண்டனில் நடந்தது மற்றும் இரட்டை வெளிநாட்டவர்கள் செய்யும் "காலத்தின் அழைப்பு" மற்றும் "பீஸ் ஆஃப் மைன்ட் ட்ரீட்" (மன அமைதி சிறப்புப் பயற்சி) நிகழ்ச்சிகள் பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. இன்னும் வேறு என்ன வேலை செய்ய முடியுமோ செய்து கொண்டேயிருங்கள் ஆனால் செய்தி கிடைக்கிறது, அன்புடையவராகவும் ஆகிறார்கள், உதவியாளராகவும் ஆகிறார்கள், சம்மந்தத்திலும் ஒரு சிலர் வந்து விடுகிறார்கள், ஆனால் இப்போது கூடுதலாகச் செய்ய வேண்டும் -எந்த ஒரு பெரிய நிகழ்ச்சி செய்தாலும் சரி அதில் (பாபாவின்) செய்தி என்னவோ கிடைக்கிறது. கூடவே கொஞ்சம் அனுபவமும் செய்து விட்டு போகட்டும் அனுபவம் மிக வேகமாக முன்னேற்றுகிறது. இந்த "காலத்தின் அழைப்பு", மற்றும் "பீஸ் ஆஃப் மைன்ட் ரிட்ரீட்டில்," கொஞ்சம் அதிகமாக அனுபவம் செய்கிறார்கள் ஆனால் பெரிய நிகழ்ச்சிகளில் செய்தி நன்றாக கிடைக்கிறது, ஆனால் யார் வந்தாலும் ஒன்றுக்குப் பிறகு ஒன்றாக ஏதாவது அனுபவம் செய்ய வேண்டும். ஏனென்றால் அனுபவம் ஒருபோதும் மறப்பதில்லை. மற்றும் விரும்பா விட்டாலும் அனுபவம் தன்பக்கம் இழுக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே பாப்தாதா முதலில் கூறுகிறார் -பிராமணர்கள் யாரெல்லாம் இருக்கிறீர்களோ, ஞானத்தின் கருத்துக்களை சுயம் அனுபவம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்களா? ஒவ்வொரு சக்தியையும் அனுபவம் செய்துள்ளீர்களா? ஒவ்வொரு குணத்தையும் அனுபவம் செய்துள்ளீர்களா? ஆன்மீக ஸ்திதியின் அனுபவம் செய்திருக்கிறீர்களா? பரமாத்மாவின் அன்பை அனுபவம் செய்திருக்கிறீர்களா? ஞானத்தைப் புரிந்து கொள்வதில் வெற்றி அடைந்து விட்டீர்கள், ஞானம் நிறைந்தவராக என்னென்னமோ ஆகி விட்டீர்கள், இதில் பாப்தாதா கூட சரியாக இருக்கிறது என்று ரிமார்க்ஸ் (சான்றுக் குறிப்பு) தருகிறார். ஆத்மா என்பது என்ன? பரமாத்மா என்பது என்ன? நாடகம் என்பது என்ன? என்ற ஞானத்தை என்னமோ புரிந்து கொண்டீர்கள் ஆனால் எப்போது வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் சரி அந்த சூழ்நிலையில் ஆன்மீக சக்தி அனுபவம் ஆக வேண்டும். பரமாத்ம சக்தியின் அனுபவம் ஆக வேண்டும், அது ஆகின்றதா? எந்த நேரம் வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ, எப்படி அனுபவம் செய்ய விரும்புகிறீர்களோ, அப்படி ஆகின்றதா? அல்லது சில சமயம், இப்படி சிலசமயம் அப்படி ஆகின்றதா? ஆத்மா என்று நினைக்கிறேன். பிறகு

மீண்டும் மீண்டும் தேக உணர்வு வந்து விடுகிறது என்றால் அனுபவத்தை என்ன காரியத்தில் கொண்டு வந்தேன்? அனுபவி மூர்த்தி. எனவே சுயத்திலும் அனுபவத்தை இன்னும் அதிகப்படுத்துங்கள். அனுபவம் இருக்கிறது. இல்லை என்பது கிடையாது ஆனால் சில சில நேரங்களில் தான் இருக்கிறது. பாப்தாதா சிலநேரம் (Some time) என்பதை விரும்பவில்லை, சில விஷயம் (Some thing) ஆகி விடுகிறது என்றால் சில நேரமும் ஆகி விடுகிறது. ஏனென்றால் உங்கள் அனைவருடைய லட்சியம் இருக்கிறது. என்னவாக ஆக வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது என்று கேட்டால், பாபாவுக்குச் சமமாக ஆக வேண்டும் என்று கூறுகிறீர்கள். ஒரே விடையைத்தான் அனைவரும் தருகிறீர்கள். எனவே பாபாவுக்கு சமமாக, தந்தை சில நேரம் மற்றும் சில விஷயம் என்று இருக்கவில்லை, பிரம்மாபாபா சதா ராஸ் யுத்தாக (ரகசியத்தைக் காக்கின்ற), யோக யுக்தாக, ஒவ்வொரு சக்தியிலும் சதா, அவ்வப்போது கிடையாது. என்ன அனுபவம் ஆகிறதா? அது சதா காலமும் செல்கிறது. அது சில நேரம் இருக்காது. எனவே சுயம் அனுபவி மூர்த்தி ஆகி ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு பாடத்திலும் அனுபவி, ஞான சொரூபத்திலும் அனுபவசாலி, யோகத்திலும் அனுபவசாலி, தாரணை சொரூபத்திலும் அனுபவசாலி. எல்லா வித மான சேவையில் மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு அனைத்திலும் அனுபவசாலியாக ஆக வேண்டும். அப்போது தான் மதிப்போடு தேர்ச்சி பெற்றவர் என்று கூறமுடியும். எனவே என்னவாக ஆக விரும்புகிறீர்கள்? வெறும் தேர்ச்சி பெற மட்டும் விரும்புகிறீர்களா? அல்லது மதிப்புடன் தேர்ச்சி பெற விரும்புகிறீர்களா? தேர்ச்சி பெறுபவர்கள் பின்னால் கூட வருவார்கள், நீங்கள் மிகவும் தாமதத்திற்கு (டூ லேட்) முன்பே வந்து விட்டீர்கள் இப்போது புதிதாகவும் வந்திருக்கலாம் ஆனால் டூ லேட் போர்டு போடவில்லை லேட் போர்டு போடப்பட்டு விட்டது ஆனால் டூலேட் போர்டு இன்னும் போடவில்லை. எனவே யாராவது புதிதாக இருந்தாலும் கூட இப்போது தீவிரமான முயற்சி செய்தால், முயற்சி அல்ல, தீவிரமான முயற்சி செய்தால் முன்னால் போக முடியும். ஏனென்றால் நம்பர் இன்னும் வெளியாகவில்லை. வெறும் இரண்டு நம்பர் தான் வெளிவந்துள்ளது. தந்தை மற்றும் தூய் இன்னும் எந்த ஒரு சகோதர-சகோதரியின் மூன்றாவது நம்பர் வெளிவரவில்லை. தாதிகளின் மீது மிகுந்த அன்பு இருக்கிறது என்று நீங்கள் கூறலாம், தந்தைக்கும் தாதிகளின் மீது அன்பு இருக்கிறது ஆனால் நம்பர் வெளி

வரவில்லை. எனவே நீங்கள் மிக மிகச் செல்லமான, காணாமல் போய் பிறகு கண்டெடுக்கப்பட்ட பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள், எவ்வளவு பறக்க விரும்புகிறீர்களோ பறக்கவும். ஏனென்றால் பாருங்கள் -சிறிய குழந்தைகளை தந்தை தன்னுடைய சிறிய விரல் தந்து நடக்க வைப்பார். அதிகமாக அன்பு செலுத்துவார், மற்றும் பெரியவரை விரல் கொடுத்து நடக்க வைக்க மாட்டார், அவர்களது காலிலேயே நடக்க வைப்பார். எனவே புதியவர்களும் கூட முன்னால் வர முடியும். பொன்னான வாய்ப்பு இருக்கிறது ஆனால் விரைவிலும் விரைவாக டூலேட் போர்டு போடப்பட்டு விடும். எனவே, அதற்கு முன்பு முயற்சி செய்து கொள்ளுங்கள். முதல் முறையாக வந்துள்ள புதியவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது வாழ்த்துக்கள். முதல் முறையாக தங்களுடைய வீடான மதுபனை வந்தடைந்து விட்டீர்கள். எனவே பாப்தாதா மற்றும் உள்நாடு, வெளிநாட்டிலுள்ள அனைத்து குடும்பத்தினரின் சார்பாக பல, பல (கோடி) மடங்கு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இப்போது கேட்டீர்களா? எவ்வளவு முடியுமோ தகுதியான ஆத்மாக்களைப் பார்த்து அனுபவி மூர்த்தி ஆக்குங்கள். பிறகு வந்து கொண்டேயிருங்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டியிருக்காது. நீங்கள் வர வேண்டாம் என்று கூறினாலும் வருவார்கள். அனுபவம் அப்படிப்பட்டதாகும். சுயத்தையும் அனுபவத்தினால் முன்னேற்றுங்கள், எவ்வளவுக்கு எவ்வளவு அனுபவத்திலும், மகாதானி ஆகிய சேவையிலும் பிசியாக (சுறுசுறுப்பாக) இருந்தால் பிரச்சனைகளில் வீணாகக் கூடிய நேரம், தாதிகளுக்கும் நேரம் தர வேண்டியிருக்கிறது; மற்றும் தானும் நேரம் தர வேண்டியிருக்கிறது, இந்த நேரம் சேமிப்பாகி விடும். ஏனென்றால் நேரத்தின் மகத்துவத்தையும் தெரிந்து கொண்டீர்கள். திடீரென்று ஆக வேண்டும். 10-வருடம் இருக்கிறது 20-வருடம் இருக்கிறது எவ்வளவு இருக்கிறது என்று ஜாடை கிடைக்கட்டும் என்று அதிகமான சகோதர-சகோதரிகள் நினைக்கிறார்கள் ஆனால் திடீரென்று தான் ஆகும் என்று பாப்தாதா கூறியிருக்கிறார். எவரெடியாக இருக்க வேண்டும். இப்போது தன்னையும் மற்றும் பிறரையும் தகுதியாக ஆக்குவதில் வேகமாக முயற்சி செய்யுங்கள்.

நன்றாக இருக்கிறது, வெளிநாட்டு சேவையும் நன்றாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது 90-நாடுகள் வரை சென்று விட்டீர்கள். மீதி என்ன இருக்கிறது? 100-வரை இன்னும் அதிகமாக்குங்கள். 100வது ஆகட்டுமே. 129-நாடுகள் வரை பாபாவின் செய்தி போய் விட்டது. 100-நாடுகள் பதிவும் செய்யப்பட்டிருக்கிறது மற்ற இடங்களில் ஏதாவது பாபாவின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்று சகோதரி ஜெயந்தி கூறினார். நல்லது, பாப்தாதா ஆப்பிரிக்காவின் செய்தியையும் கேட்டார். அவர்களும் சிறிது நேரத்திலேயே நல்ல விருத்தி அடைந்துள்ளார்கள். நல்லது. இரக்கமனமுள்ள ஆத்மாக்களாக இருக்கின்றனர் என்று பாப்தாதா சந்தோஷப்படுகிறார். ஆத்மாக்கள் மீது அன்பு இருக்கிறது. வேறு தர்மத்தில் கூட போய்விட்டார்கள், எவ்வளவு சிதறி விட்டார்கள், பாருங்கள் -எங்கெங்கிருந்தோ குழந்தைகள் வந்து சேர்ந்து விட்டார்கள். எனவே தங்களுடைய குடும்பத்தை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் இல்லையா? அனைவரும் நன்றாக செய்கிறீர்கள்! இப்போது டில்லியிலும் பெரிய நிகழ்ச்சி நடக்கின்றது. விழா பொதுவானது தான் ஆனால் புதிய ரூபத்தில் செய்வதினால் ஆர்வம் ஏற்படுகிறது. லண்டனிலும் நன்றாக நிகழ்ச்சி செய்தீர்கள். அதிகமான மக்களுக்கு அறிமுகம் கிடைத்தது. இப்போது கைவசமிருக்கும் விலாசத்தைக் கொண்டு தொடர்பு செய்யுங்கள். எங்கிருந்து வந்திருந்தாலும், எந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தாலும் அவர்களிடம் விலாசம் மற்றும் தொலைபேசி எண்ணை அவசியம் எழுத வையுங்கள். ஏனென்றால் அப்போது தான் அவர்களை அழைத்து, நேரம் ஒதுக்கி பிறகு அவர்களை முன்னேற்ற முடியும். மற்றபடி காலத்தின் மணி திடீரென்று ஒலிக்கும். அதற்கு முன்னால் தன்னுடைய சகோதர சகோதரிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் அல்லவா! இரக்கம் வருகிறதல்லவா? இப்போது சிறிய-சிறிய விஷயங்களில் நேரத்தை ஈடுபடுத்தாதீர்கள். எவ்வாறு பாருங்கள் கொசு வருகிறது, ஈ வருகிறது என்றால் அதை இருக்க விடுகிறீர்களா? உடனேயே பறக்க வைத்து விடுகிறீர்களா (அல்லது) அமர விடுகிறீர்களா? நல்லது கொசுவே பரவாயில்லை வா. எந்த ஒரு பிரச்சனையும் என்னது? கொசு மற்றும் ஈ தானே. உடனேயே விரட்டுங்கள். அதனுடைய வேலை வருவது. மாயை தான் வரும் வேலையை விடுவதில்லை ஆனால் பிராமணர்கள் விரட்டும் காரியத்தில் அவ்வப்போது கொஞ்சம் நேரம் தாழ்த்தி விடுகிறார்கள். மற்றபடி பாப்தாதா அனைத்து நாடுகளின் கொஞ்சம் கொஞ்சம்

மாற்றத்தைப் பார்க்கிறார். கண்டத்தைச் சேர்ந்தவர்கள் மாற்றத்தை எழுதி வைத்திருப்பதைப் பார்த்தார் ஆனால் மாற்றம் செய்வது அதை எழுதியுள்ளீர்கள் அதற்காக வாழ்த்துக்கள்! ஆனால் அதை அழிவில்லாததாக ஆக்குங்கள். ஏதாவது சிறிய விஷயம் வந்து விட்டது, மாற்றம் செய்தது மாறி விட்டது -இவ்வாறு செய்யாதீர்கள். அமரராக ஆகுங்கள் என்ற வரதானத்தைப் பெறுங்கள். பரிவர்த்தனை செய்திருப்பதை பாப்தாதா கேட்டார். ஒரு சிலர் நன்றாகப் பரிவர்த்தனை செய்துள்ளார்கள் ஆனால் சதா என்ற வார்த்தையை ஒருபோதும் மறக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் உறுதிமொழி செய்வதை மாயையும் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதுவும் தன்னுடைய பரிசோதனை செய்யும் தானே! ஆனால் நீங்கள் மாயை மீது வெற்றி பெற்றவர் தானே! மாயை மீது வெற்றி பெற்றால் தானே உலகத்தின் மீது வெற்றி பெற்றவர் ஆக முடியும். எனவே மாயையைப் பார்த்து, மாயை வருவதைப் பார்த்து விட்டு நீங்கள் நினைவு செய்யுங்கள் -என்னுடைய வேலை விரட்டுவதாகும். நான் வருவதை விடமாட்டேன் என்று அதுவும் (மாயா) உங்களுக்குக் கற்றுத் தருகிறது. நீங்கள் வெற்றி பெறுவதை விடாதீர்கள். இப்போது சிறிய சிறிய கொசு மற்றும் ஈ வர விடாதீர்கள். முழுமையான நிலைக்கு முன்னால் இந்த சிறிய சிறிய விஷயங்கள் எல்லாம் என்ன?

நல்லது! உங்கள் அனைவருடைய அன்பிலும் அன்பான இனிமையான தாதி உங்களுக்கு முன்னால் வந்துள்ளார். (வீடியோ கான்பிரன்ஸ் மூலமாக) மிகவும் இனிமையாகப் புன்னகைக்கின்றார். பாருங்கள், அனைவரும் கை அசையுங்கள். தாதியும் பார்ப்பார்கள் அங்கே தெரியும். நல்லது பாருங்கள். தாதி பிரம்மாபாபாவையும் விட அதிகமான நேரம் சேவையில் பங்கு வகித்திருக்கின்றார்கள். எனவே விசேஷமான ஹீரோ நடிகர் தானே. பாருங்கள் தாதி, உங்களைப் பார்த்து அனைவரும் சந்தோஷமடைகிறார்கள். (தாதி அனைத்து இரட்டை வெளிநாட்டவருக்கு முக்கியமாக அன்பு கொடுத்து தீபாவளியின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்). பாருங்கள், இதுவும், உண்மையான தீபாவளி தானே! நீங்கள் இவ்வளவு எரிந்து கொண்டிருக்கும் தீபங்கள் மின்னிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே தாதிக்கு தீபாவளி நினைவு வருகின்றது. எவ்வளவு ஒவ்வொருவரின் நெற்றியிலும் ஆத்மா மின்னிக் கொண்டிருக்கிறது. இந்த தீபங்கள் எவ்வளவு நன்றாக

இருக்கிறது. அழிவில்லாத தீபமாக இருக்கிறது (அனைவரும் பாபா பாபா என்கிறார்கள், பாபா உங்களுடைய நினைவு அதிகமாக வருகின்றது என்று தாதி கூறுகிறார்) இப்போது சீக்கிரமா வந்து விடுவார்கள். பாருங்கள், எவ்வளவு வியாதி இருந்தாலும் வியாதியின் உணர்வு இருக்கக்கூடாது. அப்போது அந்த நோய் ஓய்வு தருகின்றது. ஹீரோ நடிகர் தானே! சாந்தியின் தேவியாக இருக்கிறார். இப்போது சீக்கிரமாக வந்து விடுவார், உங்கள் அனைவரையும் சந்திப்பார். நல்லது.

**லண்டன் ஜெஸ்ட் எ மினிட்( Just a Minute) (ஒரு நிமிடம் தாங்க....) நிகழ்ச்சியின் குரூப்:** மிகவும் நல்லது. ஒரு நாடு கூடவே மற்ற நாடுகளும் பங்கு பெற்றனர் அல்லது பார்த்தனர். இந்த விசேஷம் நன்றாக இருந்தது. இந்த புதுத்தன்மை நன்றாக இருந்தது. இதை மேலும் புதுப்பித்து ஒரே நேரத்தில் பல திசைகளில் ஒரே சப்தம் நாலாபுறமும் ஒலிப்பது அனைவருக்கும் தெரிய வரும். அனைவரும் மிக நன்றாக உழைத்தார்கள் மற்றும் மனதார செய்தார்கள். பெரிய உள்ளத்தோடு கவலையில்லாமல் செய்தது லண்டனின் விசேஷத்தன்மையாகும். இதற்காக வாழ்த்துக்கள். எந்த ஒரு நிகழ்ச்சியும் பெரிய உள்ளத்தோடு (பரந்த மனப்பான்மை) செய்யும்போது அது நன்றாக நடக்கும். என்ன ஆகும்? எப்படி ஆகும், இந்த ஏ, ஏ வரவேண்டாம், நடந்தே தீரும், செய்தே தீர வேண்டும். வெற்றி நமது பிறப்புரிமையாகும். இது நல்ல ரிசல்ட் ஆகும். லண்டனுடையது பெரிய உள்ளம் தான். பெரிய உள்ளத்தில் ஜானகி தாதி முதல் நம்பராக இருக்கிறார். ஏன்? என்ன? என்று யோசிக்க மாட்டார். மற்றும் அது நடந்தே விடுகிறது. எவ்வளவு சகஜமாக முடிந்துவிட்டது என்று அனைவரும் பார்த்திருப்பீர்கள். செலவு ஆனது, ஆனால் மிச்சமும் ஆனது என்று பாப்தாதா கேள்விப்பட்டார். மிச்சம் ஆனது இன்னமும் அதிகமாகி விட்டது. குறையவில்லை, எனவே இது யாருடைய அதிசயம்? பெரிய உள்ளத்தின் அதிசயம். எப்போதும் எந்த ஒரு நிகழ்ச்சி செய்தாலும் முதலில் பெரிய உள்ளம் வைத்தால் வெற்றி கிடைக்கும். எனவே வாழ்த்துக்கள். பெரிய உள்ளம் வைத்தீர்கள் மற்றும் பெரிய நிகழ்ச்சி செய்தீர்கள். மற்றபடி புதிதாக ஆகிக் கொண்டே இருக்கும். கூடுதலாக ஆகிக் கொண்டேயிருக்கும். இப்போது ஒவ்வொன்றாக செய்யுங்கள், இவ்வளவு பேர் வந்ததில் குறைந்ததிலும் குறைந்தது சிலராவது சம்மந்தம்-தொடர்பில் வந்து மாணவராக ஆனார்கள் அல்லவா! ஆவார்கள். (அமெரிக்காவின் மோகினி

சகோதரியின் உதவி மிகவும் நன்றாக இருந்தது) அனைவரும் இணைந்து செய்தீர்கள் அல்லவா! நல்லது மிகவும் நல்லது! கூட்டத்தின் சக்தி அதிசயம் செய்யும், எனவே இணைந்து கூட்டமாக செய்தீர்கள், வெற்றி கிடைத்தது, வெற்றி நிச்சயம் இருக்கும். களைப்படையவில்லை தானே! சந்தோஷம் அடைந்தீர்கள். சபையின் அழகைப் பார்த்து சந்தோஷம் அடைந்தீர்கள். நல்லது வாழ்த்துக்கள்.

**ஐ.டி. (I.T. Group) (செய்தி தொழில் நுட்ப) குருப்:** நன்றாக இருக்கிறது. உங்களுடைய காரியத்தினால் அனைத்து புறமும் செய்தி கிடைக்கிறது. எனவே அனைவருடைய உள்ளமும் சந்தோஷமடைகிறது. ஏனென்றால் குடும்பம் தானே, குடும்பத்தின் செய்தி கிடைப்பதால் குஷி ஏற்படுகிறது நன்றாகச் செய்திருக்கிறீர்கள், வேலை நடந்து கொண்டு தான் இருந்தது ஆனால் இப்போது கூட்டத்தில் ஒன்று சேர்ந்து நியமப்படி நடக்கிறீர்கள் மற்றும் அதிகமாக்கவும் செய்திருக்கிறீர்கள். இதில் எதிர்ப்பு இருக்கவே இருக்கும் ஆனால் நீங்கள் உங்களுடைய நிலையில் திடமாக இருந்தால் எதிர்ப்பு முடிந்து விடும். எதிர்ப்பு இருந்தால் தானே உங்களுக்கு ஊக்கம் வரும், இதைச் செய்யலாம். இதைச் செய்யலாம்... எனவே எதிர்ப்பு உங்களுக்கு நிலையை உயர்த்தி விடுகிறது மற்றும் வெற்றி கிடைக்கவும் செய்கிறது மேலும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இது நிச்சயம். ஒருபோதும் என்ன நடந்தாலும் பயப்படாதீர்கள், வெற்றி உங்களுடன் இருக்கிறது. வெற்றி எதிர்ப்புடன் இல்லை, தன்னுடைய நிலையில் நிலைத்திருப்பவர்களுடன் இருக்கிறது. மிக நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நாட்டிலும் மிக நன்றாக சிஸ்டம் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ.டி.குரூப்பின் முக்கிய சகோதரி மோகினி ஆவார்). நல்லது. யாராவது நியமப்படி நிமித்தமானால் அப்போது எந்த காரியம் நடந்தாலும் அந்த நியமத்தில் லாபமே இருக்கும். நல்ல தைரியம் வைத்து எடுத்துள்ளீர்கள், இதற்காக மிக மிக வாழ்த்துக்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பாப்தாதாவிடம் செய்தி வந்து கொண்டே இருக்கும். எவ்வாறு தங்களுக்குள் மீட்டிங் செய்கிறீர்கள், எவ்வாறு வருங்காலத்திற்காக திட்டம் போடுகிறீர்கள் என்று பாப்தாதாவிடம் செய்தி வருகிறது. எனவே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

**ஆர்.சீ.ஓ (R.C.O. Group) குருப்:** நல்லது இவர்கள் திட்டம் போடும் புத்திசாலியான ஆத்மாக்கள். புதிய, புதிய திட்டம் நாலா புறமும் போட்டுக் கொண்டே இருப்பார்கள். சேவையின் விருத்தி மற்றும் பிராமண ஆத்மாக்களின் விருத்தி எவ்வாறு ஏற்படும், விதி என்ன? இவர்கள் தங்களுக்குள் சேர்ந்து மீட்டிங் செய்வது மிகவும் நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் அனைத்து செய்தியும் அதே நேரத்திலேயே சென்று சேர்ந்து விடுகிறது ஏனென்றால் பாபா டி.வி.யின் சுவிட்சை ஆன் செய்தால், அதில் அனைத்தும் தெரிகிறது, கேட்கிறது. பாப்தாதாவுக்கு இது பிடித்திருக்கிறது. தங்களுக்குள் சேர்ந்து திட்டம் மற்றும் நிகழ்ச்சி செய்கிறீர்கள். அதை நடைமுறையில் கொண்டு வருவதற்காக நல்ல முயற்சியும் செய்கிறீர்கள். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், முன்னேற வேண்டும். மற்றும் வெற்றி குழந்தைகளின் கழுத்து மாலையாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது. முக்கியமானவர் அனைவரும் ஒன்று சேர்ந்துவிட்டால் திட்டமும் அவ்வாறே பெரிய, நல்லதாக அமைகிறது. அனைத்து நாட்டினரும் இணைந்து விடுகிறீர்கள் நல்லது மிகவும் நல்லது. முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், பறந்து கொண்டேயிருங்கள். சேவைக்கு நிமித்தமான இன்னும் சில முக்கியமான சகோதரிகள் பாபாவுக்கு முன்பு நின்றார்கள். நல்லது. இவர்கள் வேறு, வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். தங்களுக்குள் சேர்ந்து வருங்கால சேவைக்காக திட்டம் போடுகிறார்கள். நாலாபுறத்தின் சூழ்நிலையைத் தெரிந்து கொண்டு, அதையும் மற்றவரின் ஆலோசனைப்படி சக்திசாலி ஆக்குகிறார்கள். ஏனென்றால் சூழ்நிலையின் பிரபாவம் மிக விரைவாக ஏற்படுகிறது. எனவே சேவையின் வளர்ச்சிக்கான திட்டமும் தீட்டுகிறீர்கள் மற்றும் சேவை நிலையங்களின் வாயுமண்டலத்தையும் சக்திசாலி ஆக்குவதற்கான திட்டம் தங்களுக்குள் ஆலோசனை செய்து உருவாக்குகிறீர்கள். அதனால் நேரத்திற்கு நேரம் வாயுமண்டலம் நன்றாக ஆவதைப் பார்க்க முடிகிறது, வளர்ச்சியும் நன்றாக இருக்கிறது மற்றும் விதியும் நன்றாக இருக்கிறது. மற்றும் விதிப்படி வெற்றியும் இருக்கிறது. இது ஒற்றுமையின் சக்தி தானே! கூட்டாகச் செய்வதின் சக்தி மிகவும் அதிசயம் செய்கிறது. செய்தே ஆக வேண்டும். தங்களுக்குள் சந்திப்பதும் ஆகி விடுகிறது. சேவையின் வளர்ச்சி, விதியும் ஆகி விடுகிறது மற்றும் மற்றவரின் அருகாமையிலும் வந்து விடுகிறீர்கள். எனவே பாப்தாதாவுக்கு உருவாக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி பிடித்திருக்கிறது.

மற்றும் நாடகப்படி மதுபனுக்கு வருவதற்கான வாய்ப்பும் கிடைத்து விடுகிறது. இந்த கூட்டம் அதிகமாக மதுபனின் வாயுமண்டலத்தில் இருக்கிறது. இன்னமும் கூட்டத்தின் சக்தியை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். எப்போது சக்தி சேனை தன்னையே வெளிப்படுத்துகிறதோ அப்போது தந்தை வெளிப்படுவார். ஏனென்றால் சக்திகள் மற்றும் பாண்டவர்கள் மூலமாகத்தான் தந்தை வெளிப்பட வேண்டும். எனவே முதலில் சக்திகள் மற்றும் பாண்டவர்கள் தானே தங்களை முழுமையாக வெளிப்படுத்துகிறார்களோ, அப்போது தந்தை வெளிப்படுவார். ஒவ்வொருவரின் முகத்திலும் தந்தை தான் தெரிவார். இவ்வளவு சக்தி கூட்டமாகச் செய்யும் போது இருக்கிறது. எனவே பிடித்திருந்தது. உங்கள் அனைவருக்கும் கூட பிடித்திருக்கிறதல்லவா! கூட்டாகச் செயல்படும் சக்தியை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள், தந்தையை வெளிப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். வாழ்த்துக்கள், நன்றாக இருக்கிறது. அதிகமாக பாரதத்தின் சகோதரிகள் இருக்கிறார்கள் பாருங்கள், முதலில் வெளிநாட்டை விழித்தெழுப்புவதற்காக பாரதம் சென்றது; இப்போது வெளிநாடு பாரதத்தை விழித்தெழுப்பும். அதிகம் பாரதத்தைச் சேர்ந்தவர்கள் தான். எனவே வெளிநாட்டினர் பாரதத்தை எப்போது விழுத்தெழுப்புவார்கள்? இந்த ஐ.டி.குரூப் விழித்தெழுப்புமா? நன்றாக இருக்கிறது. தொடர்பு நன்றாக ஆகிக் கொண்டு இருக்கிறது.

<u>அனைத்து ஆப்பிரிக்கா குரூப்:</u> பாருங்கள், ஆப்பிரிகாவைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு விஷயத்துக்காக மிக, மிக வாழ்த்துக்கள் -எதை உறுதி அளித்தார்களோ, அதை செய்துள்ளார்கள். ஒற்றுமையின் சக்தியினால் ஒருவர் மற்றவரின் உதவியாளராக நன்றாக ஆகியிருக்கிறீர்கள். தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சென்று சேர்ந்திருக்கும் நாடுகளுக்குச் சென்று, அந்த சகோதர, சகோதரிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் முயற்சியும் செய்திருக்கிறீர்கள், விதியும் நன்றாக இருக்கிறது மற்றும் நேரத்தில் வெற்றியும் அடைந்து விட்டீர்கள். அதற்காக மிக மிக வாழ்த்துக்கள். நன்றாக செய்திருக்கிறீர்கள். நல்ல முயற்சி செய்திருக்கிறீர்கள். நிமித்தமாக உள்ளவர்களும் தங்களுக்குள் கூட்டமாக (ஒற்றுமையாக) நன்றாக நடந்தார்கள் மற்றும் நடக்கிறார்கள். (ஜெயந்தி சகோதரியைப் பார்த்து நீங்களும் நில்லுங்கள்) இவர் கூட இருக்கிறார் தானே! நன்றாக

செய்தீர்கள், ஒருவர் மற்றவரின் உதவி நன்றாக இருக்கிறது. சக்திகளும் நிமித்தமாக இருக்கிறார்கள் மற்றும் பாண்டவர்களும் நிமித்தமாக இருக்கிறார்கள் என்று பாப்தாதாவுக்கு காட்டப்பட்டது. மிக நல்ல ரிகார்டு வைத்திருக்கிறார்கள். மிக நல்லது. வெற்றியின் மாலையை பாப்தாதா அணிவிக்கின்றார். அந்த மாலையை போட்டுவிட்டு பிறகு எடுத்து விடுவீர்கள் ஆனால் வெற்றியின் மாலையை பாப்தாதா ஒவ்வொருவருக்கும் அணிவிக்கின்றார். நல்லது. பல மடங்கு வாழ்த்துக்கள்.

**டில்லி ஓ.ஆர்.சியில் எஸ்.எம்.எல். (SML) டிரைனிங் பெற்றவர்கள், வழங்கியவர்களின் குரூப்:** நன்றாக இருக்கிறது. எவ்வளவு பயற்சி செய்கிறார்களோ, அவ்வளவு புண்ணியம் சம்பாதிக்கிறீர்கள். மற்றவருக்கு சேவை செய்து, பரிவர்த்தனை செய்ய வைப்பது - இந்த சேவையின் புண்ணியம் சேமிப்பாகிறது. மற்றும் இந்த புண்ணியம் தற்சமயத்தில் குஷி தருகின்றது. வருங்காலதிற்கும் சேமிப்பு ஆகி விடுகிறது. எவ்வளவு பேருக்கு செய்தீர்களோ, எதற்காக செய்தீர்கள்? செய்ய வைப்பதற்காகத் தானே! எனவே இவ்வளவு அதிகமான கைகள் (டீச்சர்ஸ்) செய்ய வைப்பதற்கு தயார் ஆகி விட்டீர்கள். எவ்வளவு புண்ணியம் சேமிப்பு ஆகியிருக்கும். எந்த குரூப்பாக இருந்தாலும் சேவை என்றாலே புண்ணியம் சேமிப்பதாகும். விதவிதமான சேவையை எவ்வளவு குரூப் செய்ததோ, அவ்வளவு புண்ணியம் சேமிப்பாகி விட்டது மற்றும் சேமிப்பு செய்து கொண்டேயிருங்கள். எனவே கற்றுக் கொண்டீர்கள் தானே!

புத்திசாலி ஆகி விட்டீர்கள் தானே! மற்றவருக்கும் செய்ய வைக்க முடியும் தானே! ஒருவர் மற்றவரை முன்னேற்றுவது கூட நன்றாக செய்துள்ளீர்கள். நிமித்தமாக ஆனீர்கள் தானே! நிமித்தமாக ஆனவர்களுக்கும் புண்ணியம் சேமிப்பு ஆகிறது. எனவே பாப்தாதா சந்தோஷப்படுகிறார் ஆனால் எதைக் கற்றுக் கொண்டீர்களோ அதை கற்றுத் தருவதிலும் முதல் நம்பரில் வர வேண்டும். தன் வரை மட்டும் வைக்காதீர்கள். காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நேரம் கொடுத்தீர்கள் மற்றும் நிமித்தமானவர்களின் நேரத்தையும் எடுத்துள்ளீர்கள். எனவே இன்னும் முன்னேற்றுங்கள். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

மிக நல்லது. யாரெல்லாம் குரூப்பில் எழுந்திருக்கவில்லையோ, அவர்களுக்கும் மிக மிக வாழ்த்துக்கள். ஏதோ ஒரு சேவையில் உங்களின் குரூப்பும் இருக்கிறது. எனவே முன்னதாகவே வாழ்த்துக்கள்.

நல்லது. இப்போது நொடியில் எந்த நிலைக்கு பாப்தாதா அறிவுரை தருகிறாரோ அந்த நிலைக்கு நொடியில் செல்ல முடியும் தானே! அல்லது முயற்சியிலேயே நேரம் போய்விடுமா? இப்போது நொடியில் செல்வதற்கு பயிற்சி தேவை ஏனென்றால் இனிமேல் வரப் போகும் கடைசி நேரத்தில் கௌரவத்துடன் தேர்ச்சி பெறுவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சியை இப்போதிருந்தே செய்ய வேண்டும். நொடியில் எங்கு வேண்டுமோ, எந்த நிலை வேண்டுமோ அந்த நிலையில் நிலைத்து விட வேண்டும். எனவே எப்போதும் தயாராக இருக்க வேண்டும். (எவரெடி) தயாராகி விட்டீர்கள்.

இப்போது முதலில் ஒரு நொடியில் புருஷோத்தம சங்கம யுக சிரேஷ்டமான பிராமணனாக இருக்கிறேன் என்ற இந்த நிலையில் நிலைத்திருங்கள்... இப்போது நான் பரிஸ்தாவாக, டபுள் லைட்டாக இருக்கிறேன்... இப்போது உலகத்திற்கு நன்மை செய்பவராகி மனதின் மூலமாக நாலா புறமும் சக்தியின் கிரணங்களைத் தருவதற்கான அனுபவம் செய்யுங்கள்... இவ்வாறு முழு நாளிலும் நொடியில் நிலைத்திருக்க முடியுமா? இந்த அனுபவத்தை செய்து கொண்டே இருங்கள் ஏனென்றால் எதுவும் திடீரென்று தான் ஆக வேண்டும். அதிக நேரம் கிடைக்காத குழப்பத்திற்கு நடுவில் நொடியில் உறுதியாக ஆவதற்கான பயற்சியை தானே தன்னுடைய நேரத்தை எடுத்து நடுநடுவில் செய்து கொண்டே இருங்கள். இதன் மூலம் மனதைக் கட்டுப்படுத்துவது சகஜமாகி விடும். கட்டுப்படுத்தும் சக்தி, ஆட்சி செய்யும் சக்தி அதிகமாகிக் கொண்டே போகும். .

நாலாபுறமும் உள்ள குழந்தைகளின் கடிதங்களுமும் நிறைய வந்துள்ளன, அனுபவமும் நிறைய வந்துள்ளது. எனவே அதற்கும் பதிலாக பாப்தாதா குழந்தைகளுக்கு மிக மிக உள்ளத்தின் ஆசீர்வாத மற்றும் உள்ளத்தின் அன்பு நினைவுகளை கோடி மடங்கு தருகின்றார். நாலாபுறமும் குழந்தைகள் கேட்டுக் கொண்டும் இருக்கிறாகள், பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக்

கொண்டிருக்கிறார். யார் பார்க்காமல் இருக்கிறார்களே அவர்களும் நினைவில் தான் இருக்கிறார்கள். அனைவரின் புத்தி இப்போது மதுபனில் தான் இருக்கிறது. எனவே நாலாபுறமும் உள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பெயரோடு அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அனைவரும் சதா ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் மூலமாக உயர்ந்த நிலையில் பறந்து கொண்டிருக்கும் சிரேஷ்டமான ஆத்மாக்களுக்கு சதா அன்பில் ஒன்றி மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு, சதா உழைப்பிலிருந்து விடுபட்டு, பிரச்சனையிலிருந்து விடுபட்டு, தடைகளிலிருந்து விடுப்ட்டு யோகத்தில், யுக்தியோடு ரகசியங்களைக் காக்கும் குழந்தைகளுக்கு சதா ஒவ்வொரு சூழ்நிலையிலும் நொடியில் தேர்ச்சி பெறக்கூடிய, ஒவ்வொரு நேரத்திலும் அனைத்து சக்திகளின் சொரூபமாக இருக்கக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். உங்கள் அனைவரின் அன்பான தாதிக்கும் மிக மிக ஆசீர்வாதம் மற்றும் அன்பு நினைவுகள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.11.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தன்னுடைய தன்மான கௌரவ நிலையில் (ஸ்வமான்) இருங்கள் மேலும் காலத்தின் (சமயம்) மகத்துவத்தைப் புரிந்து எப்போதும் தயார் நிலையில் இருங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய பரமாத்ம அன்புக்குப் பாத்திரமாயிருக்கின்ற, ஸ்வமான் என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற குழந்தைகளைப் பார்க்கின்றார். எல்லாக் குழந்தைகளும் சீட்டில் செட்டாகி இருக்கின்றார்கள் ஆனால் சில குழந்தைகள் ஏகாக்கிரஹ ஸ்திதியில் செட்டாகியிருக்கிறார்கள். மேலும் சில குழந்தைகள் எண்ணத்தில் (சங்கல்பம்) கொஞ்சம், கொஞ்சம் நிலை தடுமாறியவர்களாக (அப்செட்) இருக்கிறார்கள். பாப்தாதா இன்றைய காலப்பிரமாணத்தின் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தையும் ஏகாக்கிரஹ (ஒருமித்த நிலை) ரூபத்தில், ஸ்வமான்தாரி சொரூபத்தில் சதா இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். எல்லாக் குழந்தைகளும் ஏகாக்கிரஹ ஸ்திதியில் நிலைத்திருக்கவே விரும்புகின்றார்கள். தன்னுடைய விதவிதமான ஸ்வமானையும் அறிந்திருக்கிறார்கள். நினைக்கவும் செய்கிறார்கள் ஆனால் ஏகாக்கிரஹ ஸ்திதி குழப்பத்தில் கொண்டு வருகிறது. சதா ஏக்ரஸ் (ஒரே ரசனை) ஸ்திதி குறைவாக இருக்கிறது. அனுபவமும் இருக்கிறது அந்த ஸ்திதியை விரும்பவும் செய்கிறார்கள் ஆனால் அவ்வப்போது தான் இருக்க முடிகிறது. காரணம் என்ன? சதா கவனமாக இருப்பதில் குறை உள்ளது. எத்தனை வித ஸ்வமான் உள்ளது என்ற கணக்கெடுத்தால், அது மிகப் பெரியதாக இருக்கும். எல்லாவற்றிலும் முதலாவது ஸ்வமான் எந்த ஒரு தந்தையை இது வரையிலும் நினைவு செய்து கொண்டிருந்தீர்களோ, அந்த தந்தையின் நேர்முக குழந்தையாகி விட்டீர்கள். முதல் நம்பர் வாரிசு. பாப்தாதா கோடியில் ஒரு

குழந்தையாயிருக்கின்ற உங்களை எங்கெங்கிருந்தெல்லாம் தேடித் தேர்ந்தெடுத்து தன்னுடையவராக்கிக் கொண்டார். ஐந்து கண்டங்களிலிருந்து நேர்முகமாக தந்தை, தன்னுடைய குழந்தையை தன்னுடையவராக்கிக் கொண்டார். எவ்வளவு பெரிய கௌரவம்! சிருஷ்டி கர்த்தாவின் முதலாவது படைப்பு நீங்கள் தான். இந்த ஸ்வமானை (கௌரவத்தை) அறிவீர்கள் தானே? பாப்தாதா தன்னோடு கூடவே முழு உலகிலுமுள்ள ஆத்மாக்களுக்கும் முன்னோர்களாக (பூர்வீகம்) ஆக்கி விட்டார். உலகத்திற்கு பூர்வீகமானவர்கள் பூஜைக்குரியவர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் உலகத்திற்கு ஆதார மூர்த்தியாக, உத்தார மூர்த்தியாக (முன்னேற்றுபவர்), உதாரண மூர்த்தியாக ஆக்கி விட்டார். நஷா இருக்கிறதா? எப்போதாவது கொஞ்சம், கொஞ்சம் நஷா குறைந்து போய்விடுகிறது. நினைத்துப் பாருங்கள். முழு கல்பத்திலும் எல்லாவற்றிலும் விலை மதிக்க முடியாத, இப்பேர்ப்பட்ட சிம்மாசனம் வேறு யாருக்கும் கிடைப்பதில்லை. இந்த பரமாத்ம சிம்மாசனம், ஒளிக்கிரீடம் மற்றும் நினைவாகிய திலகம் கொடுத்திருக்கின்றார். நினைவு வருகிறதல்லவா நான் யார்? எனது ஸ்வமான் எது? போதை ஏறுகிறதல்லவா? முழு கல்பத்திலும், சத்யுகத்தில் மிக உயர்ந்த சிம்மாசனம் கிடைத்திருந்தாலும், பரமாத்மாவின் மனம் எனும் சிம்மாசனம் குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் கிடைத்திருக்கிறது.

பாப்தாதா சதா கடைசி நம்பர் குழந்தையையும் கூட பரிஸ்தா சோ தேவதா என்ற சொரூபத்திலேயே பார்க்கின்றார். பிராமணராக இருக்கும்போதே, பிராமணனிலிருந்து பரிஷ்தா, பரிஷ்தாவிலிருந்து தேவதாவாக ஆகத்தான் வேண்டும். உங்களுடைய ஸ்வமானை அறிவீர்களா? ஏனெனில் பாப்தாதாவுக்குத் தெரியும் ஸ்வமான் மறந்து போகும்போது தான் தேக பந்தனம், தேக அபிமானம் வருகிறது. அல்லல் படவும் செய்கிறார்கள். தேக பந்தனத்தில் தேக அபிமானத்தில் வந்து விடும்போது எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். எல்லோரும் அனுபவசாலிகள் தானே! ஸ்வமானின் கௌரவத்தில் இருப்பது மற்றும் இந்த பெருமைக்குரிய கௌரவ நிலையிலிருந்து விலகி குழப்பத்தில் வருவது என்ற இந்த இரண்டையும் பற்றி அறிவீர்கள். பாப்தாதா பார்க்கின்றார்: எல்லாக் குழந்தைகளும் மெஜாரிட்டி ஞானத்தில் மகா ஞானிகளாகி விட்டார்கள்

ஆனால் சக்தியில் முழுமை நிறைந்தவர்களாக, சத்திசாலிகளாக இல்லை. சதவிகிதத்தில் இருக்கின்றனர்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும், எல்லா பொக்கிஷங்களாலும் பாலக் ஸோ மாலிக் (வாரிசு மற்றும் எஜமானன்) ஆக்கி விட்டார். எல்லோருக்கும் எல்லா பொக்கிஷங்களையும் கொடுத்திருக்கின்றார். ஒருவருக்கு அதிகமாகவும் இன்னொருவருக்கு குறைவாகவும் கொடுக்கவில்லை. ஏனெனில் அளவிட முடியாத பொக்கிஷம், எல்லையற்ற பொக்கிஷம். ஆதலால் தான் ஒவ்வொரு குழந்தையையும் பாலக் ஸோ மாலிக் ஆக்கி விட்டார். பாலக் ஸோ மாலிக் ஆக்கி விட்டார் ஆதலால் நீங்கள் உங்களைச் சோதியுங்கள் எல்லையற்ற தந்தை, லௌகீக தந்தையல்ல. எல்லையற்ற தந்தை மற்றும் எல்லையற்ற பொக்கிஷம் ஆகவே உங்களிடமும் எல்லையற்றதாக இருக்க வேண்டும்! எல்லையற்ற பொக்கிஷம் சதா இருக்கிறதா? அல்லது அவ்வப்போது கொஞ்சம் களவு போய் விடுகிறதா? பாபா எதற்காக கவனம் கொடுக்கிறார்? கஷ்டப்படக்கூடாது என்பதற்காக ஸ்வமான் சீட்டில் செட்டாகி இருங்கள். அப்செட் ஆகி விடாதீர்கள். 63-பிறவிகள் நிலை தடு மாறிய நிலையிலிருந்து (அப்செட்) அனுபவம் செய்து விட்டீர்கள் அல்லவா? இன்னமும் கூட அனுபவம் செய்ய விரும்புகிறீர்களா? களைத்துப் போய் விடவில்லையா? இப்போது ஸ்வமானில் இருக்க வேண்டும் ஏன்? காலம் எவ்வளவோ கடந்து விட்டது 70வது ஆண்டு கொண்டாடுகிறீர்கள் அல்லவா? ஆதலால் தன்னைப் புரிந்து கொள்ளுங்கள். கௌரவத்திலேயே நிலைத்திருங்கள். இன்றைய நேரப்படி சதா என்ற வார்த்தையை வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வர வேண்டும். வார்த்தையை கோடிட்டுக் கொள்வதல்ல, நடைமுறை வாழ்க்கையில் என்பதை கோடிட்டுக் கொள்ளுங்கள். இருக்க வேண்டும், இருப்போம், செய்து கொண்டு தானிக்கிறோம், செய்து விடுவோம் என்பதல்ல. இப்படிச் சொன்னால் எல்லையற்ற குழந்தை மற்றும் எல்லையற்ற எஜமானன் என்ற கௌரவத்திற்கு அழகல்ல. இப்போதோ, ஒவ்வொருவரின் உள்ளத்திலிருந்தும், இந்த எல்லைக்கப்பாற்பட்ட (நாதம்) குரல் எழ வேண்டும். "எதை அடைய வேண்டுமோ, அதை அடைந்து விட்டேன்". (பானா தா வாஹ் பாலியா) அடைந்து கொண்டிருக்கின்றேன் என்று எல்லையற்ற கஜானாவுக்கு எல்லையற்ற

தந்தையின் குழந்தையாக இருக்கின்றவர் சொல்ல முடியாது. அடைந்து விட்டேன், எப்போது பாப்தாதாவை அடைந்தேனோ அதாவது அறிந்து விட்டேன். ஏற்றுக் கொண்டும் விட்டேன் எனும்போது, உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும் நாதம் அடைந்து விட்டேன் (பா லியா) என்பது தானே! ஏனென்றால் பாப்தாதா அறிவார், குழந்தைகள் ஸ்வமான் ஸ்திதியில் அவ்வப்போது இருக்கிற காரணத்தால் சமயத்தின் மகத்துவத்தை நினைவில் குறைவாக வைக்கிறார்கள். ஒன்று தன்னுடைய ஸ்வமான் மற்றொன்று சமயத்தின் மகத்துவம் நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல. பூர்வீகம். உலகிலுள்ள ஒவ்வொரு ஆத்மாவுக்கும் நீங்கள் தான் ஆதாரமாக இருக்கிறீர்கள். இப்போது நினைத்துப் பாருங்கள். நீங்களே நிலை தடுமாறினால், உலகத்திலுள்ள ஆத்மாக்களின் கதி என்னவாகும்? மகாரதியாக இருப்பவர்கள் தான் ஆதாரம் என்று நினைக்காதீர்கள். ஒருக்கால் புதுப்புதுக் குழந்தைகளாயினும் சரி தான். ஏனென்றால் இன்றைக்கு புதிய குழந்தைகள் நிறையப் பேர் வந்திருக்கலாம். புதிதாக வந்திருப்பவர்கள், மனப்பூர்வமாக மேரா பாபா என்று ஏற்றுக் கொண்டு விட்டீர்களா? யார் புதிதாக வந்திருக்கிறீர்களோ, அவர்கள் ஏற்றுக் கொண்டீர்களா? அறிந்திருக்கிறீர்கள் என்பதல்ல, மேரா பாபா என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் கை உயர்த்துங்கள். கையை உயரமாக உயர்த்துங்கள். புதிதாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துகிறார்கள். பழையவர்கள் பக்காவாக இருக்கிறீர்கள் அல்லவா? யார் மேரா பாபா என்று மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்களோ மற்றும் தந்தையும் கூட எனது குழந்தை என்று ஏற்றுக் கொண்டு விட்டாரோ, இவர்கள் எல்லோருமே பொறுப்பாளிகள் தான். ஏன்? எப்போதிருந்து நான் பிரம்மா குமார், நான் பிரம்மா குமாரி என்று கூறுகிறீர்களோ, அதாவது பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்றாலும் சரி, சிவகுமார், சிவகுமாரி என்றாலும் சரி அல்லது இருவருக்கும் குமார், குமாரி என்றாலும் சரி பொறுப்பில் கட்டுப்பட்டவர்களாகி விட்டீர்கள். பொறுப்பு எனும் கிரிடம் வந்து விட்டது. வந்து விட்டதல்லவா? பாண்டவர்கள் சொல்லுங்கள் கிரீடம் பாரமாக இல்லை தானே? இலேசாக இருக்கிறதல்லலா? ஒளிக்கிரீடம் தானே? ஒளி இலேசானதாகத்தானே இருக்கும். ஆகவே சமயத்தின் மகத்துவத்தையும் சுவனத்தில் வையுங்கள். சமயம் கேட்டு வருவதில்லை. அநேக குழந்தைகள் இப்போதும் கூட கேட்கிறார்கள், நினைக்கிறார்கள். கொஞ்சம் ஏறக்குறையவாவது தெரிந்தால் நல்லது

என்று. 20-ஆண்டுகள், 10-ஆண்டுகள் என்று கொஞ்சம் தெரிந்தால் நன்றாயிருக்கும் ஆனால் பாப்தாதா கூறுகின்றார்: கடைசி நேரம் எது? உலக விநாசம் எப்போது நடக்கும் என்பதையெல்லாம் விட்டுவிடுங்கள். உங்களுக்கு உங்கள் சரீரம் எப்போது விநாசம் ஆகும் என்று தெரியுமா? நான் இந்த நாளில் நான் உயிரை விடுவேன் என்று சொல்லியிருக்கிறார்களா? தெரியுமா? இந்தக் காலத்தில் பிராமணர்கள் போவதற்கான 'போக்' அதிகமாக செய்கிறார்கள். (இருக்கும் போதே இறப்பின் படையல் சடங்கு) (ஜீதே ஜி மர்னா போக்) ஏனென்றால் நம்ப முடியாது. ஆதலால் சமயத்தின் மகத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள். இது மிகச் சிறிய யுகம் ஆயுளில் சிறியது ஆனால் பெரிதிலும் மிகப் பெரிய பிராப்திக்கான யுகம். ஏனென்றால் பெரியவரில் மிகப் பெரிய தந்தை, இந்த சிறிய யுகத்தில் தான் வருகின்றார். பெரிய யுகத்தில் வருவதில்லை. இந்த சிறிய யுகத்தில் தான், முழு கல்பத்திற்கும் பிராப்தியடைவதற்கான விதை போட வேண்டிய சமயம். வேண்டுமானால், விஷ்வ இராஜ்யத்திற்கான பிராப்தியடையுங்கள். வேண்டுமானால் பூஜைக்குரியவராகுங்கள், இப்படி முழு கல்பத்திற்கும் விதை போட வேண்டிய சமயம் இது தான். மேலும் இரட்டை பலன் அடைவதற்கான சமயமும் இது தான். பக்தியின் பலனும் இப்போது தான் கிடைக்கிறது. மேலும் பிரத்யக்ஷ பலனும் கூட இப்போது தான் கிடைக்கிறது செய்தவுடனேயே பிரத்யக்ஷபலன் கிடைத்து விடுகிறது. மேலும் எதிர்காலத்திற்கும் சேமிப்பாகிறது. முழு கல்பத்தையும் பாருங்கள் இப்படிப்பட்ட வேறு யுகம் இருக்கிறதா? ஏனெனில் இந்த சமயத்தில் தான் தந்தை ஒவ்வொரு குழந்தையின் உள்ளங்கையில் பெரிதிலும் பெரிதான அன்பளிப்பைத் தந்திருக்கின்றார். உங்களுடைய அன்பளிப்பு நினைவிருக்கிறதா? சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியம். புது உலக சொர்க்கத்தின் அன்பளிப்பு ஒவ்வொரு குழந்தையின் உள்ளங்கையிலும் கொடுத்திருக்கிறேன். இவ்வளவு பெரிய அன்பளிப்பை யாரும் கொடுப்பதில்லை. மேலும் ஒருபோதும் யாராலும் கொடுக்க முடியாது. இப்போது கிடைக்கிறது. இப்போது நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகின்றீர்கள். வேறு எந்த யுகத்திலும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற பாக்கியம் கிடைப்பதில்லை. ஆதலால். உங்களுடைய ஸ்வமானத்தில் ஒருமித்திருங்கள் (ஏகாக்கிரஹம்) மேலும் நேரத்தின் மகத்துவத்தையும் அறியுங்கள். சுயம் மற்றும் சமயம் சுயத்தின் ஸ்வமான் மற்றும் சமயத்தின் மகத்துவம் அலக்ஷியமாக

இருக்காதீர்கள். 70-ஆண்டுகள் முடிந்து விட்டன. ஒருவேளை அலக்ஷியமாக இருந்துவிட்டால், நீங்கள் அடைய வேண்டிய பிராப்தியைக் குறைத்து விடுவீர்கள். ஏனென்றால், எவ்வளவு முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்களோ, அவ்வளவு அலக்ஷியம். நன்றாயிருக்கிறோம். நன்றாக நடந்து விடும். அடைந்து விடுவோம் என்று நினைக்கிறார்கள். பின் தங்கி விடக் கூடாது என்பது ஞாபகம் இருக்கட்டும். ஆகி விடும் என்ற அலக்ஷியம். ராயல் சோம்பல். அலக்ஷியம் மற்றும் சோம்பல். எப்போது என்ற வார்த்தை சோம்பலைக் குறிக்கும். இப்போது என்ற வார்த்தை உடனே செய்யும் தானம் மகா புண்ணியம்.

ஆகவே, இப்போது முதலாவது சந்திப்பு இல்லையா? பாப்தாதா கவனத்தை ஈர்க்கிறார். இந்த சீசனில் ஸ்வமானிலிருந்து கீழிறங்கவும் கூடாது. சமயத்தின் மகத்துவத்தை மறந்து விடவும் கூடாது. கவனம், கெட்டிக்காரத்தனம், எச்சரிக்கை அன்பிற்குரியவர்கள் அல்லவா? யாரிடம் அன்பு உள்ளதோ அவரிடம் கொஞ்சம் பலவீனம், கொஞ்சம் குறை இருந்தாலும் பார்க்க முடிவதில்லை. கூறினேன் அல்லவா? பாப்தாதாவின் கடைசி குழந்தையும் கூட அதிகப் பிரியமானவர்கள் தான். குழந்தையல்லவா? இப்போது இந்த சீசன் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சீசன் இந்தியர்களுக்கானதாக இருந்தாலும், டபுள் விதேஷிகளும் (வெளிநாட்டவர்) கூட குறைந்தவர்கள் அல்ல. பாப்தாதா பார்க்கின்றார். டபுள் விதேஷி குழந்தைகள் இல்லாத சந்திப்பு ஒன்று கூட இருக்காது. இது அவர்களுடைய விசேஷம். இப்போது டபுள் விதேஷிகள் கை உயர்த்துங்கள். எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ஸ்பெஷல் சீசன் முடிந்து விட்டது இருந்தாலும் எத்தனை பேர் இருக்கிறார்கள்? வாழ்த்துக்கள். வந்தால் வரட்டும், மிகுந்த வாழ்த்துக்கள்.

கேட்டீர்களா? என்ன செய்ய வேண்டும்? இந்த சீசனில் என்னென்ன செய்ய வேண்டும்? அந்த வீட்டுப்பாடம் கொடுத்து விட்டேன். தன்னை (சுயத்தை) உணர்ந்து பாருங்கள். உங்களைப் பற்றி உணருங்கள் மற்றவர்களை அல்ல மேலும் ரியல் கோல்டு ஆகுங்கள். ஏனெனில் பாப்தாதாவுக்குத் தெரியும். யார் மேரா பாபா என்று சொன்னார்களோ, அவர்கள் எல்லாம் கூடவே வர வேண்டும். கூட்டத்தோடு கூட்டமாக

ஊர்வலத்தின் பின்னால் வர வேண்டாம். பாப்தாதாவுடன் ஸ்ரீமத் என்ற கையைப் பிடித்துக் கொண்டு வர வேண்டும். பிறகு பிரம்மாபாபாவுடன் முதலில் இராஜ்யத்தில் வர வேண்டும். புதிய வீடு என்றால் ஆனந்தமாக இருக்குமல்லவா? ஒரு மாதம் ஆகி விட்டால் கூட ஒரு மாதம் பழையது என்கிறார்கள். புது வீடு, புது உலகம், புது சரீரம், புது பழக்க வழக்கம் மற்றும் பிரம்மாவுடன் இராஜ்யத்தில் வர வேண்டும். எல்லோரும் கூறுகிறார்கள் அல்லவா, பிரம்மாபாபாவிடம் எங்களுக்கு அதிக அன்பு இருக்கிறது என்று! அப்படியானால் அன்பின் அடையாளம் எது? கூடவே இருப்பது கூடவே செல்வது கூடவே வருவது. கூடவே செல்வது, கூடவே வருவது விருப்பமானதாக இருக்கிறதா? விருப்பம் தானே? அப்படியானால் எந்த ஒரு பொருள் பிடித்தமானதாக இருக்கிறதோ அதை விட்டு விட முடியுமா? ஆகவே பாபாவிடம் அன்புள்ளது என்பதன் அடையாளம் கூடவே செல்வது. பின் தங்கி விடுவதல்ல. ஒருக்கால் மீதமிருந்து விட்டால், தர்மராஜினுடைய தண்டணைக்காகக் காத்திருக்க வேண்டியதிருக்கும். கை மேல் கை இருக்காது. பின் தங்கி வருவார்கள். ஆனந்தம் எதில் இருக்கிறது? கூடவே இருப்பதில் தானே? அப்படியானால் உறுதிமொழி பக்காவாக இருக்கும் அல்லவா? பக்காவான உறுதிமொழி கூடவே செல்வதற்காகவா? பின் தங்கி வருவதற்கா? பாருங்கள். கை நன்றாகவே உயர்த்துகிறார்கள். கையைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஸ்ரீமத் என்ற கை உயர வேண்டும். சிவபாபாவுக்கோ கை இருக்காது. பிரம்மாபாபா, ஆத்மாவுக்கும் கூட கை இருக்காது. உங்களுக்கும் இந்த ஸ்தூலமான கை இருக்காது. ஆகவே ஸ்ரீமத் என்ற கையைப் பிடித்துக் கொண்டு கூடவே செல்ல வேண்டும். வருவீர்கள் தானே! தலையை அசையுங்கள். நன்றாக கை அசைக்கிறார்கள். பாப்தாதா விரும்புவது என்னவென்றால், ஒரு குழந்தை கூட பின் தங்கி விடக்கூடாது. கூடவே வர வேண்டும் என்பது தான். தயாராக இருக்க வேண்டியதிருக்கும். நல்லது.

இப்போது பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் ரிஜிஸ்டரைப் பார்க்கின்றார். உறுதிமொழி கொடுத்தார்கள், கடைப்பிடித்தார்கள். பலன் அடைந்தார்கள். உறுதிமொழி கொடுத்தால் மட்டும் போதாது. பலனும் அடைய வேண்டும். நல்லது இப்போது எல்லோரும் திட சங்கல்பம் செய்யுங்கள். திட சங்கல்பத்தின்

ஸ்திதியில் நிலைத்து அமருங்கள். செய்யத்தான் வேண்டும். கூடவே செல்லத்தான் வேண்டும். இப்போது திட சங்கல்பம் உங்களுக்குள்ளேயே செய்யுங்கள். இந்த ஸ்திதியில் அமருங்கள். செய்வோம், செய்வோம் என்றும் சொல்லாதீர்கள். செய்யத்தான் வேண்டும். நல்லது. இனி இப்போது என்ன செய்ய வேண்டும்.

**சேவைக்கான வாய்ப்பு (டர்ன்) -இராஜஸ்தான், இந்தூர், குஜராத் சகயோகி:** நல்லது சேவைக்காக வந்திருப்பவர்களெல்லாம் எழுந்திருங்கள். நல்லது. பாதி வகுப்பு சகயோகிகள் தான். சகயோகம் கொடுப்பது (உதவி செய்வது) கொடுப்பதல்ல மிக அதிக ஆசிகள் பெறுவதாகும். ஏனெனில் யாருக்கு சேவை செய்கிறீர்களோ, அவர்கள் குஷியடைகிறார்கள். யார் குஷியடைகிறார்களோ அவர்களுடைய ஆசிகள் இயல்பாகவே வெளிவரும். ஆகவே எவ்வளவு ஆசிகள் சேமித்திருக்கின்றீர்கள்! இராஜஸ்தான் அல்லவா! நிமித்தமாக இராஜஸ்தான் இருக்கிறதென்றால், இந்த பொன்னான வாய்ப்பு புண்ணிய கணக்கு சேமிப்பதற்கு கிடைத்திருக்கிறது. நல்லது. இராஜஸ்தானுக்கு சுலபமாகவே நஷா இருக்கிறது. ஏனெனில் பாப்தாதா இராஜஸ்தானில் வருகிறார். பாப்தாதாவுக்கு இராஜஸ்தான் விருப்பமானதாக இருந்தலல்லவா? கூட உதவி செய்யும் குஜராத் உடன் இருக்கிறார்கள். ஏதாவது அவசியமானால் முதலில் குஜராத் உதவியாளராக இருக்கிறது. ஆகவே குஜராத் என்றால் எவர் ரெடி குரூப். நல்லது ஒருபோதும் மாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள். வந்து சேர்ந்து விடுவார்கள். எங்கே இருக்கிறார் சரளா(குஜராத மண்டல பொறுப்பாளர் சரளா தீதி)? நல்லது குஜராத்தை உதவியாளராக்கி விட்டீர்கள். இராஜஸ்தானுக்கு அருகாமையில் குஜராத் இருக்கிறது. ஆகையால் அதிக புண்ணியம் சேமிப்பாகிறது. இப்போது வாய்ப்பு இராஜஸ்தான் எடுத்தது. ஒரு சீசன் முடிந்து அடுத்தது ஆரம்பமாகி விட்டது. 6-மாதம் ஆகவிட்டது என்றால் எத்தனை வாரிசுகள் தயார் செய்திருக்கிறார்கள்? ஏனெனில் பாப்தாதா கூறியிருக்கின்றார் வாரிசு தயார் செய்ய வேண்டும் என்று. உங்களுடையது முதாவது வாய்ப்பு வாரிசு வந்திருந்தால் கை உயர்த்தட்டும் இரண்டு பேர் உள்ளனர். வாரிசு ஆக முடியும் என்று நம்பிக்கை உள்ளவர்கள் இருந்தால் அவர்களும் கை உயர்த்தலாம். எவ்வளவு ஒன்றா, ஐந்தா? எவ்வளவு (ஜெய்பூரிலிருந்து 3-4 வந்திருக்கிறார்கள், புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஜோத்பூரிலிருந்து 2-பேர் வந்திருக்கிறார்கள்.) 5-ஆகி விட்டதல்லவா? இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள். 5-பேர் யாரென்று பார்க்கலாம். தயார் செய்திருக்கிறார்கள். வாழ்த்துக்கள். இனி வாரிசுகளை எப்போது அழைப்பீர்கள்? நல்லது. ஜோன் சேவையில் வந்திருக்கிறீர்கள். இது முதல் வாய்ப்பு, சேவையில் வந்திருப்பவர்கள் வாரிசுகளின் லிஸ்ட் கொண்டு வர வேண்டும். சரி தானே! விருப்பம் தானே! டபுள் ஃபாரின் கூட கொண்டு வர வேண்டும். டபுள் ஃபாரினர்ஸ் எந்த தேசத்திலிருந்து எத்தனை வாரிசுகள் தயார் செய்திருக்கிறார்கள் என்று பார்க்கலாம். ஏனெனில் இப்போது 108-மணி மாலை தயார் செய்ய வேண்டுமல்லவா? பாப்தாதா அறிவார். அபுவிலிருப்பவர்களும் கூட சேவை செய்கிறார்கள். அபுவுக்கு அக்கம் பக்கம் உள்ள அபுவாசிகள் நல்ல சேவை செய்கிறார்கள். அபுவாசிகள் எழுந்திருங்கள். ஞானசரோவர், பாண்டவ பவன், எல்லோரும் எழுந்திருங்கள். நல்லது. அபுநிவாசி கீழே, மேலே உள்ள எல்லோரும் அபு நிவாசிகள் கூறுகிறார்கள்: பாப்தாதா எங்களுக்கு யாத்பியார் சொல்வதில்லை என்று. ஆதலால் இன்று விசேஷமாக அபு நிவாசிகளுக்கு வேண்டுமானால் 4-புஜங்கள் தாதியிடம் கூறுகிறார்கள். புஜா தாரிகள் நிறைய இருக்கிறார்கள். இதில் 4-முக்கிய புஜங்கள். இவர்கள் எல்லோருக்கும் சேவையில் புண்ணிய ஆரம்பத்திற்கு நல்லாசிகள். வாழ்த்துக்கள், அளிக்கின்றார். ஏனெனில் எவ்வளவு தான் சேவாதாரிகள் வந்தாலும் அபுவாசிகள் இல்லாமல் வேலை ஆகாதே! எனவே உங்களது புண்ணிய கணக்கின் கஜானா திறந்துள்ளது. எவ்வளவு நிரப்பப் போகிறீர்கள் என்பதைப் பார்ப்போம். அரசாங்கம் அந்த கருவூலத்தை மூடி விடுகிறது என்றால் பாப்தாதா புண்ணிய கணக்கைத் திறக்கிறார். அபுவாசிகளுக்கு குஷி தானே! வீட்டிலிருந்தபடியே புண்ணிய கணக்கு சேர்ந்து கொண்டிருக்கிறது. அன்பு மற்றும் சுயநலமில்லாமல் சேவை செய்யும் போது புண்ணியத்தின் கருவூலம் தானாகவே நிறைகிறது. கை மூலம் போடுவதின் அவசியம் இல்லை. வெறும் அன்புடன் சேவை செய்யும் விஷயம். ஆக உள்ளம் மற்றும் சமையல் இரண்டிலும் இருக்கிறீர்கள் தான். சமையலிலும் இருக்கிறீர்கள், உள்ளத்திலும் இருக்கிறீர்கள். அபுவாசிகள் எவ்வளவு வாரிசுகளை தயார் செய்துள்ளீர்கள், கணக்கு கேட்கத்தானே செய்வோம்? மேலே பாண்டவ பவனில் பொறுப்பு யார்? நிமித்தம் யார்? மிருத்தியுஞ்ஜய் ஹா, நீங்கள் சொல்லுங்கள், அபு பகுதியிலிருந்து எவ்வளவு வாரிசுகள் ஆகியுள்ளனர்? கணக்கெடுக்க வேண்டும். சரி

பரவாயில்லை, அடுத்த சந்திப்பில் கூறுங்கள். கீழே (சாந்திவனம்) பொறுப்பு யார்? (பூபால் சகோதரர்) எவ்வளவு வாரிசு உருவாகியுள்ளனர். 6-மாதம் நிச்சயமாக ஆகி விட்டது. இதில் அனைவரும் ஆங்காங்கு சேவை செய்துள்ளீர்கள், இன்னும் கணக்கெடுக்கவில்லையா? சரி, பரவாயில்லை, மிகவும் பிஸியாக இருந்திருப்பீர்கள், அடுத்த சந்திப்பில் கேட்போம். கணக்கு எடுக்கவில்லையெனில் எடுத்து வையுங்கள். ஏனெனில் அபு தலைமையகம் இல்லையா? எனவே தலைமையகத்தின் செய்தியும் முதன்மையாக இருக்க வேண்டும். நல்லது.

இந்தூர் விடுதியின் குமாரிகள்: அனைத்து குமாரிகளும் 100-பிராமணர்களை விட மேலானவர்கள் என்று கூறப்படுகின்றது. சாதாரண குமாரிகள் இல்லை, பிரம்மா குமாரிகள். ஆக ஒவ்வொரு பிரம்மா குமாரியும் 100-பிராமணர்களை விட மேலானவர்கள் என்று பாடப்படும் போது குமாரிகளாகிய நீங்கள் எவ்வளவு மாணவர்களைத் தயார் செய்துள்ளீர்கள்? வாரிசுகளைப் பற்றி கேட்கவில்லை, அதைப் பற்றி பின்னால் கேட்போம். ஈஸ்வரிய மாணவர்களைத் தயார் செய்கிறீர்களா? அல்லது உங்களை நீங்களே தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா? சொல்லுங்கள். உங்கள் டீச்சர் எங்கே? (விடுதியின் பொறுப்பு சகோதரி கருணா மற்றும் சகுந்தலா சகோதரி). முன்னால் வாருங்கள். சரி எத்தனை மாணவர்கள் தயாராகியுள்ளனர். (அனேக குமாரிகள் பிரம்மா குமாரிகள் ஆகியுள்ளனர், அவர்களது பெற்றோரும் ஞானத்தில் வந்து விடுகின்றனர்). எவ்வளவு மாணவர்கள் ஆகியுள்ளனர்? சுமாராகக் கூறுங்கள். நல்லது. குமாரிகள் தயாராகி சென்டர்களைக் கவனித்து வருவார்கள் இல்லையா? அல்லது வேலைக்குப் போய் விடுவார்களா? சென்டர்களைக் கவனிக்கத் தயாராகிறவர்கள் கை உயர்த்துங்கள் பார்க்கலாம். அதிகம் பேர் உள்ளனர். இவர்களது பயிற்சி எப்போது முடியும்? (தற்போது படித்து வருகின்றனர்) எது வரை படிப்பர்? பட்டப் படிப்பு முடித்தவர்கள் கை தூக்குங்கள் பார்ப்போம் 3-4 பேர், இந்த 3-4 பேர் தான் சென்டர்களைக் கவனிப்பாரா? வேலை செய்வாரா? அல்லது இரண்டையும் செய்வாரா? (ஓம் பிரகாஷ் சகோதரர் இந்தூர் மண்டல பொறுப்பாளர் கூறினார். இதுவரை கிட்டத்தட்ட 450-குமாரிகள் படித்து விட்டு சென்டர்களை கவனித்து வருகின்றனர்). அப்படியா? மிக நன்று. புதிதாய் உருவாகின்றனர். டீச்சர்களுக்கு வாழ்த்துக்கள். வந்துள்ள அனைவரும்

உங்கள் ஆன்மீக முயற்சியில் திருப்தியாய் இருக்கிறீர்களா? படிப்பில் திருப்தியாய் இருக்கிறீர்களா? அல்லது இன்னும் புத்தம் புதிதாய் இருக்கிறீர்களா? குஷியாய் இருக்கிறீர்களா? திருப்தியாய் இருக்கிறீர்களா? நல்லது இன்னும் புதிதானவர்களை தயார் செய்யுங்கள். ஏனெனில், நேரம் மிகக் குறைவாய் உள்ளது. சேவை நிறைய உள்ளது. இன்னும் நிறைய பாக்கி உள்ளது. உங்களது ஒரு பாடல் கூட இருக்கிறதல்லவா? காலத்தின் அழைப்பு நிகழ்ச்சிகள் கூட நடத்தி வருகிறீர்கள் அல்லவா? ஆக சமயம் நிறைய டீச்சர்களையும் அழைக்கிறது. எனவே சீக்கிரம் சீக்கிரமாய் தயார் செய்யுங்கள். நல்லது. குஷியோடு இருங்கள், குஷியில் பறந்து கொண்டேயிருங்கள்.

30-நாடுகளிலிருந்து சுமார் 300-இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்: இரட்டை வெளிநாட்டினரின் இரட்டை புருஷார்த்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்று சேவை, இரண்டாவது சுய சேவை பட்டம் -இரட்டை வெளிநாட்னர் மிக நன்றாக உள்ளது. இரட்டை சேவை அனைவருக்கும் நடந்து வருகிறது. தனி நபர்! இரட்டை சேவை, சில சமயம் ஒரு சேவை, சில சமயம் இரண்டாவது சேவை அப்படியா? அல்லது இரண்டும் சேர்ந்தே நடைபெறுகிறதா? சுயம் தனது சேவை மற்றும் கூட இருக்கும் ஆத்மாக்களுக்கான சேவை இரண்டும் சேர்ந்தே நடக்கிறது என்பவர்கள் கை உயர்த்துங்கள். பெரும்பாலோர் இதில் வெற்றியடைந்துள்ளனர். சரியான வேகத்தில் நடைபெறுகிறது மேலும் முன்னேறுங்கள் ஏனெனில் காலத்தின் பிரகாரம், ஒரே சமயத்தில் இரட்டை சேவை வேண்டும். உலகம் மற்றும் சுய சேவை. முழு உலகிற்கும் இப்போது சுகம்-சாந்தியின் கிரணங்களைத் தர வேண்டும். இன்னும் எவ்வளவு ஆத்மாக்கள் பாக்கி உள்ளனர் எண்ணிப் பாருங்கள். உள் நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, அந்த சேவையை செய்யத்தானே வேண்டும் தினமும் சோதனை செய்க. இரட்டை சேவை நடந்ததா? எத்தனை சதவீதம் நடந்தது? சக்திவாய்ந்ததாய் நடந்ததா? அல்லது சதவீதத்தில் தானா? அனைவருக்கும் தான் இதனைக் கூறகிறோம். வெறும் வெளிநாட்டினருக்கு மட்டுமல்ல, பாரதவாசிகளும் செய்ய வேண்டும். சற்று வேகத்தை அதிகரியுங்கள். வேகமாக ஆத்மாக்கள் வந்து சேர வேண்டும். குறைந்தபட்சம் நமது பாபா (தந்தை) வந்து விட்டார் என்றாவது கூறட்டும். பாபா என்கிற வார்த்தையாவது இதயத்திலிருந்து

கூறட்டும். வாயினால் அல்ல, இதயத்தால், ஆக இப்போது சார்ட் வைக்க வேண்டும், ஏனெனில் இரட்டை வெளி நாட்டினர் இரட்டை வேகத்தோடு செல்லக்கூடியவர்கள் அல்லவா? பாப்தாதா குஷி அடைகிறார்கள். ஏன்? இரட்டை வெளிநாட்டினரின் ஒரு விசேஷம் மிகவும் பிடித்திருக்கிறது. அதை அறிவீர்கள் தானே? கீழே விழுந்துவிட்டாலும் (ஞான வாழ்வில்) சரி உயரே ஏறினாலும் சரி, உண்மை பேசுகின்றனர். உண்மையான உள்ளம் உடையவரோடு தான் பாப்தாதா திருப்தி அடைகிறார். பொதுவாக ஓட்டப்பந்தயம் (ரேஸ்) ஒடுகிறார்கள் அல்லவா? போட்டி, பொறாமை (ரேஸ்) அல்ல, அம்மாதிரி வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். அதில் நாம் முதலில் வர வேண்டுமென முயற்சி செய்கின்றனர் இல்லையா? நீங்கள் முன்னே செல்லுங்கள், உடன் இருப்போரையும் முன்னால் செல்லுமாறு லிப்ட் கொடுங்கள் சரி தானே! அந்த தைரியம் உள்ளதல்லவா? மதுபன் வாயுமண்டலத்தைப் போன்று ஒவ்வொரு சென்டரின் வாயுமண்டலமும் இருத்தல் வேண்டும். மதுபன் வாசிகள் சம்பூரணம் ஆகி விடவில்லை ஆனால் இங்கு வருவோர் அனைவரும் வாயுமண்டலத்தால் குஷி அடைந்து செல்கின்றனர். இம்மாதிரி சென்டர்களிலும் சூழ்நிலை அமைய வேண்டும். ஒவ்வொரு வீடும் சொர்க்கமாகும் எனப் பாடப்பட்டுள்ளதல்லவா? இந்தியர்களுக்கும் துணை சென்டர்கள் உள்ளன. ஆக துணை சென்டரும் சொர்க்கத்தைப் போன்றிருக்க வேண்டும். அப்போது தான் வீட்டுக்கு வீடு சொர்க்கமாகி விட்டது எனக் கூறுவோம். நல்லது. வெளிநாட்டினர் இந்த விசேஷம்! ஏதேனும் விஷயத்தில் திட சங்கல்பம் (மன உறுதி) கொண்டார்கள் என்றால் அதை முடித்தே தீருவார்கள் இப்போது இந்த சம்ஸ்காரத்தை செயலில் கொண்டு வாருங்கள். முடித்த பிறகு தான் விட வேண்டும் சரியா? செய்ய வேண்டும் தானே? அடுத்த சீசனில் இதன் முடிவை கேட்போம். ஒவ்வொரு சென்டரும் சொர்க்கத்தின் வரைபடமாய் இருக்க வேண்டும். நல்லது வாழ்த்துக்கள்.

ஆன்மீக ஆராய்ச்சி: உரையாடல் நடத்தத் திட்டமிடும் குழு: (ஒவ்வொரு பிரிவினரிடமும் ஏதேனும் விசேஷமாய் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர், அந்த முக்கிய நபர்களின் ஒரு கலந்துரையாடல் செய்ய நினைக்கிறோம். அதற்கான மீட்டிங் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, என பிகு இரமேஷ்ஜி கூறுகிறார்) ஒஹோ ஏதேனும் நிகழ்சியா? நல்லது. ஒவ்வொரு துறையும் தனது சேவை செய்து

அதிலிருந்து தேர்ந்தெடுப்பர், பிறகு அவர்களது கலந்துரையாடல் நடத்துவீர்கள். ஒவ்வொரு துறையும் என்னென்ன கண்டு பிடித்துள்ளது என பாப்தாதாவும் பார்ப்பார். எந்தெந்த ஆர்வமுள்ள ஆத்மாக்களை வெளிக் கொணர்ந்தனர். பிறகு அனைவரும் சேர்ந்து கலந்துரையாடல் செய்வீர்கள். மிக நன்று (அனைத்து துறைகள் மற்றும் அனைத்து மண்டலங்களின் உதவியுடன் இங்கே கலந்துரையாடல் நடைபெறும்) பிறகு ஒவ்வொரு துறையும், அவரவர் மண்டலத்தில் செய்வர், பிறகு அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இங்கே ஒன்று சேர்த்து, கலந்துரையாடல் செய்யுங்கள் சரி தானே! எல்லோரும் கூட்டாக செய்திகளையும் தரட்டும், ஒத்துழைப்பையும், நல்கட்டும். ஒவ்வொரு துறையினரும் செய்யுங்கள். எதில் எவ்வளவு பேர் தேருகின்றனர் எனப் பார்ப்போம். மிகவும் நல்லது.

தில்லியின் நிகழ்ச்சி மிக நன்றாக இருந்தது: டில்லியிலிருந்து வந்திருப்போர் எழுந்திருங்கள். இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களா? நல்லது வரட்டும். தில்லியின் மேளா (பெருவிழா) மிக நன்றாக அமைந்தது. செய்தி நன்கு பரவிற்று. டி.வி. மூலமாகவும் செய்தி கிடைத்தது. 10-தினங்கள் நடந்ததால் மக்களுக்கு செய்தி கிட்டியது. ஒரு நாளில் எவ்வளவு பேர் வந்தனரோ, அவர்கள் அனைவரும் செய்தி கேட்டனர் ஆனால் 10-நாளில் விதம் விதமாய் வந்திருப்பவர், தம் தம் செய்திகைள எடுத்துச் சென்றிருப்பர். நன்றாக இருந்தது. உங்கள் அனைவருக்கும் நன்றாயிருந்ததா? மேளா செய்வது நன்றாயிருந்ததா? (மிக நன்றாயிருந்தது, பாபாவுக்கு தில்லிக்காரர்களின் விசேஷ நன்றி) பிற மண்டலத்தினரும் தாமும் அவ்வாறு மேளா கொண்டாட வேண்டும் என்கிற ஆர்வம் எழுந்ததை பாப்தாதா பார்த்தார். ஆக தில்லி அதற்குக் காரண நிமித்தமாயிற்று பிறருக்கும் பிரேரணை வழங்குவதற்கு. பல காலத்திற்குப் பிறகு இந்த கண்காட்சி பெருவிழா ஆரம்பித்துள்ளீர்கள். நல்லது முன்பெல்லாம் இது போன்று மேளாக்கள் தானே நடந்தது. நாலாபுறமும் இவ்விழாக்கள் நடைபெற்றன. மெகா நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளன. இந்த பெரும் கண்காட்சி விழாவும் விதவிதமாய் நன்றாக உள்ளது. அனைத்து டில்லிக்காரர்களுக்கும் வாழ்த்துக்கள். காரர்கள் மட்டுமே செய்தனர், அதற்கும் வாழ்த்துக்கள். (அகில டில்லி உலக விழாவாய் இருந்தது, அபு விழாவாகவும் இருந்தது) வெளி நாட்டினருக்கும் அபு வாசிகளுக்கும் கூட வாழ்த்துக்கள். மிக நன்றாய்

இருந்தது. பாப்தாதாவிற்கு செய்தி கிடைத்தது. ஒருவர் மற்றவர்களைப் பார்த்து முன்னேறிச் செல்லுங்கள். இத்தனைக் கோடி ஆத்மாக்களுக்கு குறைந்த பட்சம் இந்த செய்தியாவது கிடைக்கட்டும் இதைக் காண பாப்தாதா விரும்புகின்றார். இன்னும் நிறைய பேர் பாக்கி உள்ளனர். எப்படி ஆப்பிரிக்க நாட்டினர் செயதனரோ அப்படி. ஐரோப்பாவிலும் கூட எந்த நாடும் பாக்கியில்லை என்று பாப்தாதா கேள்வியுற்றார். அம்மாதிரி அனைத்து பக்கங்களிலும் இருக்க வேண்டும். செய்தி போய் சேர வேண்டுமே? இல்லையெனில் உங்கள் மீது புகார் நிறைய எழும். எங்கள் பாபா (தந்தை) வந்தார், ஆனால் நீங்கள் எங்களுக்குக் கூறவில்லையே என்பர். அம்மாதிரி புகார் வந்து விடக்கூடாது.

ஹைதராபாத், செகந்தராபாத் முதியோர் இல்லத்தின் குழு வந்துள்ளது: (பரிஸ்தாபவன், ஓம் நிவாஸ் முதியோருக்கான இல்லம் கட்டியுள்ளது. அங்கு அனேக முக்கியஸ்தர்கள் வருகின்றனர், அங்குள்ளோர் சேர்ந்து நன்கு புருஷார்த்தம் செய்கின்றனர்) வித விதமான சேவைகளின் மூலம் முன்னேறிச் செல்கின்றனர். முன்னேறுங்கள், நல்லது.

அனைத்து தரப்பு இரட்டை சேவாதாரிகளுக்கு நாலா புறமுள்ள சதா ஒருமித்த சுவமான் இருக்கையில் ஸ்திரமாய் இருக்கும் பாப்தாதாவின் நெற்றி மணிகள், நாலாபுறமுள்ள சமயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு தீவிர புருஷார்த்தத்தின் பலனைத் தரக்கூடிய தகுதியான குழந்தைகளுக்கு நாலாபுறமுள்ள உற்சாகம் ஆர்வத்தின் இறக்கை கொண்டு சதா பறந்து கொண்டிருக்கும் இரட்டை ஒளி படைத்த பரிஸ்தா குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: அனைவரும் ஒன்றுபட்டு செல்கிறீர்கள், இது பாப்தாதாவிற்கு குஷியைத் தருகிறது. ஒவ்வொருவரும் அவரவர் விசேஷத்தின் விரலைத் தந்து ஒத்துழைக்கின்றனர். (தாதிஜியுடன்) அனைவருக்கும் ஆதி ரத்தினத்தைப் பார்க்கும் போது குஷி ஏற்படுகிறதல்லவா? ஆதியிலிருந்தே சேவையில் தன் எலும்புருக ஈடுபட்டார். மிக நல்லது. என்ன நேர்ந்தாலும் சரி, ஒரு விஷயத்தைப் பாருங்கள், படுக்கையில் இருந்தாலும் சரி அல்லது வேறு எங்கு இருந்தாலும் சரி, ஆனால் பாபாவை மறந்ததில்லை. பாபா உள்ளத்தில்

பதிவாகியுள்ளார், அப்படித்தானே? பாருங்கள், எவ்வளவு நன்றாக புன்சிரிக்கிறார். மற்றபடி ஆயுள் நீண்டது, தர்மராஜபுரியில் 'டாடா' காண்பித்து செல்ல வேண்டும். தண்டனை பெறக்கூடாது. தர்மராஜரே கூட தலை வணங்க வேண்டி வரும், வரவேற்க வேண்டி வரும் இல்லையா? 'டாடா' காண்பிக்க வேண்டும். எனவே இங்கு இன்னும் சிவபாபாவின் நினைவில் கணக்கை முடித்துக் கொண்டிருக்கிறார். நோயிருந்தாலும் கஷ்டமோ, துக்கமோ இல்லை.

பரதாதியுடன்-நிர்மல் சாந்தாஜி கல்கத்தா: இவர் மிகவும் புன்சிரித்தப்படி உள்ளார். அனைவருக்கும் திருஷ்டி கொடுங்கள். நல்லது. தாதி பாபாவை அன்புடன் ஆலிங்கனம் செய்தார்.

முன்னி சகோதரி: நாங்கள் ஒரு முறை தவற விட்டுவிட்டோம் என்று கூறினார். தவற விடவில்லை பாப்தாதா தான் பார்த்தாரே!

மோகினி சகோதரி: சேவா நன்றாயிருந்ததில்லையா? மகாரதிக்கெல்லாம் மகாரதி அவரது சேவையில் மிக ஆனந்தம், மிகப் பிரகாசமாய் இருந்தது. இல்லையா? மருத்துவமனையாகட்டும் அல்லது வேறு எதுவும் ஆகட்டும், ஆனால் பிரகாசமாயிற்றல்லவா? (நன்கு விருந்தோம்பல் தாதிக்கு செய்தார்) விருந்தோம்பல் செய்யவில்லை, தனது புண்ணியத்தை சேர்த்துக் கொண்டார். யார் யாரெல்லாம் (தாதிக்கு மும்பையில்) சேவை செய்தனரோ அவர்கள் தனது புண்ணிய கணக்கை சேர்த்துக் கொண்டனர். (மோகினியின் வழிகாட்டலில் அனைத்தும் நன்றாக நடந்தது). அனைவருக்கும் சேவை செய்தார். திட எண்ணம் தான் வேலை செய்தது. டாக்டர் அசோக் மேத்தாவிற்கும் கூட மிக அதிக நினைவுகள். நிமித்தமான டாக்டர்கள் யார் யார் சேவை செய்தனரோ, அனைவருமே உளப்பூர்வமாய் அன்புடன் செய்தனர். (பாப்தாதா உங்களுக்கு மிக மிக நன்றி) பாப்பதாதாவுக்கு நன்றி கூறினீர்கள், ஆனால் பாப்தாதா குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றார். (முன்னி சகோதரி மிகவும் தைரியமாக இருந்தார்) தைரியம் வைக்கத்தான் வேண்டும். பலகாலம் செய்துள்ளார். பிறகும் இவர்கள் (தாதிகள்) அனை வரும் சேர்ந்து செய்தனர். (தாதிஜி இன்னும் நன்றாக சுகமடைவார், சற்று சமயம் எடுக்கும் என நிர்வயர் சகோதரர் கூறினார்) நன்றாக ஆகி விடுவார்,

பரவாயில்லை, சமயம் எடுக்கத் தான் செய்யும், ஏனெனில் பலகாலம் சிரமம், அதிக நேரம் ஆகத்தான் செய்யும் அனைத்து தாதிகளையும் பார்த்து எவ்வளவு குஷி (மும்பையின் அனைத்து சேவாதாரி சகோதர சகோதரிகள் விசேஷமாய் டீச்சர் சகோதரிகள் மிக அதிக அன்பைத் தெரிவித்தனர். அவர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் மற்றும் அன்பு நினைவுகள்.

பிரிஜ்மோகன் சகோதரரைப் பார்த்து நன்றாகச் செய்தீர்கள், மேளாவிற்காக வாழ்த்துக்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋

# 30.11.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஜுவாலாமுகி தபஸ்யா மூலமாக "நான்", "எனது" எனும் வாலை பஸ்மம் செய்து பாப்தாதாவுக்கு சமமாக ஆகுங்கள், அப்போது தான் முடிவு சமீபமாக வரும்!

இன்று அளவற்ற அவிநாஷி கஜானாவுக்கு எஜமானனாக இருக்கின்ற பாப்தாதா, நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சம்பன்ன குழந்தைகளின் சேமிப்புத் கணக்கைப் பார்க்கின்றார். மூன்று விதமான கணக்கைப் பார்க்கின்றார். முதலாவது தனது புருஷார்த்தம் (முயற்சி) மூலமாகச் சேமித்த சிரேஷ்ட பாக்கியத்தின் சேமிப்புக் கணக்கு, இரண்டாவது சதா திருப்தியாயிருப்பது மேலும் திருப்திபடுத்துவது. இந்த திருப்தியின் மூலமாக அடைந்த ஆசிகளின் கணக்கு. மூன்றாவது, மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு மூலமாக எல்லையற்ற சுயநலமில்லாத சேவை மூலம் அடைந்த புண்ணியக் கணக்கு. நீங்கள் எல்லோரும் கூட உங்களுடைய இந்த மூன்று விதமான கணக்கையும், சோதித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். இந்த மூன்று கணக்குகளின் மூலமான சேமிப்பு எவ்வளவு? இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதற்கான அடையாளம் சதா எல்லோருக்காகவும், தனக்காகவும் திருப்தி சொரூபம், எல்லோருக்காகவும் சுப பாவனை, சுப அபிலாஷை மேலும் சதா முக மலர்ச்சியோடும், மகிழ்ச்சியிலேயே இருக்கும் அதிருஷ்ட ஸ்திதியின் அனுபவத்தில் இருப்பது. ஆதலால் இந்த இரண்டு கணக்குகளின் அடையாளம் தனக்கு அனுபவம் ஆகிறதா? என்று சோதித்துப் பாருங்கள். இந்த எல்லா பொக்கிஷங்களையும் (கஜானா) சேமிப்பதற்கான சாவி எது? நிமித்த பாவ் (கருவி), நிர்மான் பாவ் (பணிவு), நிஷ்வார்த் பாவ் (சுயநலமில்லாத பாவனை). சோதித்துக் கொண்டேயிருங்கள். சாவியின் நம்பர் என்ன என்று தெரியுமா? சாவி நம்பர் மூன்று பிந்தி, மூன்று புள்ளிகள் (த்ரி டாட்). ஒன்று ஆத்மா என்ற

புள்ளி, இரண்டாவது பாபா என்ற புள்ளி. மூன்றாவது டிராமா என்ற ஃபுல் ஸ்டாப் என்ற புள்ளி. உங்கள் எல்லோரிடமும் சாவி இருக்கிறதல்லவா? பெட்டகத்தைத் திறந்து கஜானாவைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறீர்களல்லவா? இந்த எல்லா பொக்கிஷங்களும் விருத்தியாவதற்கான விதி -உறுதி! மனம் உறுதியாக இருந்தால்

(திடமாக) எந்த ஒரு காரியமானாலும், ஆகுமா?, ஆகாதா? என்ற எண்ணம் வராது. உறுதி இருக்கிறது என்றால், அப்போது ஸ்திதி எந்த நிலையில் இருக்கும். அதாவது ஆகும், சேமிப்பாகுமோ, ஆகாதோ, என்ற நிலை இருக்காது, செய்து கொண்டு தானே இருக்கிறோம், ஆகத்தான் வேண்டும் -இவ்விதமாக வார்த்தையில் சந்தேக கலப்படம் இருக்கக் கூடாது. உறுதியாக இருப்பவர்கள், நிச்சயபுத்தியுள்ளவர்கள். நம்பிக்கையுள்ளவர்கள். ஆதலால் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்ற அனுபவம் செய்வார்கள்.

பாப்தாதா இதற்கு முன்பே கூறியிருக்கின்றார் -ஒருவேளை மிக அதிக அளவில் எல்லா கஜானாக்களையும் சேமிக்க வேண்டுமானால், மன்மனாபவ மந்திரத்தை, கருவியாக ஆக்கிக் கொள்ளுங்கள். இதன் மூலமாக சதா தந்தையுடன், தந்தையின் அருகில் இருக்கும் அனுபவம் தானாகவே உண்டாகும். பாஸாகத் தான் வேண்டும். மூன்று விதமான பாஸ் ஒன்று அருகாமையில் (பாஸ்) இருப்பது. இரண்டாவது, நடந்தது, முடிந்து, கடந்து விட்டது (பாஸ்), மூன்றாவது பாஸ் வித் ஆனார் ஆவது! ஒருவேளை இந்த மூன்று பாஸ் இருந்தால், நீங்கள் எல்லோரும் இராஜ்ய அதிகாரி ஆவதில் ஃபுல் பாஸ் அப்படியானால் மூன்று பாஸ் வாங்கி விட்டீர்களா? அல்லது இனிமேல் தான் வாங்க வேண்டுமா? யார் மூன்று பாஸ் வாங்கியிருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். வாங்கவே வேண்டாமா? வாங்கி விட்டீர்களா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கை உயாத்தவில்லையே! நீங்கள் வாங்க வேண்டாமா? யோசிக்கிறார்கள். இப்போது சம்பூரணம் ஆகவில்லை அப்படியா? ஆனால் நிச்சயபுத்தியுள்ளவர்கள் வெற்றியாளர்கள் தான் அல்லது ஆக வேண்டுமா? இப்போது காலத்தின் எச்சரிக்கை, பக்தர்களின் கூக்குரல், தன்னுடைய மனம் ஆகியவை மூலமாக எப்படிப்பட்ட குரல் வருகிறது? இப்போதே சம்பன்னமாகவும்,

சமானமாகவும் ஆகியே தீர வேண்டும் அல்லது ஆவோம், யோசிக்கலாம், செய்யலாம் என்று யோசிக்கிறீர்களா? இப்போது காலப்பிரமாணமாக ஒவ்வொரு கணமும் எவர்ரெடி எனும் பாடத்தில் பக்கவாக இருக்க வேண்டும். எப்போது "மேரா பாபா" என்று அழைத்தார்களோ, அப்போது “அன்பான பாபா" (பியாரா பாபா), "இனிமையான பாபா" (மீட்டா பாபா ) என்பதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் ஆகவே யார் அன்பானவர்களாயிருக்கிறார்களோ, அவர்களுக்கு சமம் (பாப் சமான்) ஆவதில் சிரமம் ஒன்றும் இருக்காது.

பாப்தாதா பார்க்கின்றார். அவ்வப்போது, சமான் ஆவதில் எந்த ஒரு விக்னம் வருகிறதோ, அது எல்லோரிடமும் பிரசித்தமான வார்த்தையாக இருக்கிறது அனுபவமும் செய்கிறார்கள் அது "நான்", "எனது" என்பது. ஆகவே தான் பாபா இதற்கு முன்பே கூறியிருக்கின்றார். எப்போதெல்லாம் "நான்" (மை) என்ற வார்த்தையை உபயோகிக்கின்றீர்களோ அப்போது நான் என்ற வார்த்தை மட்டுமல்ல, "நான் ஆத்மா" அதாவது நான் என்ற வார்த்தையோடு ஆத்மா என்பதையும் சேர்த்து இணைத்துப் பேச வேண்டும். ஏனெனில் நான் என்பது சில சமயம் அபிமானத்தைக் கொண்டு வருகிறது. ஆதலால் வெறும் நான் என்று மட்டுமே சொன்னால் அது தேக அபிமானமுள்ள நான் ஆகும், ஆத்மா என்பது விடுபட்ட நான் என்பதாக இருக்கிறது. சில சமயம் அபிமானத்தையும் உண்டாக்கும், சில சமயம் அவமானத்தையும் உண்டாக்கும். சில சமயம் மனமுடைந்து போகவும் செய்யும். அதலால் இந்த தேகாபிமான நான் என்பதை சொப்பனத்திலும் கூட கொண்டு வராதீர்கள்.

பாப்தாதா பார்த்தார். சிநேகம் (அன்பு) என்ற பாடத்தில் மெஜாரிட்டி பாஸ். உங்கள் எல்லோரையும் இங்கே யார் கொண்டு வந்தார்கள். உங்களில் சிலர் விமானத்தில் வந்திருக்கலாம், ரயில் பயணமாக வந்திருக்கலாம், பஸ் மூலமாகவும் வந்திருக்கலாம் ஆனால் உண்மையில் பாப்தாதாவின் சிநேகம் என்ற விமானத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். எப்படி சிநேகம் என்ற பாடத்தில் பாஸாகியிருக்கிறீர்களோ, அதுபோல சமான் ஆகும் பாடத்திலும் பாஸ் வித் ஆனர் ஆகிக் காண்பிக்க வேண்டும். இந்த அற்புதம் செய்து காட்டுங்கள். விருப்பம் தானே? சமான் ஆவது பிடித்தமானதாக இருக்கிறதா? சமான் ஆகி விட்டால் முடிவு

(சமாப்தி) எதிரில் வந்து விடும் ஆனால் சில சமயம் ஆகியேத் தீர வேண்டும் என்று மனதில் பிரதிக்ஞை (உறுதிமொழி) செய்கிறீர்கள். இதில் உறுதிமொழி பலவீனமாகி விடுகிறது. பரீக்ஷை பலமுள்ளதாகி விடுகிறது. எல்லோருமே விரும்புகிறார்கள் ஆனால் விருப்பம் ஒன்றாகவும், நடப்பது வேறொன்றாகவும் இருக்கிறது. ஏனெனில் உறுதிமொழி எடுத்துக் கொள்கிறீர்கள் ஆனால் அதில் உறுதி குறைந்து விடுகிறது. சமான் ஆக வேண்டுமென்பது தூரமாகி விடுகிறது. பிரச்சனை பலசாலியாகி விடுகிறது. ஆதலால் இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்?

பாப்தாதாவுக்கு ஒரு விஷயத்தில் சிரிப்பு வருகிறது. எந்த விஷயத்தில்? மகாவீர் தான் ஆனால் சாஸ்திரத்தில் கூறியிருப்பதைப் போல, ஹனுமானை மகாவீர் என்று சொல்கிறார்கள் ஆனால் வாலையும் காட்டியிருக்கிறார்கள். இந்த வால் “நான்" என்பதைக் குறிப்பதாகும். எதுவரை மகாவீர் இந்த வாலை பஸ்மம் செய்யவில்லையோ, அதுவரை லங்கா அதாவது பழைய உலகம் அழியாது. ஆதலால் இப்போது, இதில் "நான்" என்ற வாலை எரித்து விடுங்கள். அப்போது சமாப்தி சமீபமாக வந்து விடும்; எரிப்பதற்காக ஜுவாலாமுகி தபஸ்யா, சாதாரண நினைவு அல்ல. ஜுவாலாமுகி நினைவு அவசியமாயிருக்கிறது. இதனால் தான் ஜுவாலா தேவிக்கு ஞாபகார்த்தம் இருக்கிறது. சக்திசாலியான நினைவு. என்ன செய்ய வேண்டும் என்பதை கேட்டீர்களா? இப்போது இது மனதில் ஒரு மெட்டு போல ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. "சமான் ஆகியே தீர வேண்டும். சமாப்தியை சமீபமாக கொண்டு வரத்தான் வேண்டும்" என்ற மெட்டு. நீங்கள் கூறலாம், சங்கமயுகம், நன்றாயிருக்கிறதல்லவா, எதற்காக சமாப்தியாக வேண்டும்? ஆதலால் நீங்கள் பாபா சமானமாக. தயாளு, கிருபாலு, ரஹம்தில் ஆத்மாக்கள் என்றால் இன்று துக்கத்திலுள்ள ஆத்மாக்கள் மற்றும் பக்த ஆத்மாக்கள் மீது இரக்கமுள்ள ஆத்மாக்களே, நீங்கள் இரக்கம் காட்டுங்கள். கருணையுள்ளவர் ஆகுங்கள். துக்கம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. துக்கத்திலுள்ளவர் மீது, இரக்கம் வைத்து, அவர்களை முக்தி தாமுக்காவது அனுப்பலாமில்லையா? பேச்சு மூலமாகச் செய்யும் சேவை மட்டும் போதாது. மனதோடு பேச்சும் சேர்ந்து கூடவே இணைந்து சேவை செய்ய வேண்டும் ஒரே நேரத்தில் இரண்டும் நடக்க வேண்டும். சேவைக்கு வாய்ப்புக் கிடைத்தால்

செய்யலாம் என்று நினைக்காதீர்கள். நடக்கும்போதும், இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போதும் முகம் மூலமாக நடத்தை மூலமாக தந்தையின் அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். உங்களுடைய முகம் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்கட்டும். உங்களுடைய நடத்தை தந்தையை பிரத்யக்ஷம் செய்து கொண்டேயிருக்கட்டும். ஆகவே இதேபோல சதா சேவாதாரி பவ! நல்லது.

பாப்தாதாவுக்கு எதிரில், ஸ்தூலத்தில் நீங்கள் எல்லோருமே அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் சூட்சும சொரூபத்தில் நாலாபுறமும் உள்ள குழந்தைகள் உள்ளத்தில் இருக்கின்றார்கள் பார்த்துக் கொண்டுமிருக்கிறார்கள். கேட்டுக் கொண்டுமிருக்கிறார்கள் உள்நாடு மற்றும் வெளி நாடுகளிலிருந்து குழந்தைகள் ஈ.மெயில் மூலமாக, கடிதம் மூலமாக, மற்றவர் மூலமாக அன்பு நினைவுகளை அனுப்பியிருக்கிறார்கள். எல்லோருடைய பெயர் சகிதமாக பாப்தாதாவுக்கு நினைவு வந்து சேர்ந்தது. பாப்தாதா உள்ளத்திலேயே எல்லாக் குழந்தைகளையும் எதிரிலேயே பார்த்து வாஹ் பச்சே வாஹ்! என்று மகிமை செய்கின்றார். ஒவ்வொருவருக்கும் இப்போது எழுச்சியுள்ள ரூபத்தில் நினைவிருக்கிறது. எல்லா செய்தியாளர்களுக்கும் தனித்தனியாக கூறுகிறார்கள் இன்னார் நினைவு அனுப்பியிருக்கின்றார். இவர் நினைவு அனுப்பியிருக்கின்றார் என்று தந்தை கூறுகின்றார், தந்தையை எப்போது நினைவு செய்கிறீர்களோ, அந்த அன்பு நிறைந்த நினைவு சாதனங்களுக்கு முன்பே வந்து சேர்கிறது சரிதானே! அநேகருக்கு நினைவு கிடைத்ததல்லவா? நல்லது

அச்சா. யார் முதல் முறையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் முதலில் கை உயர்த்துங்கள் இவர்கள் சேவையிலும் முதல் முறையாக வந்திருக்கிறார்கள். நல்லது பாப்தாதா கூறுகின்றார். நல்லது தான் வந்தால் வரட்டும். நீங்கள் வருவதற்கான நேரம். சரி இனி என்ன செய்ய வேண்டும் கூறுங்கள்.

இந்தூர் ஜோன் (ஆர்த்தி சகோதரி) சேவாதாரிகள் வந்திருக்கிறார்கள்: எல்லோருடைய கைகளிலும் "மேரா பாபா" என்று இருதய உருவத்தில் தயாரிக்கப்பட்ட அடையாளச்சின்னம் உள்ளது. கை நன்றாகத்தான்

அசைக்கிறார்கள் ஆனால் உள்ளத்தையும் அசைக்க வேண்டும். சதா நினைவு இருந்தால் போதும் மேரா என்பதை மறந்து விடாதீர்கள். நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டீர்கள். பாப்தாதா சதா கூறிக் கொண்டே தான் இருக்கின்றார் தைரியம் உள்ளவர்களுக்கு பாப்தாதா நூறு மடங்கு உதவி செய்கின்றார். நீங்கள் தைரியமாக இருக்கிறீர்கள் அல்லவா? நல்லது இந்தூர் ஜோன் நன்றாக இருக்கிறது. இந்தூர் ஜோன் சாகார் பாபாவின் கடைசியாக நினைவுக்கு வந்த இடம். நன்றாக இருக்கிறது. எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் அல்லவா! நல்லது கோல்டன் லாட்டரி கிடைத்திருக்கிறது. ஜோன் சேவை கிடைத்தவுடன் எல்லா சேவாதாரிகளுக்கும் லீவு கிடைத்து விடுகிறது. எத்தனை பேர் வர வேண்டும் என்று கூறுகிறார்களோ, அத்தனை பேருக்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இப்போது பாருங்கள், இங்கே இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். இதுவும் கூட ஒவ்வொரு ஜோனுக்கும் நல்ல வாய்ப்பு தானே? எத்தனை பேர்களைக் கூட்டி வரவேண்டுமோ, கொண்டு வாருங்கள். உங்கள் எல்லோருக்கும் மிகக் குறைந்த சமயத்தில் புண்ணியக்கணக்கு மிக அதிகமாக சேர்ந்து விட்டது. யக்ஞ சேவை உள்ளன்போடு செய்ய வேண்டும். அதாவது உங்களுடைய புண்ணியக்கணக்கு தீவிர கதியில் அதிகப்படுத்த வேண்டும். ஏனெனில், சங்கல்பம், சமயம், சரீரம் மூன்றும் பயன்படுத்தப்படுகிறது. யக்ஞ சேவைக்கான சங்கல்பம் செய்வீர்கள். சமயமும் யக்ஞ சேவையில் செலவிடப்படும். சரீரமும் கூட யக்ஞ சேவையில் அர்ப்பணமாகி விடும். அப்படியானால் இது சேவையா? அல்லது பலனா? பிரத்யக்ஷ பலன் என்னவென்றால், யாரோடு யக்ஞ சேவை செய்தாலும், ஏதாவது ஒரு வீணான சங்கல்பம் வந்ததா? யாருக்காவது வந்ததா? குஷியாக இருந்தீர்கள். குஷியை பகிர்ந்து கொண்டீர்கள். இப்படி இங்கு எந்த விதமான கோல்டன் அனுபவம் செய்தீர்களோ, இந்த அனுபவத்தை அங்கு சென்ற பின்னரும், கூட எழுச்சியுறச் செய்து அதிகப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். எப்போதாவது மாயா சங்கல்பம் வந்தாலும், மனதை விமானம் மூலமாக சாந்திவன் வந்து சேர்ந்து விட வேண்டும். மனம் என்ற விமானம் இருக்கிறதல்லவா? எல்லோரிடமும் மனம் என்ற விமானம் இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு பிராமணனுக்கும், ஜன்மம் எடுத்தவுடனேயே சிரேஷ்டமான மனதை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். இந்த விமானத்தில் அதிகமாக முயற்சி எதுவும் செய்ய

வேண்டியதில்லை. பறக்க வேண்டுமானால் (ஸ்டார்ட்) “மேரா பாபா", போதும் ஓட்டத் தெரியுமா, விமானம்? எப்போதாவது, ஏதாவது இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் மதுபன் வந்து சேர்ந்து விடுங்கள் பக்தி மார்க்கத்தில் 4-இடம் யாத்திரை சென்று வருபவர்கள் தங்களை மிகவும் பாக்கியவான் என்று நினைக்கிறார்கள் ஆனால் மதுபனிலும் 4-இடங்கள் உள்ளன. நீங்கள் 4-இடங்களுக்கும் சென்றிருக்கிறீர்களா? பாண்டவ பவனில் நான்கு இடங்கள் உள்ளன. யார் வந்தாலும் பாண்டவ பவன் செல்கிறீர்கள் அல்லவா? முதலாவது சாந்தி ஸ்தம்பம் -மகா தீர்த்தம். இரண்டாவது பாப்தாதாவின் அறை (பாபா ரூம்) -இது சிநேகத்தின் இடம். மூன்றாவது குடிசை -இது சிநேக சந்திப்பிற்கான இடம். நான்காவது ஹிஸ்டரி ஹால். நீங்கள் எல்லோருமே இந்த நான்கு இடங்களுக்கும் சென்றிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் மகான் பாக்கியவான் ஆகியே விட்டீர்கள். இப்போது ஏதாவது ஒரு இடத்தை நினைவில் கொண்டு வாருங்கள். எப்போதாவது கவலையாக இருந்தால் (குடிசையில்) ரூஹ்-ரிஹான் (பாபாவுடன் ஆன்மீக சம்பாஷணை) செய்வதற்கு வந்து விடுங்கள். சக்திசாலி ஆக வேண்டும் என்ற அவசியம் இருந்தால் சாந்தி ஸ்தம்பம் வந்து விடுங்கள் அல்லது வீணான எண்ணங்கள் வருகிறது, அதிக வேகமாகவும் வருகிறது என்றால் ஹிஸ்டரி ஹாலுக்கு வந்து விடுங்கள். சமான் ஆவதற்கான திட சங்கல்பம் உற்பத்தியானால், பாப்தாதாவின் அறைக்கு வந்து விடுங்கள். நல்லது எல்லோரும், கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டு விட்டீர்கள் ஆனால் அங்கு இருக்கும் போதும் கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். நல்லது. தைரியசாலிகள் நன்றாக இருக்கிறார்கள்.

**CAD குரூப்:** தில் வாலே அமர்ந்திருக்கிறார்கள். மிக நல்ல மாநாடு எல்லோரும் சேர்ந்து செய்திருக்கிறீர்கள். நன்றாகச் செய்தீர்கள். உங்களுக்குள்ளேயே மீட்டிங்கும் செய்தீர்கள். மேலும் இந்தக் காரியம் நடக்க வேண்டும் என்று பிரசிடெண்ட்டுக்கும் கூட விருப்பம் இருந்தது. அவருக்கும் விருப்பம் இருக்கிறதென்றால் அவரையும் உங்களோடு இணைத்துக் கொண்டு முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள். மேலும் கூடவே, பிராமணர்களுக்கான மீட்டிங் இருக்கிறதல்லவா? அதிலும் கூட இந்த புரோகிராம் பற்றி எடுத்துரைத்து, எல்லா பிராமணர்களுடைய சம்மதம் பெற்று செய்யும்போது, அந்த சம்மதம் காரணமாக சக்தி நிரம்பி விடும். மற்றபடி காரியம் நன்றாக இருக்கிறது

செய்து கொண்டேயிருங்கள், பரப்பிக் கொண்டேயிருங்கள் முயற்சி நன்றாக இருக்கிறது. புரோகிராம் நன்றாகவே இருக்கிறது. மேலும் "தில்வாலே" குரூப்பைச் சேர்ந்தவர்கள். தங்களுடைய பரந்த மனதுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு நல்வாழ்த்துக்கள் நன்று.

இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்: ஒவ்வொரு சந்திப்பிலும் இரட்டை வெளிநாட்டினரும் கலந்து கொள்வது அழகுக்கு அழகூட்டுகிறது. இரட்டை வெளிநாட்டினரைக் கண்டு அனைவருக்கும் உற்சாகம் ஏற்படுகிறது. அனைத்து இரட்டை வெளிநாட்டினரும் உற்சாகம் ஆர்வத்தில் முன்னேறி, பறந்து கொண்டிருக்கின்றனர். நடப்பதில்லை, பறக்கின்றனர், பறக்கின்றவர்களா? அல்லது நடக்கிறவர்களா? சதா பறந்து கொண்டிருப்பவர்கள், நடப்போரல்ல, பார்த்தால் விமானத்தில் பறந்து தான் வர வேண்டியுள்ளது ஆக, பறப்பது என்பது உங்களுக்கு அப்பியாசம் உள்ளது தான்! அது சரீர ரீதியாகப் பறப்பது, இது மன ரீதியாகப் பறப்பது. மிக தைரியம் வைக்கிறீர்கள். பாப்தாதா பாருங்கள், எங்கெங்கெல்லாமோ மூலை முடுக்குகளிலிருந்து தனது குழந்தைகளைத் தேடியுள்ளார். மிக நல்லது சொல்வது தான் இரட்டை வெளிநாட்டினர் ஆனால் உண்மையில் பாரத தேசத்தினர் தான். இராஜாங்கம் கூட எங்கு செலுத்த வேண்டும்? பாரத தேசத்தில் தானே? சேவையின் காரணமாக கண்டங்களிலும் போய் சேர்ந்து விட்டீர்கள். பற்பல இடங்களில், சேவை கூட உற்சாகம், ஆர்வத்தோடு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் விக்ன விநாசக் இல்லையா? எந்த தடை வந்தாலும் பயப்படுபவர்கள் இல்லையே? இது ஏன் நடக்கிறது? இப்படி எப்படி நடக்கிறது? அப்படி கிடையாது. என்ன நடந்தாலும் அது நமது தைரியத்தை அதிகரிப்பதற்கான சாதனம் ஆகும். பயப்படக்கூடாது. உற்சாகம், ஆர்வத்தை அதிகரிக்கும் சாதனம். அம்மாதிரி உறுதியானவைகள் தானே! அல்லது கொஞ்சம், கொஞ்சம் (கச்சாவா) நிலை குலைந்தவர்களா? இல்லை, கச்சா என்ற வார்த்தையே நன்றாக இல்லை! கூடவே வருவீர்கள். நல்லது.

தாதி ஜானகிஜி ஆஸ்திரேலியா பயணம் முடித்து வந்துள்ளார், மிகுந்த அன்பு நினைவுகளை கூறுகிறார்: பாப்தாதாவிடம் இமெயிலில் கூட செய்திகள் வந்துள்ளன. பாப்தாதா பார்க்கின்றனர், இப்போதெல்லாம பெரிய பெரிய நிகழ்ச்சிகள் கூட, ஒன்றுமே இல்லை என்கிற மாதிரி

ஆயிற்று. எல்லோரும் நன்கு கற்றுக் கொண்டு விட்டனர். சேவையின் சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்த நன்கு அப்பியாசம் ஆகி விட்டது. ஆஸ்திரேலியா பாப்தாதாவிற்கு நம்பர்-1 ஆகத் தெரிகிறது ஆனால் முதன் முதலில் முன்னணியில் இருந்தது, இப்போது யு.கே. (இங்கிலாந்து) கொஞ்சம் முன்னணியில் சென்று கொண்டிருக்கிறது ஆனால் ஆஸ்திரேலியா நம்பர்-1 ஆகியேத் தீர வேண்டும் யுகே. நம்பர்-2 ஆகி விடாது அதுவும் நம்பர்-1'லேயே இருக்க வேண்டும்.

பழைய ஆஸ்திரேலியக் குழந்தைகள் பாப்தாதாவின் நினைவில் உள்ளனர். பாப்தாதாவின் செல்லம் -நிர்மல் ஆஸ்ரம், நிர்மலா தீதி என்று கூறுகிறீர்கள், தீதி என்று கூறுகிறீர்கள். தீதி என்று கூறுகிறீர்கள்தானே? ஆனால் பாப்தாதா ஆரம்பத்திலிருந்தே நிர்மல் ஆஸ்ரம் என்று பட்டம் அளித்துள்ளார். அந்த ஆஸ்ரமத்தில் அனேக ஆத்மாக்கள் உதவி பெற்றுள்ளனர், பாபாவினுடையவர்களாக ஆகியுள்ளனர், ஆகிக் கொண்டும் இருக்கின்றார், ஆகிக் கொண்டும் இருப்பார். ஆக, ஒவ்வொரு ஆஸ்திரேலிய குழந்தைக்கும் விசேஷ நினைவுகள்! இதோ முன்னேயே அமர்ந்துள்ளனர். ஆஸ்திரேலியாவினர் தானே நீங்கள்! பாப்தாதாவின் உதவியுடன், வெற்றிக் கனியும் கிடைக்கிறது.

நல்லது. இப்போது என்ன திட சங்கல்பம் (மன உறுதி) எடுத்துக் கொள்கிறீர்கள்? இப்போது வெற்றி எமது பிறப்புரிமை, வெற்றி நமது கழுத்து மாலை இந்த நிச்சயம் மற்றும் ஆன்மீக போதையில் அனுபவ சொரூபமாகி இருங்கள்.

நல்லது! கவலையிலிருந்து விடுதலை பெற்ற கவலையற்ற இராஜாக்களுக்கு, சதா துக்கமே இல்லாத ஊரின் மகாராஜா சொரூபத்தில் ஸ்திரமாய் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, அனைத்து பொக்கிஷங்களினாலும் நிறைந்து விளங்கும், உலகிலேயே மிகப் பணக்காரர்களான அனைத்து குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், உள்ளத்தின் ஆசீர்வாதங்கள் வரத்தை வழங்கும் வள்ளலின் வரங்கள் மற்றும் நமஸ்தே.

தாதிஜியுடன்: எவ்வளவு அன்புடன் அனைவரும் பார்க்கின்றனர், சரியாகி விடும். சரி தானே! சௌகரியமாகத்தான் இருப்பீர்கள். நல்லது

அனைவரும் குஷி அடைகின்றனர். குஷி அடைவது அனைத்திலும் பெரிய பாக்கியத்தின் அடையாளம் ஆகும். குஷியாய் இருப்பவர் தனது முகத்தின் மூலம் அனேகருக்கு குஷியின் அனுபவத்தை செய்விக்கிறார். (தாதி ஜானகிஜி வெளிநாட்டு செய்திகளைக் கூறினார்). இப்போதோ முழு பாரதமும் உங்கள் கையில் வர வேண்டியுள்ளது. அவர்கள் தானாகவே முன் வந்து உங்களிடம் ஒப்படைப்பர். இப்போது நீங்கள் சற்று முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. கைப் பிரதிகள் போன்றவை அச்சிட வேண்டியுள்ளது. முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. பிறகு தாங்களாகவே உங்களிடம் சமர்ப்பிப்பார்கள். நமது பாபா வந்து விட்டார். இந்த வார்த்தை அனைவர் வாயிலிருந்தும் வெளி வர வேண்டும், அது ஒன்று தான் பாக்கியுள்ளது. இதுவும் அருகில் வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் பறந்து கொண்டிருங்கள். பரிஸ்தா ஆகி பறந்து கொண்டிருங்கள், அவர்களுக்கு பரிஸ்தாக்களின் திவ்ய காட்சி (சாட்சாத்காரம்) கிடைத்துக் கொண்டிருக்கும்.

டாக்டர் அசோக் மேத்தாவுடன்: நல்லதொரு காரியத்திற்கு நிமித்தமாகி விட்டீர்கள், அனேக ஆத்மாக்களுக்கு மிக எளிதாக அறிமுகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மருத்துவமனையின் (மும்பையில் உள்ளது) நல்ல பலனை எடுத்துள்ளீர்கள், நோயாளிகளை மதுபன் வரை சேர்த்துள்ளீர்கள். இந்த சேவையை மிக நன்றாகச் செய்துள்ளீர்கள், நோயாளிகளுக்கு பொறுமையைக் கற்றுத் தந்துள்ளீர்கள். நல்லது தானே! அவைருக்கும் நன்மை ஏற்பட்டது நல்லது. இந்த மருத்துவமனை மூலமாகவும் அனேக முக்கியஸ்தர்கள் (வி.ஐ.பி) செய்தியை பெற்றுச் செல்ல வருவர். (ஆரோக்கிய கண்காட்சி மற்றும் மாநாடு நடத்தப்போகிறார்கள்) நல்லது ஆரோக்கியம் என்கிற வார்த்தையைக் கேட்டவுடனேயே ஒரு ஈர்ப்பு ஏற்படுகிறது. இங்கு கூட குளோபல் மருத்துவமனை திறந்தவுடன் சூழ்நிலையே மாறி விட்டதல்லவா! இன்னாட்களில் உடல் ஆரோக்கிய உணர்வு மிகுதியாக உள்ளதில்லையா? எனவே இரட்டை லாபம் கிடைக்கும் என நினைக்கின்றனர்.

மும்பையின் பிரபல பாடகர் சமீர் சகோதரர்: இப்போது இரட்டை பாடல் பாட வேண்டும். வாய் மூலம் பாடுகிறீர்கள். மிக நல்லது! எழுதவும் செய்கிறீர்கள். நன்கு படைக்கிறீர்கள், தவறாக படைக்கவில்லை,

சரியாக படைக்கிறீர்கள். இப்போது மனதால் பாபாவின் குணங்களைப் பாடுங்கள், இரட்டை பாடல்கள் அப்போது உங்கள் முகம் குஷியில் மலர்ந்து விளங்கும். ஏதோ விசேஷமாய் அடைந்துள்ளீர்கள் என்பது உங்கள் முகத்தின் மூலம் தெரிய வரும். நல்லது, சரியான நேரத்தில் வந்தடைந்துள்ளீர்கள்.

நாராயண் சகோதரர்: (பிரம்மாபாபாவின் குமாரர்) அஹமதாபாத் மருத்துவமனையிலிருக்கும் அவரது சகோதரியான பரதாதி -நிர்மல் சாந்தாஜியைக் காண வந்துள்ளார். அவரும் சரியாகிக் கொண்டிருக்கிறார். வயது அதிகம் இல்லையா! வயது அதிகம் காரணமாக கொஞ்சம் சமயம் எடுக்கிறது. நீங்கள் நன்றாயிருக்கிறீர்களா? செட்டாகியுள்ளீர்கள் தானே! அனைவரும் நன்றாக உள்ளனரா? அனைவருக்கும் அன்பு நினைவுகளைக் கூறவும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 15.12.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு சொரூபம், அனுபவ மூர்த்தியாகி ஒரு வினாடியில், தீவிர கதி மூலம் பரிவர்த்தனை செய்து பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி) ஆகுக!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளிடம் மூன்று விசேஷ பாக்கியத்தின் ரேகை நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றார். எல்லோருடைய நெற்றியிலும் பாக்கியத்தின் ரேகை பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று, பரமாத்மா பாலனையின் பாக்கிய ரேகை. இரண்டாவது ஆசிரியர் மூலமான பாடத்தின் பாக்கிய ரேகை. மூன்றாவது சத்குரு மூலமாக ஸ்ரீமத்தின் பாக்கிய ரேகை. இது போன்ற ரேகைகளைப் பார்க்கின்றார். நீங்களும் கூட, உங்களுடைய நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற ரேகைகளை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! எல்லாவற்றிலும் சிரேஷ்டமானது பரமாத்மாவின் அன்பான பாலனையின் ரேகை. எவ்வாறு தந்தை மேலானவர்களிலெல்லாம் அதிமேலானவராக இருக்கின்றாரோ, அது போல பரமாத்மாவின் பாலனையும் கூட எல்லாவற்றிலும் அதிமேலானது. இந்த பாலனை மிகக் குறைவானவர்களுக்குத்தான் பிராப்தியாகியிருக்கிறது ஆனால் நீங்கள் எல்லோருமே இந்தப் பாலனைக்குப் தகுதியுள்ளவராகியிருக்கின்றீர்கள். இந்தப் பாலனை முழு கல்பத்திலும் குழந்தைகளாகிய உங்களுக்கு ஒரே ஒரு முறை தான் பிராப்தியாகிறது. இப்போது இல்லையேல், வேறு எப்போதும் பிராப்தி அடைய முடியாது. இந்த பரமாத்ம பாலனை, பரமாத்ம அன்பு, பரமாத்ம பிராப்திகள் கோடியில் சில ஆத்மாக்களுக்கு மட்டுமே அனுபவமாகிறது. உங்களுக்கெல்லாம் இந்த அனுபவம் இருக்கிறதல்லவா? அனுபவம் செய்கிறீர்களா? பாலனையின் அனுபவமும் இருக்கிறது. படிப்பு மற்றும்

ஸ்ரீமத்தின் அனுபவமும் இருக்கிறது. அனுபவி மூர்த்திகள். ஆகவே சதா உங்களுடைய நெற்றியில் பாக்கிய நட்சத்திரம் பிரகாசிப்பது தெரிகிறதா? சதா? அல்லது எப்போதாவது பிராசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம் மங்கலாகவும் ஆகி விடுகிறதா, என்ன? குறையக்கூடாது. ஒருக்கால், பிரகாசமாக ஒளி வீசும் நட்சத்திரம் மங்கி விடுகிறது என்றால் இதற்கு என்ன காரணம்? ஆறிவீர்களா?

பாப்தாதா இதற்கு என்ன காரணம் என்று பார்த்தார். காரணம், ஸ்மிருதி (நினைவு) சொரூபம் ஆகவில்லை. நான் ஆத்மா என்று சிந்திக்கிறீர்கள். இப்படி சிந்திக்கும் சொரூபமாகிறீர்கள். நினைவு சொரூபம் குறைவாக இருக்கிறது, எதுவரையிலும் நினைவு சொரூபம் சதா இருப்பதில்லையோ, அதுவரை சக்திசாலி ஆக முடியாது. ஏனெனில் நினைவு தான் சக்தியளிக்கிறது. நினைவு சொரூபம் தான் சக்தி சொரூபம். ஆகவே தான் பாக்கிய நட்சத்திரத்தின் பிரகாசம் மங்கலாக இருக்கிறது. நீங்களே உங்களிடம் கேளுங்கள். நான் அதிக நேரம் சிந்திக்கும் சொரூபமாக இருக்கிறேனா? அல்லது நினைவு சொரூபமாக இருக்கிறேனா? சிந்திக்கும் சொரூபத்தில் இருக்கும்போது மிக நன்றாகவே சிந்திக்கிறீர்கள், நான் இப்படிப்பட்டவன், நான் இப்படி இருக்கிறேன், நான் இப்படித்தான் இருக்கிறேன் ஆனால் நினைவு இல்லாத காரணத்தால் உங்கள் சிந்தனையில், வீணான எண்ணங்கள், சாதாரண எண்ணங்கள் கலப்படமாகி விடுகிறது. உண்மை என்னவென்றால், உங்களுடைய அநாதி சொரூபம், ஸ்மிருதி ஸோ சமர்த் சொரூபமாகும். (நினைவு எப்படியோ அப்படி சக்தி) சிந்திப்பவர்களல்ல, சொரூபமாக இருப்பவர்கள். மேலும் ஆதியிலும் கூட (சத்யுகத்தில்) இப்போதையை சமயத்தின் நினைவு சொரூபத்தின் பாக்கியம் பிராப்தியாகிறது. ஆதலால் அநாதி மற்றும் ஆதி நினைவு சொரூபம் தான். மேலும் இந்த சமயத்தின் கடைசியில் சங்கம சமயத்திலும் கூட நினைவு சொரூபத்தில் இருக்கிறீர்கள். ஆகவே, ஆதி, அநாதி மற்றும் கடைசி என்ற மூன்று காலத்திலும் நீங்கள் நினைவு சொரூபமாகத் தான் இருக்கிறீர்கள். சிந்திக்கும் சொரூபம் அல்ல. ஆதலால் தான் பாப்தாதா, இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார், தற்சமயம் (நிகழ்காலம்) அனுபவி மூர்த்தி ஆவது தான் சிரேஷ்டமான நிலை. சிந்திக்கிறீர்கள், நான் ஆத்மா, பரமாத்ம பிராப்தி இருக்கிறது என்று, ஆனால் புரிந்து கொள்வது மற்றும் அனுபவம் செய்வது

என்பதில் வித்தியாசம் இருக்கிறது. அனுபவி மூர்த்தி, ஒருபோதும் மாயையால் ஏமாற்றமடைய மாட்டார், துக்கத்தின் அனுபவமும் ஆகாது. அவ்வப்போது மாயையின் விளையாட்டைப் பார்க்கிறீர்கள், அல்லது விளையாட்டை விளையாடவும் செய்கிறீர்கள், இதற்குக் காரணம் அனுபவ மூர்த்தியில் குறை இருப்பது தான். அனுபவத்தில் அத்தாரிட்டியாக (அதிகார உரிமை) இருப்பது தான் எல்லாவற்றிலும் சிரேஷ்டமானது. ஆகவே பாப்தாதா பார்த்தார் -அநேக குழந்தைகள் சிந்திக்கிறார்கள் ஆனால் சொரூபத்தின் அனுபவம் குறைவாக இருக்கிறது.

இன்றைய உலகில் மெஜாரிட்டி ஆத்மாக்கள் பார்த்தும், கேட்டும், களைத்துப் போயிருக்கிறார்கள். இவர்கள் அனுபவம் மூலமாக பிராப்தியடைய விரும்புகிறார்கள். அனுபவம் செய்விக்க வேண்டும். அனுபவி தான் செய்விக்க முடியும். மேலும் அனுபவி ஆத்மா சதா முன்னேறிக் கொண்டேயிருப்பார்கள். பறந்து கொண்டே யிருப்பார்கள். ஏனெனில் அனுபவி ஆத்மாவில் ஊக்கம், உற்சாகம் சதா விழிப்புணர்வுடைய சொரூபத்தில் இருக்கும் ஆதலால் ஒவ்வொரு கருத்திலும் (பாயிண்டிலும்) அனுபவி மூர்த்தி ஆகி விட்டேனா என்று சோதித்துப் பாருங்கள். அனுபவத்தின் அத்தாரிட்டி உங்களுடைய ஒவ்வொரு கர்மத்திலும் தென்படுகிறதா? ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு சங்கல்பமும் (எண்ணம்) அனுபவத்தின் அத்தாரிட்டியுடன் கூடியதாக இருக்கிறதா? அல்லது புரிந்து கொண்டதன் ஆதாரத்தில் இருக்கிறதா? ஒன்று புரிந்து கொள்வது மற்றொன்று அனுபவம் செய்வது. ஒவ்வொரு பாடத்திலும் ஞானக் கருத்துக்களை வர்ணனை செய்வது என்பது வெளியிலுள்ள பேச்சாளர்களும் கூட நிறையப் பேசி விடுவார்கள் ஆனால் ஒவ்வொரு கருத்திலும் அனுபவ சொரூபம் ஆவது இது தான் ஞானி தூ ஆத்மா (ஞானம் நிறைந்த ஆத்மா)! யோகம் செய்பவர்கள் அநேகர், யோகத்தில் அமர்ந்திருப்பவர்கள் அநேகர் ஆனால் யோகத்தின் அனுபவம் அதாவது சக்தி சொரூபம் ஆவதாகும். சக்தி சொரூபத்தின் அடையாளம், எந்த சமயத்தில், எந்த சக்தி அவசியமாயிருக்கிறதோ, அந்த சமயத்தில், அந்த சக்தியை அடையப் பெற்று நிர்விக்ன சொரூபம் ஆகி விட வேண்டும். ஒருக்கால், ஏதாவது ஒரு சக்தி குறைவாக இருந்தாலும், வர்ணனை செய்தாலும், சொரூபமாகவில்லையென்றால் கூட, அந்த சமயத்தில்

ஏமாற்றமடைந்து விடுவீர்கள். உதாரணமாக பொறுமை சக்தி வேண்டும்போது, எதிர்க்கும் சக்தியை உபயோகித்தால், யோக நிலையில், நிலைத்திருக்கும் அனுபவ சொரூபம் என்று சொல்ல முடியாது. நான்கு பாடத்திலும், நினைவு சொரூபம் அல்லது அனுபவி சொரூபத்தின் அடையாளம் எப்படியிருக்கும்? ஸ்திதியில் நிமித்த பாவனை, விருத்தியில் சதா சுபபாவனை, ஆத்மீக பாவனை, நிஷ்வார்த் பாவனை (சுயநலமில்லாத) இருக்கும் வாயுமண்டலத்தில், சம்மந்தம், தொடர்பில் சதா நிர்மாண் பாவனை (பணிவுத்தன்மை) இத்தகைய விசேஷங்கள் அனுபவி மூர்த்தியிடம் ஒவ்வொரு சமயத்திலும் இயற்கையான சுபாவமாக இருக்கும். இயற்கையான குணம். இப்போது அநேக குழந்தைகள் அவ்வப்போது கூறுகின்றார்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்பிச் செய்யவில்லை, ஆனால் இது என்னுடைய பழைய சுபாவம். சுபாவம் தானாகவே அதன் வேலையைச் செய்து விடுகிறது. யோசிக்க வேண்டியதில்லை. அதாவது சுபாவம் இயல்பாகவே வேலை செய்து விடுகிறது. ஆகவே உங்களைச் சோதித்துப் பாருங்கள். என்னுடைய சுபாவம் எது? ஒருவேளை பழைய சுபாவம் அம்ச மாத்திரம் இருந்தாலும் கூட, அது ஒவ்வொரு சமயத்திலும் அந்தந்தக் காரியத்தில் வந்து, வந்து பக்கா (உறுதி) சம்ஸ்காரமாகி விடுகிறது. அதை நீக்கி விடுவதற்காக அதாவது பழைய குணம், பழைய சுபாவம், பழைய சம்ஸ்காரத்தை நீக்கி விட வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ஆனால் அப்படிச் செய்ய முடிவதில்லை. காரணம் என்ன? ஞானமுள்ளவர்களாக எல்லோரும் ஆகி விட்டீர்கள் ஆனால் இப்படி செய்யக் கூடாது என்று நீங்கள் விரும்பினாலும் அதைச் செய்து விடுகிறீர்கள். என்ன காரணம்? பரிவர்த்தனை செய்யக்கூடிய சக்தி குறைவாக இருக்கிறது. மெஜாரிட்டியினரிடம் (அதிகமானோர்) இது காணப்படுகிறது. பரிவர்த்தனை செய்யும் சக்தியைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், வர்ணனையும் செய்கிறார்கள். எல்லோருக்கும் பரிவர்த்தனை சக்தி என்ற தலைப்பில் எழுதுங்கள் என்று சொன்னால் அல்லது இதைப் பற்றிப் பேசுங்கள் என்று சொன்னால், எல்லோருமே இதில் கெட்டிக்காரர்கள் என்று பாப்தாதாவுக்குத் தெரியும். மிக நன்றாகப் பேசி விடுவார்கள். எழுதவும் முடியும். வேறு யாருக்காவது புரிய வைக்க வேண்டும் என்று சொன்னால் மிக நன்றாக புரிய வைத்து விடுவார்கள். நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம், பரிவர்த்தனை செய்து விடுங்கள் என்று சொல்லி விடுவார்கள் ஆனால் தன்னிடமுள்ள

பரிவர்த்தனை சக்தி தற்சமயத்தின் மகத்துவத்தை அறிந்திருப்பதால் பரிவர்த்தனை செய்வதில் நேரம் அதிகமாகக் கூடாது. ஒரு வினாடியில் பரிவர்த்தனை செய்யக் கூடிய சக்தி. ஏனென்றால், நடக்கக்கூடாது என்று எப்போது நினைக்கிறீர்களோ, அறிந்திருந்தும் கூட பரிவர்த்தனை செய்ய முடியவில்லை. இதற்கான காரணம் சிந்திக்கிறீர்கள் ஆனால் சொரூபம் ஆகவில்லை. முழு நாளில் அதிகமாக சிந்திக்கும் சொரூபமாகவே இருக்கிறீர்கள் ஸ்மிருதி ஸோ சமர்த் சொரூபம் என்பது மெஜாரிட்டி குறைவாக இருக்கிறது.

இப்போது தீவிர கதிக்கான நேரம். தீவிர புருஷார்த்தம் செய்ய வேண்டிய நேரம், சாதாரண புருஷாரத்தம் செய்வதற்கான நேரம் அல்ல. ஒரு விநாடியில் பரிவர்த்தனை என்பதன் அர்த்தம், ஸ்மிருதி சொரூபம் (நினைவு சொரூபம்) மூலமாக ஒரு செகண்டில் நிர்விகல்பம் (தவறான எண்ணம்), வியர்த்த சங்கல்பம் (வீண் எண்ணம்) நிவர்த்தியாகி விட வேண்டும் (விலக்கப்பட்டு விட வேண்டும்) ஏன்? முடிவான சமயத்தை, சமீபத்தில் கொண்டு வருவதற்கு நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள் இந்த நேரத்தின் மகத்துவத்தின் அடிப்படையில், நீங்கள் அறிந்து கொண்டும் இருக்கிறீர்கள். ஒவ்வொரு அடியிலும், நூறு மடங்கு அடங்கியிருக்கிறது. அதிகரிக்க வேண்டும் என்பது புத்தியில் இருக்க வேண்டும். அப்படியானால் ஒவ்வொரு அடியிலும் நூறு மடங்கு ஆகிக் கொண்டிருக்கும்போது, நூறுமடங்கு இழந்து கொண்டுமிருக்கிறீர்களா? அல்லது இல்லையா? ஆகவே, ஆகவே இப்போது நிமிடம் என்ற பேச்சு முடிந்து விட்டது. மற்றவர்களிடம் ஒரு நிமிடம் சைலன்ஸில் இருங்கள் என்று கூறுகிறீர்கள் ஆனால் உங்களுக்கு ஒரு வினாடியில் என்பதாக இருக்க வேண்டும் (நிமிடம் அல்ல). இப்படி ஆம் அல்லது இல்லை என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகிறது? செகண்டா? ஆகவே பரிவர்த்தனை செய்வதற்கான சக்தியிலும் இவ்வளவு வேகம் இருக்க வேண்டும். சரி என்று புரிந்து கொண்டீர்களா? அல்லது சரி இல்லையா? சரி இல்லை என்பதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். சரி என்பதை நடைமுறையில் (பிராக்டிக்கலில்) கொண்டு வர வேண்டும். இப்போது புள்ளியின் மகத்துவத்தை காரியத்தில் கொண்டு வாருங்கள். மூன்று புள்ளிகளைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? ஆனால் புள்ளியை தக்க சமயத்தில் காரியத்தில் கொண்டு வர வேண்டும். விஞ்ஞானிகள் எல்லா விஷயத்திலும் தீவிர கதியைக்

(வேகப்படுத்துவது) கொண்டு வருகிறார்கள். ஆதலால் சைலன்ஸ் சக்தியுடைவர்கள் இப்போது லக்ஷியம் வைக்க வேண்டும். பரிவர்த்தனை செய்ய வேண்டியதிருந்தால், ஞானமுள்ளவர்களாயிருந்தால் இப்போது சக்திசாலி ஆகுங்கள். ஒரு வினாடியில் பரிவர்த்தனை செய்யக்கூடிய சக்திசாலி! செய்து கொண்டு தானிருக்கிறோம், ஆகி விடும், செய்து விடுவோம் அல்ல. முடியுமா? கஷ்டமா? ஏனென்றால், கடைசியில் ஒரு வினாடிக்கான பேப்பர்தான் வரும், நிமிடமல்ல. ஆதலால் செகண்டுக்கான அப்பியாசம் வெகு காலம் செய்திருக்க வேண்டும். அப்போது தான் ஒரு செகண்டில் பாஸ் வித் ஆனர் ஆக முடியுமல்லவா? பரமாத்ம மாணவர்கள், பரமாத்ம படிப்பு படித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே பாஸ் வித் ஆனர். என்ன லக்ஷியம் வைத்திருக்கிறீர்கள்? யார் பாஸ் வித் ஆனர் ஆக வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். -பாஸ் வித் ஆனர், ஆனர் என்ற வார்த்தையை கோடிட்டு வையுங்கள். நல்லது. ஆகவே இப்போது என்ன செய்ய வேண்டும்? மினிட் மோட்டார் (இயந்திரம்) பொதுவானது. செகண்டில் நடக்க வேண்டிய வேலை இப்போது.

ஆம் பஞ்சாப்காரர்களே, செகண்டுக்கான விஷயம், இப்போது. இதில் நம்பர் ஒன் யார் ஆவார்கள்? பஞ்சாப் என்ன பெரிய விஷயம்? எவ்வளவு நேர்த்தியாக கூறுகின்றீர்கள்! மிக நன்றாகக் கூறுகின்றீர்கள். நீங்கள் சொல்வதைக் கேட்டு பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். கூறுகிறீர்களல்லவா? என்ன பெரிய விஷயம், என்று பாப்தாதா கூடவே இருக்கும்போது! சரி தான். அத்தாரிட்டி கூடவே தான் இருக்கின்றார். அப்படியானால் இப்போது என்ன செய்ய வேண்டும்? இப்போது தீவிரமாக்க வேண்டியதிருக்கும். சேவை செய்து கொண்டுதானிருக்கிறார்கள். சேவை செய்யவில்லையென்றால் வேறு என்ன தான் செய்வது? ஒன்றுமே செய்யாமலே உட்கார்ந்திருப்பீர்களா? சேவை பிராமண ஆத்மாக்களின் தர்மம், கர்மம் ஆனால் இப்போது சேவையுடன் கூடகூடவே சமர்த் சொரூபம். (சக்திசாலி சொரூபம்). எவ்வளவு சேவையில் ஊக்கம், உற்சாகம் காட்டுகிறீர்களோ, அது பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறதல்லவா? கிரீடம் அணிந்திருப்பதைப் பாருங்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறது! இப்போது நினைவு சொரூபம் ஆவதற்கான கிரீடம் அணிந்து காண்பிக்க

வேண்டும். இளைஞர் குரூப் அல்லவா? என்ன அற்புதம் செய்து காட்டுவீர்கள்? சேவையிலும் நம்பர் ஒன். சக்திசாலி சொரூபத்திலும் கூட நம்பர் ஒன். செய்தி கொடுப்பதும் கூட பிராமண வாழ்க்கையின் தர்மம் மற்றும் கர்மம் ஆனால் இப்போது பாப்தாதா ஜாடையாகக் கூறுகின்றார். பரிவர்த்தனை இயந்திரத்தை (மெஷின்) தீவிரப்படுத்துங்கள். இல்லாவிட்டால் பாஸ் வித் ஆனர் ஆவது கஷ்டமாகி விடும். வெகு காலம் செய்த அப்பியாசம் இருக்க வேண்டும். நினைத்தேன் மற்றும் செய்தேன். சிந்திக்கும் சொரூபமாக ஆக வேண்டாம். சக்திசாலி நினைவு மூலமாக சக்திசாலி சொரூபம் ஆகுங்கள். வீணானவற்றிற்கு தீவிரமாக முடிவு கட்டுங்கள். வீணான எண்ணம், வீணான பேச்சு, வீணான கர்மம், வீணான சமயம், மற்றும் சம்மந்தம் தொடர்பில் கூட வீணான விதி, ரீதி அனைத்திற்கும் முடிவு கட்டுங்கள். எப்போது பிராமண ஆத்மாக்கள் தீவிரமாக தன்னிடமுள்ள வீணானவற்றையெல்லாம் விலக்கி முடிவு கட்டிவிடுகிறார்களோ அப்போது ஆத்மாக்களின் ஆசிகள் மற்றும் தன்னுடைய புண்ணிய கணக்கையும் தீவிர கதியில் சேமிப்பாரர்கள்.

பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார். பாப்தாதா மூன்று கணக்குகளை சோதிக்கின்றார். புருஷாரத்தத்தின் வேகத்தின் கணக்கு, ஆசிகளின் கணக்கு, புண்ணியக் கணக்கு ஆனால் மெஜாரிட்டியினரின் கணக்கு இப்போது நிறையவில்லை. குறைவாகவே இருக்கிறது. ஆதலால் பாப்தாதா இன்றைக்கு இந்த சுலோகத்தைக் கொடுக்கின்றார். இப்போது தீவிரமாகுங்கள், தீவிர புருஷாரத்தம் செய்யுங்கள், தீவிர கதியில் முடித்து விடக்கூடியவர் ஆகுங்கள். தீவிர கதியில், மனம் மூலம் வாயுமண்டல பரிவர்த்தனையாளர் ஆகுங்கள்.

பாப்தாதா ஒரு விஷயத்தில் எல்லா குழந்தைகள் பற்றி மகிழ்ச்சியாயிருக்கின்றார். எந்த விஷயத்தில்? எல்லோருடைய அன்பு பாபாவிடம் அதிகப் பிரியமுள்ளதாக இருக்கிறது. இதற்கு வாழ்த்துக்கள் ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லட்டுமா? இந்த சீசன் முடிவடைதற்குள்ளாக, இன்னும் நேரமிருக்கிறது, சீசன் முடிவதற்கு தீவிர கதியில் ஏதாவது கொஞ்சம் மெருகூட்டிக் காட்டுங்கள். விருப்பம் தானே? விருப்பமானதாக இருக்கிறதா? யார், லக்ஷியம் மற்றும் லக்ஷணம் என்ற இரண்டையும் நினைவில் வைத்திருப்பீர்கள்? கை

உயர்த்துங்கள். லக்ஷியம், லக்ஷணம் இரண்டையும் எதிரிலேயே வைத்திருப்போம் என்பவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் ஃபாரினர்ஸ் கூட வைப்பார்கள். டீச்சர்கள் கூட வைப்பார்கள். இளைஞர்களும் கூட வைப்பார்கள். அப்படியானால், பதம், பதம், பதம் குணா (நூறு, நூறு மடங்கு) முன் கூட்டியே வாழ்த்துக்கள். நல்லது.

சேவையின் வாய்ப்பு பஞ்சாப்: பாதி வகுப்பு பஞ்சாப் மிக நன்றாகச் செய்தீர்கள். சேவையில் எவர்ரெடியாகி வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்லது. பஞ்சாப்காரர்கள் ஏதாவது புதிய பிளான் (திட்டம்) செய்திருக்கிறீர்களா? இதுவரை யாரும் செய்யாத பிளான் உங்களுக்கு டச் ஆகிறதா? ஆகிறதா? நாளை காலையில் ஆகி விடும். அப்படி செய்து காட்டுங்கள். இதை அறிந்து எல்லா பிராமணர்களும் நன்றி சொல்லட்டும். வாஹ்! என்று வாழ்த்துக்களும் தெரிவிக்கட்டும் வாஹ்! வாஹ்! என்ற பாட்டும் பாடட்டும் இதுவரை என்ன செய்தீர்களோ, அது நடந்து கொண்டு தான் இருக்கிறது. நன்றாகவே செய்கிறார்கள். பாப்தாதா சமாச்சாரம் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றார். சேவை கேட்டு உள்ளத்தில் உளமார அன்பையும் அளிக்கின்றார். இனி வேறு புதுமை செய்து காட்டுங்கள். பஞ்சாப் என்றால் சிங்கம் என்று சொல்கிறார்கள் அல்லவா? ஆதலால் அப்படி சிங்கம் போல் கர்ஜனை செய்து காட்டுங்கள். இதன் மூலமாக எல்லோருடைய பார்வையும் பாப்தாதாவின் பக்கம் திரும்பட்டும், ஆகி விடும் பாப்தாதாவுக்கு சங்கல்பம் இருக்கிறது. பஞ்சாப் ஏதாவது புதுமை செய்யும். இப்போதும் கூட கோல்டன் சான்ஸ் கிடைத்திருக்கின்றது. சேவையின் கோல்டன் சான்ஸ் (பொன்னான வாய்ப்பு) எடுத்துக் கொண்டீர்கள், மேலும் நல்ல தைரியம் வைத்து, அனைவரும் ஒன்று சேர்ந்து செய்கிறீர்கள். எண்ணிக்கை அதிக அளவில் வந்திருக்கிறது. நல்ல, நல்ல மகாவீர் இருக்கிறார்கள். பாருங்கள். பாபாவுக்கு பஞ்சாப் மீது அன்பு இருந்த காரணத்தால், பஞ்சாப் வந்தார். இதனால் பிரம்மாபாபாவின் விசேஷ. அன்பையும் அனுபவம் செய்தீர்கள். எல்லா மகாரதிகளினுடைய பாதங்கள் பஞ்சாபில் பட்டிருக்கின்றன. ஆகவே ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள். செய்ய முடியும். பஞ்சாப்பின் ஐந்து நதிகள் மிகவும் பிரசித்தமானது. பாப்தாதா பார்க்கின்றார், பிரம்மாபாபாவின் பாலனையில் வளர்ந்த நல்ல குழந்தைகள் இருக்கின்றார்கள். ஆகவே பாலனைக்கான ரிட்டன் கொடுக்கத்தானே வேண்டும். நன்றாக

இருக்கிறது. பாப்தாதாவுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. பஞ்சாப் மீது. செய்வீர்கள் அல்லவா? ஏதாவது அப்படிப்பட்ட சேவை செய்யுங்கள். இதன் மூலம் எல்லோருடைய பார்வையும் பாப்தாதா பக்கமாக திரும்பட்டும். பாண்டவர்களிடம் தைரியம் உள்ளதா? பாண்டவர்கள் தைரியசாலிகளா? நல்லது மாதாக்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. டீச்சர்களும் நிறைய இருக்கிறார்கள். நல்லது. நீங்கள் சேர்ந்து பிளான் செய்ய வேண்டும் பாண்டவர்கள் பிளான் செய்யுங்கள். அற்புதம் நிகழ்த்தக்கூடிய பிளான் செய்ய வேண்டும். நல்லது.

பாரதம் முழுவதிலிருந்தும் இளைஞர் பாத யாத்திரீகர்கள் வந்திருக்கிறார்கள்: நல்லது. பாப்தாதா வரவேற்பு நிகழ்ச்சியையும் பார்த்தார். இளைஞர்கள் என்ன சேவை செய்தார்களோ, அந்த சமாச்சாரமும் வந்தது. ஆகவே சேவை மிக நன்றாகவே செய்திருக்கிறார்கள் தைரியம் மற்றும் ஆர்வத்துடன் களைப்பில்லாமல் சேவை செய்தார்கள். இந்த விஷயத்தில் நல்ல சான்றிதழ் (சர்டிபிகேட்) கிடைத்துள்ளது. எங்கே ஊக்கம், உற்சாகம் இருக்கிறதோ அங்கே வெற்றி நிச்சயம். எல்லா பாத யாத்திரையிலும் ஊக்கம், உல்லாசம் மிக நன்றாக இருந்ததைப் பார்த்தேன். ஊக்கம், உற்சாகத்தின் காரணமாக, நோய் வாய்படாமலும் (நிரோகி) இருந்தனர் நிர்விக்னமாகவும் நடந்தது. எப்படி யாத்திரை நடந்தபோது நிர்விக்னமாக இருந்ததோ, அதே போல இந்த பிராமண வாழ்க்கையிலும் சதா நிர்விக்னமாக, நிர்விகல்பமாக, நிர்வியர்த்த சங்கல்பத்துடன் எல்லா குமார்களும் குறைந்தபட்சம் ஒரு மாதமாவது மிக நல்ல சார்ட் காண்பித்தார்கள் என்றால் பாப்தாதா தங்க புஷ்பங்களால் ஆசீர்வதிப்பார் முற்றிலும் சொப்பனம் வரையிலும் நிர்விக்னம், பேச்சு, மற்றும் கர்மம் பருமனான விஷயங்கள் ஆனால் சொப்பனத்திலும் கூட நிர்விக்னம். சுயத்தைப் பாருங்கள். சமயத்தைப் பாருங்கள். மற்றவர் குறைகளைப் பார்க்காதீர்கள். ஒருக்கால் பார்த்தாலும் கூட மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். ஒருவேளை வேறொருவருடைய பலவீனத்தை மனதில் தேக்கி வைத்தால் பாபா நினைவு எப்படி வரும்? பலவீனம் இருக்குமிடத்தில் தந்தை இருக்க மாட்டார். ஒரு வினாடியின் தீவிரத்தால், எல்லா குமார், குமாரிகளும் எப்படி பாத யாத்திரையின் போது ஊக்கம், உற்சாகத்துடன் வெற்றி அடைந்தீர்களோ, அதேபோல இந்த விஷயத்திலும் பெற்றியடைந்துக்

காட்ட வேண்டும். பிறகு பாப்தாதா கொண்டாடுவார். செய்வார். இப்படிப்பட்ட துணிச்சல் இருக்கிறதா? பக்கா? ஏனென்றால் இங்கிருந்து சென்ற பிறகு மாயா கேட்டுக் கொண்டிருக்கிறது. மாயாவுக்குத் தெரியும், இவர்கள் உறுதி மொழி எடுத்திருக்கிறார்கள் என்று. ஒருவேளை ஏதாவது பலவீனத்தை பார்க்க நேரிட்டால், விதிபூர்வமாக, நிமித்தமாக உள்ள உங்களுடைய பெரியவர்களிடம் அதைப் பற்றிக் கூறலாம் ஆனால் என்ன ஆயிற்று என்று அதைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருக்கக்கூடாது. அவருக்கு தண்டனை கிடைத்ததா? கிடைக்கவில்லையா? என்ன செய்தார்கள்? ஏன் எதுவுமே கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள்? இம்மாதிரியான வீணான சங்கல்பத்தில் நேரத்தை வீணாக்கக்கூடாது. கணக்கு வழக்கை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பார்த்துக் கொண்டேதான் இருக்கின்றார். ஆகவே நிர்விக்ன பவ எனும் வரதானத்தை வாழ்க்கையில் கொண்டு வருவீர்களா? டி.வி.யில் இவர்களது போட்டோ எடுங்கள். பாருங்கள். எல்லா சேவா கேந்திரத்திலிருந்தும் மெஜாரிட்டி துணை மண்டலங்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். ஒருவேளை நீங்கள் யாராக இருந்தாலும், சகோதரிகள் ஆனாலும், சகோதரர்கள் ஆனாலும், நீங்கள் உங்கள் மண்டலத்தில் செயலில் கொண்டு வந்து காட்டினீர்கள் என்றால், உங்களுடைய விருத்தி வாயுமண்டலத்தில் பரவும். மேலும் வாயுமண்டலத்தில் பரவியதா இல்லையா? என்பது பற்றிய கவலையும் கூடாது, கட்டாயமாக பரவும். ஆதலால் இளைஞர்கள், இள மகளிர் இப்படிப்பட்ட அற்புதம் செய்து காட்டினீர்கள் என்றால், அரசிடம் ரிசல்ட் கொடுக்கப்படும். சொப்பனம் வரையிலும் கூட பாஸ் வித் ஆனர் ஆக வேண்டும். மற்றபடி என்ன சேவை செய்தீர்களோ, அதை நன்றாகவே செய்தீர்கள். எல்லோருக்கும் விருப்பமானதாகவும் இருந்தது. நீங்கள் செய்த சேவை பாப்தாதாவுக்கும் பிடித்தமானதாக இருந்தது. இருந்தாலும் வருங்காலத்திற்காக ஏதாவது அற்புதம் செய்து காட்டுங்கள். எண்ணிக்கையும் நன்றாகவே இருக்கிறது. பாருங்கள் சேவையில் ஊக்கம், உற்சாகம் இருந்தால் சார்ட்டும் சரியாக இருந்தது என்பதை அனுபவம் செய்திருக்கிறார்கள். எந்த விதமான கிட்-கிட் (தொந்தரவு) நடக்கவில்லையல்லவா? சரீரத்தாலும் இல்லை. விக்னத்தாலும் இல்லை, மெஜாரிட்டி. ஆதலால் இதே மாதிரியே ஊக்கம், உற்சாகத்துடன் எந்த ஒரு சங்கல்பம் செய்தாலும் வெற்றி தான். ஆகவே நினைவில் வையுங்கள். யூத் -சுலோகம் -செய்யத்தான்

வேண்டும். (கர்னாஹி-ஹை)! கெட்டது ஒன்றும் செய்யக்கூடாது. நல்லது செய்ய வேண்டும். வெற்றி அடையத்தான் வேண்டும். வெற்றி நட்சத்திரம் ஆகத்தான் வேண்டும். சரிதானே? நல்லது.

டபுள் விதேஷி (அயல் நாட்டவர்): மிக நன்றாக நட்சத்திரம் அசைக்கின்றார்கள். பாப்தாதா கூறுகின்றார். டபுள் விதேஷி மது வனத்தின் விசேஷ அலங்காரம் என்று. டபுள் விதேஷி வந்தார்கள் என்றால் மதுபன் அலங்கரிக்கப்பட்டு விடுகிறது. இனி பார்க்கலாம். தீவிர கதி புருஷாரத்தத்தில் நம்பர் ஒன் எந்த ஜோன் வரும்? மதுபன் வரும். மதுபன்காரர்கள் உட்கார்ந்திருக்கிறார்களா? மதுபன் எழுந்திருங்கள். நல்லது. மதுபன் வாசிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படியானால் மதுபன் என்ன செய்யும்? தீவிர புருஷாரத்தத்தில் நம்பர் ஒன். அப்படித்தானே? தைரியம் இருக்கிறதா? இருக்கிறதா தைரியம்? தைரியம் இருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். இப்போது மதுபனில் இருக்கின்ற யாரைப் பற்றியும், எந்த ஒரு விஷயமும் பாப்தாதாவிடம் வராது, இது நடந்தது. இப்படி நடந்தது என்பது இனிமேல் வராது. நன்றாக நடந்தது, நன்றாக நடந்தது, நன்றாக நடந்தது. சரிதானா? பக்கா? பக்கா? பாருங்கள். கை உயர்த்தினீர்களா? மனம் மூலம் மனதார கை உயர்த்தீனீர்களா? மனம் எனும் கை உயர்த்தினீர்கள் அல்லவா? கொஞ்சம் பேர் இப்போது தான் கை உயர்த்தினீர்கள். மனம் எனும் கையை உயர்த்துகிறீர்கள் அல்லவா? இனி பாப்தாதா ஒவ்வொரு மாதமும் ரிசல்ட் கேட்பார். கேட்கட்டுமா? கேட்கலாமா? மிகவும் நல்லது.

மதுபன் வாசிகளின் சுவமான், வெளி நாடுகள் முழுவதிலும், இந்தியாவிலும் இருக்கிறது. மதுபன் வாசிகளை மிக உயர்ந்த பார்வையில் பார்க்கிறார்கள். அதிக சிநேகத்துடன் கூடிய பார்வையில் பார்க்கின்றனர். இனி இப்படிப்பட்ட ரிசல்ட் கேட்டுக் கொண்டேயிருப்பீர்கள். மனதில் நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று பாப்தாதா என்ன விரும்புகின்றார். எல்லோருமே அறிவீர்கள் இப்போது சக்திசாலியாக ஆக வேண்டும். நல்லது.

டபுள் விதேஷி பாப்தாதாவுக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். எல்லோருமே அன்பானவர்கள் தான். ஏன் அன்பானவர்கள்? உண்மையான உள்ளம் உடையவர்கள். சீக்கிரமாகவே உணர்கிறார்கள் ஆனால் இப்போது பரிவர்த்தனை சக்தியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்றபடி உணர்கிறீர்கள் அறிவீர்கள், ஆதலால் பாபாவுக்கு பிரியமாயிருக்கிறது. உண்மையானவர்கள் ஆனால் பரிவர்த்தனை செய்வதற்கு இன்னும் கொஞ்சம் சேர்க்க வேண்டும். சரி தானே? எல்லோரும் மகிழ்ச்சியாயிருக்கிறீர்களா? குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பாபாவின் மகிமை பாடிக் கொண்டுமிருக்கிறார்கள். மிகவும் நன்று. நன்று.

யார் முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். நல்லது. நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். முதன் முறையாக வந்திருப்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள். முதன் முறையாக வந்திருப்பவர்களுக்கு பாப்தாதா கூறுகின்றார். எப்படி முதன் முதலாக வந்திருக்கிறீர்களோ, அதேபோல முதல் நம்பரிலும் வர வேண்டும். வரும்போது ஊக்கம், உற்சாகத்துடன் வந்தீர்கள் அல்லவா? அன்பு எனும் விமானத்தில் ஏறி, வந்து சேர்ந்து விட்டீர்கள். இனி, ஊக்கம், உற்சாகம் எனும் சிறகுகளால், எல்லா பாடங்களிலும் நம்பர் ஒன் வர வேண்டும். இந்த திட சங்கல்பம் வையுங்கள். நல்லது. வாழ்த்துக்கள். நன்று.

இப்போதே அப்பியாசம் செய்யுங்கள். ஒரு செகண்டில் நிர்விகல்பம், நிர்வியர்த் சங்கல்பத்துடன் ஏகாக்கிரஹம், (ஒருமித்த நிலை) ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை. இந்த ஒரே ஒரு சங்கல்பத்தில் ஏகாக்கிரஹ ஸ்திதியில் அமர்ந்திருங்கள். மற்றபடி வேறு எந்த ஒரு சங்கல்பமும் கூடாது. ஒரே ஒரு சங்கல்பத்தின் ஏகாக்கிரத்தா சக்தியின் அனுபவத்தில் அமர்ந்திருங்கள். நேரம் ஆகக்கூடாது. ஒரே ஒரு செகண்டு. நல்லது.

நாலாபக்கங்களிலுமுள்ள குழந்தைகள் யாரெல்லாம் விசேஷமாக யாத்-பியார் அனுப்பியிருக்கிறார்களோ. அந்த ஒவ்வொரு குழந்தைக்கும் அவரவருடைய பெயர் சகிதமாக யாத்-பியார் (அன்பு நினைவுகள்) மற்றும் மனப்பூர்வமான ஆசிகளை ஏற்பீர்களாக! பாப்தாதா

பார்க்கின்றார். எல்லோருடைய மனதிலும் வருகிறது. என்னுடைய நினைவு, என்னுடைய நினைவும் கூட என்று ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் சங்கல்பம் செய்ததுமே பாப்தாதாவிடம் அதே சமயத்திலேயே வந்து சேர்ந்து விடுகிறது. ஆதலால் எல்லா குழந்தைகளுக்கும். ஒவ்வொருவருடைய பெயர் மற்றும் விசேஷம் சம்பன்னமாக யாத்-பியார் அளிக்கின்றார்.

ஆகவே எல்லோரும் சதா ஸ்மிருதி சொரூபம், சமர்த் சொரூபம், அனுபவ சொரூபம் உள்ள சிரேஷ்டமான குழந்தைகளுக்கு சதா எந்த ஒரு சுபமானதை நினைத்தீர்களோ, அதை உடனே செய்பவர்கள், எப்படி உடனேயே செய்து விடும் தானத்திற்கு மகத்துவமிருக்கிறதோ, அதேபோல உடனேயே செய்துவிடும் பரிவர்த்தனைக்கும் மகத்துவம் உள்ளது. ஆதலால் உடனே பரிவர்த்தனை செய்யக்கூடிய விஷ்வ பரிவர்த்தனைக் குழந்தைகளுக்கு சதா பரமாத்மா பாலனை, பரமாத்ம அன்பு, பரமாத்ம படிப்பு மற்றும் பரமாத்ம ஸ்ரீமத்தை ஒவ்வொரு கர்மத்திலும் கொண்டு வரக்கூடிய மகாவீர் குழந்தைகளுக்கு, சதா தைரியம் மற்றும் ஏகாககிரத்தா, ஒற்றுமை மூலமாக நம்பர் ஒன் தீவிர புருஷாரத்தம் செய்யக்கூடிய பாப்தாதாவின் மனப்பூர்வமான யாத்-பியார், மனப்பூர்வமான ஆசிகள் மற்றும் நமஸ்தே.

- <u>தாதிஜியுடன்: வெற்றி அடைந்து காட்சியளிக்கின்றார்.</u>

<u>தாதிகளுடன்</u>: எல்லோரும் நல்ல பார்ட் செய்கிறீர்கள். பாப்தாதா ஒவ்வொருவருடைய பாகத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். சிறு, சிறு குழந்தைகளும் நல்ல விதமாக பார்ட் (பாகம்) செய்கிறார்கள். நாங்கள் சிறியவர்கள் என்று நினைக்கக் கூடாது. சிறு குழந்தைகள் தெய்வத்திற்குச் சமம் என்று கூறுகிறார்கள். (சோட்டே சுபான் அல்லாஹ்) சக்திகளுக்கு தங்களுடைய பார்ட் உள்ளது. பாண்டவர்களுக்கு தங்களுடைய பார்ட் உள்ளது. பாண்டவர்கள் இல்லையென்றாலும் காரியம் நடக்காது. சக்திகள் இல்லையென்றாலும் காரியம் நடக்காது. ஆகவே தான் பாரதத்தில் சதுர்புஜம் ஞாபகார்த்தம் உள்ளது. (மகாவிஷ்ணு). மற்ற தர்மங்களில் சதுர்புஜம் காட்டுவதில்லை ஆனால் பாரதத்தில் ஞாபகார்த்தமாக சதுர் புஜத்திற்கு மகத்துவம் உள்ளது. ஆதலால் இருவருமே நல்ல பார்ட் செய்கிறார்கள் ஆனால் இப்போது சீக்கிரமாகவே செய்ய வேண்டும்.

போதும். சிலசமயம், கொஞ்சம் தளர்ச்சியடைந்து விடுகிறார்கள் ஆனால் இப்போது தளர்ச்சியடையக்கூடிய நேரம் அல்ல. விஷயங்கள் வெவ்வேறு விதமானது தான் ஆனால், விஷயங்களில் அடங்கியுள்ள உள்ளார்த்தத்தைப் புரிந்து கொண்டு ராஜ்யுக்த், யோகயுக்த், சகயோக யுக்த் ஆகி நடந்து கொள்ள வேண்டும். சரி தானா (தாதிஜியுடன்) மிக நன்றாக இருக்கிறதல்லவா? பாருங்கள். எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்? ஏன் வந்திருக்கிறார்கள்? இவர்கள் எல்லோரும் ஏன் வந்திருக்கிறார்கள்? உங்களைச் சந்திப்பதற்காக வந்துள்ளார்கள். பாப்தாதாவை சந்திப்பதற்காக வந்திருக்கிறார்கள் என்பது சரி தான் ஆனால் கூடவே தாதிகள் இல்லையென்றால் மஜாவாக இல்லை என்று கூறுகிறார்கள். மேலும் நீங்கள் எல்லோரும் இல்லை என்றாலும் கூட ஆனந்தமாக (மஜா) இருப்பதில்லை.

சாந்தாமணி தாதி நோய்வாய்ப்பட்டிருக்கின்றார். அஹமதாபாத் ஹாஸ்பிடலில் இருக்கின்றார். பரதாதியும் கூட (நிர்மல் சாந்தாஜி) அஹமதாபாத்தில் இருக்கின்றார். சரி தானா? கணக்கு முடிப்பதற்கு இன்னும் கொஞ்ச சமயம் இருக்கிறது).

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 31.12.2006 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்தாண்டின் புதுமை -உறுதி மற்றும் பரிவர்த்தனை சக்தி மூலம் காரணம் மற்றும் பிரச்சனை என்ற வார்த்தைக்கு விடை கொடுத்து விட்டு, நிவாரணம் மற்றும் தீர்வு சொரூபமாகுங்கள்!

இன்று புது யுகம் படைப்பவரான பாப்தாதா நாலாபுறமுமுள்ள தன்னுடைய குழந்தைகளுக்குப் புத்தாண்டு மற்றும் புதுயுகத்திற்கான வாழ்த்துக்களை அளிக்க வந்துள்ளார். நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளும் கூட வாழ்த்துக்கள் அளிப்பதற்காக வந்து சேர்ந்து விட்டனர். புத்தாண்டு வாழ்த்துக்கள் அளிப்பதற்காக மட்டுமே வந்திருக்கிறீர்களா? அல்லது புதுயுகத்திற்கான வாழ்த்துக்களையும் அளிக்க வந்திருக்கிறீர்களா? எப்படி புத்தாண்டில் மகிழ்ச்சியுமிருக்கிறது மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கின்றீர்கள். அப்படியானால், பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு புதுயுகம் பற்றி அவ்வளவு நினைவிருக்கிறதா? புதுயுகம் கண்களுக்கு எதிரில் வந்து விட்டதா? எப்படி புத்தாண்டு வரப் போகிறதென்றால், இதோ வந்து விட்டது என்பது போன்ற அனுபவம் உள்ளத்தில் உண்டாகிறதோ, அது போல உங்களுடைய புதுயுகம் பற்றியும் இதோ வந்தே விட்டது என்கிற அளவிற்கு அனுபவம் செய்கிறீர்களா? அந்த புது யுகத்தின் நினைவும் கூட இவ்வளவு சமீபமாக நினைவுக்கு வருகிறதா? உங்களுடைய அந்த சரீரமாகிய ஆடை ஒளிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பது கண்களுக்குப் புலப்படுகிறதா? பாப்தாதா இரு மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். உங்களுடைய புது யுகத்தில் சரீரம், மனம், செல்வம், மக்கள் அனைத்துமே எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கிறது. எல்லா பிராப்திகளும் எவ்வளவு நிறைந்த பொக்கிஷங்களாக இருக்கிறது என்ற அந்த காட்சிகளெல்லாம் குழந்தைகளின் மனதிலும், கண்களிலும்

எழுச்சியுடன் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. இன்று பழைய உலகில் இருக்கிறோம், மேலும் இதோ, இப்போதே தங்களுடைய இராஜ்யத்தில் இருப்போம் என்ற மகிழ்ச்சியும் இருக்கிறது. உங்களுடைய இராஜ்யம் நினைவிருக்கிறதா? நீங்கள் இன்று இரண்டு காரியங்களுக்காக வந்திருக்கிறீர்கள். ஒன்று பழையவற்றிற்கு விடை கொடுப்பது, இரண்டாவது, புத்தாண்டு. வாழ்த்துக்கள் அளிப்பது. பழைய ஆண்டுக்கு விடை கொடுப்பதற்கு மட்டுமே வந்தீர்களா? அல்லது பழைய உலகின் பழைய சம்ஸ்காரம், பழைய சுபாவம், பழைய நடத்தை ஆகிய அனைத்திற்கும் விடைகொடுக்க வந்தீர்களா? பழைய வருடத்திற்கு விடை கொடுப்பது எளிது, ஆனால் பழைய சம்ஸ்காரத்திற்கு விடை கொடுப்பது கூட அவ்வளவு எளிதானதுதான் என்று நினைக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? மாயாவுக்கும் விடை கொடுக்க வந்தீர்களா? அல்லது ஆண்டுக்கு மட்டுமே விடை கொடுக்க வந்தீர்களா? விடை கொடுக்கத்தான் வேண்டுமல்லவா? அல்லது மாயாவிடம் இன்னும் கொஞ்சம் அன்பு இருக்கிறதா? கொஞ்சம், கொஞ்சம் வைத்துக் கொள்ளலாம் என்று விரும்புகிறீர்களா?

பாப்தாதா இன்று நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளை பழைய சுபாவ சம்ஸ்காரங்களிலிருந்து விடை கொடுக்க வைக்க விரும்புகின்றார். கொடுக்க முடியுமா? தைரியமிருக்கிறதா? விடை கொடுக்கத்தான் விரும்புகிறோம் ஆனால் மீண்டும் மாயா வந்து விடுகிறது என்று நினைக்கிறீர்களா? இன்றைய தினம் திடசங்கல்ப சக்தி மூலம் (உறுதியான எண்ணம்) பழைய சம்ஸ்காரத்திற்கு விடை கொடுத்து விட்டு, புதுயுக சம்ஸ்காரத்திற்கு, வாழ்க்கைக்கு வாழ்த்துக்களை அளிக்கம் தைரியம் இருக்கிறதா? இருக்கிறதா தைரியம்? யார் முடியும் என்று நினைக்கிறார்கள்? முடியும் அல்லது நடக்கத்தான் வேண்டும் என்று நினைக்கக்கூடிய தைரியசாலிகள் இருக்கிறார்களா? தைரியமிருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். தைரியமிருக்கிறதா? நல்லது. யாரெல்லாம் கை உயர்த்தவில்லையோ, அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்களா? டபுள் ஃபாரினர்ஸ் கை உயர்த்தினார்களா? யாருக்கு தைரியமிருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எல்லோருமே உயர்த்தவில்லை. நல்லது டபுள் ஃபாரினர்ஸ் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். டபுள் போதை இருக்கிறது என்பதால்,

ஞாபகமிருக்கட்டும், பாப்தாதா ஒவ்வொரு மாதமும் ரிசல்ட் பார்ப்பார். குழந்தைகள் தைரியசாலிகளாக இருப்பதைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது. கெட்டிக்காரத்தனமாகப் பதில் தரக்கூடிய குழந்தைகள். ஏன்? ஏனென்றால், தைரியமாக ஒரு அடி எடுத்து வைத்தால், ஆயிரம் அடிகள் தந்தையிடமிருந்து உதவி கண்டிப்பாகக் கிடைக்கும் என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆயிரம் அடிகள் உதவிக்கு அதிகாரிகள் நீங்கள் மாயையானது தைரியத்தை மட்டும் அசைக்க முயற்சி செய்கிறது. பாப்தாதா பார்க்கின்றார் நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள் ஆனால் தைரியம் வைப்பதுடன் கூடவே, தனக்குள்ளேயே வீணான சங்கல்பத்தையும் உற்பத்தி செய்து விடுகிறார்கள் அதாவது செய்து கொண்டுதானிருக்கிறோம், ஆகத்தான் வேண்டும்; கண்டிப்பாகச் செய்வோம் ஆனால் என்ன நடக்குமோ தெரியவில்லை என்று இப்படித் தெரியவில்லை என்ற சங்கல்பம் வருவது தைரியத்தை பலவீனப்படுத்தி விடுகிறது. வோம் (தோ) வோம் என்று வந்து விடுகிறதல்லவா? செய்து கொண்டு தானிருக்கிறோம் செய்யத்தானே வேண்டும், இனி பறக்கத்தானே வேண்டும்! இது தைரியத்தை அசைத்து விடுகிறது ஆகவே சந்தேகமே கூடாது, செய்யத்தான் வேண்டும். ஏன் ஆக முடியாது? எப்போது தந்தை கூடவே இருக்கின்றாரோ, அப்போது பாபாவுடன் இருக்கும் போது சந்தேகம் வர முடியாது.

ஆதலால், இந்த புத்தாண்டில் புதுமை என்ன செய்வீர்கள்? தைரியம் என்ற காலை நன்றாகப் பலப்படுத்துங்கள். தைரியம் என்ற காலை எந்த அளவுக்குப் பலப்படுத்த வேண்டுமென்றால், மாயை பயந்து நடுங்க வேண்டும் ஆனால் கால் நடுங்கக் கூடாது. ஆகவே புத்தாண்டில் புதுமை செய்வீர்களா? அல்லது சில சமயம் நடுங்குவது, சில சமயம் தைரியமாக இருப்பது என்று நடந்து கொள்ள மாட்டீர்கள் அல்லவா? உங்கள் எல்லோருடைய கடமை அல்லது தொழில் என்ன? உங்களை என்னவென்று கூறிக் கொண்டிருக்கிறீர்கள்? நினைவு செய்து பாருங்கள். விஷ்வகல்யாணி, விஷ்வபரிவர்த்தக் உலகத்திற்கு நன்மை செய்யக் கூடியவர், உலகை மாற்றக் கூடியவர்கள்) இது தான் உங்கள் தொழில் அல்லவா? இது பற்றி பாப்தாதாவிற்கு சிலசமயம் இனிமையான புன்சிரிப்பு வருகிறது. விஷ்வ பரிவர்த்தக் என்ற பட்டப் பெயர் இருக்கிறதல்லவா? விஷ்வ பரிவர்த்தாக இருக்கிறீர்களா? (உலக

மாற்றம் செய்யக் கூடியவர்கள்) அல்லது லண்டனை மாற்றம் செய்யவர்களா? இந்தியாவை மாற்றம் செய்பவர்களா? எல்லோரும் உலக மாற்றம் செய்பவர்கள் தானே? கிராமங்களில் இருக்கலாம். லண்டன் அல்லது அமெரிக்காவில், இருக்கலாம். எங்கிருந்தாலும் விஷ்வ கல்யாணகாரி தானே! விஷ்வ கல்யாணி என்று நினைப்பவர்கள் தலையசைத்துக் காட்டுங்கள், பக்கா தானே? அல்லது 75- சதவிகிதம் விஷ்வ கல்யாணி, 25- சதவிகிதம் தள்ளுபடி, அப்படியா? உங்களுடைய சவால் எது? தத்துவங்களையும் (பிரகிருதி) மாற்றுவோம் என்று தத்துவங்களுக்கும் கூட சவால் விட்டிருக்கிறீர்கள் ஆதலால் உங்களுடைய தொழிலை நினைத்துப் பாருங்கள். சில சமயம் உங்களைப் பற்றி நீங்களே யோசிக்கிறீர்கள். அப்படி செய்திருக்கக் கூடாது தான், ஆனால் நடந்து விட்டது. ஆகவே விஷ்வ பரிவர்த்தக் இயற்கையை மாற்றம் செய்யக் கூடியவர் என்ற அதிகாரமுடைய நீங்கள் சுய மாற்றம் செய்ய முடியாதா? சக்தி சேனை என்ன நினைக்கிறீர்கள்? இந்த ஆண்டில் விஷ்வ பரிவர்த்தக் என்ற தொழில் மூலமாக, தனக்காகவும், பிராமண குடும்பத்திற்காகவும், ஏனெனில் முதலில் தன்னிடமிருந்துதான் தொடங்க வேண்டும். அல்லவா? Charity Begins at Home! ஆகவே தன்னுடைய தொழிலை பிராக்டிக்கல் சொரூபத்தில் பிரத்யக்ஷம் செய்வீர்கள் அல்லவா? (நடை முறையில் கொண்டு வந்து, வெளிப்படுத்துவது) சுய பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்பதை நீங்களும் விரும்புகிறீர்கள். பாப்தாதாவும் விரும்புகின்றார். இதை அறிவீர்கள் அல்லவா? சரிதானே! பாபாவிற்குச் சமமாக ஆகத்தான் வேண்டுமல்லவா? அல்லது பார்க்கலாம், என்று யோசிக்கிறீர்களா? தந்தையும் கூட இதைத்தான் விரும்புகின்றார். அதாவது இந்த ஆண்டில் 70-ஆண்டுகள் முடிந்து, 71ம் ஆண்டு நடக்கிறது. இப்போது இந்த 71ம் ஆண்டில் ஏதாவது அற்புதம் செய்து காட்டுங்கள். நீங்கள் எல்லோரும் விதவிதமான எத்தனையோ சேவை செய்து கொண்டுதானிருக்கிறீர்கள், வெற்றியும் அடைந்து கொண்டேயிருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கும் இதைப் பார்த்து குஷியாக இருக்கிறது. நீங்கள் செய்கின்ற முயற்சிக்கு வெற்றியும் கிடைக்கிறது வீண் போவதில்லை ஆனால் சேவை செய்வது எதற்காக? இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுகிறீர்கள் தந்தையை பிரத்யக்ஷம் செய்வோம் என்று கூறியிருக்கிறீர்கள் ஆதலால் இன்று தந்தை, குழந்தைகளிடம் கேள்வி கேட்கின்றார், தந்தையை

வெளிப்படுத்தத்தான் வேண்டும். செய்யத் தான் போகிறீர்கள் ஆனால், தந்தையை வெளிப்படுத்துவதற்கு முன்பாக, சுயத்தை (உங்களை) வெளிப்படுத்துங்கள் சிவசக்திகளே! பதில் கூறுங்கள். இந்த ஆண்டு, சுய பிரத்யக்ஷம் என்பதை சிவசக்தி ரூபத்தில் வெளிப்படுத்துவீர்களா? வெளிப்படுத்துவீர்களா? "ஜனக்" கூறுங்கள் (ஜானகி தாதி) செய்வீர்களா? (செய்யத்தான் வேண்டும்) கூட இருப்பவர்கள், முதலாவது வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள். அடுத்த வரிசையில் டீச்சர்கள். இந்த ஆண்டு செய்து காண்பிப்போம் என்று நினைக்கின்ற டீச்சர்கள் கை உயர்த்துங்கள். செய்வோம் அல்ல, செய்து காட்டத்தான் வேண்டும். நல்லது எல்லா டீச்சர்களும் கை உயர்த்தினார்களா? அல்லது யாராவது உயர்த்தாமல் இருக்கிறார்களா? நல்லது. மதுபன் வாசிகள்! செய்யத்தான் வேண்டும் செய்ய வேண்டியதாக இருக்கும். மதுபன் வாசிகள் என்றால் மதுபன் அருகாமையில் இருக்கிறது அல்லவா? தேதி குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நேரமும் கூட குறித்து வையுங்கள் (தேதி 31 நேரம் இரவு 9 மணி 20 நிமிடம்) அடுத்து பாண்டவ சேனை பாண்டவர்கள் என்ன செய்து காட்ட வேண்டும்? வெற்றிப் பாண்டவர்கள் (விஜயி பாண்டவர்) எப்போதாவது வெற்றி அல்ல. இருப்பது ஒன்று தான் வெற்றிப் பாண்டவர்கள் அப்படித்தானே இருக்கிறீர்கள்? இந்த ஆண்டில் விரும்பவில்லை என்றாலும் வந்து விட்டது என்று கூறுவீர்களா? பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார். மாயை தனது கடைசி நேரம் வரை, வருவதை நிறுத்தாது எனினும் மாயையின் வேலை வருவது உங்களுடைய வேலை என்ன? வெற்றி அடைவது ஆதலால் நாங்கள் விரும்புகிறோமா என்ன, ஆனாலும் மாயா வந்துவிடுகிறது என்று சொல்லாதீர்கள். நடந்து விடுகிறது. இப்போது, பாப்தாதா இந்த ஆண்டோடு இப்படிப்பட்ட சொல்லுக்கு விடை கொடுக்கச் செய்ய விரும்பு கின்றார். (இரவு) 12-மணிக்கு இந்த ஆண்டுக்கு விடை கொடுப்பீர்கள் அல்லவா? மணி அடிப்பீர்கள் அல்லவா? இன்றைக்கு மணி அடிப்பீர்கள் என்றால், எதற்கு மணி அடிப்பீர்கள்? இந்த நாளுக்கா, ஆண்டுக்கா, மாயாவுக்கு விடை கொடுக்கும் மணி அடிக்க வேண்டும் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று பரிவர்த்தனை சக்தி. இதில் பலவீனம் இருக்கிறது. திட்டம் நன்றாகவே இருக்கிறது. இப்படிச் செய்வோம். அப்படிச் செய்வோம், என்று பாப்தாதாவும் குஷி அடைந்து விடுகிறார். நன்றாகத் திட்டம் தயார் செய்திருக்கிறார்கள் என்று சந்தோஷமடைகின்றார் ஆனால் பரிவர்த்தனை சக்தியில்

குறையிருப்பதன் காரணமாக கொஞ்சம் பரிவர்த்தனை ஆகிறது, மீதி பரிவர்த்தனை ஆகாமல் தங்கி விடுகிறது. அடுத்த குறை என்னவென்றால், உறுதி பற்றியது. சங்கல்பம் மிகவும் நன்றாக இருக்கிறது. இன்றைக்கும் கூட பாருங்கள் எத்தனை கார்டுகள் எத்தனை முடிவுகள், எத்தனை உறுதி மொழிகள் வந்து சேர்ந்திருக்கின்றன. இவற்றையெல்லம் பாப்தாதா பார்த்தார். நிறைய நல்ல, நல்ல கடிதங்கள் வந்திருக்கின்றன (கார்டுகள், கடிதங்கள் எல்லாம் மேடையில் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கின்றன) செய்வோம், செய்து காட்டுவோம், நடக்கத்தான் வேண்டும், ஆகத்தான் வேண்டும், பதம் பதம் குணா யாத்பியார் (ஆயிரமாயிரம் மடங்கு அன்பு நினைவுகள்) எல்லாம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. யாரெல்லாம் எதிரில் அமர்ந்திருக்கின்றார்களோ, அவர்களின் உள்ளத்தின் குரலும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது ஆனால் இப்போது பாப்தாதா இந்த இரண்டு சக்திகளை பரிவர்த்தனை சக்தி மற்றும் உறுதி எனும் சக்தி கோடிட்டுக் காட்டுகின்றார். ஒன்று உறுதியில் குறை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குறைக்கான காரணம் அலட்சியம், அடுத்தவரைப் பார்ப்பது. ஆகி விடும், செய்து கொண்டுதான் இருக்கிறோம், செய்வோம், கண்டிப்பாகச் செய்வோம்...!

பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். இந்த ஆண்டு, ஒரு சொல்லுக்கு சதா காலத்திற்கும் விடை கொடுத்து விட வேண்டும். என்பது சொல்லட்டுமா? சொல்லவா? கொடுக்க வேண்டியதாயிருக்கும். இந்த ஆண்டு பாப்தாதா காரணம் என்ற சொல்லுக்கு விடை கொடுக்கச் செய்ய விரும்புகின்றார். நிவாரணம் இருக்கட்டும். காரணம் முடிந்து விடட்டும் பிரச்சனை முடிந்து விடட்டும். தீர்வு சொரூபம் ஆகி விட வேண்டும். காரணம், தன்னுடையதாக இருந்தாலும் சரி, கூட இருப்பவர்களுடையதாயிருந்தாலும் சரி, குழுவின் காரணமாக இருந்தாலும் சரி, சூழ்நிலையின் காரணமாக இருந்தாலும் சரி -பிராமணர்களின் அகராதியிலிருந்து காரணம் மற்றும் பிரச்சனை என்ற சொற்களை மாற்றம் செய்து விட வேண்டும். தீர்வு (சமாதான்) மற்றும் நிவாரணம் ஆகி விட வேண்டும். ஏனெனில் அநேகர் இன்று அமிருத வேளையிலும் கூட பாப்தாதாவுடன் ஆன்மீக சம்பாஷணை (ரூஹ்-ரிஹான்) செய்யும் போது இந்த வார்த்தைகளைத்தான் கூறினார்கள். புத்தாண்டில் கொஞ்சம் புதுமை செய்வோம் என்று

ஆதலால் பாப்தாதா விரும்புகின்றார். இந்த புத்தாண்டில் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வார்த்தைகளும் முடிந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் கொண்டாடுங்கள். பரோபகாரி (பிறருக்கு உபகாரம் செய்பவர்கள்) தானே காரணமாக இருந்தாலும், அல்லது வேறு யாராவது காரணமாக இருந்தாலும் சரி, பரோபகாரி ஆத்மாவாகி, ரஹம்தில் ஆத்மாவாகி (இரக்கமுள்ள) சுப்பாவனை, சுபகாம்னா (சுப அபிலாஷை) உள்ளமுடையவராகி உதவுங்கள். அன்பைப் பெறுங்கள்.

அப்படியானால் இந்த புத்தாண்டுக்கு என்ன பெயர் சூட்டலாம்? இதற்கு முன்பு ஒவ்வொரு ஆண்டிற்கும் பெயர் சூட்டியிருந்தோம். நினைவிருக்கிறதா? ஆதலால் இந்த ஆண்டிற்கு பாப்தாதா சிரேஷ்ட (சிறந்த) சுப சங்கல்ப திடசங்கல்ப, சிநேகம், சகயோக சங்கல்ப ஆண்டு -இது பெயர் அல்ல ஆனால் இப்படிப் பார்க்க விரும்புகின்றார். உறுதி எனும் சக்தி, பரிவர்த்தனை சக்தி ஆகிய இரண்டு சக்திகளையும் கூடவே துணையாக வைத்திருங்கள். யாராவது கொஞ்சம் எதிர்மறையாக (நெகடிவ்) சொன்னாலும், நீங்கள் மற்றவர்களுக்குக் கோர்ஸ் கொடுக்கும் போது, நெகட்டிவை (எதிர்மறையை) பாஸிட்டிவாக (ஆக்கப்பூர்வமானதாக) மாற்றம் செய்து விடுங்கள் என்று கூறுகிறீர்கள் அல்லவா? அப்படியிருக்கும்போது, நீங்கள் உங்களுடைய எதிர்மறையை ஆக்கப்பூர்வமானதாகச் செய்ய முடியாதா? வேறு யாராவது, தீய சக்தியின் ஆதிக்கத்தில் இருந்தால், அந்த ஆதிக்க சக்தியின் மீது இரக்கம் கொள்ள வேண்டும் உங்களுடைய ஜட சித்திரம், உங்களுடையது தானே! பாரதத்தில் வெளிநாட்டினருக்குக் கூட சித்திரம் இருக்கிறதல்லவா? அதற்கு பூஜையும் நடக்கிறது. தில்வாலா கோவிலில் உங்களுடைய சித்திரத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? மிகவும் நன்றாக இருக்கிறது. உங்களுடைய ஜட சித்திரம் இரக்கமுள்ளதாக இருக்கிறது ஏதாவதொரு சித்திரத்திற்கு முன் சென்று என்ன வேண்டுகிறார்கள்? தயை புரியுங்கள், கருணைக் காட்டுங்கள், இரக்கம் காட்டுங்கள், மெர்ஸி, மெர்ஸி என்கிறார்கள். ஆதலால் சதா முதலில் உங்கள் மீது இரக்கப்படுங்கள் பிறகு பிராமண பரிவாரத்தினர் மீது இரக்கம் காட்டுங்கள். ஒருவேளை யாராவது தீயசக்திக்குட்பட்டிருந்தால், சம்ஸ்காரத்திற்கு வசப்பட்டிருந்தால், பலவீனமானவர்களாயிருந்தால், அந்த சமயத்தில் புரியாதவர்களாக இருப்பதால், அவர்கள் மீது கோபப்படாதீர்கள். கோபம் பற்றித்தான்

நிறைய ரிப்போர்ட் வந்து கொண்டிருக்கிறது. கோபம் இல்லாவிட்டாலும், அதன் வம்சத்தின் மீது அன்பு இருக்கிறது போலும் (கோபத்தின், குழந்தை குட்டிகள், பேரன் பேத்திகள் என்ற வம்சம், அம்சம்) கோபம் இல்லாவிட்டாலும், கோபத்தின் குழந்தையாகிய ஆவேசம் (ரோப்) இருக்கும். பொதுவாக குடும்பங்களில் நடக்கிறதல்லவா? பெரிய குழந்தைகள் மீது அன்பு குறைவாகவும், பேரன், பேத்திகள் மீது அன்பு அதிகமாகவும் இருக்கும். ஆகவே கோபம் தந்தை என்று வைத்துக் கொண்டால், அதன் குழந்தைகள் உல்ட்டா நஷா (தவறான போதை). இந்த போதைகள் பல விதமானது -புத்திசாலி என்ற நஷா, கடமையின் போதை, சேவையில் ஏதாவதொரு சிறந்த பாத்திரத்தின் போதை, இவையெல்லாம் (ரோப்) ஆவேசமாகும். ஆதலால் தயாளு, கிருபாளு (இரக்கமுடையவர்களாகவும், கருணையுடையவர்களாகவும்) ஆகுங்கள். பாருங்கள், புத்தாண்டில் இனிப்புகள் வழங்கி, வாயை இனிப்பாக்கி விடுகிறார்கள் வாழ்த்துக்கள் அளிக்கிறார்கள். இனிப்பு வழங்குகிறார்கள் தானே? ஆதலால் ஆண்டு முழுவதிலும், கசப்பான கோபத்தைக் காட்டவே கூடாது. உலகினர் இனிப்பு வழங்கி வாய் இனிக்கச் செய்கிறார்கள் ஆனால் நீங்களோ வாயை மட்டும் இனிப்பாக்குவதில்லை. முகத்தையும் மலரச் செய்து விடுகிறீர்கள். சதா உங்களுடைய முகம் ஆன்மீக அன்பு நிறைந்ததாக இருக்கட்டும். புன்சிரிப்புடையதாக இருக்கட்டும். கோபம் கூடவே கூடாது. மெஜாரிட்டி, எப்போது பாப்தாதாவுடன் ரூஹ்-ரிஹான் (அமிருத வேளை ஆன்மீக சம்பாஷணை) செய்கிறார்களோ, அந்த சமயத்தில் தங்களுடைய உண்மையான விஷயங்களையேக் கூறுகின்றார்கள். வேறொன்றும் கூறுவதேயில்லை. ஆதலால் கூடுதலாக ரிசல்ட்டில், மற்ற விகாரங்களை விட, கோபம் அல்லது கோபத்தின் குழந்தை குட்டிகளைப் பற்றிய அறிக்கைதான் அதிகமாக இருக்கிறது.

ஆதலால் பாப்தாதா இந்த புத்தாண்டில் இந்த கசப்பை நீக்கி விட வேண்டும் என்று விரும்புகின்றார். அநேகர், தங்கள் உறுதிமொழியில், நாங்கள் விரும்புவதில்லை ஆனால் வந்து விடுகிறது என்று எழுதியிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி பாப்தாதா கூறிவிட்டார். அதாவது இதற்குக் காரணம் உறுதியில் குறை இருக்கிறது என்று. தந்தையின் முன்னிலையில், சங்கல்பம் மூலமாக (எண்ணம்) வாக்கும் கொடுக்கிறார்கள் ஆனால் உறுதி என்பது

எப்படிப்பட்ட ஒரு சக்தியாக இருக்கிறது என்றால், உலகினரும் கூட என்ன சொல்கிறார்கள்? உயிரே போவதாக இருந்தாலும் சரி, சொன்ன சொல் தவற மாட்டேன் என்று கூறுகிறார்கள். மரணமேவரினும், தலை குனிய வேண்டியிருந்தாலும், மாற வேண்டியிருந்தாலும், சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும், சரி, கொடுத்த வாக்கில் (சொன்ன சொல்லில்) உறுதியாக இருப்பவர்கள் வெற்றி மூர்த்திகள். ஏனெனில் உறுதிதான் வெற்றிக்கான சாவி எல்லோரிடமும் சாவி இருக்கிறதல்லவா? இருக்கிறது ஆனால் வேண்டிய சமயத்தில் காணாமல் போய் விடுகிறது. அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்?

புத்தாண்டில் புதுமை செய்யத்தான் வேண்டும். சுயத்திற்கும், சகயோகிகளாக இருப்பவர்களிடமும் பரிவர்த்தனை வேண்டும். புதிய மாற்றம் கொண்டு வர வேண்டும்? பின்னால் அமர்ந்திருப்பவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? செய்ய வேண்டுமல்லவா? முதலில் பெரியவர்கள் செய்வார்கள் அல்லவா? பிறகு அதைப் பார்த்து சிறியவர்களாகிய நாம் செய்யலாம் என்று நினைக்கக் கூடாது. சிறியவர்கள் பாபா சமானம், ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்கு அதிகாரிதான். ஒருக்கால், நீங்கள் முதன் முறையாக வந்திருக்கலாம் ஆனால் மேரா பாபா என்று சொன்னால் அதிகாரிதான். ஸ்ரீமத்படி நடப்பதற்கும் அதிகாரி. மேலும் சர்வ பிராப்திகளுக்கும் அதிகாரி. டீச்சர்கள் தங்களுக்குள் புரோகிராம் (திட்டம்) செய்ய வேண்டும். வெளி நாட்டினரும், பாரதவாசிகளும் சேர்ந்து கலந்து ஆலோசித்து திட்டம் தீட்டுங்கள். பாப்தாதா அன்பளிப்பு (பிரைஸ்) தருவார். எந்த மண்டலம் (ஜோன்) முதல் நம்பரில் வருவதானாலும் சரி, வெளிநாட்டினராகட்டும், இந்தியாவாகட்டும் எந்த ஜோன் முதல் நம்பரில் வருகிறதோ அந்த ஜோனுக்கு பாப்தாதா தங்கக் கோப்பை (கோல்டன் கப்) அன்பளிப்பாக அளிப்பார். உங்களை மட்டும் பரிவர்த்தனை (சுயமாற்றம்) செய்து கொண்டால் மட்டும் போதாது உடன் இருப்பவர்களிடமும் மாற்றம் உண்டாகும்படி செய்ய வேண்டும் ஏனென்றால் பாப்தாதா பார்த்தார் குழந்தைகள் மாறாமல் இருப்பதன் காரணமாக, உலக மாற்றம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது மேலும் ஆத்மாக்கள் புதிய புதிய விதமான துக்கத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். துக்கம், அசாந்திக்கு, புதுப்புதுக் காரணங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

ஆதலால் தந்தை, குழந்தைகளின் துக்கக்குரலைக் கேட்டு, மாற்றம் வேண்டும் என்று விரும்புகின்றார். ஆதலால் ஹே! மாஸ்டர் சுகதாத்தா (சுகத்தைக் கொடுக்கும் வள்ளல்களே) குழந்தைகளே, துக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். பக்தர்களும்கூட பக்தி செய்து, செய்து களைப்படைந்து விட்டனர். பக்தர்களுக்கும் கூட முக்தி கிடைக்கச் செய்யுங்கள். இரக்கம் வருகிறதா, இல்லையா? உங்களுக்கான சேவையிலேயே, உங்களுடைய தினசரி கால அட்டவணையிலேயே மூழ்கி விட்டீர்களா? நீங்களும் நிமித்தம் தானே? பெரியவர்கள் மட்டுமே பொறுப்பாளர்களா? ஒவ்வொரு குழந்தையும், யாரெல்லாம் மேரா பாபா (என்னுடைய பாபா) என்று சொன்னார்களோ, ஏற்றுக் கொண்டார்களோ, அவர்கள் எல்லோமே நிமித்தமானவர்கள் தான் (கடமையை நிறைவேற்றக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். புத்தாண்டில் ஒருவருக்கொருவர் அன்பளிப்பு வழங்கிக் கொள்கிறார்கள் அல்லவா? ஆகவே நீங்கள் பக்தர்களின் ஆசையை நிறைவேற்றுங்கள். இந்த அன்பளிப்பு கிடைக்கும்படி செய்யுங்கள். இந்த அன்பளிப்பு தாருங்கள். பிராமண பரிவாரத்தில் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் மனப்பூர்வமான அன்பு மற்றும் சகயோகம் (உதவி) என்ற அன்பளிப்பு தாருங்கள். உங்களிடம் அன்பளிப்பு இருப்பு (ஸ்டாக்) இருக்கிறதா? அன்பிருக்கிறதா? உதவி செய்யும் மனப்பான்மை (சகயோகம்) இருக்கிறதா? முக்தி கிடைக்கச் செய்வதற்கான சக்தி இருக்கிறதா? யாரிடம் ஸ்டாக் நிறைய இருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள், ஸ்டாக் இருக்கிறதா? ஸ்டாக் குறைவாக இருக்கிறதா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்களிடம் ஸ்டாக் இருக்கிறதா? எல்லோருமே உயர்த்தினார்களா? ஸ்டாக் இருக்கிறதா? அப்படியானால் ஸ்டாக் வைத்துக் கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? சேமித்து வைத்திருக்கிறீர்கள். டீச்சர்களிடம் ஸ்டாக் இருக்கிறதா? அப்படியானால் கொடுங்களேன். பரந்த மனம் உடையவராகுங்கள். மதுபன் வாசிகள் என்ன செய்வீர்கள்? ஸ்டாக் மதுபனில் இருக்கிறதா? மதுபனிலோ, நாலாபக்கமும் ஸ்டாக் நிரம்பி இருக்கிறது. ஆகையால் இப்போது வள்ளல் ஆகுங்கள். சேமிப்பதோடு நின்று விடாதீர்கள். வள்ளலாகுங்கள். கொடுத்துக் கொண்டேயிருங்கள். சரியா?

நல்லது. பாப்தாதா பார்ப்பார். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஜோனும் (மண்டலமும்) தங்களுடைய ரிசல்ட் ஓகே அல்லது ஓகே

இல்லையென்றால், அதில் ஒரு கோடிட்டு அனுப்பட்டும். ஒருவேளை ஓகே இல்லையென்றால், வேறொன்றும் எழுதக் கூடாது. கடிதத்தை யாரும் படிக்க மாட்டார்கள். கடிதம் பெரிதாக இருந்தால், படித்துப் பார்ப்பதற்கு நேரம் இருக்காது ஆதலால் ஓ.கே. என்று மட்டுமே எழுதவும். ஓ.கே. இல்லையென்றால், இடையில் ஒரு கோடு போட்டு விடுங்கள். போதும். இதன் மூலம், இன்னும் மார்ஜின் இருக்கிறது என்பது தெரிந்து விடும். ஜோன் இல்லையென்றால், ஒவ்வொரு சென்டரும் எழுதட்டும். எல்லா சேவையிலும், பக்தர்களுக்கு, துக்கமாக இருப்பவர்களுக்கு, பிராமணர்களுக்குள், இந்த மூன்று சேவையில் ஓகே அல்லது ஒரு கோடு பரிவர்த்தனை சக்தி, உறுதி எனும் சக்திகளை நல்ல விதமாகப் பயன்படுத்த வேண்டும். நன்று.

சேவையின் வாய்ப்பு டெல்லி, ஆக்ரா: நல்லது. பாருங்கள் ஸ்தாபனை காரியத்தில் ஆரம்பத்தில் டெல்லி தான் நிமித்தமாக இருந்தது. பாம்பேயும் கொஞ்சம் துணையாக இருந்தது ஆனால் டெல்லி, ஸ்தாபனை காரியத்தில் நிமித்தமாயிருந்ததென்றால், ஸ்தாபனையில் இருந்தவர்கள் கோல்டன் கப் பெறுவதில் நிமித்தமாவார்களா? ஆவீர்களா? இந்தத் தடவை பாப்தாதா கோல்டன் கப் தயார் செய்வித்துக் கொண்டிருக்கின்றார். எவ்வளவு பேர் வாங்குவார்கள் என்று பார்க்கலாம் ஆனால் டெல்லி, நம்பர் ஒன் ஆகத்தான் வேண்டும். அப்படித் தானே? ஆவோம் அல்ல. ஆகியே தீர வேண்டும் என்று சரியாகச் சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். நம்பர் ஒன் ஆகத் தான் வேண்டும். ஆவோம், யோசிப்போம் இப்படி வோம்,வோம் என்று சொல்பவர்கள் இல்லை தானே? மாவீரர்கள் (பகதூர்) பாருங்கள், பாப்தாதா மற்றும் உங்களுடைய மம்மா, நேர்முகமாக (டைரக்ட்) டெல்லியையும், பம்பாயையும் பாலனை செய்திருக்கின்றார்கள். மற்ற இடங்களுக்கும் சென்றிருக்கின்றார்கள் என்றால் அது கொஞ்சம் தான் ஆனால் டெல்லி மற்றும் பம்பாய் ஆகிய இரு நகரங்களிலும் பாப்தாதாவும், மம்மாவும் நேர்முக பாலனை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே டெல்லிக்காரர்களுக்கு நஷா (போதை ) இருக்கிறதல்லவா? இதிலும் கூட நம்பர் ஒன் ஆக முடியாதா என்ன? உறுதியான நிச்சயம், நிச்சயிக்கப்பட்டு விட்ட வெற்றியாக ஆக்கி விடுகிறது. உறுதி என்பதை குறைவாகப் பயன்படுத்துகிறீர்கள். பார்க்கலாம், செய்வோம், ஆகி விடும் என்பது போன்ற ஐயப்பாடுகள் வந்து விடுகின்றன. நல்லது. டெல்லிக்காரர்கள் முன்னுதாரணம் ஆக வேண்டும். யார்

முன்னுதாரணம் ஆகிறார்களோ, அவர்களுக்கு முழுப் பரிக்ஷையில், அதிக மார்க்குகள் கிடைத்து விடுகிறது. ஆகவே நீங்கள் எல்லோருமே மார்க் வாங்கக் கூடியவர்கள் தானே! டீச்சர்ஸ் வாங்குவீர்களா? நல்லது. இனி என்ன கடிதம் வரும்? ஓ.கே வா? அல்லது கோடு போட்டதா? கோடு போட்டது அனுப்பக்கூடாது. ஓகே அனுப்ப வேண்டும். ஏனென்றால் டெல்லி மீது எல்லோருடைய பார்வையும் இருக்கத்தான் செய்கிறது. எல்லா பிராமணர்களுக்கும் கூட டெல்லியில் இராஜ்யம் செய்ய வேண்டும் என்பதாக இருக்கிறது. ஆகவே டெல்லிக்காரர்களாகிய நீங்கள் முதலில் செய்து முடிக்க வேண்டியதாயிருக்கும் அல்லவா? நல்லது.

டெல்லிக்காரர்கள் வேறென்ன செய்வீர்கள்? ஏதாவது புதிய திட்டம் தயாரித்திருக்கிறீர்களா? ஏனென்றால் டெல்லியும், பாம்பேயும் ஆதியிலிருந்து இன்று வரையிலும் ஏதாவது ஒரு புதுமைக்கு நிமித்தமாகியே வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்போதும் கூட, டெல்லிக்காரர்கள் திட்டம் சுருக்கமாகவும் இருக்க வேண்டும். அதிக வெற்றியையும் தர வேண்டும். அப்படி ஏதாவது திட்டம் தீட்டுங்கள். இதனை, எல்லோரும் பின்பற்றும்படியாகவும் இருக்க வேண்டும். சுருக்கமாகவும் இருக்க வேண்டும். வெற்றி மூர்த்தியாகவும் ஆக வேண்டும். நல்லது. பாதி சபையில் டெல்லி தான் இருக்கிறது போலும். எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே கோல்டன் கப் வாங்குபவர்கள் தானே? பாப்தாதா முதல் நம்பர் என்று பெயர் வைக்கட்டுமா? வைக்கலாமா? பின்னால் இருப்பவர்கள் எல்லோரும் இதில் சகயோகிகளாக இருக்க வேண்டும். முதலில் சுய பரிவர்த்தனை, அடுத்து உடன் இருப்பவர்களுடைய பரிவர்த்தனை, உடன் இருப்பவர்கள் (சாத்தி) என்றால் உங்களுக்குள்ளே இருக்கும் 4-5 பேர்கள் அல்ல. டெல்லி நிவாசிகள் அனைவருமே சாத்தி. இதனையடுத்து விஷ்வ பரிவர்த்தனை இதில் உதவி செய்ய வேண்டும். நல்லது. ஒருவர்க்கொருவர் உதவி செய்து கொண்டே, உள்ளபூர்வமான அன்பைக் கொடுத்துக் கொண்டே முன்னேறிச் செல்லுங்கள் நல்லது. தைரியமிருக்கிறதா, டெல்லியில் தைரியமிருக்கிறது ஆனால் குழுவில் இணக்கமான ரூபத்தில் தைரியத்தை பிரத்யக்ஷம் செய்து காட்டுங்கள். எல்லோருடைய பார்வையும் டெல்லி மீது இருக்கிறது நன்று. சேவையில் அதிக விருப்பமுள்ளவர்களாக இருக்கிறீர்கள் இதற்கு

வாழ்த்துக்கள். உங்களுடைய புண்ணியக் கணக்கை சேமித்து விட்டீர்கள். நல்லது.

**சிந்தி குரூப்:** சிந்தி குரூப் எழுந்திருங்கள். உங்களுக்கு ஒரு சிறப்பு: (ஸ்பெஷல்) நஷா இருக்கிறது இருக்கிறதா, நஷா? நல்ல நஷா தவறான நஷா அல்ல. பாப்தாதாவுக்கு சிந்து வர வேண்டியதாயிருந்தது. இதனால் சிந்திக்காரர்களுக்கு பாக்கியம் இருக்கின்றதல்லவா? இந்த நல்ல நஷா இருக்கிறது. ஆதிரத்தினங்கள். ஆதி ஸ்தாபனை சிந்துவில் தான் உண்டானது. மேலும் இந்த குரூப் மிகவும் நன்றாக தயாராகியிருக்கிறது. பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு ஆண்டும் ஒரு குழு ரூபத்தில் நல்ல குரூப் தயாராகி வந்து கொண்டிருக்கிறார்கள். விசேஷமாக ஒருவர் இன்னொருவருக்கு உற்சாகம் உண்டாக்கக்கூடிய நல்லவர்களாக இருக்கின்றார்கள். இப்போது உங்கள் குரூப் என்ன செய்யப்போகிறது? விசேஷமாக சிந்தி குரூப் என்ன செய்யும்? என்ன செய்வீர்கள்? ஏதாவது அற்புதம் செய்து காட்டலாம் அல்லவா? சிந்தி சம்மேளன் நடந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய குரூப் நன்றாக இருக்கிறது மேலும் இந்த குரூப்பில் உள்ள ஒவ்வொருவரும் ஏதாவதொரு விசேஷ காரியத்தில் நிமித்தமாகலாம். ஏனென்றால் மெஜாரிட்டி யுகல். (தம்பதிகள்) தனியாக வந்திருப்பவர்கள் குறைவு. எங்கே தம்பதியராக சேர்ந்து வருகின்றார்களோ, அங்கு ஒரு வழி (ஏக் மத்) ஒற்றுமை இருக்கும். இவர்கள் சேவை மிக நன்றாகச் செய்ய முடியும் முன்னுதாரணம் அல்லவா? நீங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து விடவில்லை. குடும்பத்தினரோடு சேர்ந்திருக்கிறீர்கள். எல்லோருமே ஒரே வழியில் (நம்பிக்கையில்) செல்கிறீர்கள் உங்களுடைய ஒரு சிறு பேச்சும் கூட சேவை செய்ய முடியும். இனி மேலும் உங்கள் குரூப் எண்ணிக்கையை கொஞ்சம் அதிகப்படுத்துங்கள். சிறிய குரூப் என்றும் சொல்ல முடியாது நடுத்தரமாக உள்ளது. இதை இன்னும் கொஞ்சம் பெரிதாக்குங்கள், ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். ஒரு ஆண்டில் ஒரு முறை தான் வருகிறீர்கள். இந்த குரூப்பில் சேவையில் நிமித்தமாகக்கூடிய அந்தஸ்துடைய சிலரை சேருங்கள். (தாதி ஜானகி கூறினார்கள், தாதா ராம், தாதா ரத்னசந்த், குடும்பத்தினர் உலக முழுவதிலும் பரவலாக இருக்கிறார்கள்) ஆம். இது பிரசித்தமான குடும்பம். பாருங்கள். இந்த இரண்டு குடும்பங்களில் உள்ளவர்கள் யாராவது நிமித்தமாகட்டும். ஒரு ரத்தன் சந்தின் விசேஷம்

என்னவென்றால், ஒன்றும் யோசிக்கவே இல்லை, சுவாஹா. ஊக்கம் உற்சாகம் காட்டினார். பிரம்மாபாபாவைப் பின்பற்றினார். இப்போது அவருடைய குடும்பம், அவருடைய ஆசீர்வாதத்தால் மிக நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது மேலும் ராம் சாவித்திரி மனப்பூர்வமாக சேவையில் நிமித்தமானார். தக்க நேரத்தில் சகயோகி ஆனார். அவருடைய ஆசிகள், அவருடைய பரிவாரத்திற்கு உண்டு. வேலை செய்தது அவர். பெயர், புகழ் அவருடைய குடும்பத்திற்கு வந்தது. இது அவருடைய தியாகம். அவருடைய தியாகத்தின் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. குரூப் நன்றாக இருக்கிறது. உங்களுடைய குரூப் பாப்தாதாவுக்குப் பிடித்தமானதாக இருக்கிறது. நல்லது. வாழ்த்துக்கள். எல்லா பரிவாரத்தின் சார்பாகவும், பாப்தாதாவின் சார்பாகவும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், நல்லது.

வெளிநாட்டுக் குழந்தைகளின் ரிட்ரீட் நடந்து கொண்டிருக்கிறது: குழந்தைகள் பாடல் பாடிக் கொண்டிருக்கிறார்கள். பாபாவுக்கு குழந்தைகளிடமும், குழந்தைகளுக்கு பாபாவிடமும் அன்பிருக்கிறதல்லவா? நல்லது எப்படி குழந்தைகள் ஊக்கம் உற்சாகத்துடன் தங்களுடைய திட்டத்தை இங்கே தீட்டுகிறீர்களோ, இதே போல, அவரவருடைய பிரதேசங்களிலும் கூட குழந்தைகளின் குரூப்பை அதிகரியுங்கள். எந்தக் குழந்தை, அதிகத்திலும் அதிகமான குழந்தைகளின் குரூப் தயார் செய்வார்களோ, அவருக்கு அன்பளிப்பு வழங்கப்படும். பாப்தாதாவிற்கு, குழந்தைகள் பிரியமானவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால், குழந்தைதான் மனதிற்குப் பிடித்தமானவர்கள். நல்லது குழந்தைகள் எப்போதாவது கோடப்படுவதில்லை தானே! சில சமயம் அப்படி இருக்கிறார்களா? கொஞ்சம், கொஞ்சம் அப்படி நடந்து கொள்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு அவரவர் சென்டர்களில், உங்களுடைய முடிவை எழுத வேண்டும். பிறகு டீச்சர், இந்த ஆண்டு, இந்தக் குழந்தை கோடப்படவே இல்லை என்று எழுதி அனுப்புவார். இப்படி நல்ல புருஷாரத்தம் செய்தால், அன்பளிப்பு கொடுக்கப்படும். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர்: வெளிநாட்டினர் விருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் மீதமுள்ள அநேக தேசங்களிலும் கூட ஊக்கம் உற்சாகத்தோடு முன்னேறிக் கொண்டும் இருக்கிறார்கள்.

பாப்தாதாவிற்கு இதைப் பார்த்து மகிழ்ச்சியாயிருக்கிறது. ஏனெனில் நடைமுறையில் இரக்கத்துடன், ஆத்மாக்கள் மீது இரக்கம் காட்டுகிறார்கள். சேவையில் உற்சாகமும் இருக்கிறது மேலும் சேவையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இனி தீவிர முயற்சி இரண்டு மடங்காக செய்து கோல்டன் கப் (தங்க கோப்பை) வெளிநாட்டினர் வாங்கிக் கொள்ளட்டும். வாங்க முடியும். எல்லோரிடமிருந்தும் இ.மெயில், உங்களுக்கு வரும். ஓகே, ஓ.கே என்று வரும். அதிகப்படியாக (கட்டுரை மாதிரி) வராது நீங்கள் படிக்க வேண்டியதாகி விடுமல்லவா! (தாதி ஜானகிக்கு) போதும், ஓ.கே. அவ்வளவுதான். தந்தையும் கூட ஓகே என்று அனுப்புபவர்களுக்கு மறைமுகமாக (குப்தமாக) அன்பான ஆசிகளை பொழிவார். வாஹ் பச்சே வாஹ்! (ஆஹா! குழந்தைகளே ஆஹா!) என்ற புகழ்பாடுவார். பாரதவாசிகளானாலும், வெளிநாட்டில்னரானாலும் சரி ஆனாலும் சில குழந்தைகள் குப்த ரூபத்தில் தீவிர புருஷார்த்தம் (முயற்சி) செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் பாப்தாதாவிடம் பட்டியல் (லிஷ்ட்) இருக்கிறது. பாரதத்திலும் இருக்ககிறார்கள். வெளிநாட்டிலும் இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா வெகு காலத்திற்கு இப்படி பார்க்க விரும்புகின்றார். செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் வெகு காலம் செய்ய வேண்டும். இதனை பாப்தாதா யாரெல்லாம் வெகுகாலம் தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பட்டியல் வைத்துக் கொள்கின்றார். இடையிடையே சற்று தீவிரம் குறைந்து விட்டால், வெகுகாலம் என்பது துண்டிக்கப்பட்டு விடும் ஆதலால் தான் பாப்தாதா பட்டியல் எடுக்கின்றார். இப்போது கொஞ்சப் பேர்தான் இருக்கின்றார்கள். ஆக வேண்டியது எல்லோருமே தான். பாரதவாசிகளும் ஆக வேண்டும் வெளி நாட்டினரும் ஆக வேண்டும் ஆனால் ஒரு சிலர் குப்தமாக நன்றாக இருக்கிறார்கள். பாப்தாதா எண்ணிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார். இப்போது வெகு காலத்திற்கு கவனமாக இருக்க வேண்டும் ஏனென்றால் வெகு காலம் வெற்றியாளர்களாயிருப்பவர்கள். வெகு காலம், அரைக்கல்பம் முழுமையாக இராஜ்யத்திற்கு அதிகாரி ஆவார்கள். ஒருவேளை, அவ்வப்போது மட்டுமே செய்து வந்தால், பாதி பாகம் செய்தோம், முக்கால் பாகம் செய்தோம் என்றிருந்தால், இராஜ்ய பாக்கியமும் அவ்வளவுதான் கிடைக்கும். ஆகையால் இரட்டை வெளிநாட்டினருக்கு விசேஷமாக நன்றி சொல்கிறேன். ஏனென்றால் கவனம்

கொடுக்கிறார்கள் (Attention) என்றாலும் இடையிடையே டென்ஷனாகவும் ஆகி விடுகிறார்கள். இனி டென்ஷன் (படபடப்பு) முடிந்து விட்டது அட்டென்ஷன் (கவனம்) இப்படிப்பட்ட லிஸ்டில் (பட்டியலில்) வந்து விடுங்கள் வெகு கால தீவிர முயற்சியாளர். அவ்வப்போது மட்டும் அல்ல, தொடர்ச்சியாக சரிதானா? சரி பாப்தாதா பார்க்கின்றார். நம்பிக்கை நட்சத்திரங்கள் நடைமுறையில் மேடையில் வந்து விடுவார்கள். சரிதானே? அப்படித்தான் இருக்கிறீர்கள் அல்லவா? நம்பிக்கை நட்சத்திரங்கள் தானே! தந்தையின் நம்பிக்கைக்குரிய நட்சத்திரக் குழந்தைகள். நல்லது வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

**அகில உலக இளைஞார் குழுக்கள் (இன்டர் நேஷனல் யூத் குரூப்):** இளைஞர் குழுவின் சிறப்பு, எது பிரசித்தமாக இருக்கிறதென்றால், இளைஞர்கள் என்ன விரும்புகிறார்களோ, அதைச் செய்ய முடியும். ஆகவே, இந்த ஆண்டு யூத் குரூப்பில் வந்துள்ள நீங்கள் என்ன சங்கல்பத்தை பூர்த்தி செய்யப் போகிறீர்கள்? பாப்தாதா என்ன கூறினார். இளைஞர் குழு என்றால் செயலில் காட்டுபவர்கள். செய்வீர்களா? நிவாரண் சொரூபம், காரணம் அல்ல, நிவாரணம், தீர்வு சொரூபம். உங்களுக்குள் கொடுப்பதும், எடுப்பதுமாக பரிமாறிக் கொள்கிறீர்கள் அல்லவா? ஆகையால், இந்த ஒரு லட்சியத்தை வைத்துக் கொண்டேயிருங்கள். வெகு காலம் தீர்வு (சமாதான் சொரூபம்) சொரூபமாகி பறந்து விட வேண்டும். காரணம் வரும் ஆனால் இளைஞர்களாகிய உங்களிடம் சக்தி இருக்கிறது. இந்த பலத்தின் மூலம் காரணத்தை, நிவாரணமாக மாற்றி விட வேண்டும். என்ன செய்வது, இந்தக் காரணம் இருக்கிறதல்லவா? என்று இளைஞர்கள் சொல்ல முடியாது. சக்திவான்கள் சரியா? இந்த ஹோம் ஒர்க் வீட்டு பாடத்தை செய்வீர்களா? செய்வீர்களா ஹோம் ஒர்க்? நல்லது. ரிசல்ட் எழுதிக் கொண்டேயிருக்க வேண்டும் ஓகே ஓகே என்ற ரிசல்ட் எழுத வேண்டும். நன்று பாப்தாதாவிற்கு இளைஞர் குரூப் மீது மிகுந்த நம்பிக்கை இருக்கிறது செய்து கொண்டிருக்கிறார்கள். பிளான் (திட்டம்) செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நடைமுறைப்படுத்திக் காட்டுங்கள். உங்களை யார் பார்த்தாலும், இவரோ பரிஷ்தா என்று கூற வேண்டும் பரிஷ்தா, பரிஷ்தாவாக தெரியட்டும். பரிஷ்தாவின் நடத்தை பறக்கும் கலை கீழே மேலே அல்ல. பறப்பவர், பறக்க வைப்பவர், பலவீனமானவர்களையும் பறக்க வைப்பவர்கள், கீழே இறங்கி

விடுபவர்கள் அல்ல. ஆதலால் இப்படிப்பட்ட திட்டம் தீட்டியுள்ளீர்களா? இப்படி யோசித்திருக்கிறீர்களா? யாராவது அற்புதம் செய்து காட்டுங்கள். மற்றபடி நன்றாக இருக்கிறது ஒவ்வொரு ஆண்டும் சந்திக்கிறீர்கள். இது மிகவும் நல்லது. ஊக்கம், உல்லாசம் அதிகரிக்கிறது. இப்போதைய முடிவையும் கேட்டேன். கொஞ்சம் தயார் செய்திருக்கிறார்கள் கடிதங்கள் எழுதியிருப்பதைப் பற்றி அறிவேன். இப்படி நன்றாகவே செய்திருக்கிறார்கள். நல்ல புருஷார்த்தமும் செய்திருக்கிறார்கள். இப்போது எல்லோருடைய இந்த துண்டுக்கடிதங்கள் கீழே விழுந்தால் நல்லது தான். சதவிகிதம் அல்ல. நன்று எல்லோரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் பாபாவின் ஆசைகளைப் பூர்த்தி செய்வோம். வெளிநாட்டிலும், பாரதத்திலம் இணைந்து சேவை செய்வோம். இப்படிப்பட்ட சங்கல்பம் இருக்கிறது. இதற்கான பிளான் தயாரிப்போம். நன்று.

அச்சா. (நல்லது) நீங்கள் எல்லோருமே மதுவனத்தின் அலங்காரம் பாருங்கள் நீங்கள் எப்போது இங்கு வருகின்றீர்களோ, அப்போது மதுபன் எவ்வளவு அழகாக காணப்படுகிறது. மதுபன் வருவது பிரியமாக இருக்கிறதா? கஷ்டமாக இருக்கிறதா? கஷ்டப்பட வேண்டியதிருக்கிறதா? கஷ்டமாக இருக்கிறதா? அல்லது குஷியாக இருக்கிறதா?

நல்லது. இப்போது ஒவ்வொருவரும் உங்களை, மனதின் மாலிக் என்று அனுபவம் செய்து, ஒரு செகண்டில் மனதை ஒருமுகப்படுத்த முடியுமா? (ஏகாக்கிரஹம்) கட்டளை இட முடியுமா? ஒரு செகண்டில் உங்களுடைய ஸ்வீட் ஹோமில் (சாந்திதாம் இனிமையான வீடு) சென்றடைந்து விடுங்கள். ஒரு செகன்டில் உங்களுடைய இராஜ்யமான சொர்க்கத்திற்குச் சென்று விடுங்கள். மனம் உங்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறதா? அல்லது சஞ்சலமாக இருக்கிறதா? மாலிக் தகுதியுள்ளவராக, சக்திவானாக இருக்கும்போது, மனம் ஏன் கட்டளைக்கு கீழ்படியாது! இப்படி நடக்க முடியாது மனம் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். ஆகவே இப்போது அப்பியாசம் செய்யுங்கள். இப்போது எல்லோரும் ஒரு நொடியில் உங்களுடைய ஸ்வீட் ஹோம் (சாந்திதாம்) சென்றடையுங்கள். இந்த அப்பியாசம் முழு நாளும் இடையிடையே செய்ய வேண்டும் என்பதில் கவனம்

வையுங்கள் மனதின் ஏகாக்கிரத்தா, தன்னையும், வாயுமண்டலத்தையும் சக்திசாலியாக்குகிறது. நன்று.

நாலா பக்கங்களிலுமுள்ள எல்லோருக்கும் மிகவும் அன்பான, எல்லோருக்கும் சகயோகி, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, நாலா பக்கமுமுள்ள வெற்றிக் குழந்தைகளுக்கு, நாலாபக்கமுமுள்ள பரிவர்த்தனையான சக்திவான் குழந்தைகளுக்கு, நாலா பக்கமுமுள்ள சதா சுயத்தை பிரத்யக்ஷம் செய்வது மூலமாக, தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யக் கூடிய குழந்தைகளுக்கு, சதா சமாதான் சொரூப விஷ்வ பரிவர்த்த குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் உள்ளத்தின் ஆசிகளை ஏற்றுக் கொள்வீர்களாக! இத்தோடு, எல்லா குழந்தைகளுக்கும், யார் தந்தையின் தலைக்கிரீடமாக இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட சிர்தாஜ் (தலை கிரீடம்) குழந்தைகளுக்கு பாப்தாதாவின் நமஸ்தே.

தாதிகளுடன்: எல்லோரும் உங்களுடைய சிரித்த முகத்தைப் பார்க்க விரும்புகிறார்கள். பாருங்கள். உங்களைப் பார்த்து எல்லோரும் புன்முறுவல் செய்கிறார்கள். நல்லது. நீங்கள் எல்லோருக்கும் உள்ள பூர்வமான அன்பைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகையால் எல்லோருடைய உள்ளன்பானது, உங்களுக்கு லிஃப்ட் போல முன்னேற்றிக் கொண்டிருக்கிறது. ஏணிப்படியில் ஏறப் போவதில்லை. லிஃப்ட்'ன் மூலம் சென்றடைந்து விடுவீர்கள். எல்லா தாதிகளையும் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கிறதல்லவா? ஏனெனில் தாதிகள் சுய நலமில்லாத சேவை செய்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் உள்ளத்தின் ஆசிகளால் பாலனை செய்திருக்கிறீர்கள். அருகாமையில் கூடவே இருப்பவர்களானாலும், தூரமாக இருப்பவர்களானாலும் சரி ஆசிகளால், அன்பால், ஒரு செகண்டு ஆசிகள் நிறைந்த திருஷ்டி, அல்லது ஆசிகள் நிறைந்த சங்கல்பம் பாலனை செய்து விடுகிறது. நீங்கள் எல்லோரும் தாதியிடமிருந்து திருஷ்டி வாங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் அல்லவா? தாதிகள் எந்த ஒரு சிறப்புத்தன்மை உங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்களோ, அதன் மூலம் நீங்களும் கூட ஒரு செகண்டில் அன்பைக் கொடுத்து குஷிப்படுத்துங்கள். யார், எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி, உளமார அன்பு செலுத்துங்கள், பேச்சு மூலமாக மட்டுமல்ல, வெளிப்படையாகவும் அல்ல.

உள்ளன்பானது யாரையும் அன்பானவராக்கி விட முடியும். எப்படி தாதிகள் சீக்கிரமாக மனமுடைந்து போய் விட மாட்டார்கள், இவர் ஒன்றும் மாறமாட்டார், இது இப்படித்தான் நடக்கும் என்று நினைக்கவும் மாட்டார்கள். சதா சுபமான நம்பிக்கை வைப்பார்கள். பாப்தாதாவை பின்பற்றுபவர்கள். பாப்தாதாவிடம் முதன் முறையாக சந்திக்க வந்த போது, எப்படி வந்தீர்கள்? 63-ஜன்ம பாவங்கள் நிறைந்தவர்களாகத் தானே வந்தீர்கள் ஆனால் பாப்தாதா நம்பிக்கை தீபங்கள் எனப் புரிந்து, உங்களை பிரகாசிக்கின்ற நட்சத்திரங்களாக ஆக்கி விட்டார். உங்களை வெறுக்கவில்லை. மனமுடைந்து விடவில்லை. களைப்படையக் கூடாது, அன்பு! மற்றும் இதுபோலவே நீங்களும் இந்த ஆண்டு யாரைப் பற்றியும் மனமுடைந்து விடக்கூடாது. உதவி செய்து கொண்டேயிருக்க வேண்டும். பாஸிட்டிவாக, பரிவர்த்தனை செய்து கொண்டேயிருக்க வேண்டும். நெகட்டிவைப் (எதிர்மறையானதை) பார்க்கக் கூடாது. இந்த ஆண்டிலேயே சமயத்தை, சமீபத்தில் கொண்டு வர வேண்டும். அப்படிப்பட்ட வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். எங்கேயும், யாரிடமும் வேறு பாவனை என்பது இருக்கவே கூடாது. சுப பாவனை மற்றும் சுப அபிலாஷை கீழே விழுந்து விட்ட, தீய ஆதிக்கத்திற்குள்ளாகி விட்ட ஆத்மாக்களுக்கு, தங்களுடைய உதவியைக் கொடுத்து மேலே தூக்கி விடுங்கள். எல்லோரும் எழுந்து பறப்பீர்கள். எல்லோருடைய பார்வையிலும், எங்கு பார்த்தாலும் பரிஷ்தாக்கள் சுற்றிக் கொண்டிருப்பதாகவே காண்பார்கள். இந்த சாட்சாத்காரம் நடக்கும். இந்த சிருஷ்டியில், இந்த பரிஷ்தாக்களின் கூட்டம் நம்மை எழுப்புவதற்காக எங்கிருந்து வந்தார்கள் என்று அனுபவம் செய்வார்கள். ஆதலால் ஒருவரையொருவர் பரிஷ்தா சொரூபத்திலேயே பாருங்கள். இவர் இன்னார், என்பதல்ல. இவர் பரிஷ்தா. சரிதானா? தாதிகளிடமிருந்து இதைக் கற்றுக் கொள்ளுங்கள். சுபபாவனை, சுபகாமனா கொடுங்கள். உங்களிடம் ஸ்டாக் இருக்கிறதா? இருக்கிறது ஆனால் கொடுப்பதில் வள்ளலாக ஆவது குறைவாக இருக்கிறது. நெகட்டிவை பார்க்காதீர்கள். கேட்காதீர் கள், பேசாதீர்கள், நினைக்காதீர்கள். ஊக்கம், உற்சாகம் என்ற சிறகுகள் மூலமாக பறந்து கொண்டேயிருங்கள். மற்றவர்களையும் பறக்கும்படி செய்யுங்கள். நல்லது தானே! தாதிகள் மேடைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருடைய முகங்களும் புன்சிரிப்பால் மலர்ந்து காணப்படுகின்றன. நன்று.

தாதி பாபாவிடம் கூறுகின்றார்: பாபா எல்லோருக்கும் உங்கள் மீது அன்பு இருக்கிறது. உங்களிடமும் கூட எல்லோருக்கும் ஆயிரம் மடங்கு அதிக அன்பிருக்கிறது.

மூன்று மூத்த சகோதரர்களுடன்: மதுபன் இல்லையேல், கதியுமில்லை. உங்களைப் பார்த்து, இவர்கள் தாதிகளைப் பின்பற்றி நடப்பவர்கள் என்று பாண்டவர்களுக்கு அந்த உணர்வு ஏற்பட வேண்டும். தந்தையைத் தான் பின்பற்றுகிறார்கள் ஆனால் நிமித்தமாயிருக்கும் உங்கள் எல்லோரிடமும், இவர்கள் நமக்குக் கொடுப்பவர்கள், உதவி செய்பவர்கள், உளமார அன்பு செலுத்துபவர்கள் என்று உணர்வு ஏற்பட வேண்டும். எப்போதாவது, யாராவது மனமுடைந்து போனால், இவர்கள் நமக்கு உதவியாயிருப்பவர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். இப்போது இந்த ரூபத்தை பிரத்யட்க்ஷம் செய்யுங்கள். உள்ளே இருக்கலாம். இப்போது பிரத்யட்க்ஷம் செய்யுங்கள். சரிதானா? அற்புதம் செய்வீர்கள். பாண்டவர்கள் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. பாண்டவர்களின் புகழும் கூட விசேஷமாக இருக்கிறது. பாண்டவர்கள் துணையாக இருப்பவர்கள் என்று காட்டப்பட்டுள்ளது. சக்திகளை மைதானத்தில் காட்டியிருக்கிறார்கள் ஆனால் பாண்டவர்கள் துணையிலிருப்பதையும் காட்டியிருக்கிறார்கள். உதவி செய்பவர்கள் மற்றும் துணையாக இருப்பவர்கள், தந்தையுடன் வசிப்பவர்கள் மேலும் எல்லோருக்கும் உதவி செய்பவர்கள். சரியா?

ரமேஷ் சகோதரருடன்: உடல் நலமாயிருக்கிறதா? பார்த்துக் கொள்ளுங்கள்.

கோலக் சகோதரரிடம்: களைப்படையாதவர் தானே? களைப்பு உண்டாகிறதா? பிரச்சனை உண்டாகிறது ஆனால் பிரச்சனையை குஷி என்ற ரூபத்தில் பரிவர்த்தனை செய்யுங்கள். மாலை இருக்கிறதல்லவா! நம்பர் ஒன்றுக்கும், கடைசிக்கும் வித்தியாசம் இருக்குமல்லவா? எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். சரியா. எல்லாம் நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது.

**2006ம் ஆண்டுக்கு விடைகொடுப்பது, 2007ம் ஆண்டுக்கு வாழ்த்துக்கள்! இரவு 12-மணிக்குப் பிறகு பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அளித்தார்!** எல்லோருக்கும் புத்தாண்டுக்கு ஆயிரமாயிரம் மடங்கு வாழ்த்துக்கள் உளம் நிறைந்த ஆசிகள் மேலும் திலாராமின் (உள்ளத்திற்கு சுகம் அளிக்கும் பகவான்) உளப்பூர்வமான அன்பு நினைவுகள். சதா, இந்த ஆண்டில் பறந்து கொண்டேயிருக்க வேண்டும் மேலும் பறக்கும்படியும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். எல்லா ஆத்மாக்களுக்கும் அவர்களுடைய மனதில் உள்ள அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, வள்ளலின் குழந்தைகளாகிய மாஸ்டர் வள்ளலாகி, சுகம், சாந்தி, அன்பு, ஆசிகள் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். மேலும் ஒவ்வொருவருக்கும் தந்தையின் அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே, முக்திக்கான ஆஸ்தியையும் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். நல்லது. விடை கொடுப்பது, மற்றும் வாழ்த்துக்களுடன் சங்கமத்தின் விசேஷ அன்பு நினைவுகள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂